முதலாம் அத்தியாயம்



தேவதூதர்

மனுஷகுமாரனிடத்திலிருந்து

ஏறுகிறதையும் இறங்குகிறதையும்....

(யோவான் 1:51)

யோவான் எழுதிய சுவிசேஷத்தில்,[1] முதல் மூன்று சுவிசேஷப் புத்தகங்களிலும் இடம் பெறாத இயேசுகிறிஸ்துவின் பல அருளு

[1] புதிய ஏற்பாட்டின் நான்காவது புத்தகம், இயேசுகிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான செபதேயுவின் குமாரன் யோவானால் எழுதப்பட்டது என்றே ஆரம்ப காலத்தில் இருந்து கிறிஸ்தவர்களினால் நம்பப்பட்டு வந்துள்ளது (L.Morris, "The Gospel According to John" in *International Standard Bible Encyclopedia Volume 2*, pp. 1098-1099). ஆனால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒருவராலேயே இச்சுவிசேஷம் எழுதப்பட்டது என்னும் கருத்து அண்மைக்காலத்தில் வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பிரபலமடைந்துள்ளது (Kohler, "New Testament" in *Jewish Encyclopedia Volume 9*, p. 251). யோவான் எழுதிய சுவிசேத்தின் கடைசி அதிகாரத்தில் இயேசுகிறிஸ்துவிற்கு அன்பாயிருந்தவனும், கடைசி இராப்போஜனம் பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தவனுமான சீடனே இச்சுவிசேஷத்தை எழுதியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (யோவான் 21:20 உடன் 21:24ஐ ஒப்பிடவும்). இச்சீடன் யார் என்பது பற்றியும் வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்துமுரண்பாடுகள் உள்ளன. சிலர் இச்சீடன் 'லாசரு' என்றும், வேறு சிலர் 'தோமா' என்றும், இன்னும் சிலர் 'மாற்கு' என்றும் கூறுகின்றர் (J.H. Charlesworth,

ரைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.[2] இவற்றில் நம்மால் புரிந்து

The Beloved Disciple: Whose Witness Validate the Gospel of John, pp. 1-437). ஆனால், இயேசுகிறிஸ்துவிற்கு அன்பாயிருந்த சீடன் யோவான் என்பதே ஆதிச்சபைப் பிதாக்களின் கருத்தாய் உள்ளது. யோவான் எபேசுவில் இருந்த காலத்தில் சுவிசேஷப் புத்தகத்தை எழுதி வெளியிட்டதாக, அவரது சீடர்களில் ஒருவரான "பொலிகார்ப்" என்பவர் தன்னிடம் கூறியதாக கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் "லியொன்ஸ்" என்னுமிடத்தில் சபைத் தலைவராகப் பணியாற்றிய இரேனியஸ் கி.பி.130-200) என்பார் குறிப்பிட்டுள்ளார் (*Against Heresies*. 3.1). மேலும் கி.பி.3ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கிறிஸ்தவ சபையின் முதலாவது சரித்திர நூலில், இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் மத்தேயுவும் யோவானும் சுவிசேஷப் புத்தகங்களை எழுதியவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர் (Eusebius, *The History of the Church*, pp. 86-87). இயேசுகிறிஸ்துவின் சீடர்களின் பெயர்களைக் குறிப்பிடும்போது, தன்னுடைய பெயரை யோவான் தவிர்த்துள்ள போதிலும், அவரது சில சொற்பிரயோகங்கள் புத்தகத்தின் எழுத்தாளர் யார் என்பதைக் கண்டுபிடிக்க நமக்கு உதவுகின்றன. முதலாம் அதிகாரம் 14ம் வசனத்தில், "அவருடைய மகிமையைக் கண்டோம்" என்னும் குறிப்பு, சரீரக்கண்களினால் கண்ட காட்சியைக் குறிக்கும் விவரணமாகும்" (L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 15). இது மறுரூபமலை சம்பவத்தைப் பற்றிய குறிப்பாகும். அச்சந்தர்ப்பத்திலேயே மாம்சமாகி வந்த வார்த்தையின் மகிமை, இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக "பிதாவிற்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகக் காணப்பட்டது." மேலும், இதை இயேசுகிறிஸ்துவின் சீடர்களில் மூவர் மட்டுமே கண்டனர் (மாற்.9:2). இவர்களில் யாக்கோபு, நான்காவது சுவிசேஷம் எழுதப்படுவதற்கும் நீண்ட காலத்திற்கு முன்பே மரித்து விட்டார் (அப்.12:2). ஏனைய இருவரில் பேதுரு சுவிசேஷம் எழுதியதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. எனவே, யோவானே, தான் மறுரூப மலையில் கண்டதை இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது. மேலும், யோவான் 21:24ல், "அந்தச் சீடனே இவைகளைக் குறித்துச் சாட்சி கொடுத்து இவைகளை எழுதினவன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "இவ்வசனம், நான்காவது சுவிசேஷப் புத்தகத்தைப் பிரதிபண்ணி, ஏனைய சுவிசேஷப் புத்தகங்களுடன் சேர்த்து வெளியிட்டவர், இதன் எழுத்தாளர் பற்றி குறிப்பிட்டுள்ள விடயமாகும்" ((R.V.G.Tasker, *John: Tyndale New Testament Commentaries*, p. 236). 21ம் அதிகாரத்தை வாசிக்கும் போது, யோவானே நான்காவது சுவிசேஷத்தை எழுதியவர் என்பது தெளிவாகின்றது (D. Guthrie, *New Testament Introduction*, pp. 241-271). இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது *புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு* என்னும் நூலில் 81ம் 82ம் பக்கங்களைப் பார்க்கவும்.

[2] புதிய ஏற்பாட்டின் முதல் மூன்று புத்தகங்களான மத்தேயு, மாற்கு, லூக்கா என்போர் எழுதிய புத்தகங்கள் "சமநோக்கு சுவிசேஷங்கள்"

கொள்வதற்கு சிரமமாயிருக்கும் பல கடினமான வசனங்களும் உள்ளன. இயேசுகிறிஸ்துவின் இத்தகைய கடினமான கூற்றுக் களில், சுவிசேஷத்தின் முதலாம் அதிகாரத்தில் இடம்பெறுவது, அவர் 'நாத்தான்வேல்'[3] என்னும் மனிதனுக்கு கூறிய விடயமாகும். இயேசுகிறிஸ்து யார் என்பதை நாத்தான்வேல் அறிந்து கொண்ட

என்று அழைக்கப்படுகின்றன. இவற்றிற்கு ஆங்கிலத்தில் கொடுக்கப் பட்டுள்ள "சிநொப்டிக் கொஸ்பல்ஸ்" (Synoptic Gosples) என்னும் பெயரில், 'சிநொப்டிக்' என்பது, 'சிநொப்டிக்கொஸ்' (*synoptikos*) என்னும் கிரேக்கப் பதத்தின் ஆங்கில வடிவமாகும். உபயோகிக்கப்பட்டுள்ள கிரேக்கப் பதமானது 'சின்' (*syn*) 'ஒப்செஸ்தாய்' (*opsesthai*) என்னும் இரு கிரேக்கச் சொற்களின் சேர்க்கையினால் உருவாகியுள்ளது. இவற் றின் அர்த்தம் "ஒன்றாய் இருந்து பார்த்தல்" அல்லது "ஒரே விதமாகப் பார்த்தல்" என்பதாகும். முதல் மூன்று சுவிசேஷ நூலாசிரியர்களும் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையை ஒரே கோணத்திலிருந்து அவதா னித்து எழுதியுள்ளனர் என்பதைக் குறிக்கும் பெயராக இது உள்ளது. (J.J.Scott, "The Synoptic Gospels" in *The Expositor's Bible Commentary Volume 1*, p. 501). இம்மூன்று சுவிசேஷப் புத்தகங்களிலும் பெரும்பாலான விடயங்கள் ஒன்றானதாகவே உள்ளமையால் இது பொருத்தமான ஒரு பெயராகவே உள்ளது. உண்மையில், யோவான் எழுதிய சுவிசேஷத்தில் முதல் மூன்று சுவிசேஷப் புத்தகங்களிலும் இடம்பெறாத பல விடயங்கள் உள்ளன. யோவான், முதல் மூன்று சுவிசேஷ நூலாசிரியர்களைப் போலல்லாது, வித்தியாசமான ஒரு கோணத்திலிருந்து இயேசுகிறிஸ்து வின் வாழ்க்கையைப் பார்த்துள்ளமையால், அவர் எழுதிய சுவிசேஷத்தில் முதல் மூன்று சுவிசேஷங்களிலும் இடம்பெறாத பல விடயங்கள் உள் ளன. முதல் மூன்று சுவிசேஷப் புத்தகங்களும் இயேசுகிறிஸ்துவின் கலிலேய ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கையில், யோவானுடைய சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவின் யூதேய ஊழியம் பற்றிய பலவிடயங்கள் உள்ளன. முதல் மூன்று சுவிசேஷங்களிலும் இயேசுகிறிஸ்துவின் உபதேசங்கள் சிறிய கூற்றுக்களாகவும் உவமைக ளாகவும் குறிப்பிடப்பட்டிருக்கையில், யோவானுடைய சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவின் நீண்ட அருளுரைகள் உள்ளன. மேலும், முதல் மூன்று சுவிசேஷங்களும் இயேசுகிறிஸ்துவின் மானிட வாழ்வுக்கு முக்க ியத்துவம் கொடுத்து எழுதப்பட்டிருக்கையில், யோவானுடைய சுவிசேஷம் இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

[3] இயேசுகிறிஸ்துவின் ஆரம்ப சீடர்களில் ஒருவரான நாத்தான்வேலின் பெயர் யோவான் எழுதிய சுவிசேஷத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளமை யால், முதல் மூன்று சுவிசேஷங்களிலும் இவர் வேறு பெயர்களில் குறிப்பிடப்பட்டிருக்கலாம் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (A.C.Myers, ed., *Eerdmans Bible Dictionary*, pp. 749-750). நாத்தான்வேல் இயேசுகிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில் ஒருவன் என்பதை

போது,[4] "அவர் அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள்[5] இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே[6] உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று யோவான் 1ம் அதிகாரம் 51ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யோவான் 21:2ல் குறிப்பிடப்பட்டிருக்கும் சீடர்களின் பெயர்ப்பட்டியல் அறியத்தருகின்றது. ஆனால் இவரது பெயர் முதல் மூன்று சுவிசேஷங்களிலும் உள்ள சீடர்களின் பெயர்ப்பட்டியல்களில் இடம்பெறாதமையால் வேதஆராய்ச்சியாளர்கள் இவ்வாறு கருதுகின்றனர். பற்தொலொமேயு (மத்.10:3, மாற்.3:18, லூக்.6:14) என்னும் சீடனே யோவான் சுவிசேஷத்தில் நாத்தான்வேல் என்னும் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளதாகப் பொதுவாகக் கருதப்படுகின்றது. பிலிப்புவே ஆரம்பத்தில் நாத்தான்வேலை இயேசுகிறிஸ்துவிடம் அழைத்துக் கொண்டு வந்தமையாலும், முதல் மூன்று சுவிசேஷங்களிலும் பற்தொலொமேயுவின் பெயர் பிலிப்புவிற்கு அடுத்ததாகக் குறிப்பிடப்பட்டிருப்பதனாலும் இவ்வாறு கருதப்படுகின்றது (L.Morris, *John: New International Commentary on the New Testament*, p. 164). யோவான் 21:2ன்படி நாத்தான்வேல் "கானா" என்னும் ஊரைச் சேர்ந்தவர் என்பதனால், முதல் மூன்று சுவிசேஷங்களிலும் கானானியனாகிய சீமோன் (மத்.10:4, மாற்.3:18) என்பவரே, யோவான் சுவிசேஷத்தில் நாத்தான்வேல் என்னும் பெயரில் குறிப்பிடப்பட்டிருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். (G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 147). மேலும், மத்தேயு என்னும் பெயரின் அர்த்தத்தைப் போலவே நாத்தான்வேல் என்னும் பெயரின் அர்த்தமும் "தேவனுடைய ஈவு" என்பதனால் இருவரும் ஒருவர் என்பது சிலரது விளக்கமாக உள்ளது (K.Hanhart, "The Structure of John 1:35-54" in *Studies in John*, pp. 23-26). எனினும், இயேசுகிறிஸ்துவிற்குப் பன்னிரு சீடர்களையும்விட இன்னும் பல சீடர்களும் இருந்தமையால் (லூக்.10:1) அவர்களில் ஒருவராக நாத்தான்வேல் இருந்திருக்க வேண்டும் என்பது சிலரது கருத்தாய் உள்ளது (G.M. Burge, *John: The NIV Application Commentary*, p. 77).

[4] இயேசுகிறிஸ்து "தேவனுடைய குமாரன், இஸ்ரவேலின் ராஜா" என்பதாக நாத்தான்வேல் அறிக்கையிட்டான் (யோவா.1:49). "ஒரு இஸ்ரவேலன் இயேசுகிறிஸ்துவிற்கு எவ்வாறு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்பதற்கு நாத்தான்வேல் சிறந்த விவரணமாக இருக்கின்றான்" (G.W. Bromiley, *The International Standard Encyclopedia Volume 3*, p. 492).

[5] இயேசுகிறிஸ்து நாத்தான்வேலை நோக்கியே இவ்வாறு கூறினாலும், "நீங்கள்" என்று பன்மையில் குறிப்பிடுவதனால், அச்சமயம் தம்மோடு இருந்த சீடர்கள் அனைவரிடமும் இவ்வார்த்தைகளை அவர் கூறியுள்ளார் என்பது தெளிவாகின்றது

[6] இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில் "மெய்யாகவே" என்னும் சொற்பிரயோகம் இருதடவைகள் உபயோகிக்கப்பட்டிருப்பதை நாம் பல

இயேசுகிறிஸ்துவினுடைய இக்கூற்றின் அர்த்தத்தை அறிந்து கொள்வதற்கு சிரமமாக இருப்பதற்குக் காரணம், அவர் இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளவிதமான ஒரு சம்பவத்தை, அதாவது "வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும்" அவருடைய சீடர்கள் கண்டது பற்றி சுவிசேஷப் புத்தகங்களில் குறிப்பிடப்படாதிருப்பதேயாகும். புதிய ஏற்பாட்டில் நான்கு இடங்களில் மட்டுமே வானம் திறந்ததைப் பற்றி நாம் வாசிக்கலாம். ஆரம்பத்தில் இயேசுகிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின் போது வானம் திறந்திட பரிசுத்த ஆவியானவர் புறாவின் ரூபங்கொண்டு அவர்மீது இறங்கியதைப் பற்றி லூக்கா 3:21-22ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்னர், ஸ்தேவான் இரத்தசாட்சியாக மரிக்கும் போது வானம் திறந்திருப்பதையும், இயேசுகிறிஸ்து மகிமை பொருந்தியவராக நிற்பதையும் அவன் கண்டதை அப்போஸ்தலர் 7:55-56 அறியத் தருகின்றது.[7] அதேபோல பேதுருவுக்கும் யோவானுக்கும் கிடைத்த தரிசனங்களிலும் அவர்கள் வானம் திறந்திருக்கிறதைக் கண்டதைப் பற்றி அப்போஸ்தலர் 10:10-12லும், வெளிப்படுத்தல் 4:1 மற்றும் 19:11லும் நாம் வாசிக்கலாம். எனினும் இச்சந்தர்ப்பங்களில் இயேசுகிறிஸ்து நாத்தான்வேலுக்கு அறிவித்த விதமாக எவரும் தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் காணவில்லை. இதனால் இயேசுகிறிஸ்து நாத்தான்வேலுக்கு எதைப்பற்றி முன்னறிவித்துள்ளார் என்பதைப் பற்றி அறிந்து கொள்வது கடினமானதாகவே உள்ளது.[8]

வசனங்களில் அவதானிக்கலாம். யோவானுடைய சுவிசேஷத்தில் 25 தடவைகள் இடம்பெறும் இச்சொற்பிரயோகம், தாம் சொல்ல முற்படுவதை முக்கியப்படுத்தி வலியுறுத்துவதற்காக இயேசுகிறிஸ்துவினால் உபயோகிக்கப்பட்டுள்ளது (R.A.Culpepper, "The AMHN AMHN Sayings in the Gospel of John" in *Perspectives in John*, pp. 57-101).

[7] இயேசுகிறிஸ்து பரமேறிய பின்னர், பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதாகவே புதிய ஏற்பாடு அறியத்தருகின்றது. ஆனால் ஸ்தேவானின் மரிக்கும் போது அவர் எழுந்து நிற்பதை அவன் கண்டான். இதற்குக் காரணம், இரத்தசாட்சியாக மரிக்கும் அவனை பரலோகத்திற்குள் வரவேற்பதற்கே என்று கருதப்படுகின்றது (F.F.Bruce, *Acts: The New International Commentary on the New Testament*, p. 156).

உண்மையில், இயேசுகிறிஸ்து குறிப்பிடும் விதமான ஒரு விவரணம் பழைய ஏற்பாட்டில் யாக்கோபின் தரிசனத்திலேயே உள்ளது.[9] இதனால், யாக்கோபின் தரிசனத்தை அடிப்படையாகக் கொண்டே நாம் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை விளக்க வேண்டும் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.[10] இயேசுகிறிஸ்து குறிப்பிட்ட விதமாக வானத்திற்கும் பூமிக்கும் இடையில் இருந்த ஏணியில் தேவதூதர்கள் ஏறுகிறதையும் இறங்குகிறதையும் யாக்கோபு கண்டதைப் பற்றி ஆதியாகமம் 28:12ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் யாக்கோபின் தரிசனத்தில் வானம் திறக்கப்பட்டதைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதேசமயம், யாக்கோபு கண்ட ஏணியைப் பற்றி இயேசுகிறிஸ்து எதுவும் கூறவில்லை. இரண்டிலும் உள்ள பொதுவான விடயம், வானத்திற்கும் பூமிக்கும் இடையிலான தொடர்பாகும். எனினும், யாக்கோபின் தரிசனத்திலுள்ள ஏணிக்குப் பதிலாக இயேசு கிறிஸ்துவின் கூற்றில் மனுஷகுமாரன்[11] வானத்திற்கும் பூமிக்கும் இடையிலான ஏணியாக இருக்கின்றார்.

இயேசுகிறிஸ்துவின் கூற்றானது நாத்தான்வேலுடனான அவரது உரையாடலிலேயே இடம் பெறுவதனால், அவர் அவனைக்

---

[8] சில வேத ஆராய்ச்சியாளர்கள் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் தேவதூதர்கள் தோன்றிய சம்பவங்களைப் பற்றிய முன்னறிவிப்பாக இவ்வசனத்தை விளக்கியுள்ளனர். வேறுசிலர், இது இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையைப் பற்றிய முன்னறிவிப்பு என்று கூறுகின்றனர் (J.C.Ryle, *Expository Thoughts on John Volume 1*, pp. 86-87). ஆனால், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் இவ்விரு விளக்கங்களுக்கும் ஏற்றவிதமாக இல்லை. ‘இதுமுதல் காண்பீர்கள்’ என்று இயேசுகிறிஸ்து கூறுவதனால், அவர் இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளதை எதிர்காலத்தில் நிறைவேறும் தீர்க்கதரிசனமாக அல்ல, அன்றிலிருந்து தொடர்ச்சியாக நடைபெறப்போகிற விடயத்தைப் பற்றிய அறிவிப்பாகவே உள்ளது.

[9] யாக்கோபின் தரிசனம் ஆதியாகமம் 28ம் அதிகாரத்தில் உள்ளது.

[10] சபைப்பிதாக்களில் ஒருவரான ஒகஸ்டீன் (கி.பி.354-430) என்பாரே முதல் தடவையாக யாக்கோபின் தரிசனத்தையும் இயேசுகிறிஸ்துவின் இக்கூற்றையும் தொடர்புபடுத்தி வியாக்கியானம் செய்தவராவார்.

[11] “மனுஷகுமாரன்” என்பது இயேசுகிறிஸ்து தமக்கு உபயோகித்த மேசியப் பெயராகும். இது தானியேல் 7ம் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது. பழைய ஏற்பாட்டில் எசேக்கியேல் புத்தகத்தில் இச்சொற்பிர

கண்டபோது,[12] அவன் யாக்கோபின் தரிசனத்தைப் பற்றிய வேதப் பகுதியையே தியானித்துக் கொண்டிருந்ததாக வேத

யோகம் மனிதனைக் குறிக்க உபயோகிக்கப்பட்டுள்ள போதிலும் (எசே. 3:1, 3:4, 4:1, 24:2, 37:3, 37:11, 38:2), தானியேலினுடைய புத்தகத்தில் தேவனுக்கும் மனிதருக்கும் இடையில் மத்தியஸ்தராகக் கடைசி காலத்தில் வரும் மேசியாவைக் குறிக்கும் பெயராக இது உள்ளது. யோவான் எழுதிய சுவிசேஷத்தில் 13 தடவைகள் இடம்பெறும் இப்பெயர், முதல் மூன்று சுவிசேஷங்களிலும் 69 தடவைகள் இயேசுகிறிஸ்துவினால் உபயோகிக்கப்பட்டுள்ளது. சுவிசேஷப்புத்தகங்களுக்கு வெளியில் அப்போஸ்தலர் 7:56ல் மட்டுமே இப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (W.Barclay, *Jesus: As They Saw Him*, pp. 68-92). அக்காலத்தில் யூதர்கள் அரசியல் ரீதியான மேசியாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தமையால், இயேசுகிறிஸ்து தாம் மேசியா என்பதை அவர்களுக்கு நேரடியாகக் கூறாமல், அதற்குப் பதிலாக மனுஷகுமாரன் என்னும் பெயரை உபயோகித்தார். சமாரியர்கள் மத்தியில் அரசியல் ரீதியான மேசியாவைப் பற்றிய எதிர்பார்ப்புகள் இராதமையால், சமாரியப் பெண்ணோடு பேசும்போது, இயேசு கிறிஸ்து தம்மை மேசியாவாக வெளிப்படுத்தினார் (யோவா.4:25-26. இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது *ஆத்தும தாகத்திற்கு அற்புதத் தண்ணீர்* என்னும் நூலின் 8ம் அத்தியாயத்தைப் பார்க்கவும்). இயேசுகிறிஸ்து அற்புதங்கள் செய்தபோது அவரே வரவிருக்கும் மேசியா என்னும் எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டது (யோவா.6:14, 10:24 மேசியா என்னும் எபிரேயப் பெயரின் கிரேக்க மொழிபெயர்ப்பே கிறிஸ்து என்பதாகும்). எனினும், யூதர்கள் மேசியாவை அரசியல் ரீதியான மேசியாவாக, அதாவது, ரோம ராட்சியத்தின் அடிமைத்தனத்திலிருந்து தங்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்கும் மேசியாவாக எதிர்பார்த்தமையால், தாம் செய்யும் அற்புதங்கள் மூலமாகத் தமக்கிருக்கும் வல்லமையை அறிந்து கொண்டு, தம்மை அரசியல் ரீதியான மேசியாவாக்கி (யோவா. 6:15), ரோம அரசிற்கு எதிராகப் புரட்சிசெய்வார்கள் என்பதனால், தாம் செய்த அற்புதங்கள் பற்றி எவருக்கும் கூற வேண்டாம் என்று கட்டளையிட்டார் (மத்.16:20, மாற்.8:29-30, லூக்.9:20-21). இயேசுகிறிஸ்து "மனுஷகுமாரன்" என்னும் மேசியப் பெயரைத் தமக்கு உபயோகித்த போது, "மேசியா" என்னும் பெயரோடு அக்காலத்தில் சேர்ந்திருந்த அரசியல் கருத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தமையால், அவர் தம்மை மனுஷகுமாரன் என்றே அறிமுகப்படுத்தினார் (L. Morris, *New Testament Theology*, pp. 101-106, 124-126, 159-166; M.C.Tenny, *New Testament Times*, pp. 45-66; E.Ferguson, *Backgrounds of Early Christianity*, pp. 19-38).

[12] சில வேத ஆராய்ச்சியாளர்கள், இக்கூற்றானது இதற்கும் முன் உள்ள வசனங்களுடன் தொடர்பற்ற தனியான ஒரு வாக்கியம் என்று தர்க்கித்து வருகின்ற போதிலும் (R.E.Brown, *John: Introduction, Translation and Notes Volume 1*, p. 88-89), இவர்கள் சுட்டிக்காட்டும் காரணங்கள் நியாய

ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[13] நாத்தான்வேல் தன்னிடத்தில் வருவதற்கும் முன்பே, தாம் அவனை அத்தி மரத்தின் கீழ் கண்டதாக இயேசுகிறிஸ்து யோவான் 1:48ல் அறியத்தந்துள்ளார். அத்திமரம் நிழல் தரக்கூடியதாய் இருப்பதனால், ஜெபிப்பதற்கும் வேதத்தைத் தியானிப்பதற்கும் அக்கால யூதர்கள் அம்மரத்தின் கீழ் இருப்பது வழமை.[14] இவ்வாறு நாத்தான்வேல் பழைய ஏற்பாட்டில் சித்தரிக்கப்பட்டிருக்கும் யாக்கோபின் தரிசனத்தைத் தியானித்துக் கொண்டிருந்தமையினாலேயே இவ்விதமான ஒரு விவரணத்தின் மூலம் இயேசுகிறிஸ்து அவனோடு பேசியுள்ளதாகக் கருதப்படுகின்றது.[15]

மானவைகளாகவும் ஆதாரபூர்வமானவையாகவும் இல்லை. உண்மையில், 50ம் வசனத்தின் தொடர்ச்சியாகவே 51ம் வசனம் இருப்பதை மறுக்க முடியாதுள்ளது.

[13] M.C.Tenney, *John: The Expositor's Bible Commentary*, p. 41.

[14] W.Barclay, *John Volume 1: The Daily Study Bible*, p. 93; J.Michaels, "Nathaniel under the Fig tree" in *Expository Times*, pp. 182-183. இவ்வசனத்தை விளக்கும் போது, ஆதிச்சபைப் பிதாக்கள், அத்தி மரத்தைப்பற்றி கூறியவை ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கங்களாக இல்லை. இயேசுகிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி கேள்விப்பட்டு, இரண்டு வயதிற்கு உட்பட்ட ஆண்பிள்ளைகளை ஏரோது கொலை செய்த போது (மத்.2:16), நாத்தான்வேலின் தாய் குழந்தையாக இருந்த அவனை ஒரு அத்தி மரத்தின் கீழ் வைத்திருந்ததைத் தாம் குழந்தையாய் இருந்தபோது கண்டதாகவே இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார் என்னும் விளக்கம் ஆதிச்சபைப்பிதாக்களின் கற்பனையில் உருவான ஒரு கதையாகவே உள்ளது. ஏரோது யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்னும் நகரத்திலும் அதன் எல்லைகளிலும் இருந்த குழந்தைகளையே கொலை செய்ததாக மத்தேயு 2:16 கூறுகிறது. ஆனால் நாத்தான்வேல் கலிலேயாவிலுள்ள 'கானா' என்னும் ஊரைச் சேர்ந்தவன். மேலும் சபைப்பிதா ஒகஸ்டீனின் விளக்கம் மிகைப்படுத்தப்பட்ட வியாக்கியானமாக உள்ளது. பாவம் செய்த பின்னர் ஆதாமும் ஏவாளும் அத்தி இலைகளையே தங்களுக்கு ஆடையாக்கிக் கொண்டமையால், அத்தியிலை பாவத்தைக் குறிக்கின்றது என்றும், இதனால், இயேசுகிறிஸ்து அத்தி மரத்தின் கீழ் நாத்தான்வேலைக் கண்டது அவன் பாவத்தின் நிழலில் இருந்ததை அறியத்தருகின்றது என்றும் கூறினார் (J.C.Ryle, *Expository Thoughts on John Volume 1*, pp. 84-85). இயேசுகிறிஸ்து நாத்தான்வேலைக் "கபடற்றவன்" என்று குறிப்பிட்டுள்ளமையால் இவ்விளக்கத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது.

[15] E.A.Blum, *John: The Bible Knowledge Commentary*, p. 276. இயேசுகிறிஸ்து நாத்தான்வேலை 'கபடற்ற உத்தம இஸ்ரவேலன்' என்று

வானம் திறக்கப்படும் தரிசனமானது, “தெய்வீக விடயங்களை மனிதருக்குக் காட்டும் பரலோகக் காட்சியாக உள்ளது.”[16] எனவே, பரலோக விடயங்கள் மனிதருக்கு வெளிப்படுத்தப்படுவதைப் பற்றியே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது. மேலும், “மனுஷகுமாரனிடத்திலிருந்து” என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை மூலமொழியின்படி “மனுஷகுமாரனின் மீது” என்றிருக்க வேண்டும். அதாவது தேவதூதர்கள் மனுஷகுமாரனின் மீதே பூமியிலிருந்து வானத்திற்கு ஏறுகிறவர்களாகவும், வானத்தில் இருந்து பூமிக்கு இறங்குகிறவர்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.[17] உண்மையில், மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவே, வானத்திற்கும் பூமிக்கும் இடையிலான ஏணியாக இருக்கின்றார். எனவே பரலோக விடயங்களை மனிதருக்கு அறியத்தருபவராக தாம் இருப்பதை இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். உண்மையில், “இயேசு கிறிஸ்து மக்களுக்கு வானத்தைத் திறந்து காண்பிப்பவராக இருக்கின்றார்.”[18]

மனுஷகுமாரனாகிய தம்மீது, தேவதூதர்கள் ஏறுவதையும் இறங்குவதையும் பற்றி இயேசுகிறிஸ்து குறிப்பிடுவதனால், பூலோகத்திலிருந்து பரலோகத்திற்குச் செல்லும் வழி இயேசுகிறிஸ்துவிலேயே இருக்கின்றது என்பதையும், வானத்திலிருந்து தூதர்கள் இறங்கி வருவதானது, பரலோக செய்திகள் இயேசுகிறிஸ்துவின்

குறிப்பிட்டார் (யோவா.1:47). நாத்தான்வேல் தியானித்துக் கொண்டிருந்த வேதப்பகுதியில் வரும் யாக்கோபு, மற்றவர்களை ஏமாற்றுகிற குணமுடையவனாக இருந்தான். ஆனால் அதற்கு முரணாக நாத்தான்வேல் இருப்பதை இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டியுள்ளார் (G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, pp. 147-148).

[16] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 163.

[17] தமிழ் வேதாகமத்தின் புதிய மொழிபெயர்ப்புகளில் ஒன்றான திருவிவிலியத்தில் இவ்வசனம் இத்தகைய அர்த்தத்துடன் வானம் திறந்திருப்பதையும், கடவுளின் தூதர்கள் ‘மானிடமகன்மீது’ ஏறுவதையும் இறங்குவதையும் காண்பீர்கள் என மிக உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[18] L.Morris, *Expository Reflections on the Gospel of John*, p. 67.

மூலமாகவே பூமிக்கு வரமுடியும் என்பதையும் அறியத்தருகின்றது. “வானத்துக்கும் பூமிக்கும் இடையில் இருக்கும் ஒரேயொரு இணைப்பாக இயேசுகிறிஸ்துவே இருக்கின்றார். அவர் பரலோக விடயங்களைப் பூமிக்குக் கொண்டு வருவதோடு, பூமியிலிருக்கும் மனிதரைப் பரலோகத்திற்குக் கொண்டு செல்கிறவராகவும் இருக்கிறார்.”[19] இதிலிருந்து, நாம் பரலோக விடயங்களை அறிந்து கொள்ளவேண்டுமானால், அவற்றை இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நம்மால் அறிந்து கொள்ள முடியும் என்பது தெளிவாகின்றது. அதேபோல, நாம் பரலோகத்திற்குச் செல்ல வேண்டுமானால் அதுவும் இயேசுகிறிஸ்து என்னும் ஏணியின் மூலமாகச் சென்றால் மட்டுமே சாத்தியமாகும் என்பதையும் இவ்வசனம் அறியத்தருகின்றது.[20] எனவே, பரலோகவாசல் இயேசுகிறிஸ்துவிலேயே திறந்துள்ளது என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

[19] L.Morris, *Expository Reflections on the Gospel of John*, p. 67.
[20] இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் தம்மை ஏணியாக உருவகித்துள்ளது, யோவான் 10ம் அதிகாரத்தில் அவர் தம்மை வாசலாக உவமித்துள்ளதோடு தொடர்புற்றுள்ளதாகவும் கருதப்படுகின்றது (E.M.Sidebottom, *The Christ of the Fourth Gospel*, pp. 123-123).

இரண்டாம் அத்தியாயம்



ஸ்திரீயே

எனக்கும் உனக்கும் என்ன?

என் வேளை இன்னும் வரவில்லை....

(யோவான் 2:4)

இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களிலேயே கிரகித்துக் கொள்ள முடியாமலிருக்கும் வார்த்தைகள், அவர் தமது தாயாகிய மரியாளை அழைத்த முறையாகும். அவர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமது தாயை "அம்மா" என்று அழைத்ததாகச் சுவிசேஷப் புத்தகங்களில் குறிப்பிடப்படாதமையால், அவர் தமது தாயை மதிக்காதவராக அவளோடு கடுமையாக நடந்து கொண்டுள்ளதாகப் பலர் கருதுகின்றனர். யோவான் எழுதிய சுவிசேஷத்தில் 'கானா'[1] என்னும் ஊரில் நடைபெற்ற திருமண விருந்தின்போ

[1] 'கானா' என்பது பலஸ்தீனாவின் வடபகுதியான கலிலேயாவிலிருந்த சிறிய பட்டணமாகும். யோவானுடைய சுவிசேஷத்தில் நான்கு தடவைகள் இப்பட்டணம் 'கலிலேயாவிலுள்ள' என்னும் அறிமுகத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளது (யோவா.2:1, 2:11 4:46, 21:2). பழைய ஏற்பாட்டிலும் 'கானா' என்னும் பெயரில் ஒரு பிரதேசம் இருப்பதனால் (யோசு.16:8, 19:28), அதிலிருந்து இப்பட்டணத்தை வேறுபடுத்திக் காண்பிப்பதற்காகவே யோவான் நான்கு தடவைகளும் தான் குறிப்பிடும் 'கானா' கலிலேயாவில் இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார் (A.C.Myers, ed., *The Eerdmans Bible*

தும், சிலுவையில் மரிக்கும்போதும் இயேசுகிறிஸ்து தமது தாயை "ஸ்திரீயே" என்றே அழைத்துள்ளதை யோவான் 2:4லும் 19:26லும் நாம் அவதானிக்கலாம். மேலும் அவர் இவ்விதமாகவே ஏனைய பெண்களையும் அழைத்துள்ளதை சுவிசேஷப் புத்தகங்கள் அறியத்தருகின்றன (மத்.15:28, லூக்.13:12, யோவா.4:21, 20:15). இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பின்னர் மரியாளைப் பராமரித்து வந்த யோவான் தனது சுவிசேஷப் புத்தகத்

Dictionary, p. 185). பழைய ஏற்பாட்டுக் 'கானா' ஆசேர் கோத்திரத்தாருக்கு கொடுக்கப்பட்ட பட்டணங்களில் ஒன்றாக உள்ளது (யோசு.19:24-28). தற்காலத்திலும் இப்பட்டணம் இதே பெயரில் 'தீரு' என்னும் பட்டணத்திற்குத் தென் கிழக்கில் 7 மைல்கள் தொலைவில் உள்ளது (M. H.Woudstra, *Joshua: The New International Commentary on the Old Testament*, p. 289). யூத வரலாற்றாசிரியர் ஜோசீப்பஸ் என்பவர் ஒரு தடவை தான் கலிலேயாவிலுள்ள 'கானா' என்னும் ஊரில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ள போதிலும், இப்பெயர் வேறு புராதன இலக்கியங்களில் இடம்பெறாதமையால், இப்பட்டணம் பிரபலமற்ற ஒரு பிரதேசமாகவே அக்காலத்தில் இருந்திருக்க வேண்டும் (L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 177). "கலிலேயாவிலுள்ள" என்னும் அறிமுகத்துடன் யோவான் இப்பட்டணத்தைக் குறிப்பிடுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கும். புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள், தற்போது இஸ்ரேலில் நாசரேத் என்னும் நகரத்திற்கு 9 மைல்கள் வடக்கில் சிதைவடைந்த நிலையில் இருக்கும் 'கிர்பத் குஆனா' (Khirbet Qana) என்னும் இடமே புதிய ஏற்பாட்டுக்கால 'கானா' என்னும் ஊர் என்பதைக் கண்டுபிடித்துள்ளனர் (D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 168). இவ்விடத்தில் இயேசுகிறிஸ்துவின் காலத்தைய மட்பாண்டத் துண்டுகளும் நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (E.M.Blaiklock & R.K.Harrison, ed., *The New International Dictionary of Biblical Archaeology*, p. 116). "நாசரேத்" என்னும் நகரத் திற்கு நான்கு மைல்கள் வடகிழக்கில் திபேரியாவிற்குச் செல்லும் வழியில் இருக்கும் 'கெர்.'.ப் கீனா' (Kefr Kenna) என்னும் பட்டணமே புதிய ஏற்பாட்டுக்கால 'கானா' என்னும் ஊர் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதினார்கள். இதனால், கிரேக்க மற்றும் ரோம ஆலயங்கள் இப்பட்டணத்தில் கட்டப்பட்டுள்ளதோடு, கிரேக்க ஆலயத்தில், இயேசுகிறிஸ்து கானா ஊரில் செய்த அற்புதத்தில் உபயோகித்ததாகக் கூறப்படும் ஒரு சாடியும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. ஆனால், இது உல்லாசப் பிரயாணிகளினால் இலகுவாக வந்து போகக்கூடிய இடமாக இருப்பதினாலேயே இவ்விடத்தில் ஆலயங்கள் கட்டப்பட்டு, இவ்விடமே புதிய ஏற்பாட்டுக்கால கானா என்று கூறப்பட்டு வந்துள்ளது. ஆனால் இதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை. அதேபோல, ஆதிச் சபையின் வரலாற்றாசிரியர் இயூசிபியஸ் பழைய ஏற்பாட்டுக்கால கானாவே புதிய

தில் அவளது பெயரைக்கூட குறிப்பிடாமல் மரியாதையாக "இயேசுவின் தாய்" என்று எழுதியிருக்கும்போது (யோவா.2:1),[2] இயேசுகிறிஸ்து தமது தாயை "ஸ்திரீயே" என்று அழைத்தது உண்மையிலேயே பலருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்காலத்தில் 'ஸ்திரீ' என்னும் வார்த்தை ஒரு பெண்ணை அழைப்பதற்குச் சற்று தரக் குறைவானதாகத் தென்பட்டாலும்,[3] மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "குனெய்" (*gunai*) என்னும் கிரேக்க பதமானது மரியாதை குறைவான வார்த்தை அல்ல.[4] மேலும் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போதும் இவ்விதமாகவே தமது தாயை அழைத்துள்ள போதிலும், "அச் சந்தர்ப்பத்தில் அவளோடு அவர் கடுமையாகப் பேசவில்லை."[5] "கிரேக்கத்தில் இது மரியாதையுடனும் பாசத்துடனும் ஒரு பெண்ணை அழைக்க உபயோகிக்கப்படும் வார்த்தையாகும்."[6] அக்காலத்தில் பாசமுள்ள கணவன் தன் மனைவியை அழைப்ப

ஏற்பாட்டுக்கால கானா என்று குறிப்பிட்டுள்ளதற்கும் எவ்வித ஆதாரமும் இல்லை (G.W.Bromiley, *The International Standard Encyclopedia Volume 1*, pp. 584-585). மேலும் நாசரேத்திலிருந்து ஒன்றரை மைல்கள் தொலைவில் தாபோருக்குச் செல்லும் வழியில் இருக்கும் 'அய்ன் குஆனா' என்னும் இடமே புதிய ஏற்பாட்டுக் கானா என்னும் சிலரது கருத்திற்கு (W.Sanday, *Sacred Sites of the Gospels*, p. 24) எவ்வித ஆதாரமும் இல்லை.

[2] இயேசுகிறிஸ்துவை "மரியாளின் மகன்" என்று குறிப்பிடாமல், மரியாளை "இயேசுகிறிஸ்துவின் தாய்" என்று யோவான் குறிப்பிட்டுள்ளதை நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம். இயேசுகிறிஸ்துவின் முக்கியத்துவம் மரியாளிடமிருந்து வரவில்லை. மாறாக, மரியாளின் முக்கியத்துவம் இயேசுகிறிஸ்துவிடமிருந்து அவளுக்குக் கிடைத்துள்ளதை யோவானின் வார்த்தைகள் அறியத்தருகின்றன (G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, pp. 154-155).

[3] வேதாகமத்தின் புதிய இலகு தமிழ் மொழிபெயர்ப்பில் "ஸ்திரீயே" என்பதற்குப் பதிலாக "பெண்ணே" என்னும் வாத்தை உபயோகிக்கப் பட்டுள்ளது.

[4] புதிய ஏற்பாடு ஆரம்பத்தில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டமையால் புதிய ஏற்பாட்டு வார்த்தைகளின் முழுமையான அர்த்தத்தை அறிந்து கொள்வதற்கு மூலமொழியான கிரேக்கத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள வார்த்தைகளின் அர்த்தத்தை அறிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

[5] R.C.H.Lenski, *The Interpretation of St. John's Gospel*, p. 189.

[6] H.G.Liddell & R.Scott, *A Greek-English Lexicon*.

தற்கு இவ்வார்த்தையை உபயோகிப்பது வழமை.[7] கிரேக்க இலக்கியங்களிலும் இதனை நாம் அவதானிக்கலாம்.[8] உண்மையில் இது "மரியாதையுடனும் அன்புடனும் ஒரு பெண்ணை அழைக்க உபயோகிக்கப்பட்ட வார்த்தையாகும்."[9] ஆனால் ஒரு மகன் தனது தாயை அழைப்பதற்கு இது பொருத்தமான வார்த்தை என்று கூறமுடியாது. "யூதர்களோ அல்லது கிரேக்கர்களோ தங்களுடைய தாயை அழைக்க இவ்வார்த்தையை ஒருபோதும் உபயோகித்ததில்லை."[10]

இயேசுகிறிஸ்து தமது தாயை மரியாதை குறைவாக அழைக்காத போதிலும், தமக்கும் அவளுக்கும் இடையிலான உறவில் ஒரு மாற்றத்தை, அதாவது ஒரு தொலைவை (அல்லது இடைவெளியை), அவளை 'ஸ்திரீ' என்று அழைப்பதன் மூலம் காண்பித்துள்ளார். அதாவது, அதுவரை காலமும் மரியாளின் மகனாகச் செயற்பட்ட அவர் இப்போது தேவகுமாரனாகச் செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டதை மரியாளுக்கு உணர்த்துவதற்காக, தமது பகிரங்க ஊழியக் காலத்தில் அவர் மற்ற பெண்களை அழைத்த விதமாகவே தமது தாயையும் அழைத்துள்ளார். இதை அவரது வார்த்தைகளே அறியத்தருகின்றன. ஏனென்றால் "எனக்கும் உனக்கும் என்ன?" என்னும் அடுத்து வரும் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் "இரு நபர்களுக்கிடையிலான உறவில் ஒரு இடைவெளி அல்லது தொலைவு இருப்பதைச் சுட்டிக் காட்ட அக்கால யூதர்கள் உபயோகிக்கும் ஒரு சொற்பிரயோகமாகும்."[11] எனினும் இது உச்சரிப்பின் முறையை அடிப்படையா

---

[7] F.Josephus, *The Antiquities of the Jews* 17.4.74.

[8] உதாரணத்திற்கு "ஹோமர்" என்னும் இலக்கியத்தில் 'ஒடீசியெஸ்' என்பவன் தான் மிகவும் அதிகமாக நேசித்த மனைவியை இவ்விதமாகவே அழைத்துள்ளான். அதேபோல, ரோம சக்கரவர்த்தி ஒகஸ்ட்டஸ் என்பவன் 'கிளியோபத்ராவை' அழைக்க உபயோகித்த வார்த்தையும் இதுவேயாகும்.

[9] W.Barclay, *John Volume One: The Daily Study Bible*, p. 98.

[10] L.Morris, *Expository Reflections on the Gospel of John*, p. 73.

[11] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 170. நியாயாதிபதிகள் 11:12, 1ராஜாக்கள் 17:18, 2ராஜாக்கள் 3:13, 2நாளாகமம் 35:21 ஓசியா 14:8 போன்ற வசனங்களிலும் இத்தகைய சொற்பிரயோகத்தை நாம் அவதானிக்கலாம்.

கக் கொண்டு கடுமையாக அல்லது மென்மையாகச் சொல்லப்பட லாம். பிசாசுகள் இயேசுகிறிஸ்துவோடு பேசும்போது, இச்சொற் பிரயோகத்தைக் கடுமையாக உபயோகித்துள்ளதை மத்தேயு 8:29, மாற்கு 1:24, 5:7, லூக்கா 4:34, 8:28 போன்ற வசனங்களில் நாம் அவதானிக்கலாம். இயேசுகிறிஸ்து மரியாளோடு கடுமையா கப் பேசியிருந்தால், அவரது வார்த்தைகள், "தமது அலுவல்க ளில் தலையிடாமல் இருக்கும்படியும், தமது விருப்பம் போல செயற்படத் தம்மை விட்டு விடும்படியும் கூறுவதாகப் பொருள்ப டும்."[12] ஆனால், "மென்மையாக உபயோகிக்கும் போது இச்சொற் பிரயோகம் கடிந்து கொள்ளுதலை அல்ல, மாறாக, தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதையே சுட்டிக்காட்டும்."[13] இயேசுகிறி ஸ்து மரியாளைக் கடிந்து கொள்ளாமல், மரியாதையுடனும் பாசத்துடனுமே பேசியுள்ளமையால், அவர், தமக்கும் மரியாளுக் கும் இடையிலான உறவை அவள் தவறாகப் புரிந்து கொண் டிருந்ததைச் சுட்டிக்காட்டுவதற்காக இவ்வாறு கூறியுள்ளார். "அதுவரை காலமும் மரியாளின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்த இயேசுகிறிஸ்து (லூக்.2:51) அவளது அதிகாரத்திற்குத் தாம் உட்பட்டிருந்த காலம் முடிவடைந்து விட்டதைச் சுட்டிக் காட்டுவதற்காக அவளை இவ்வாறு அழைத்துள்ளார்."[14] எனவே "மரியாள் இனிமேல் தம்மை அவளுடைய மகனாக மட்டும் பார்க்காமல், தன்னுடைய கர்த்தராகவும் பார்க்கும்படியாக அவ ளை இவ்வாறு அழைத்துள்ளார்."[15]

---

[12] N.Turner, *Grammatical Insights into the New Testament*, p. 47.

[13] W.Barclay, *John Volume 1: The Daily Study Bible*, p. 98.

[14] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 158.

[15] W.Hendriksen, *New Testament Commentary: John*, p. 115. இயேசு கிறிஸ்துவின் பகிரங்க ஊழியம் அவரது குடும்ப உறவினர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கவில்லை (யோவா.7:3-9, மாற்.4:31-35). இதில் அவருடைய தாயினாலும் செல்வாக்கு செலுத்த முடியாது என்பதை இயேசுகிறிஸ்து தமது தாயை ஸ்திரீயே என்று அழைப்பதன் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்... மேலும், இயேசுகிறிஸ்து சொல்கின்ற விதமாக செய்யும்படி மரியாள் வேலைக்காரரிடம் கூறுவது, அவள் அவரது அதிகாரத்தின் கீழ் செயற்பட ஆரம்பித்துள்ளதையே அறியத்தருகின்றது (G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 155-156).

தமது தாயை ஸ்திரீயே என்று அழைத்து, தமக்கும் அவளுக்கும் இடையிலான உறவின் தன்மையை அவள் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதை அவளுக்குச் சுட்டிக்காட்டிய இயேசுகிறிஸ்து, “என் வேளை இன்னும் வரவில்லை” (யோவா.2:4) என்றும் கூறினார். யோவானுடைய சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவின் இக்கூற்று ஐந்து தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளதோடு (2:4, 7:6, 7:8, 7:30, 8:20) மூன்று தடவைகள் “என் வேளை வந்து விட்டது” என்றும் அவர் தெரிவித்துள்ளார் (12:23, 13:1, 17:2). தாம் மரிக்கும் நேரம் நெருங்கிவரும் போதே, “என் வேளை வந்து விட்டது” என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளமையால், “அவரது வேளை” சிலுவை மரணம் என்பது தெளிவாகின்றது.[16] சிலுவையில் தம்மைப் பலியாகக் கொடுப்பதற்காகவே இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தமையால், அப்பணியைச் செய்வதற்காகவே தாம் வந்துள்ளதை ஆரம்பத்திலேயே தமது தாயாருக்கு உணர்த்துவதற்காகவே, தமக்கும் அவளுக்கும் இடையிலான உறவின் தன்மையை சுட்டிக்காட்ட, அவர் தமது தாயை ஸ்திரீயே என்று அழைத்துள்ளார். இயேசுகிறிஸ்து மேசியாவாகச் செயற்பட ஆரம்பித்த போது, அவருக்கும் மரியாளுக்கும் இடையிலான உறவில் ஒரு மாறுதல் ஏற்பட்டதை எவராலும் மறுக்க முடியாது. எனவே, இங்கு எவ்வித மரியாதைக் குறைவும் அவமதிப்பும் இல்லை. இதனால், சில வேத ஆராய்ச்சியாளர்கள் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையைத் “தாயே” என்று மாற்றியுள்ளது போல மாற்றுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.[17] இயேசு

---

[16] F.Salvoni, “Nevertheless, My Hour Has Not Yet Come” in *Restoration Quarterly*, pp. 236-241.

[17] அண்மையில் வெளிவந்த வேதாகமத்தின் புதிய மொழிபெயர்ப்பான திருவிவிலியத்தில் ‘ஸ்திரீ’ என்பது ‘அம்மா’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள போதிலும், ‘’அம்மா என்னும் சொல் தாய் என்னும் பொருளில் அல்ல, பெண்களை மதிப்புடன் குறிப்பிடும் பொருளில் இங்கு கையாளப் படுகிறது’’ என்னும் விளக்கம் அடிக்குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் New International Version ‘அன்பான பெண்ணே’ (Dear Woman) என்னும் அர்த்தத்தில் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையை மொழிபெயர்த்துள்ளது. ஆனால், ‘அன்பான’ என்னும் பதம் மூலமொழியில் இல்லை என்பதை நாம் மறக்கலாகாது. Good News Bible ஸ்திரீயே என்னும் வார்த்தையை மொழிபெயர்க்காமல் விட்டுள்ளது. இதனால்

கிறிஸ்து மனிதராகப் பிறப்பதற்குத் தேவன் மரியாளை உபயோகித்தது உண்மை என்றாலும் அவளும் மற்ற பெண்களைப் போலவே இருக்கின்றாள் என்பதை நாம் மறக்கலாகாது.[18]

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையிலுள்ள முக்கியமான விடயத்தை இம் மொழிபெயர்ப்பை வாசிப்பவர்களினால் அறியமுடியாதுள்ளது (B.Newman & E.Nida, *A Translator's Handbook on the Gospel of John*, p. 57).

[18] இதனால்தான் பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவருக்காகக் காத்திருந்தவர்களில் மரியாளும் இருந்தாள் (அப்.1:14). ஆதி சபையில் மரியாள் மற்ற பெண்களைப் போல சாதாரணமான ஒரு பெண்ணாகவே இருந்தாள் என்பதை இது அறியத்தருகின்றது. ஆனால் கி.பி.431ல் எபேசு பட்டணத்தில் கூடிய கிறிஸ்தவ சபையின் ஆலோசனைச் சங்கக் கூட்டத்தில் "தேவத் தாய்" என்னும் பெயர் மரியாளுக்கு கொடுக்கப்பட்டது. அதன்பின்னர் கி.பி.451ல் "சால்சிடோன்" என்னுமிடத்தில் கூடிய ஆலோசனைச் சங்கத்தில் எழுதப்பட்ட "சால்சிடோனிய விசுவாசப் பிரமாணத்திலும்" மரியாள் தேவத்தாய் என்னும் விடயம் சேர்த்துக் கொள்ளப்பட்டது. கி.பி.553ல் கொன்ஸ்தாந்திநோபிள் என்னும் இடத்தில் கூடிய சபையின் ஆலோசனைச் சங்கக்கூட்டத்தில் மரியாள் மரிக்கும் வரை கன்னிப்பெண்ணாகவே இருந்தாள் என்னும் உபதேசம் கொண்டு வரப்பட்டது. மரியாள் உலகில் வாழ்ந்த காலத்தில் எந்த ஒரு பாவமும் செய்யவில்லை என்று சபைப்பிதா ஒகஸ்டீன் (கி.பி.354-430) தர்க்கித்து வந்தார். இதனால், பிற்காலத்தில் மரியாள் பாவசுபாவமற்றவளாகவே பிறந்தாள் என்னும் உபதேசமும் உருவானது. இது சர்ச்சைக்குரிய உபதேசமாக இருந்து வந்தபோதிலும் 1854ல் சரியான உபதேசமாகப் பிரகடணப்படுத்தப்பட்டது. அதேசமயம், மரியாள் மரணமடையாமல் பரலோகத்திற்குச் சென்றாள் என்பதும் ரோமன் கத்தோலிக்க சபையின் உபதேசமாக உள்ளது (E.Miller & K.R.Samples, *The Cult of the Virgin*, pp. 19-76; L.Boettner, *Roman Catholicism*, pp. 132-167; W.Webster, *The Church of Rome at the Bar of History*, pp. 72-89). ஆனால், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் ரோமன் கத்தோலிக்க சபை மரியாளைப் பற்றி உருவாக்கியுள்ள உபதேசங்களை முரண்படுத்தும் விதத்திலேயே உள்ளது.

மூன்றாம் அத்தியாயம்



ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால்....

(யோவான் 3:5)

இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில், இன்று அதிக சர்ச்சைக்குரிய தாக இருக்கும் வாக்கியம், யோவான் 3ம் அதிகாரத்தில் குறிப்பி டப்பட்டுள்ளது. தம்மிடத்தில் வந்த யூதமதப் போதகனான நிக் கொதேமு[1] என்பவனுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது,

[1] யோவான் சுவிசேஷம் எழுதப்படும் காலத்தில் வாழ்ந்த ஒரு யூதமதத் தலைவனை உருவகிக்கும் அடையாளப் பெயராகவே நிக்கொதேமு என்னும் பெயர் உபயோகிக்கப்பட்டுள்ளதாகச் சிலர் கருதுகின்ற போதி லும் (J.L.Martyn, *History and Theology in the Fourth Gospel*, pp.119-123, 161-163), நிக்கொதேமு என்பவன் இயேசுகிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்த ஒரு மனிதன் என்பதை மறுப்பதற்கில்லை. இதனால், கி.பி.70ம் ஆண்டு எருசலேம் முற்றுகையிடப்பட்டபோது வாழ்ந்ததாக யூத நூல்க ளில் குறிப்பிடப்பட்டுள்ள 'நாக்டிமொன் பென் கொரியொன்' (Naqdimon Ben Gorion) என்னும் செல்வந்தரே யோவானுடைய சுவிசேஷத்தில் நிக்கொதேமு என்னும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளார் என்னும் சிலரது விளக்கம் தவறானதாகவே உள்ளது. யோவான் 3:4ன்படி இயேசுகிறிஸ்து வோடு உரையாடிய நிக்கொதேமு வயதுமுதிர்ந்தவனாக இருப்பதனால்,

அவன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்பதை இயேசுகிறிஸ்து அவனுக்குச் சுட்டிக்காட்டினார். ஆனால் நிக்கொதேமுவோ இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளைப் புரிந்து கொள்ளவில்லை (யோவா.3:1-4). இதனால், மறுபடியும் பிறத்தல் என்றால் என்ன என்பதை அவனுக்கு விளக்குவதற்காக, "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராட்சியத்தில் பிரவேசிக்க மாட்டான்" என்று 5ம் வசனத்தில் இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார் (யோவா.3:5). "ஜலத்தினாலும் ஆவியினாலும்" பிறப்பதே மறுபடியும் பிறத்தல் என்பதை இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள போதிலும், அவர் "ஜலம்" "ஆவி" என்னும் இரு பதங்களையும் எத்தகைய அர்த்தத்தோடு உபயோகித்துள்ளார் என்பது பற்றி கிறிஸ்தவர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

சகல சபைப் பிரிவுகளையும் சேர்ந்த கிறிஸ்தவர்கள், இயேசுகிறிஸ்துவின் கூற்றில் "ஆவி" என்பது பரிசுத்த ஆவியானவரையே குறிக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் ஜலம்

அவன் கி.பி.70ல் வாழ்ந்தவனாக இருக்கமுடியாது. இது உண்மை என்றால், இயேசுகிறிஸ்துவோடு அவன் உரையாடிய காலத்தில் வயது குறைந்தவனாக, யூதர்களின் ஆலோசனைச் சங்கத்தில் அங்கம் வகிக்கக்கூடிய அளவுக்கு வயதுடையாதவனாகவே இருந்திருப்பான். எனவே, கி.பி.70ல் வாழ்ந்த நபரை யோவான் 3ம் அதிகாரத்தில் வரும் நிக்கொதேமுவாகக் கருதமுடியாது (D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 186). யூதர்களுடைய ஆலோசனைச் சங்கத்தில் அங்கம் வகித்த நிக்கொதேமு, பரிசேயனாகவும், இஸ்ரவேலின் முக்கியமான மார்க்கப் போதகனாகவும் இருந்தான் (யோவா.3:1, 3:10). இவன் ஆரம்பத்தில் மறுபிறப்பைப் பற்றிய இயேசுகிறிஸ்துவின் போதனையை விளங்கிக் கொள்ள முடியாதவனாக இருந்தாலும் (யோவா.3:4, 3:9), நாளடைவில் இயேசுகிறிஸ்துவின் சீடனாக மாறினான். இதனால், இவன் யூதர்களிடம் இயேசுகிறிஸ்துவிற்குச் சார்பாகப் பேசியதோடு (யோவா.7:50-51), இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம் பண்ணுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தான் (யோவா.19:38-41). நிக்கொதேமு என்பது கிரேக்கப் பெயராக இருந்தாலும், அக்காலத்தில் யூதர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு இப்பெயரைக் கொடுத்தனர். இப்பெயரின் அர்த்தம், 'மக்களின் மீது வெற்றியீட்டுபவன்' அல்லது 'வெற்றியாளன்' என்பதாகும். (G.W.Bromiley, ed., *The International Standard Bible Encyclopedia Volume 3*, p. 533).

எதைக் குறிக்கின்றது என்பதில்தான் கருத்து முரண்பாடுகள் உள்ளன. மேலும், "ஜலத்தினால் பிறத்தல்" என்னும் சொற்பிர யோகம் வேதாகமத்தில் இவ்வசனத்தில் மட்டுமே இடம்பெறுவத னால் வேதத்தின் வேறு பகுதிகளுடன் ஒப்பிட்டும் இதன் அர்த்தத் தை அறிந்துகொள்ள முடியாதுள்ளது.[2] சில கிறிஸ்தவர்கள் ஜலமும் பரிசுத்த ஆவியானவரையே குறிக்கின்றது என்று கூறு கின்றனர். "பரிசுத்த ஆவியானவரின் சுத்திகரிக்கும் செயலுக்கான உருவகமாகவே ஜலம் உள்ளது"[3] என்பதே இவர்களின் விளக்க மாகும். இத்தகைய விளக்கத்திற்கு எசேக்கியேல் 36:25-27 முக்கியமான ஆதாரமாக இருப்பதாகக் கருதப்படுகின்றது.[4] ஆனால், மூலமொழியில் 'ஜலம்' 'ஆவி' என்னும் இரு பதங்களும் "உம்" என்னும் வேற்றுமையுருபுடன் குறிப்பிடப்பட்டுள்ளமையால் இரண்டும் ஒன்றையே குறிப்பதாக விளக்க முடியாது.[5] மறுபடியும் பிறத்தல் என்பது ஆவியினால் பிறப்பது மட்டுமல்ல, அது ஜலத்தினாலும் பிறப்பதாகும் என்றே இயேசுகிறிஸ்து இவ்வசனத் தில் அறியத்தந்துள்ளார்.[6]

---

[2] சில வேத ஆராய்ச்சியாளர்கள் தீத்து 3:5ல் குறிப்பிடப்பட்டுள்ள "மறு ஜென்ம முழுக்கு" என்பதை இயேசுகிறிஸ்துவின் கூற்றிலுள்ள "ஜலத்தி னால் பிறத்தல்" என்பதுடன் தொடர்புபடுத்துகின்ற போதிலும் (R.C.H. Lenski, *The Interpretation of St.John's Gospel*, p. 238), இயேசுகிறிஸ்து வின் வார்த்தைகள் சிறப்பான அர்த்தமுடையவைகளாக உள்ளன. மேலும், தீத்துவிலுள்ள சொற்பிரயோகம் அநேகர் விளக்குவதுபோல கிறிஸ்தவ ஞானஸ்நானத்தைக் குறிப்பதாக இல்லை. ஏனெனில் அவ்வச னம் நாம் எப்படி இரட்சிக்கப்பட்டுள்ளோம் என்பதையே விளக்குகிறது. எனவே, மறுஜென்ம முழுக்கானது, "இரட்சிப்பின்போது பரிசுத்த ஆவியான வர் மூலம் கிட்டும் ஆவிக்குரிய சுத்திகரிப்பையே குறிக்கின்றது" (W.D. Mounce, *Pastoral Epistles: Word Biblical Commentary Vol. 46*, p. 448).

[3] J.Calvin, *The Gospel According to St. John 1 – 10*, pp. 64-65.

[4] D.Guthrie *John: New Bible Commentary*, p. 1021; B.Milen, *The Message of John*, p. 76.

[5] இவ்விளக்கத்திற்கு ஆதாரமாக சிலர், "ஜலத்தினாலும் ஆவியினாலும்" என்பதை "ஜலம் எனப்படும் ஆவியினால்" என்று மொழிபெயர்த்துள் ளனர் (C.S.Keener, *The IVP Bible Background Commentary: New Testament*, p. 270). இது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு விளக்கம் அல்ல.

[6] ஆவி என்பது பரிசுத்த ஆவியானவரை உருவகிப்பது போல, ஜலமும் தனியாக ஒன்றை உருவகிப்பதற்காகவே இவ்வசனத்தில் உபயோகிக்கப்

இன்றைய கிறிஸ்தவ உலகில் ஓரளவுக்குப் பிரபலமடைந்துள்ள ஒரு விளக்கம் ஜலத்தினால் பிறப்பதை "இயற்கையான மானிட பிறப்பாகவும்," ஆவியினால் பிறப்பதை "ஆவிக்குரிய பிறப்பாக வும்" கருதுகின்றது. ஒருவன் இயற்கையான முறையில் இவ்வுல கில் பிறப்பது மட்டும் போதாது, அவன் மறுபடியுமாக ஆவிக்குரிய பிரகாரமாகப் பிறக்க வேண்டும் என்பதையே இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவுக்குத் தெரிவித்துள்ளார் என்பதே இக்கருத்தின் விளக்கமாகும். இதனால், இயேசுகிறிஸ்துவின் கூற்றில், "ஜலம் இனவிருத்தியோடு சம்பந்தப்பட்டுள்ளது"[7] என்று கூறும் சில வேத ஆராய்ச்சியாளர்கள், "ஜலத்தினால் பிறத்தல் என்பது சரீரப்பிரகாரமாகப் பிறத்தல்"[8] என்று விளக்குகின்றனர். இவர்கள், "ஜலம் (தண்ணீர்), மழை, நீர், பனித்துளி, என்னும் பதங்கள் அக்கால இலக்கியங்களில் "ஆணின் விந்தைக்" குறிக்க உப யோகிக்கப்பட்டுள்ளது"[9] என்பதைச் சுட்டிக்காட்டுவதன் மூலம், ஜலத்தினால் பிறத்தல் என்பது சாதாரண மானிடப் பிறப்பு என்று கூறுகின்றனர். ஆனால், "சாதாரண பிறப்பை ஜலத்தினால் பிறத்தல் என்று எவரும் அக்காலத்தில் குறிப்பிடவில்லை."[10] சாதாரண பிறப்பு அக்காலத்தில் "இரத்தத்தினால் பிறத்தல்" என்றே அழைக்கப்பட்டது.[11] எனவே, இயேசுகிறிஸ்து சாதாரண பிறப்பை ஜலத்தினால் பிறத்தல் என்று குறிப்பிட்டுள் ளார் என்று தர்க்கிப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

"குழந்தை பிறப்பதற்கு முன்னர், தாயின் கருவறையில் குழந்தை யைச் சுற்றியிருக்கும் சவ்வு கிழிவதனால் வெளிவரும் திரவத்தை யும் ஜலம் என்னும் பதம் குறிக்கின்றது"[12] என்பதும், ஜலத்தைச்

பட்டுள்ளது (J.R.Michaels, *John: New International Biblical Commentary*, p. 56).

[7] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, pp. 216-218.

[8] W.W.Wiersbe, *Be Alive: John 1-12*, p. 35.

[9] H.Odeberg, *Fourth Gospel*,pp. 48-71.

[10] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 191.

[11] G.M.Burge, *John: The NIV Application Commentary*, p. 115.

[12] L.Morris, *New Testament Theology*, p. 257.

சாதாரண மானிடப் பிறப்பாகக் கருதுகிறவர்களின் விளக்கமாக உள்ளது. எனினும், மறுபடியும் பிறத்தலையே இயேசுகிறி ஸ்து ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தலாகக் குறிப்பிட்டுள்ள மையால், ஒன்றை சாதாரண பிறப்பாகவும் மற்றதை ஆவிக்குரிய பிறப்பாகவும் கருதமுடியாது. அத்தோடு, இயேசுகிறிஸ்துவின் கூற்றில் இரு பதங்களுமே மறுபடியும் பிறத்தலையே குறிக்கின் றன. இக்கூற்றில், “மூலமொழியின் வாக்கிய அமைப்பு முறையா னது இருவிதமான பிறப்புகளைப் பற்றி அறியத்தருவதாக இல் லை.”[13] அதாவது, மறுபடியும் பிறக்கும் ஒரு பிறப்பையே இயேசு கிறிஸ்து ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தல் என்று குறிப்பிட் டுள்ளார். மேலும், சிலர் தர்க்கிப்பது போல, இயேசுகிறிஸ்து, மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும் ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் என்று 6ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளமையால், அவர் இயற்கையான பிறப்பையும், இரண்டாவது பிறப்பான ஆவிக்குரிய பிறப்பையுமே ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத் தல் என்று குறிப்பிட்டுள்ளார் என்று தர்க்கிப்பதிலும் அர்த்தமில் லை. ஏனென்றால், மறுபடியும் பிறத்தல் என்பதை நிக்கொதேமு சாதாரண பிறப்பாக எண்ணியமையினாலேயே[14] இயேசுகிறிஸ்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளாரே தவிர, ஜலத்தினால் பிறப்பதை அவர் சாதாரண பிறப்பாக விளக்கவில்லை.

இயேசுகிறிஸ்துவின் கூற்றிலுள்ள ஜலம் என்னும் பதத்தைச் சில கிறிஸ்தவர்கள் “தேவனுடைய வார்த்தை” என்று கருதுகின் றனர். “தேவனுடைய வார்த்தையே ஜலம் என்னும் பதத்தால் உருவகிக்கப்பட்டுள்ளது”[15] என்று கூறும் இவர்கள், “ஒருவன் மறுபடியும் பிறப்பதற்குத் தேவனுடைய ஆவியானவரும் தேவனு டைய வார்த்தையும் அவசியமாயுள்ளன” என்று விளக்குகின்ற

---

[13] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 191.

[14] மறுபடியும் பிறத்தலைப் பற்றி இயேசுகிறிஸ்து கூறியபோது நிக்கொ தேமு அவரது வார்த்தைகளைச் சொல்லர்த்தமாகப் புரிந்து கொண்டு, “ஒரு மனுஷன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ” என்றான் (யோவா.3:3-4).

[15] A.W.Pink, *Exposition of the Gospel of John Volume 1*, p. 110.

னர்.[16] இவர்கள் தங்களின் கருத்தை நிரூபிப்பதற்காக, மறுபிறப்பிற்குத் தேவனுடைய வார்த்தையின் அவசியத்தைச் சுட்டிக்காட்டும் வசனங்களைக் குறிப்பிடுவது வழமை. உதாரணத்திற்கு "உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது" (சங்.119:50), "சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்" (1கொரி.4:15), "நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்" (யாக்.1:18), "தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" (1பேது.1:23)[17] போன்ற வசனங்கள் இவ்விளக்கத்திற்கு ஆதாரமாகக் காண்பிக்கப்படுகின்றது. இவ்வசனங்கள் ஒருவனுடைய மறுபிறப்பிற்குத் தேவனுடைய வார்த்தையின் அவசியத்தைச் சுட்டிக்காட்டுவது உண்மை என்றாலும், இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவுடன் உரையாடும் போது ஜலம் என்னும் பதத்தைத் தேவனுடைய வார்த்தையைக் குறிப்பிட உபயோகித்துள்ளார் என்று கூறுவதற்கில்லை. அவர் வழமையாக "எழுதியிருக்கிறது"[18] என்னும் சொற்பிரயோகத்தை அல்லது பழைய ஏற்பாட்டைக் குறிக்கும் விவரணங்களை[19] அல்லது நேரடியாக 'தேவவார்த்தை' என்னும் சொற்பிரயோகத்தை உபயோகித்துள்ளாரே தவிர, எந்த ஒரு இடத்திலும் ஜலம் என்னும் பதத்தால் தேவனுடைய வார்த்தையைக் குறிப்பிடவில்லை.

இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள், ஜலத்தினால் பிறத்தல் என்பதை ஞானஸ்நானமாகவே கருதுகின்றனர்.[20] எனினும், இவர்களில் சிலர், "ஜலத்தினால் பிறத்தல்" என்பது இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் அல்ல என்று கருதுகின்றனர். இச்சொற்பிர

---

[16] W.W.Wiersbe, *Be Alive: John 1-12*, p. 36.

[17] A.W.Pink, *Exposition of the Gospel of John Volume 1*, p. 110-111.

[18] இயேசுகிறிஸ்து இச்சொற்பிரயோகத்தை உபயோகித்தது பற்றி சுவிசேஷப் புத்தகங்களில் 18 தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது (B. Edwards, *Nothing but the Truth*, p. 59).

[19] அக்காலத்தில் "வேதவாக்கியங்கள்," "மோசேயின் நியாயப்பிரமாணம்," "தீர்க்கதரிசிகளின் ஆகமம்" போன்ற சொற்பிரயோகங்கள் பழைய ஏற்பாட்டு வேதவசனங்களைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டன.

[20] R.E.Brown, *John: Introduction, Translation and Notes*, pp. 139-141; R.V.G.Tasker, *John: Tyndale New Testament Commentaries*, pp. 70-71;

யோகம் சுவிசேஷத்தை எழுதிய யோவானால் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டவை என்பது சிலரது ஊகமாக இருக்கையில்,[21] வேறு சிலர், கிறிஸ்தவ சபையில் ஞானஸ்நானத்திற்கு முக்கியத் துவம் கொடுக்கப்பட்ட காலத்திலேயே இச்சொற்பிரயோகம் சேர்க்கப்பட்டதாகக் கருதுகின்றனர்.[22] எனினும் இச்சொற்பிரயோ கம் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்பதற்கு எவ்வித ஆதாரங்க ளும் இல்லை. இது இயேசுகிறிஸ்துவின் வார்த்தையாகவே உள்ளது.

ஜலத்தினால் பிறத்தல் என்பது கிறிஸ்தவ ஞானஸ்நானத்தையே குறிக்கின்றது என்றால், ஒருவன் மறுபடியும் பிறப்பதற்கு ஞானஸ் நானம் அவசியம் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் சில சபைகளில் "ஞானஸ்நானத்தின் மூலம் மறு பிறப்பு"[23] என்னும் உபதேசம் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.[24] ஆனால் மறுபிறப்பானது ஞானஸ்நானத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு அனுபவமாக வேதாகமத்தில் விளக்கப்பட

G.L.Borchert, *John 1-11: New American Commentary*, pp. 174-175; J.R. Michaels, *John: New International Biblical Commentary*, pp. 56-57.

[21] M.Vellanickal, *The Divine Sonship of Christians in the Johannine Writings*, p. 170.

[22] R.Bultmann, *The Gospel of John: A Commentary*, pp. 138-139.

[23] ஆங்கிலத்தில் Baptismal Regeneration என்று இவ்வுபதேசம் அழைக் கப்படுகின்றது.

[24] இவ்வுபதேசத்திற்கு ஆதாரமாக யோவான் 3:5 மட்டுமல்ல, மாற்கு 16:16, அப்போஸ்தலர் 2:38 போன்ற வசனங்களும் சுட்டிக்காட்டப்படுகின் றன. மாற்கு 16:16ல் "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விசுவாசமும் ஞானஸ் நானமும் இவ்வசனத்தில் தொடர்புபடுத்தப்பட்டுள்ள போதிலும், இரட்சிக் கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியம் என்று இவ்வசனம் கூறவில்லை. ஏனென்றால், மூலமொழியில் இவ்வசனத்தில் "விசுவாசத்திற்கே முக்கியத் துவம் கொடுக்கப்பட்டுள்ளது" (W.W.Wiersbe, *Be Diligent*, p. 154). மே லும், இவ்வசனத்தின் அடுத்த வாக்கியத்தில் ஞானஸ்நானத்தைப் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. "விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளா கத் தீர்க்கப்படுவான்" என்றே இவ்வசனம் முற்றுப் பெறுகிறது. "ஞானஸ்நா னம் பெறாமலிருப்பது அல்ல, விசுவாசியாமல் இருப்பதே ஆக்கினைத் தீர்ப்புக்கான காரணமாக உள்ளது" (M.J.Erickson, *Christian Theology*,

வில்லை. அதாவது, "ஞானஸ்நானம் எடுப்பதன் மூலம் பரிசுத்த ஆவியானவர் ஒருவனை மறுபடியும் பிறக்க வைப்பதில்லை.[25]" மாறாக, பரிசுத்த ஆவியானவர் மூலம் ஒருவனில் ஏற்பட்ட ஆவிக்குரிய உள்ளான மாற்றத்திற்கான வெளிப்படையான

---

p. 1098). எனவே, ஒருவன் ஞானஸ்நானம் பெற்றும் விசுவாசியாமல் இருந்தால் அவனுக்கு இரட்சிப்பு இல்லை என்பது இவ்வசனத்தின் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது" (W.W.Wiersbe, *Be Diligent*, p. 154). இவ்வசனத்தின்படி, விசுவாசியாமல் இருப்பதே ஆக்கினைத் தீர்ப்புக்கான காரணமாக இருப்பதனால், இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் அவசியம் என்று இவ்வசனம் கூறுவதாகத் தர்க்கிக்க முடியாது. அப்போஸ்தலர் 2:38ல் "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள் ளுங்கள்" என்று பேதுரு குறிப்பிட்டுள்ளபோதிலும், இது ஞானஸ்நானத் தின் மூலம் இரட்சிப்பு என்னும் உபதேசத்திற்கு ஆதாரமாயுள்ள வசனம் அல்ல. இவ்வசனத்தில், "பாவமன்னிப்புக்கென்று.... ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்பது மூலமொழியின் இலக்கண முறையின் படி, "பாவமன்னிப்பு பெறுவதற்காக ஞானஸ்நானம் பெறுங்கள்" என்னும் அர்த்தத்தில் அல்ல மாறாக, "பாவமன்னிப்பு பெற்று (அதாவது, விசுவா சிப்பதன் மூலம் பாவ மன்னிப்பு பெற்று) அதற்காக, அதாவது பாவமன்னிப் பைப் பெற்றுக் கொண்டதற்காக (அதற்கான அடையாளமாக) ஞானஸ் நானம் பெறுங்கள்" என்னும் அர்த்தத்திலேயே உள்ளது (A.T.Robertson, *A Grammar of the Greek New Testament in the Light of Historical Research*, p. 592; A.T.Robertson, *Word Pictures in the New Testament Volume 3*, p. 35). மூலமொழியில் இவ்வசனத்தில் ஞானஸ்நானத்திற்கு அல்ல, மனந்திரும்புதலுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது (C.Vaughan, *Acts: Bible Study Commentary*, p. 28; J.B.Pohill, *Acts: The New American Commentary*, p 117). இதனால்தான், பேதுரு ஏனைய இடங்களில் பிரசங்கிக்கும் போது ஞானஸ்நானத்தைப் பற்றி எதுவும் கூறாது, விசுவாசத்தினாலேயே பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளார் (அப்.5:31, 10:43, 13:38, 26:8). மேலும், அப்போஸ் தலர் 2:38ல் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்த யூதர்கள் யோவான் ஸ்நானகனுடைய மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானத்தைப் பற்றி அறிந்திருந்தமையால், மனந்திரும்புதலை வலியுறுத்துவதற்காகப் பேதுரு ஞானஸ்நானத்தைப் பற்றி இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார் (R.N.Longenecker, *Acts: The Expositor's Bible Commentary Volume 9*, p. 283). ஞானஸ்நானம் இவ்வசனத்தில் மனந்திரும்புதலுக்கான வெளிப் படையான அடையாளமாகவே குறிப்பிடப்பட் டுள்ளது (J.R.W.Stott, *The Message of Acts*, p. 78). ஞானஸ்நானத்தின் மூலம் இரட்சிப்பு என்னும் உபதேசத்தைப் பேதுரு இவ்வசனத்தில் போதிக்கவில்லை.

அடையாளமாகவே கிறிஸ்தவ ஞானஸ்நானம் உள்ளது.[26] உண்மையில், "இரட்சிப்பின் அனுபவமான மறுபிறப்பானது தேவனுடைய கிருபையின் ஈவாக உள்ளதே தவிர அது ஞானஸ்நானத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியதொன்றாக இல்லை."[27] ஜலத்தினால் பிறத்தலைக் கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்று கருதினால், இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் மரிப்பவர்கள் மறுபடியும் பிறக்காதவர்கள் என்னும் பிழையான உபதேசமே உருவாகும்.[28] மேலும், இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவுடன் உரையாடிய காலத்தில் கிறிஸ்தவ ஞானஸ்நானம் நடைமுறையில் இருக்கவில்லை. அக்காலத்தில் புறஜாதியார் யூதர்களாக மாறினால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் சுத்திகரிப்பு

[25] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 217.

[26] H.E.Dana, *A Manual of Ecclesiology*, pp. 282-282.

[27] A.W.Pink, *Exposition of the Gospel of John Volume 1*, p.110.

[28] இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியம் என்று கூறுபவர்கள், இயேசுகிறிஸ்துவோடு சிலுவையிலறையப்பட்டு, மரிப்பதற்கு முன்னர் இயேசுகிறிஸ்துவிடம் தஞ்சம் புகுந்த கள்ளன் பரலோகத்திற்குப் போகவில்லை என்று கருதுகின்றனர். "இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்" (லூக்.23:43) என்று இயேசுகிறிஸ்து கள்ளனிடம் கூறினார். கள்ளன் பரலோகத்திற்குப் போகவில்லை என்று கருதுபவர்கள், பரதீசும் பரலோகமும் வெவ்வேறான இடங்கள் என்று கூறுகின்றனர். ஆனால், "பரதீசு" என்னும் பதம் வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள ஏனைய இடங்களில் பரலோகத்தையே குறிப்பதனால், லூக்கா 23:44லும் இப்பதம் பரலோகத்தையே குறிக்க வேண்டும். பவுல் தான் மூன்றாம் வானத்திற்குச் சென்றதைப் பற்றிக் கூறும்போது, தான் பரதீசுக்குள் எடுத்துக் கொள்ளப்பட்டதாகவே குறிப்பிட்டுள்ளார் (2கொரி.12:2-3). மேலும் வெளிப்படுத்தல் 2:7ல் பரதீசில் இருப்பதாக சித்தரிக்கப்பட்டுள்ள ஜீவவிருட்சம், வெளிப்படுத்தல் 22:2, 22:14 போன்ற வசனங்களில் பரலோகத்தில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதும் பரதீசும் பரலோகமும் ஒன்று என்பதற்கான ஆதாரமாக உள்ளது (W.Grudem, *Systematic Theology*, p. 593). இயேசுகிறிஸ்து மரிக்கும் போது தமது ஆவியைப் பிதாவினிடத்தில் கொடுத்தார். அவரு டைய சரீரம் கல்லறையில் வைக்கப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் ஆவி பிதா இருக்கும் பரலோகத்திற்குச் சென்றமையால், "தம்மோடு பரதீசில் இருப்பான்" என்று சொல்லப்பட்ட கள்ளனும், இயேசுகிறிஸ்து சென்ற பரதீசிற்கே சென்றான் என்பது தெளிவாகின்றது. மேலும் "அக்கால யூதர்கள் பரதீசு என்னும் பெயரைப் பரலோகத்தைக் குறிப்பிடவே உபயோகித்தனர்" (*Ibid*. p. 593) என்பதை நாம் மறக்கலாகாது.

ஞானஸ்நானமும்,[29] யோவான் ஸ்நானகன் கொடுத்த மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானமுமே[30] நடைமுறையில் இருந்தன. எனவே, "அக்காலத்தில் நடைமுறையில் இல்லாத ஒன்றைப் பற்றி இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவுக்கு கூறியிருக்க முடியாது."[31]

"ஜலத்தினால் பிறத்தல்" என்பது கிறிஸ்தவ ஞானஸ்நானத்தைப் பற்றிய விவரணமாக இராதபோதிலும், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் அக்காலத்தில் நடைமுறையில் இருந்த யோவான் ஸ்நானகனின் ஞானஸ்நானத்தோடு தொடர்புற்றுள்ளன. உண்மையில், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைச் சரியான விதத்தில் விளங்கிக் கொள்வதற்கு, அவை யாருக்கு முதலில் சொல்லப்பட்டது என்பதையும், அவற்றை முதல் தடவை செவிமடுத்தவன் என்ன அர்த்தத்தோடு விளங்கிக் கொண்டான் என்பதையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும்.[32] இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவிடம் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று சொன்னபோது, அவன் இயேசுகிறிஸ்துவின் கூற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளாதமையி

---

[29] இது ஒருவன் தனக்குத்தானே கொடுத்துக் கொள்ளும் ஞானஸ்நானமாகும். புறஜாதியார் அசுத்தமானவர்கள் என்று அக்கால யூதர்கள் கருதியமையால், அவர்களுடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்வதில்லை. இதனால் ஒரு புறஜாதியான் யூதனாக மாறினால் முதலில் தன்னுடைய புறஜாதி அசுத்தங்கள் கழுவப்படுவதற்காக அவன் தனக்குத் தானே ஞானஸ்நானம் கொடுத்துக்கொள்ள வேண்டும். அதன் பின்பே யூதர்கள் அவனைத் தொடுவார்கள் (E.Ferguson, *Backgrounds of Early Christianity*, p. 513; G.R.Beasley-Murray, *Baptism in the New Testament*, pp. 18-25; I.Abrahams, "How did the Jews Baptize?" in *Journal of Theological Studies*, pp. 609-612.

[30] தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பியவர்களுக்கு, அவர்கள் மனந்திரும்பியதற்கான அடையாளமாகவே யோவான் கொடுத்த ஞானஸ்நானம் இருந்தது

[31] L.Morris, *Expository Reflections on the Gospel of John*, p. 90.

[32] இதிலிருந்து இயேசுகிறிஸ்துவின் கூற்று நமக்குச் சொல்லப்படவில்லை என்னும் முடிவுக்கு நாம் வந்துவிடக்கூடாது. வேதவசனங்கள் அனைத்தும் நமக்கானவை என்பது உண்மை என்றாலும், அவற்றை நமது வாழ்வில் பிரயோகிப்பதற்கு முன்னர், அவை முதலில் யாருக்கு சொல்லப்பட்டன என்பதையும், முதல் தடவை அவற்றைக் கேட்டவர்கள் என்ன அர்த்தத்

னாலேயே அதை அவனுக்குப் புரிய வைப்பதற்காக, தாம் சொல்ல முற்படுவதை "ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தல்" வேண்டும் என்று கூறினார். எனவே இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் நிக்கொதேமுவினால் புரிந்து கொள்ளக்கூடிய விதமாகவே சொல்லப்பட்டுள்ளன என்பதில் சந்தேகமில்லை.[33]

மறுபடியும் பிறக்க வேண்டும் என்னும் இயேசுகிறிஸ்துவின் ஆரம்ப அறிவுறுத்தலை நிக்கொதேமு சரியாகப் புரிந்து கொள்ளாதமைக்குக் காரணம், யூதமதப் போதகனாக இருந்த அவன், அக்கால யூத நம்பிக்கையின்படி, யூதனான தான், தேவனுடைய ராட்சியத்திற்குள் பிரவேசிப்பதற்கு மறுபடியும் பிறக்க வேண்டியதில்லை என்று கருதியமையாகும். அக்காலத்தில் யூதர்கள் அனைவரும், தாங்கள் யூதர்களாகப் பிறந்துள்ளமையால் தேவனுடைய ராட்சியத்திற்குள்ளேயே பிறந்திருக்கிறோம் என்னும் நம்பிக்கையுடையவர்களாக இருந்தனர். புறஜாதியார் மட்டுமே, அவர்கள் தேவனுடைய ராட்சியத்திற்கு வெளியே பிறந்துள்ளமையால், மறுபடியுமாகத் தேவனுடைய ராட்சியத்திற்குள் பிறக்க வேண்டும் என்று யூதர்கள் கூறினார்கள்.[34] இதனால்தான், யூதனான நிக்கொதேமுவைப் பார்த்து மறுபடியும் பிறக்க வேண்டும் என்று இயேசுகிறிஸ்து கூறியபோது அவன் ஆச்சரியப்பட்டான்.

தோடு அவற்றை விளங்கிக்கொண்டார்கள் என்பதையும் நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டும்.

[33] அக்காலத்தில் நடைமுறையில் இல்லாத ஒன்றை இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவிற்குக் கூறியிருந்தால் அவர் அதைப் பற்றிய விளக்கத்தையும் அவனுக்கு அறிவித்திருப்பார். இயேசுகிறிஸ்து, மறுபடியும் பிறத்தல் என்பதை நிக்கொதேமு விளங்கிக்கொள்ளாதமையால் அதை "ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தல்" என்று விளக்கிக் கூறினார். "ஜலத்தினால் பிறத்தல்" என்பதற்கு அவர் மேலதிகமான விளக்கம் எதையும் கொடுக்காதமையால் நிக்கொதேமு இயேசுகிறிஸ்துவின் விளக்கத்தைப் புரிந்து கொண்டுள்ளான் என்பது தெளிவாகின்றது. 9ம் வசனத்தில் "இவைகள் எப்படி ஆகும்?" என்று நிக்கொதோமு கேட்டது, ஜலத்தினால் பிறத்தல் எப்படி நடக்கும் என்பதைப் பற்றியல்ல. மாறாக, "ஆவியினால் பிறந்தவன் எப்படி இருப்பான்?" என்று அதற்கு முன்னுள்ள வசனத்தில் இயேசுகிறிஸ்து கூறியவற்றைப் பற்றியே நிக்கொதேமு கேட்டான்

[34] E.Ferguson, *Backgrounds of Early Christianity*, pp. 504-505.

யூதர்களின் அக்கால நம்பிக்கைக்கு முற்றிலும் எதிராக, அவர்களும் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று இயேசுகிறிஸ்து கூறினார். யூதர்கள் நினைத்துக் கொண்டிருந்த விதமாக, யூதராகப் பிறந்தமையால் அவர்கள் தேவனுடைய ராட்சியத்திற்குள் சென்று விடவில்லை. அவர்களும் மறுபடியும் பிறக்க வேண்டியது அவசியமாயிருந்தது. இந்த ஆவிக்குரிய பிறப்பே ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறத்தல் என்று இயேசுகிறிஸ்துவினால் விளக்கப்பட்டுள்ளது. இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவுடன் உரையாடிக் கொண்டிருந்த காலம், யூதர்கள் மத்தியில் யோவான் ஸ்நானகன் பணிபுரிந்த நாட்களாகும். அக்காலத்தில் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பிய யூதர்களும் யோவானிடம் ஞானஸ்நானம் பெற்று வந்தனர். யோவான் ஜலத்தினால் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்தான் (லூக்.3:6-21, யோவா.1:25). இதனால், அக்காலத்தில் ஜலத்தினால் பிறத்தல் என்னும் சொற்பிரயோகம் யோவான் கொடுத்து வந்த ஞானஸ்நானத்தையே சுட்டிக்காட்டுவதாக இருந்தது. இது மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானமாகும் (மாற்.1:4). “மறுபடியும் பிறப்பதற்கு ஒருவன் தன் பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டியது அவசியமாயிருப்பதனால், இதை அக்காலத்தில் நிக்கொதேமு விளங்கிக்கொள்ளக் கூடிய விதமாக “ஜலத்தினால் பிறத்தல்” என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார்.”[35] எனவே, நிக்கொதேமு யூதனாயிருந்தும் அவனும் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பரிசுத்த ஆவியானவரின் செயலினால் மறுபடியும் பிறக்க வேண்டும் என்பதை இயேசுகிறிஸ்து இவ்விதமாக அவனுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளில், “ஜலம் என்பது யோவான் ஸ்நானகனின் மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானத்தைக் குறிக்கின்றது”[36] என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விளக்கமாக உள்ளது.

---

[35] M.C.Tenney, *John: The Expositor's Bible Commentary*, p. 47.

[36] E.A.Blum, *John:Bible Knowledge Commentary New Testament*, p. 281

நான்காம் அத்தியாயம்



பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்திலிருக்கிற வருமான மனுஷகுமாரனேயல்லாமல்....

(யோவான் 3:13)

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள், அவர் யார் என்பதையும் அவரது தன்மை எத்தகையது என்பதையும் அறியத்தருவது உண்மை என்றாலும், அவர் யோவான் 3:13ல் தம்மைப் பற்றி வெளிப்படுத்திய முக்கியமான ஒரு விடயம் இன்று அநேகரால் புரிந்து கொள்ள முடியாததொன்றாக உள்ளது. ஏனென்றால் நிக்கொதேமுவுடன் உரையாடிக் கொண்டிருந்த இயேசுகிறிஸ்து, "பரலோகத்திலிருந்திறங்கினவரும், பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" என்று தெரிவித்துள்ளார் (யோவா.3:13).[1] இயேசுகிறிஸ்துவின் இக்கூற்றிலுள்ள ஆரம்ப வார்த்தையானது, அவர் எங்கிருந்து வந்துள்ளார் என்பதை அறியத்தருகிறது. அக்கால யூதர்கள் நினைத்துக் கொண்டிருந்தது போல அவர் நாசரேத்தில்

---

[1] "மனுஷகுமாரன்" என்னும் பெயரின் விளக்கத்திற்கு முதலாம் அத்தியாயத்தில் 11ம் அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

இருந்த வந்தவரல்ல.[2] இயேசுகிறிஸ்து நாசரேத்தில் வாழ்ந்த போதிலும் அவர் பரலோகத்திலிருந்து வந்த மேசியாவாக இருக்கின்றார். புதிய ஏற்பாட்டில் பல தடவைகள் இவ்விடயம் நேரடியாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.[3] "தாம் பரலோகத்திலிருந்து வந்துள்ளமையால் தம்மால் பரலோக விடயங்களைப் பற்றி அறிவிக்க முடியும் என்பதை இதன் மூலம் இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்."[4]

உண்மையில், இயேசுகிறிஸ்துவின் கூற்றிலுள்ள அடுத்த வாக்கியமே இன்றைய கிறிஸ்தவ உலகில் அதிக சர்ச்சைக்குரியதாக உள்ளது. இதற்குக் காரணம், "பரலோகத்திலிருக்கிறவருமான" என்னும் சொற்பிரயோகத்தை இன்று பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர்கள் இயேசுகிறிஸ்துவினால் சொல்லப்பட்ட வார்த்தைகளாக ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதேயாகும்.[5] உண்

---

[2] இயேசுகிறிஸ்துவைப் பற்றி நாத்தான்வேல் கேள்விப்பட்ட போது, "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா" என்று கேட்டதற்குக் காரணம் இதுவேயாகும் (யோவா.1:45-46). அக்காலத்தில் இயேசுகிறிஸ்து "நாசரேத்" என்னும் ஊரைச் சேர்ந்தவராகவே மக்களால் அறியப்பட்டிருந்தார் நம் தமிழ் வேதாகமத்தில் "நசரேயனாகிய இயேசு" மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்பிரயோகம் மூலமொழியின்படி "நாசரேத்தூர் இயேசு" என்றிருக்க வேண்டும் (மாற்.1:24, அப்.3:6). இயேசுகிறிஸ்து நசரேய விரதமிருந்ததற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. நசரேய விரதமிருப்பவர்கள் திராட்சைரசம் அருந்தக் கூடாது (எண்.6:3-4). ஆனால் இயேசுகிறிஸ்து திராட்சைரசம் அருந்தியதைப் பற்றி சுவிசேஷப்புத்தகங்களில் நாம் வாசிக்கலாம். எனவே, இயேசுகிறிஸ்து நசரேய விரதமிருந்தவர் என்னும் எண்ணத்தில் அவரை நசரேயன் என்று குறிப்பிடுவது தவறாகும். அக்காலத்தில், ஆசாரியப்பணியானது லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே உரியதாக இருந்தமையால், வேறு கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் ஆலயப்பணிகளில் ஈடுபட்டு தேவனுக்குச் சேவை செய்ய விரும்பினால், அவர்கள் நசரேய விரதத்தைக் கைக்கொண்டு, அப்பணியைச் செய்வதற்கான வழியைத் தேவன் ஏற்படுத்தியிருந்தார். ஆனால் இயேசுகிறிஸ்து இத்தகைய விரதமிருந்தவர் அல்ல.

[3] இயேசுகிறிஸ்து சகலமும் சிருஷ்டிக்கப்படுவதற்கும் முன்பே இருந்தவர் என்பதை யோவான் 1:1, 17:5, 17:24, 16:28, வெளிப்படுத்தல் 3:14, கொலோசெயர் 1:15,17 போன்ற வசனங்கள் அறியத்தருகின்றன.

[4] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 199.

[5] இதனால் பொரும்பாலான வேத வியாக்கியான நூல்களில் இச்சொற்பிரயோகத்திற்கு எவ்வித விளக்கமும் கொடுக்கப்படவில்லை.

மையில் "பரலோகத்திலிருக்கிறவருமான" என்னும் சொற்பிர யோகம் சில பழைய வேதப்பிரதிகளில் இல்லை.[6] ஆனால் "புதிய ஏற்பாட்டின் பல ஆரம்பகால கையெழுத்துப் பிரதிகளில் இச்சொற்பிரயோகம் உள்ளது."[7] இச்சொற்பிரயோகம் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்னும் பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர்களின் கருத்திற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை. ஏனென்றால், இவ்விடத்தில் இதைச் சேர்ப்பதற்கு எவ்வித அவசியமும் இல்லை. ஆனால், ஏற்கனவே வேதத்தில் இருந்த இச்சொற்பிர யோகம், அக்காலத்தில் வேதத்தைப் பிரதிபண்ணியவர்களினால்[8] தவறவிடப்பட்டிருப்பதற்குப் போதுமான காரணங்கள் உள்ளன. அநேகமாக, "வேதத்தைப் பிரதிபண்ணிய ஒருவர், மனுஷகுமாரன் பூமியிலிருக்கும் போதே நிக்கொதேமுவுடன் பேசிக்கொண்டிருந்தமையால், அவர் பரலோகத்தில் இருக்க முடியாது என்னும் எண்ணத்துடன் இச்சொற்பிரயோகத்தைப் பிரதிபண்ணாமல் விட்டிருக்கலாம்."[9] ஆனால் இச்சொற்பிரயோகம் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையாகவே உள்ளது.[10]

---

[6] இச்சொற்பிரயோகம் அலெக்சாந்திரிய வேதச் சுவடியிலும், 66 மற்றும் 77 என்னும் இலக்கங்களிட்ட பழைய சுவடிகளிலும் இல்லை.

[7] R.V.G.Tasker, *John: Tyndale New Testament Commentaries*, p. 71.

[8] வேதாகமமானது மோசேயின் காலம் முதல் கி.பி.1437ல் அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்படும்வரை கைகளினால் பிரதி பண்ணப்படுவதன் மூலமே மேலதிகப் பிரதிகள் தயாரிக்கப்பட்டன. இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது "*புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு*" என்னும் நூலைப் பார்க்கவும்

[9] F.F.Bruce, *The Gospel of John*, pp.87-88.

[10] இச்சொற்பிரயோகம் ஆரம்பத்தில் வேதத்தில் இருந்தது என்பதை ஏற்றுக்கொள்ளும் வேத ஆராய்ச்சியாளர்களில் சிலர், இதை இயேசுகிறிஸ்துவினால் சொல்லப்பட்ட வார்த்தையாக அல்ல, சுவிசேஷத்தை எழுதிய யோவானால் சேர்க்கப்பட்ட வாக்கியமாகவே கருதுகின்றனர் (F.F.Bruce, *The Gospel of John*, p. 88). இதனால், இயேசுகிறிஸ்துவின் பரமேறுதலுக்குப் பின்னர் இச்சுவிசேஷத்தை எழுதும் யோவான், அவர் பரலோகத்திலிருந்து இறங்கியதையும், தற்போது பரலோகத்தில் இருப்பதையும் பற்றியே இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளதாகக் கூறுகின்றனர் (G.L. Borchert, *John 1-11: The New American Commentary*, p. 181). ஆனால் யோவான் ஏன் இவ்வாக்கியத்தைச் சேர்க்க வேண்டும் என்பதற்கு எவரும் சரியான விளக்கம் கொடுப்பதில்லை. யோவான் இதை இயேசு கிறிஸ்துவின் வார்த்தையாகவே குறிப்பிட்டுள்ளார்.

இயேசுகிறிஸ்து, தாம் பரலோகத்திலிருந்து வந்தாலும் இன்னும் பரலோகத்திலேயே இருப்பதாக இவ்வசனத்தில் தெரிவித்துள் ளார்.[11] அவர் பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக் கிறவருமாய் இருக்கின்றார். இதனால், "அவர் நிக்கொதேமுவுடன் பேசிக்கொண்டிருந்த சமயத்திலும், பரலோகத்திலேயே இருந்துள் ளார்."[12] "அவர் மனிதராக இவ்வுலகில் வாழ்ந்த போதிலும் பிதாவுடன் பரலோகத்தில் இருந்துள்ளார்."[13] இவ்வசனமானது, இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத் தன்மைகளில் ஒன்றான "அவரது எங்குமிருக்கும் தன்மைக்கு ஆதராமாக உள்ளது."[14] உண் மையில், "இயேசுகிறிஸ்து மனிதராக வந்த தெய்வம் என்பதை இவ்வசனம் உறுதிப்படுத்துகிறது."[15] இயேசுகிறிஸ்து மனிதராக இவ்வுலகில் இருந்த காலத்திலேயே "இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன்" (மத்.18:20) என்று தெரிவித்துள்ளமையும் அவரது எங்குமிருக்கும் தன்மைக்கான இன்னுமொரு ஆதாரமாக உள்ளது.[16]

இயேசுகிறிஸ்துவின் கூற்றிலுள்ள அடுத்த வாக்கியமும் இன்று அநேகரால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. ஏனென்றால், மனுஷகுமாரனைத்தவிர "பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனு மில்லை" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளமையால், அவர் இவ்வுலகத்திற்கு வந்த பின்னர் பரலோகத்திற்குப் போய் வந்துள் ளார் என்று சிலர் கருதுகின்றனர்.[17] எனினும், பரலோகத்திலிருந்து இயேசுகிறிஸ்து பூமிக்கு வந்த சமயத்திலும் அவர் பரலோகத்தி லும் இருந்துள்ளமையால், அவர் பரலோகத்திற்குப் போய் வர

[11] J.C.Ryle, *Expository Thoughts on John Volume 1*, pp. 152-153.
[12] R.C.H.Lenski, *The Interpretation of St. John's Gospel*, p. 250.
[13] L.Boettner, *The Person of Christ*, p.
[14] L.Berkhof, *Systematic Theology*, p. 94.
[15] A.W.Pink, *Exposition of the Gospel of John Volume 1*, p. 127.
[16] இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது "இயேசு கிறிஸ்து இறைவனா?" என்னும் நூலின் 44ம் 45ம் பக்கங்களைப் பார்க்கவும்
[17] Cited in D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 200.

வேண்டிய நிலையில் இருக்கவில்லை.[18] மேலும், இவ்வசனத்தை ஆதாரமாகக் கொண்டு, இதுவரையில் எவருமே பரலோகத்திற்குப் போகவில்லை என்றும் பலர் கருதுகின்றனர்.[19] ஆனால் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஏனோக்கு எலியா என்போர் பரலோகத்திற் குப் போனதாக வேதம் கூறுகிறது (எபி.11:5, 2ராஜா.2:11). என வே, இயேசுகிறிஸ்து தம்மைத் தவிர எவரும் பரலோகத்திற்குப் போகவில்லை என்று குறிப்பிட்டது அநேகருக்கு குழப்பத்தையே ஏற்படுத்தியுள்ளது. உண்மையில், இயேசுகிறிஸ்துவின் வார்த்தை களைச் சரியான விதத்தில் புரிந்து கொள்வதற்கு மூலமொழியின் உதவி தேவைப்படுகிறது. ஏனென்றால், “மறுபடியும் திரும்பிவரும் விதத்தில் எவரும் பரலோகத்திற்குச் செல்லவில்லை என்பதே மூலமொழியில் இயேசுகிறிஸ்துவினுடைய கூற்றின் அர்த்தமாயுள் ளது.”[20] அக்காலத்தில், பரலோகத்திற்குப் போய் வந்த பரிசுத்த வான்களைப் பற்றிய கதைகள் யூதர்கள் மத்தியில் பிரபலமடைந் திருந்தன.[21] அதேபோல, அக்கால கிரேக்கர்கள் மத்தியிலும் வேறு உலகங்களுக்குச் சென்று மக்களுக்கு தெய்வச் செய்திக ளைக் கொண்டு வரும் நபர்களைப் பற்றிய கதைகள் இருந்தன.[22] இதனால், அவ்வாறு எவரும் பரலோகத்திற்குப் போய் வரவில்லை என்றே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தின் மூலம் அறியத்தருகின் றார். இயேசுகிறிஸ்து மட்டுமே பரலோகத்திலிருந்து வந்துள்ளார்.

---

[18] சில வேத ஆராய்ச்சியாளர்கள், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் பரலோகத்திற்குச் சென்றதைப் பற்றிய கூற்றாக இதைக் கருது கின்றனர் (G.C.Nicholson, *Death as Departure: The Johannine Descent-Ascent Schema*, pp. 91-98). இது யோவானால் பிற்காலத்தில் எழுதப்பட்ட விளக்கக் கூற்றாக இருந்தால், இயேசுகிறிஸ்து பரமேறிய பின்னர் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாகக் கருதலாம். ஆனால், இது இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் கூறிய விடயமாக இருப்பத னால், இக்கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

[19] மேலதிக விளக்கத்திற்கு லூக்கா 23:43ன் விளக்கத்தைப் பார்க்கவும். இது பற்றி எனது “மரணத்தின் மறுபக்கம்” என்னும் நூலிலும் ஆராயப் பட்டுள்ளது.

[20] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 200.

[21] W.A.Meeks, *The Prophet-King: Moses Traditions and the Johannine Christology*, pp. 110-111, 192-195, 235-236.

[22] G.L.Borchert, *John 1-11: New American Commentary*, pp. 18-181.

அவர் பூமியிலிருந்த காலத்திலும் பரலோகத்தில் இருந்துள்ளார்.[23] இதனால் அவரால் மட்டுமே பரலோக காரியங்களை மக்களுக்கு அறிவிக்க முடியும் என்பதே இவ்வசனத்தின் மூலம் இயேசு கிறிஸ்து நமக்கு அறியத்தரும் விடயமாகும்.[24]

[23] மறுரூபமலையில் இயேசுகிறிஸ்துவுடன் மோசேயும் எலியாவும் பேசிக் கொண்டிருந்த போது, பரலோகத்திற்குச் சென்ற இருவர் திரும்பி வந்துள் ளதாக நாம் எண்ணலாம் (லூக்.29:30). இது உண்மை என்றாலும், இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவுடன் உரையாடிய காலம் வரை எவரும் இவ்விதமாக பரலோகத்தில் இருந்து பூமிக்கு வந்திருக்கவில்லை.
[24] இவ்விடயம் யோவான் 1:18, 14:9, 17:6, எபிரேயர் 1:1 போன்ற வச னங்களிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐந்தாம் அத்தியாயம்



சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும்....

(யோவான் 3:14-15)

இயேசுகிறிஸ்து நிக்கொதேமுவோடு உரையாடிக் கொண்டிருக்கும் போது[1] யூத மதப் போதகனான அவனுக்குச் சில பரம காரியங்களை அறிவித்தார்.[2] இவற்றில் முக்கியமான ஒரு விடயம்

---

[1] யோவான் எழுதிய சுவிசேஷத்தில் 3:1-21ல் இயேசுகிறிஸ்துவிற்கும் நிக்கொதேமுவுக்கும் இடையில் நடந்த உரையாடல் குறிப்பிடப்பட்டுள்ளது.

[2] யோவான் 3ம் அதிகாரத்தில் 12 முதல் 21 வரையிலான வசனங்களில் பரம காரியங்கள் சில குறிப்பிடப்பட்டுள்ளன. இயேசுகிறிஸ்து இவற்றைப் "பரம காரியங்கள்" என்று கூறுவதற்கான காரணம், இவை அக்கால யூத மார்க்கப் போதனைகளில் ஊறிப்போயிருந்த நிக்கொதேமுவால் அறிந்து கொள்ள முடியாதிருந்த தெய்வீகக் காரியங்களாக இருந்தமையாகும். உதாரணத்திற்கு 13ம் வசனத்தில் மனுஷகுமாரன் பூமியிலிருக்கும் போது பரலோகத்திலுமிருக்கிறார் என்பது, இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத்தையும், அவரது எங்குமிருக்கும் தன்மையையும் அறியத்தருகின்றது. யூதர்களைப் பொறுத்தவரை மேசியாவாக வரும் மனுஷகுமாரன் தேவனால் அனுப்பப்படும் நபராகக் கருதப்பட்டாரே தவிர தெய்வமாக அவரை

அநேகரால் புரிந்து கொள்ள முடியாத கடினமான வார்த்தைகளைக் கொண்டுள்ளது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்றைத் தம்முடைய சிலுவை மரணத்தோடு தொடர்புபடுத்திய இயேசுகிறிஸ்து, "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல, மனுஷகுமாரனும் தம்மை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்பட வேண்டும்" என்று யோவான் 3:14ல் தெரிவித்துள்ளார். இயேசுகிறிஸ்து குறிப்பிடும் சம்பவம் பழைய ஏற்பாட்டில் எண்ணாகமம் 21ம் அதிகாரத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான கிறிஸ்தவர்கள், இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து தம்மை சர்ப்பத்திற்கு ஒப்பிட்டுள்ளதாகக் கருதுகின்றனர். எனினும் வேதாகமத்தில் சாத்தானே சர்ப்பத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளமையால் (ஆதி.3, வெளி.12:9), இயேசுகிறிஸ்து எவ்வாறு தம்மைச் சர்ப்பத்திற்கு ஒப்பிட்டுப் பேச முடியும் என்பது இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்களின் உள்ளத்தில் உள்ள கேள்வியாக உள்ளது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மோசேயின் தலைமையின் கீழ் இஸ்ரவேல் மக்கள் நாற்பது வருடங்களாக வனாந்தரத்தின் வழியாக வாக்குத்தத்த பூமிக்கு அழைத்துச் செல்லப்பட்ட

மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதேபோல, தேவன் யூதர்களான தங்களை மட்டுமே நேசிக்கின்றார் என்றே நிக்கொதேமு எண்ணினான். ஆனால், இயேசுகிறிஸ்துவோ இதை முரண்படுத்தும் விதத்தில், தேவன் முழு உலகத்தினரையும் நேசிக்கிறார் என்பதைப் 16ம் வசனத்தில் அறிவித்தார். மேலும், உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதற்காகவே தேவன் மேசியாவை அனுப்புவார் என்பதே யூதர்களின் நம்பிக்கையாக இருந்தது. தங்களை மட்டும் நேசிக்கும் தேவன், புறஜாதியார் அனைவரையும் அழித்துவிடுவார் என்று யூதர்கள் எண்ணினார்கள். இதனால், தேவன் உலகை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதற்காக அல்ல, இரட்சிப்பதற்காகவே தம் குமாரனை அனுப்பியுள்ளதாக 17ம் வசனத்தில் இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். மனுஷகுமாரன் உயர்த்தப்படுவதைப் பற்றிய அறிவிப்பும் இதேபோல யூதர்களுக்கு ஒரு பரம காரியமாகவே உள்ளது. ஏனென்றால், யூதர்கள் மேசியாவை வெற்றியாளராக, அதாவது, தம்மை ரோம ராட்சியத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கும் ஒரு ராஜாவாகவே எதிர்பார்த்தனர். ஆனால் இயேசுகிறிஸ்துவோ, மேசியா மரிப்பதைப் பற்றி கூறினார்.

காலத்தில்[3] நடைபெற்ற ஒரு சம்பவத்தையே இயேசுகிறிஸ்து இங்கு குறிப்பிட்டுள்ளார். இஸ்ரவேல் மக்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசிய போது, தேவ தண்டனையாக கொள்ளிவாய்ச் சர்ப்பங்களினால் கடிபட்டு அநேகர் மரித்தனர். மக்கள் மனந்திரும்பிய போது, தேவ அறிவுறுத்தலின்படி மோசே வெண்கலத்தினால் ஒரு சர்ப்பத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வைத்தான். சர்ப்பத்தினால் கடிபட்டவர் கள் தேவ அறிவுறுத்தலுக்குக் கீழ்ப்படிந்து அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தபோது உயிர் பிழைத்தார்கள் (எண்.21:4-9).

இச்சம்பவமானது வெண்கலத்தில் செய்யப்பட்ட சர்ப்பத்திற்கு மரணத்திலிருந்து மக்களைக் காப்பாற்றக் கூடிய சக்தி இருப்பதா கக் கூறவில்லை என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம். “சர்ப்பமல்ல, தேவனே மக்களை மரணத்திலிருந்து காப்பாற்றினார் என்பதே யூதர்கள் இச்சம்பவத்திற்குக் கொடுத்து ள்ள விளக்கமாகும்.”[4] சர்ப்பத்தினால் கடிபட்ட இஸ்ரவேலர்களில், தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து விசுவாசத்தோடு மோ சேயினால் செய்யப்பட்ட வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்த வர்களே பிழைத்தார்கள். உண்மையில், “அறிவுபூர்வமாகச் சிந்தி த்த இஸ்ரவேலன், வெண்கல சர்ப்பத்தைப் பார்ப்பதன் மூலம் தன் சரீரத்தில் இருக்கும் சர்ப்பத்தின் விஷம் எப்படி போகும் என்று குழம்பிப் போயிருப்பான். ஆனால், வெண்கல சர்ப்பத்தைப் பார்ப்பதனால் எப்படி தான் உயிர் பிழைப்பேன் என்பதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையிலும், தேவனுடைய வார்த் தைக்குக் கீழ்ப்படிந்து, அவர் சொல்லியபடி விசுவாசத்தோடு வெண்கலச் சர்ப்பத்தைப் பார்த்தவனுக்கு சர்ப்பத்தின் வாதையிலி ருந்து விடுதலை கிடைத்தது.”[5] எனவே, இங்கு “விசுவாசத்தோடு

---

[3] இது பற்றி பழைய ஏற்பாட்டில் யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாக மம், உபாகமம் என்னும் புத்தகங்களில் நாம் வாசிக்கலாம்.

[4] யூத நூல்களான ஞானம் (16:7), மற்றும் மிஷ்னா (*Ros Hassana*.3:8) போன்றவற்றில் இதை நாம் அவதானிக்கலாம்

[5] F.B.Huey, *Numbers: Bible Study Commentary*, p. 76.

பார்ப்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது"[6] என்பதை மறுப்பதற்கில்லை.

பழைய ஏற்பாட்டுச் சம்பவத்தை இயேசுகிறிஸ்து தமது வாழ்வோடு தொடர்புபடுத்தியுள்ளமையால் அவர் குறிப்பிடும் சம்பவம், அவரது சிலுவை மரணத்திற்கு முன்னடையாளமான செயலாக இருப்பதாக கிறிஸ்தவர்கள் பொதுவாகக் கருதுகின்றனர்.[7] இதனால் பழைய ஏற்பாட்டில் மோசேயினால் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பம், இயேசுகிறிஸ்துவிற்கு முன்னடையாளமாய் இருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். "நிஜமான சர்ப்பத்தை மோசே உயர்த்தியிருந்தால், அது இயேசுகிறிஸ்துவிற்குப் பொருத்தமான முன்னடையாளமாக இருந்திராது"[8] என்று தர்க்கிக்கும் இவர்கள், "சர்ப்பத்தின் சாயலான உருவமே மோசேயினால் உயர்த்தப்பட்டதுபோல, சிலுவையில் தம்மைப் பலியாகக் கொடுத்த இயேசுகிறிஸ்து பாவ மனுஷரின் சாயலாக இருந்தாரே தவிர அவர் பாவியாக இருக்கவில்லை"[9] என்று விளக்குகின்றனர். எனினும் இந்த அளவுக்கு சர்ப்பத்தை இயேசுகிறிஸ்துவிற்கு ஒப்பிட்டுப் பேசுவது மிகைப்படுத்தப்பட்ட ஒரு வியாக்கியானமாகவே உள்ளது. ஏனென்றால், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளில் ஒப்பிடுதலானது உயர்த்தப்படும் செயலிற்கு மட்டுமே உள்ளது.[10] அவர் தம்மை வெண்கலச் சர்ப்பத்தோடு இனங்காணவில்லை. அதாவது இயேசுகிறிஸ்து "சர்ப்பத்தைப்போல" என்று கூறவில்லை. மாறாக, "உயர்த்தப்பட்டதைப்போல" என்றே குறிப்பிட்டுள்ளார். மூல மொழியில், ஒப்பிட்டுக் காட்டும் "போல" என்னும் பதமானது உயர்த்தப்படும் செயலுக்கே உபயோகிக்கப்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம்.[11] அதாவது, சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் உயர்த்தப்படுவார் என்றே இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார்.

---

[6] E.H.Merrill, *Numbers: The Bible Knowledge Commentary,* p. 239.
[7] W.Hendriksen, *New Testament Commentary: John*, p. 138.
[8] A.W.Pink, *Exposition of the Gospel of John Volume 1*, p. 129.
[9] *Ibid*. p. 129.
[10] G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 182.
[11] R.C.H.Lenski, *The Interpretation of St. John's Gospel*, p. 254.

“உயர்த்தப்படுதல்” என்பதற்கு இயேசுகிறிஸ்து உபயோகித்துள்ள “ஹிப்ஸ்ஸோ” (*hypsoo*) என்னும் கிரேக்க பதமானது, யோவானின் சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்து சிலுவையில் உயர்த்தப்படுவதைக் குறிக்கவே உபயோகிக்கப்பட்டுள்ளது (யோவா.8:28, 12:32, 34). அப்போஸ்தலர் நடபடிகளில் இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு உயர்த்தப்படுவதற்கும் மூலமொழியில் இதே வார்த்தையே உபயோகிக்கப்பட்டுள்ளமையால் (அப். 2:33, 5:31), மனுஷகுமாரன் உயர்த்தப்படும் சம்பவமாக இயேசு கிறிஸ்து குறிப்பிடும் சம்பவம் எது என்பதும் கிறிஸ்தவ உலகில் சர்ச்சைக்குரிய விடயமாகியுள்ளது. மனுஷகுமாரன் உயர்த்தப்படுவதைச் சிலர், சுவிசேஷப் பிரசங்கத்தின் மூலமாக இயேசுகிறிஸ்து உயர்த்தப்படுவதைக் குறிப்பதாகக் கருதுகின்றனர்.[12] எனினும், யோவானின் சுவிசேஷத்தில் “ஹிப்ஸ்ஸோ” என்னும் பதம் உபயோகிக்கப்பட்டுள்ள இடங்களில், அது இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தையே குறிப்பதை நாம் அவதானிக்கலாம்.[13] குறிப்பாக, யோவான் 12:32ல், குறிப்பிடப்பட்டுள்ள “நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்” என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்றானது, அதற்கடுத்த வசனத்தில், “தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்” என்று யோவானால் விளக்கப்பட்டிருப்பதிலிருந்து, “மனுஷகுமாரன் உயர்த்தப்படுதல்” என்னும் சொற்பிரயோகம் இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தையே குறிக்கின்றது என்பது தெளிவாகின்றது. எனினும் இயேசுகிறிஸ்துவைப் பொறுத்தவரை “அவர் சிலுவையில் உயர்த்தப்பட்டதானது அவர் பரலோகத்திற்கு உயர்த்தப்படுவதற்கான ஆரம்பச் செயலாகவும் இருக்கின்றது.”[14]

---

[12] J.Calvin, *The Gospel According to John 1-10*, p. 72.

[13] L.Morris, *John: The New International Commentary on the New Testament (Revised)*, p. 199.

[14] F.F.Bruce, *The Gospel of John*, p. 88. சிலுவை மரணத்திற்கு முன்பு ஜெபிக்கும் போது, தாம் மகிமைப்படும் வேளை வந்துள்ளதாக இயேசு கிறிஸ்து குறிப்பிட்டது இதற்கான ஆதாரமாக உள்ளது. “இயேசுகிறிஸ்துவின் மரணம், மானிட பாவத்திற்கான பலி மட்டுமல்ல, அவர் பிதாவிடம்

மனுஷகுமாரன் உயர்த்தப்பட வேண்டும் என்னும் இயேசுகிறிஸ்து வின் கூற்றில், "வேண்டும்" என்னும் பதமானது மூலமொழியில் கட்டாயம் நடைபெற வேண்டிய செயலைச் சுட்டிக்காட்டுகிறது. அதாவது, இயேசுகிறிஸ்து கட்டாயம் மரிக்க வேண்டும். ஏனென் றால், அவரது மரணத்தினால் மட்டுமே மக்களுக்கு பாவ மன்னிப் பும் நித்திய ஜீவனும் கிடைப்பதற்கான மார்க்கத்தை உருவாக் கக் கூடியதாயிருந்தது. உண்மையில், "மானிட பாவத்திற்காக இருக்கும் ஒரேயொரு பரிகாரம் இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணமே."[15] தேவனால் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட் டுள்ள இப்பாவ மன்னிப்பின் முறையை விசுவாசித்து ஏற்றுக் கொள்பவர்களுக்கு நித்திய ஜீவன் இருப்பதையும் இயேசு கிறிஸ்து இவ்வசனத்தில் அறியத்தந்துள்ளார். "நித்திய ஜீவன்" என்பது தேவனுடன் நித்திய காலமாக வாழக்கூடிய ஆசீர்வாத மாகும்.[16] இத்தகைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மனிதர்கள் இயேசுகிறிஸ்து சிலுவையில் தங்களுக்காகச் செலுத்திய பலியை விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ளவேண்டும்



திரும்பிச் செல்வதற்கான பயணத்தின் ஆரம்பமாகவும் உள்ளது" (G.M. Burge, *John: The NIV Application Commentary*, p. 117).

[15] W.Hendriksen, *New Testament Commentary: John*, p. 138.

[16] யோவானுடைய சுவிசேஷத்தில் 17 தடவைகள் இடம்பெறும் "நித்திய ஜீவன்" என்னும் சொற்பிரயோகம், முடிவில்லாத வாழ்க்கையை மட்டு மல்ல, தேவனுடன் வாழ்கின்ற தரமான வாழ்க்கையையும் குறிக்கின்றது. முதல் மூன்று சுவிசேஷங்களிலும் "தேவனுடைய (அல்லது பரலோக) ராட்சியம்" என்னும் விவரணத்தால் குறிப்பிடப்பட்டிருப்பதையே யோவான் நித்திய ஜீவன் என்று வர்ணித்துள்ளார். தேவனுடைய ராட்சியம் என்பது "தேவனுடைய ஆளுகையைக்" குறிக்கும். இயேசுகிறிஸ்துவை விசுவாசி த்து ஏற்றுக்கொள்வதன் மூலமாகத் தேவனுடைய பிள்ளையாகுபவன் (யோவா.1:12), தேவனுடைய ராட்சியத்தின் குடிமகனாகின்றான்.

ஆறாம் அத்தியாயம்

அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார்....

(யோவான் 4:10)

இயேசுகிறிஸ்துவின் உபதேசங்களில் உள்ள சிறப்பம்சங்களில் ஒன்று, அவர் தாம் சொல்வதைப் பல்வேறு விதமான உருவக விவரணங்களில் சித்தரித்துள்ளமையாகும். எனினும், சில சந்தர்ப்பங்களில் இயேசுகிறிஸ்துவின் உருவக விவரணங்களை மக்கள் சொல்லர்த்தமாகத் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்றன.[1] வித்தியாசமானதும் தவறானதுமான உபதேசங்கள் கிறிஸ்தவ சபைக்குள் புகுவதற்கு[2] இதுவும் ஒரு முக்கிய காரணமாக

---

[1] உதாரணத்திற்கு யோவான் 3ம் அதிகாரத்தில் ''மறுபடியும் பிறத்தல்'' என்பதை இயேசுகிறிஸ்து உருவகவிவரணமாக உபயோகித்த போது, நிக்கொதேமு அதைச் சொல்லர்த்தமாகத் தவறாகப் புரிந்து கொண்டான் (யோவா.33-4). அதேபோல, யோவான் 3ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து ''போஜனம்'' என்னும் வார்த்தையைத் ''தேவனுடைய சித்தத்தை செய்து முடிப்பதற்கான'' உருவகமாக உபயோகித்த போது, சீடர்கள் அதைச் சொல்லர்த்தமாகத் தவறாக விளங்கிக் கொண்டனர் (யோவா.4:31-34).
[2] உதாரணத்திற்கு, திருவிருந்தின்போது அப்பமும் திராட்சைரசமும் உண்மையான இயேசுகிறிஸ்துவின் சரீரமாகவும் இரத்தமாகவும்

உள்ளது. எனவே, இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில் உள்ள உருவக விவரணங்களை நாம் சரியான விதத்தில் வியாக்கியானம் செய்து, அவ்வுருவகங்களின் மூலம் அவர் சொல்லும் விடயத்தைச் சரியான விதத்தில் விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியம். யோவான் எழுதிய சுவிசேஷத்தில் "ஜீவத்தண்ணீர்" என்னும் உருவக விவரணத்தை இயேசுகிறிஸ்து இருதடவைகள் உபயோகித்துள்ளார். 4ம் அதிகாரத்தில் சமாரியப் பெண்ணோடு உரையாடிக் கொண்டிருந்த அவர், ஜீவத்தண்ணீரைத் தருவதைப் பற்றி கூறினார் (யோவா.4:10).[3] அதன் பின்னர் 7ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரை ஜீவத்தண்ணீராக உருவகித்துள்ளார் (யோவா.7:38-39). இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் 7ம் அதிகாரத்தில் ஜீவத்தண்ணீர் பரிசுத்த ஆவியானவர் என்பதனால், 4ம் அதிகாரத்திலும் பரிசுத்த ஆவியானவரையே இயேசுகிறிஸ்து ஜீவத்தண்ணீராக வர்ணித்துள்ளதாகக் கருதுகின்றனர்.[4]

மாறுகின்றன என்னும் ரோமன் கத்தோலிக்க சபையின் உபதேசம், இயேசுகிறிஸ்து கடைசி இராப்போஜனத்தின் போது, அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் தம்முடைய மாம்சமாகவும் இரத்தமாகவும் உருவகித்ததை சொல்லர்த்தமாகத் தவறாக விளங்கிக் கொண்டதேயாகும் (T.N.Sterrett, *How to Understand Your Bible*, p. 86).

[3] ஜீவத்தண்ணீர் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள கிரேக்கப் பதம் சொல்லர்த்தமாக "ஓடும் தண்ணீர்" அல்லது "நீரூற்றின் வாயில் பிரவகித்து வரும் நீர்" என்று அர்த்தந்தரும். அதாவது, "குளம், பொய்கை, என்பவற்றைப் போல ஓரிடத்தில் தேங்கியிராது, ஆறு அல்லது ஓடையில் செல்லும் தண்ணீரே அக்காலத்தில் ஜீவத்தண்ணீர் என்று அழைக்கப்பட்டது" (W.Barclay, *John 1-7: The Daily Study Bible*, p. 152). எனினும், இயேசுகிறிஸ்து இப்பதத்தைச் சொல்லர்த்தமாக அல்ல, ஆவிக்குரிய அர்த்தத்திலேயே உபயோகித்துள்ளார். ஏனென்றால், மூல மொழியின்படி, யாக்கோபின் கிணற்றுக்கு அருகில் இருந்து ஒருவர் சொல்லர்த்தமாக ஜீவத்தண்ணீரைத் தருவதாகக் கூறினால், அவர், அக்கிணற்றின் அடியில், நீரூற்றுக்களில் இருந்து கிணற்றிற்கு வந்து கொண்டிருக்கும் புதிய தண்ணீரைத் தருவதாகவே பொருள்படும். ஆனால், இயேசுகிறிஸ்து அக்கிணற்றின் தண்ணீரைப் பற்றி கூறவில்லை என்பதை, அக்கிணற்றின் தண்ணீருக்கும் தாம் கொடுக்கும் தண்ணீருக்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தை அவர் 14ம் வசனத்தில் சுட்டிக்காட்டுவது அறியத்தருகின்றது.

[4] E.A.Blum, *John The Bible Knowledge Commentary*, p. 285; W.Kelly, *An Exposition of the Gospel of John*, p. 83.

யூதமதப் போதகர்களும் சில சந்தர்ப்பங்களில் பரிசுத்த ஆவியானவரைத் தண்ணீராக உவமித்துள்ளனர்.[5] வேதாகமத்தில் பரிசுத்தஆவியானவர் தேவனுடைய ஈவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதும் (அப்.2:38, 10:46, 11:17), யோவான் 4:10ல் ஜீவத்தண்ணீரை இயேசுகிறிஸ்து தேவனுடைய ஈவாகக் குறிப்பிட்டிருப்பதும், பரிசுத்த ஆவியானவரே ஜீவத்தண்ணீராக உவமிக்கப்பட்டிருப்பதற்கான ஆதாரமாகக் கருதப்படுகின்றது. மேலும், யோவான் ஸ்நானகனுடைய ஊழியத்தின் தொடர்ச்சியாகவே இயேசுகிறிஸ்துவின் இறைபணி இருப்பதனால், யோவான் முன்னறிவித்தபடி இயேசுகிறிஸ்துவின் ஊழியம் பரிசுத்த ஆவியானவரை அருள்வதாகவே உள்ளது. இதனால், அவர் கொடுப்பதாகக் கூறும் ஜீவத்தண்ணீர் பரிசுத்த ஆவியானவர் என்றும் விளக்கப்படுகின்றது. மேலும், 1கொரிந்தியர் 12:13ல் பரிசுத்த ஆவியானவரை ஒருவன் பெற்றுக் கொள்வது, தாகந் தீர்க்கப்படுதலாகச் சித்தரிக்கப்பட்டிருப்பதும், இயேசுகிறிஸ்து சமாரியப் பெண்ணுக்கு கொடுப்பதாகக் கூறும் ஜீவத்தண்ணீர் பரிசுத்த ஆவியானவர் என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளதாகவும் கூறப்படுகின்றது.[6]

யோவான் 4ம் அதிகாரத்தில் ஜீவத்தண்ணீர் பரிசுத்த ஆவியானவரோடு தொடர்புற்றுள்ள போதிலும், பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய விவரணமாக இவ்வுருவகம் இயேசுகிறிஸ்துவினால் உபயோகிக்கப்படவில்லை. யோவான் 7ம் அதிகாரத்தில், இயேசுகிறிஸ்து மகிமையடைந்த பின்பே, அதாவது அவர் பரமேறிச்

---

[5] *Targum of Isaiah* 44:3 Cited in G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Volume 36*, p. 60. யூதமதப் போதகர்கள், நியாயப்பிரமாணத்தையும் ஜீவத்தண்ணீராக வர்ணித்துள்ளனர். யூதமத நூல்களில் "போதனை" அல்லது "உபதேசம்" ஜீவத்தண்ணீராக உருவகிக்கப்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம். பழைய ஏற்பாட்டில் நீதிமொழிகள் 13:14, 18:14 போன்ற வசனங்களிலும் தண்ணீர் என்னும் பதம் இவ்வாறு தேவவார்த்தையைக் குறிக்க உபயோகிக்கப்பட்டுள்ளது. இத்தகைய அர்த்தத்துடன் இயேசுகிறிஸ்து ஜீவத்தண்ணீர் என்னும் உருவகத்தை உபயோகித்திருந்தால் அது அவரது உபதேசத்தையே குறிக்கும். எனினும் அவர் இத்தகைய அர்த்தத்துடன் ஜீவத்தண்ணீரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் என்பதற்கு யோவானுடைய சுவிசேஷத்தில் போதுமான ஆதாரங்கள் இல்லை.

[6] J.R.Michaels, *John: New International Biblical Commentary*, p. 70.

சென்ற பின்பே பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவார் என்பதை அறிந்து கொள்கின்றோம் (யோவா.7:38-39).[7] ஆனால் 4ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து சமாரியப் பெண்ணோடு பேசிக்கொண்டிருந்த சமயத்திலேயே ஜீவத்தண்ணீரை அவளுக்குத் தருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால், இயேசுகிறிஸ்து தாம் மனுமக்களுக்கு அருளும் "ஆவிக்குரிய வாழ்வையே"[8] ஜீவத்தண்ணீராக உருவகித்துள்ளதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[9] "தேவனுடைய ஈவு என்று இயேசுகிறிஸ்து கூறுவது, அவரால் மட்டுமே மக்களுக்குக் கொடுக்கக்கூடிய நித்திய ஜீவன்"[10] என்பதே இவர்களின் விளக்கமாகும்.[11] இதனால் இதை "நித்திய ஜீவனுக்கான தண்ணீர்"[12] என்றும் இவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த ஈவைப் பற்றியே இயேசுகிறிஸ்து யோவான் 3:16ல் குறிப்பிட்டுள்ளதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.[13]

உண்மையில், நாம் பழைய ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டே யோவான் 4ம் அதிகாரத்தில் ஜீவத்தண்ணீர் என்னும் உருவகம் எத்தகைய அர்த்தத்தோடு உபயோகிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்திடலாம். ஏனென்றால், ஜீவத்தண்ணீரைப் பற்றிய "பழைய ஏற்பாட்டு அர்த்தங்கள் அனைத்தும் யோவானுடைய சுவிசேஷத்தில் ஜீவத்தண்ணீருக்கு உள்ளது."[14] பழைய ஏற்பாட்

---

[7] யோவான் 7:38-39ல் பரிசுத்த ஆவியானவரை ஜீவத்தண்ணீராக இயேசுகிறிஸ்து உவமித்துள்ளதைக் குறிப்பிட்டுள்ள யோவான், "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து, இயேசுகிறிஸ்து மகிமையடைந்த பின்பே பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவார் என்பது தெளிவாகின்றது.

[8] இந்த ஆவிக்குரிய வாழ்வே யோவான் சுவிசேஷத்தின் ஏனைய அதிகாரங்களில் நித்திய ஜீவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[9] W.Hendriksen, *New Testament Commentary: John*, p. 162. R.C.H.Lenski, *The Interpretation of St. John's Gospel*, p. 306; A.W.Pink, *Exposition of the Gospel of John Volume One*, pp. 181-187.

[10] D.A.Carson, *John: Pillar New Testament Commentary*, pp. 218-219.

[11] எபேசியர் 2:8-9ல் இரட்சிப்பு தேவனுடைய ஈவாகக் குறிப்பிடப்பட்டிருப்பது இதற்கான ஆதாரமாகக் கருதப்படுகின்றது.

[12] R.E.Nixon, *John: Scripture Union Bible Study Books*, p. 15.

[13] A.T.Robertson, *Word Pictures in the New Testament Volume V*, p. 62.

[14] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 219.

டில் தேவனே ஜீவத்தண்ணீர் ஊற்றாக சித்தரிக்கப்பட்டுள்ளார் (எரே.2:13). ஆனால், சமாரியப் பெண்ணுக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுப்பவராக இயேசுகிறிஸ்து இருக்கிறார். “இது இயேசுகிறிஸ் துவின் தேவத்துவத்திற்கான ஒரு ஆதாரமாகவும் உள்ளது.”[15] மேலும், பழைய ஏற்பாட்டில் எருசலேமிலிருந்து ஜீவத்தண்ணீர் புறப்பட்டு வரும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (சக.14:8, எசே. 47:9). இதை, இரட்சிப்பு யூதர்கள் வழியாக வருகிறது என்று இயேசுகிறிஸ்து யோவான் 4:22ல் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு, தாகமாயிருப்பவர்களை தண்ணீரண்டை வரும்படி பழைய ஏற்பாட் டில் அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளதோடு (ஏசா.55:1), “நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுக்களிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டு கொள்வீர்கள்” என்றும் ஏசாயா 12:3ல் முன்னறிவிக்கப் பட்டுள்ளது. இயேசுகிறிஸ்து சமாரியப் பெண்ணுக்கு ஜீவத்தண் ணீரை மட்டுமல்ல, தேவனுடைய ஈவைக் கொடுப்பதைப் பற்றியும் கூறியுள்ளார். இது தேவனுடைய இரட்சிப்பின் ஈவாகும். எனவே இதனோடு சேர்த்து அருளப்படும் “ஜீவத்தண்ணீர் மானிட இரட்சிப் பாகவே உள்ளது.”[16] எனினும், இரட்சிப்பின் அனுபவமானது பரிசுத்த ஆவியானவரால் உருவாக்கப்படும் புதுவாழ்வாக இருப்ப தனால், இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஜீவத்தண்ணீர், ஒருவனு டைய இரட்சிப்பின் போது பரிசுத்த ஆவியானவர் மூலம் அவனு க்கு அருளப்படும் புதிய வாழ்வாகவே உள்ளது. உண்மையில், “புதியதோர் ஆவிக்குரிய வாழ்வை மனிதனுக்கு இயேசுகிறிஸ்து கொடுக்கும் போது அவனுக்கு கிடைப்பவை அனைத்தும் ஜீவத் தண்ணீராக உள்ளது.”[17] எனவே, “பரிசுத்த ஆவியானவர் மூல மாக ஒருவனுக்கு கிடைக்கும் புதிய ஆவிக்குரிய வாழ்வைப் பற்றியே இயேசுகிறிஸ்து சமாரியப் பெண்ணிடம் ஜீவத்தண்ணீர்

---

[15] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 231.

[16] A.W. Pink, *Exposition of the Gospel of John*. p. 186.

[17] J.C.Ryle, *Expository Thoughts on John Volume.1*, p. 213. “ஆதிச் சபைப் பிதாக்களில் சிலர் ஜீவத்தண்ணீரை ஞானஸ்நானமாகக் கருதிய போதி லும், இவ்விளக்கம் முற்றிலும் தவறானதாகவே உள்ளது” (J.C.Ryle, *Expository Thoughts on John Volume. 1*, p. 213).

என்று கூறியுள்ளார்[18] என்பதை மறுப்பதற்கில்லை. மக்களுக்கு இயேசுகிறிஸ்து அருளும் “ஆவிக்குரிய புதிய வாழ்வே ஜீவத் தண்ணீராக உள்ளது.”[19]

[18] G.M.Burge, *John: The NIV Application Commentary*, p. 13.

[19] R.C.H.Lenski, *The Interpretation of St.John's Gospel*. p. 306. இயேசுகிறிஸ்துவிற்கும் சமாரியப் பெண்ணுக்கும் இடையிலான உரையாடல் பற்றிய முழுமையான விளக்கத்திற்கு எனது *ஆத்தும தாகத்திற்கு அற்புதத் தண்ணீர்* என்னும் நூலைப் பார்க்கவும்.

ஏழாம் அத்தியாயம்



நீ போய் உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டு வா....

(யோவான் 4:16)

இயேசுகிறிஸ்துவின் உரையாடல்களில் நாம் அவதானிக்கக் கூடிய ஒரு சிறப்பம்சம், தாம் பேசிக் கொண்டு வந்த விடயத்திலிருந்து சடுதியாக அவர் வேறு ஒரு காரியத்தைப் பற்றிக்கூறத் தொடங்குவதாகும். எனினும், இது அநேகருக்கு குழப்பத்தையே ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால், அவரது உரையாடலைக் கவனித்துப் பார்க்கும்போது, இத்தகைய மாற்றம், அவர் பேசிக்கொண்டு வந்த விடயத்திற்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத ஒரு காரியத்தைக் குறிப்பிடுவதாகத் தென்படுவதேயாகும். இது, அவர் முன்னுக்குப் பின் முரணாகவும், எவ்வித சம்பந்தமும் இல்லாத விடயங்களை ஒரே நேரத்தில் அறிவிப்பது போல உள்ளதாகவும் பலர் விமர்சிக்கக் காரணமாயுள்ளது. இயேசுகிறிஸ்துவின் இத்தகைய, சம்பந்தமில்லாதது போலத் தோன்றும் சடுதியான அறிவிப்புகளில் ஒன்று அவருக்கும் சமாரியப் பெண்ணுக்கும் இடையிலான உரையாடலில் உள்ளது. ஜீவத்தண்ணீரைப் பற்றி சமாரியப் பெண்ணோடு பேசிக் கொண்டு வந்த இயேசுகிறிஸ்து,

அப்பெண் தனக்கும் அத்தண்ணீரைத் தர வேண்டும் என்று கேட்டபோது அதைப் பற்றி எதுவும் கூறாது, “நீ போய் உன் புருஷனை அழைத்துக் கொண்டு வா” (யோவா.4:16) என்றார். சமாரியப் பெண்ணின் வேண்டுகோளுக்கும் இயேசுகிறிஸ்துவின் இக்கூற்றுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதே இன்று அநேகரது தர்க்கமாயுள்ளது. எனினும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் பொருத்தமற்ற கட்டளையாகக் கொடுக்கப்படவில்லை என்பதை நாம் மறக்கலாகாது.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை முழுமையாக விளங்கிக் கொள்ளாத வேத ஆராய்ச்சியாளர்கள், சமாரியப் பெண்ணின் வேண்டுகோளுக்கும் அதாவது ஜீவத்தண்ணீரைத் தரும்படியான கோரிக்கைக்கும், இயேசுகிறிஸ்துவின் அறிவுறுத்தலுக்கும், அதாவது, “உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டு வா” என்னும் கட்டளைக்கும் இடையிலுள்ள தொடர்பை பல்வேறு முறைகளில் விளக்கியுள்ளனர். இயேசுகிறிஸ்து நீண்ட நேரமாகத் தனிமையில் ஒரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்தமையால், அக்காலக் கலாசாரத்தைக் கருத்திற்கொண்டவராக அவர் தொடர்ந்தும் அவளோடு தனிமையில் பேச விரும்பாதவராக, அவளுடைய புருஷனைக் கூட்டிக் கொண்டுவரும்படி கூறியதாகச் சில வேதஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[1] தாம் அப்பெண்ணோடு பேசப்போகும் விடயங்களுக்குச் சாட்சியாக இருப்பதற்காகவே அவளது புருஷனை அழைத்து வரும்படி இயேசுகிறிஸ்து கூறியதாகவும் சிலர் இக்கூற்றை விளக்குகின்றனர்.[2] இயேசுகிறிஸ்து ஜீவத்தண்ணீரைப் பற்றி சொல்லியவைகளை அப்பெண் புரிந்து கொள்ளாமல் கிணற்று நீரைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தமையால், இனிமேல் தான் சொல்லப்போவதை அவளால் புரிந்து கொள்ள முடியாது என்று கருதி, அவளுடைய புருஷனை அழைத்துக் கொண்டு வரும்படி இயேசுகிறிஸ்து கட்டளையிட்டதாகவும் சிலர் விளக்கியுள்ளனர்.[3] மேலும், இயேசு

---

[1] Merrill C.Tenney, *The Expositor's Bible Commentary: John*. p. 55.
[2] Cited in J.C.Ryle, *Expository Thoughts on John Volume 1*. p. 219.
[3] Cited in W.Hendriksen, *New Testament Commentary: John*. p. 164.

கிறிஸ்து கொடுக்கப்போகும் ஜீவத்தண்ணீரைத் தனியாக அனுபவிக்க முடியாது என்றும், அதைப் பெறுபவன் மற்றவர்களோடு அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதனால், அவளால் யாருடன் இயேசுகிறிஸ்துவின் ஈவைப் பகிர்ந்து கொள்ள முடியுமோ அவனை (அதாவது அவளது புருஷனை) அழைத்துக் கொண்டு வரும்படி இயேசுகிறிஸ்து கட்டளையிட்டார் என்றும் சில வேத ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[4] எனினும், இத்தகைய விளக்கங்கள் அனைத்தும், அப்பெண்ணுக்குப் புருஷன் இல்லை என்னும் உண்மையை இயேசுகிறிஸ்து அறிந்திருந்தமைக்கு, அதுவும் அடுத்த வசனத்தில் அவர் குறிப்பிடும் இவ்விடயத்திற்கு (யோவா.4:17-18) முரணாகவே உள்ளது.

சமாரியப் பெண்ணுக்கு அச்சமயம் புருஷன் இல்லை என்னும் உண்மையை இயேசுகிறிஸ்து அறிந்திருந்தபோதிலும், புருஷனை அழைத்துக் கொண்டு வரும்படி அவர் கூறியது நமக்கு குழப்பத்தையே ஏற்படுத்துகிறது என்பதை மறுப்பதற்கில்லை. உண்மையில் அவளால் தன் புருஷனை அழைத்துக் கொண்டு வந்திருக்க முடியாது. எனவே, இவ்வாறு அவளால் செய்ய முடியாத ஒரு காரியத்தைச் செய்யும்படி இயேசுகிறிஸ்து கட்டளையிடுவதற்கான காரணம் யாது என்னும் கேள்வி நம்முள் எழுவதும் இயற்கையே. ஒருவனால் செய்ய முடியாததைச் செய்யும்படி சொல்லும் இயேசுகிறிஸ்துவின் இத்தகைய கட்டளைகளை லூக்கா 10:28, 18:22 போன்ற வசனங்களிலும் நாம் அவதானிக்கலாம். உண்மையில், இயேசுகிறிஸ்துவின் இத்தகைய கூற்றுக்கள், அதாவது, "ஒருவனால் செய்ய முடியாததைச் செய்யச் சொல்லும் கட்டளைகள், அவனது இயலாமையைச் சுட்டிக் காட்டுவதற்காகச் சொல்லப்பட்டவைகளாகும்"[5]. அதாவது, தன்னைப் பற்றி பெருமிதங்கொள்ளும் ஒருவனுக்கு, அவனுடைய உண்மையான தாழ்வான நிலையைச் சுட்டிக்காட்டுவதற்காகக் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் ஆகும்.

---

[4] R.E.Nixon, *St.John: Scripture Union Bible Study Books*, p. 17.
[5] R.C.H.Lenski, *The Interpretation of St.John's Gospel*.p. 314.

உண்மையில், சமாரியப் பெண்ணால் தன் புருஷனைக் கூட்டிக் கொண்டு வரமுடியாதிருக்கும் நிலையை அவளுக்கு உணர்த்து வதற்காகவே இயேசுகிறிஸ்து அவளிடம் இவ்வாறு கூறினார். இதன் மூலம், அவள் எத்தகைய ஒழுக்கக்கேடான வாழ்வில் இருக்கின்றாள் என்பதை இயேசுகிறிஸ்துவினால் சுட்டிக்காட்டக் கூடியதாயிருந்தது. சமாரியப் பெண்ணின் "பாவத்தை அவளு க்கு உணர்த்துவதற்கு அவளுடைய புருஷனைப் பற்றி குறிப்பிடு வதே சிறந்த வழி என்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருந்தார்."[6] அப்பெண் தன் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பினால் மட்டுமே இயேசுகிறிஸ்து கொடுக்கும் "ஜீவத்தண்ணீராகிய பரிசுத்த ஆவி யானவர் மூலமான புதிய வாழ்வு"[7] அவளுக்குக் கிடைக்கும் என்பதனால், அவளை அத்தகைய நிலைக்கு கொண்டு வருவதற் காக, ஜீவத்தண்ணீரைத் தரும்படி கேட்ட அப்பெண்ணிடம் புருஷனைக் கூட்டிக்கொண்டு வரும்படி இயேசுகிறிஸ்து கூறினார். "இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஜீவத்தண்ணீரை சமாரியப் பெண் விரும்பினால், அதன்மீது அவளுக்குத் தாகம் ஏற்பட வேண்டும். அத்தகைய தாகம் ஏற்பட அவளுக்குத் தன் பாவத்தைப் பற் றிய குற்றவுணர்வு ஏற்படவேண்டும். இத்தகைய நிலைக்கு அப்பெண்ணைக் கொண்டு வருவதற்காகவே இயேசுகிறிஸ்து இவ்விதமாகக் கூறியுள்ளார்."[8] உண்மையில், "இயேசுகிறிஸ்து வின் பிரசன்னத்தில் ஒருவன் தன்னைக் காணும் வரை அவன் தனது உண்மையான நிலையைப் பார்க்காதவனாகவே இருப் பான். இயேசுகிறிஸ்துவின் கட்டளை சமாரியப் பெண்ணின் நிஜமான நிலையை அவளுக்கு முன்பாகக் கொண்டு வந்தது."[9] இதேவிதமாக, இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தில் நமது நிலை எப்படிப்பட்டதாயுள்ளது என்று ஆராய்ந்து பார்க்க வேண்டியது நமது ஆவிக்குரிய வாழ்வின் நலனுக்கு அவசியமாயுள்ளது.[10]

---

[6] W.Hendriksen, *New Testament Commentary: John*. p. 164.

[7] இது பற்றிய விளக்கத்திற்கு ஆறாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[8] W.Hendriksen, *New Testament Commentary: John*. p. 164.

[9] W.Barclay, *John Volume I: The Daily Study Bible*, p. 156.

[10] வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரிசுத்தவான்கள் அனைவருமே தேவனுடைய பிரசன்னத்தில் தம்மைப் பார்க்கும்போது, தாம் குறைவுள்ள

சமாரியப் பெண் தனக்குப் புருஷன் இல்லை என்று கூறியபோது “எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில் உனக்கு ஐந்து புருஷர்கள் இருந்தார்கள். இப் போது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல. இதை உள்ளபடி சொன்னாய் என்றார்” (யோவா.4:17-18). சமாரியப் பெண்ணுக்கு இருந்த ஐந்து புருஷர்களையும் எப்படி விளக்குவது என்பது பற்றியும் வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் உள்ளன. சில வேதஆராய்ச்சியாளர்கள், சமாரியப் பெண்ணின் சரிதையானது, சமாரிய நாட்டின் சரித்திரத்திற்கான உவமான விவரணமாக இருப்பதாகக் கருதுகின்றனர்.[11] இதன்படி, ஐந்து புருஷரும் கி.மு.722ல் அசீரியர்கள் இஸ்ரவேலை ஆக்கிரமி த்து அங்கிருந்தவர்களைச் சிறைப்படுத்திக் கொண்டு போன பின்னர் சமாரியாவுக்கு வந்து குடியேறிய ஐந்து ஜாதியினரும் கொண்டு வந்த அவரவருடைய தெய்வங்களைக் குறிக்கின்ற னர்.[12] நீண்ட காலமாகப் பிரபல்யம் பெற்றிருந்த இவ்விளக்கம், சமாரியப் பெண்ணின் சரிதையை ஒரு உவமையாகவே கருது கிறது. மேலும், அசீரியர்களின் ஆக்கிரமிப்பிற்குப் பின்னர் சமாரியா விற்கு ஐவகையான ஜாதியினர் வந்து குடியேறிய போதிலும், அவர்கள் ஏழு தெய்வங்களைக் கொண்டு வந்தனர்.[13] எனவே, ஐந்து புருஷர்களைத் தெய்வங்களாகக் கருதமுடியாது. மேலும், “சமாரியாவில் குடியேறியவர்கள் ஏழு தெய்வங்களையும் ஒரே காலத்தில் வழிபட்டனர். ஆனால் சமாரியப் பெண்ணோ ஐந்து பேருடனும் ஒரே நேரத்தில் வாழவில்லை.”[14] இவ்விளக்கத்தின்

வர்களும் பாவிகளுமாக இருப்பதை அறிக்கையிட்டுள்ளனர் (ஏசா.6:1-5, லூக்.5:8). உண்மையில், “பரிசுத்தமான தேவனோடு தம்மை ஒப்பிட்டுப் பார்க்காதவரை எவருமே தமது உண்மையான பாவ நிலையை அறிந்து கொள்ளமாட்டார்கள்” (R.C.Sproul, *The Holiness of God*. p. 63).

[11] E.C.Hoskyns, *The Fourth Gospel*. p. 243; R.E.Nixon, *St.John: Scripture Union Bible Study Books*, p. 16.

[12] இச்சரித்திரம் 2ராஜாக்கள் 17ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[13] 2ராஜாக்கள் 17:30-32ல் அசீரியர்களின் ஆக்கிரமிப்பின் பின்னர், சமாரி யாவில் குடியேற்றப்பட்ட ஐவகை ஜாதியினரும் வழிபட்ட ஏழு தெய்வங்க ளின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

[14] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 266.

படி, "இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல" என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்றில், ஆறாவதாயுள்ள புருஷன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என்று கூறப்படுகிறது. அக் காலச் சமாரியர்கள் இஸ்ரவேலின் தேவனையே வழிபட்டு வந்த போதிலும், அவர் அவர்களுடைய தேவனாக இருக்கவில்லை என்பதை இது விளக்குவதாகக் கருதப்படுகின்றது.[15] ஆனால் இது "போலியான தெய்வங்களைச் சட்டரீதியான புருஷர்களாக வும், மெய்யான தேவனுடன் சமாரியர்கள் விபசார உறவில் வாழ்வதாகவும் சித்தரிக்கின்றது."[16] எனினும், இத்தகைய உவ மான விவரணத்துடன் யோவான் சமாரியப் பெண்ணின் சரிதை யை எழுதவில்லை.[17]

அக்காலத்தில் ஒரு பெண்ணுக்குத் தன் கணவனை விவாகரத்து செய்யக்கூடிய சட்டரீதியான உரிமை இருக்கவில்லை. ஆண்களி னால் மட்டுமே தங்களுடைய மனைவியை விவாகரத்து செய்ய முடியும். இதனால், சமாரியப் பெண் ஒழுக்கக்கேடானவள் என் றும், அவள் ஐந்து ஆண்களோடு ஏற்கனவே தவறான உறவு கொண்டிருந்ததைப் பற்றியே இயேசுகிறிஸ்து சுட்டிக் காட்டுவதா கச் சிலர் கருதுகின்றனர். எனினும், அக்காலத்தில் பெண்களி னால் தங்களுடைய கணவனை விவாகரத்து செய்ய முடியாதி ருந்தாலும், ஒரு பெண் இது பற்றி நீதிமன்றத்திற்கு மனுச்செய்

[15] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 266.

[16] J.M.Boice, *John: An Expositional Commentary Volume I*, p. 350.

[17] ஒகஸ்டீன் என்னும் சபைப்பிதா, தன் காலத்தில் சிலர் சமாரியப் பெண்ணின் ஐந்து புருஷர்களையும் வேதாகமத்தின் முதல் ஐந்து புத் தகங்களாகக் கருதியதாகக் குறிப்பிட்டுள்ளதோடு, தான் ஐந்து புருஷரை யும் மனிதனின் ஐம்புலன்களாகக் கருதுவதாக விளக்கியுள்ளார். இத்த கைய வியாக்கியானங்கள் பிற்காலத்தவராலும் பின்பற்றப்பட்டுள்ளது (W.L.Knox, *Some Hellenistic Elements in Primitive Christianity*, p. 64). சில ஆதிச் சபைப் பிதாக்கள் ஐந்து புருஷர்களையும் பிரபஞ்சத்தைப் பற்றிய தேவ திட்டத்தின் ஐந்து யுகங்கள் என்றும், சமாரியப் பெண்ணோடு வாழும் ஆறாவது மனிதன் மோசேயின் நியாயப்பிரமாண யுகம் என்றும் விளக்கியுள்ளனர் (Cited in J.C.Ryle, *Expository Thoughts on John Volume I*, p. 220). ஆனால், வேதாகமத்தின் சரித்திர ரீதியான சம்பவங்க ளுக்கு இத்தகைய அர்த்தங்கள் கொடுப்பது தவறாகும்.

தால், நீதிமன்றம் அவளது கணவனிடம், அவளை விவாகரத்து செய்யும்படி கேட்கலாம்.[18] மேலும், குறிப்பிட்ட அளவு பணத்தைக் கணவனுக்குக் கொடுப்பதன் மூலமும், தன்னை விவாகரத்து செய்யும்படி மனைவி அவனிடம் கேட்கலாம்.[19] இத்தகைய சட்டங்களைச் சுட்டிக்காட்டும் சில வேதஆராய்ச்சியாளர்கள், சமாரியப் பெண்ணும் இத்தகைய முறையில், தான் மணமுடித்திருந்தவர்களை விவாகரத்து செய்திருக்கலாம் என்று கருதுகின்றனர்.[20] எனினும், இவை யூதர் மத்தியில் இருந்த சட்டங்கள் என்பதனால் சமாரியப் பெண்ணுடைய விவாகரத்தை இவ்விதமாக விளக்க முடியுமா என்பது கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது. மேலும் சமாரியர் மத்தியில் இருந்த விவாகரத்து முறைகளை நம்மால் அறியமுடியாதுள்ளது. எனினும், அவர்கள் பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களை மட்டுமே வேதவாக்கியங்களாக ஏற்றுக் கொண்டிருந்தமையால்,[21] மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி "அவளில் இலச்சையான காரியத்தை அவளது புருஷர் கண்டமையால், அவர்கள் அவளை விவாகரத்துச் செய்திருக்க வேண்டும்."[22] மேலும் "சட்டரீதியான காரணங்கள் ஆறாவது திருமணத்திற்குத் தடையாக இருந்திருக்கலாம். இதனால், அவள் திருமணமுடிக்காமல் ஆறாவது மனிதனோடு வாழ்ந்து வந்திருக்கலாம்."[23] சமாரியப் பெண்ணின் இத்தகைய ஒழுக்கக் கேடும் பாவமுமான வாழ்வை அவளுக்குச் சுட்டிக்காட்டுவதற்காக இயே

[18] *Mishnah, Ketubot*. 7:9-10.

[19] *Mishnah. Gittin*. 7:5-6.

[20] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 234.

[21] சமாரியர்கள் பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களையும் மட்டுமே வேதவாக்கியமாக ஏற்றுக்கொண்டிருந்தனர். இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு எனது "புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு" என்னும் நூலைப் பார்க்கவும்.

[22] F.F.Bruce, *The Gospel of John*. p. 107. உபாகமம் 24:1-4ல் குறிப்பிடப்பட்டிருக்கும், மோசேயினால் கொடுக்கப்பட்ட இவ்விவாகரத்து அனுமதியில் "இலச்சையான காரியம்" என்றால் என்ன என்பது பற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பல்வேறு விளக்கங்கள் உள்ளன. இது, கணவனுக்குத் தன் மனைவியின் மீது வெறுப்பேற்படுமளவுக்கு அவளில் இருக்கும் இலச்சையான ஒரு காரியம். இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு எனது "திருமறையும் திருமணமும்" என்னும் நூலைப் பார்க்கவும்.

சுகிறிஸ்து அவளிடம் புருஷனைக் கூட்டிக் கொண்டு வரும்படி கூறினார். சமாரியப் பெண்ணின் பாவத்தை இயேசுகிறிஸ்து ஆரம்பத்திலேயே அறிந்திருந்த போதிலும், நீ ஒரு பாவி என்று அவளை நேரடியாகக் குற்றப்படுத்தாமல், அவளாகவே தன் பாவத்தை உணர்ந்து கொள்ளும் விதத்தில் இவ்வாறு கேட்டுள்ளார்.[24]

[23] F.F.Bruce, *The Gospel of John*. p. 107. விவாகரத்தும் மறுமணமும் அக்காலத்தில் பொதுவாக அனுமதிக்கப்பட்டிருந்தாலும், யூதமதப் போதகர்கள், ஒரு பெண்ணுக்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் மட்டுமே மறுமணம் செய்ய அனுமதித்திருந்தனர் (யூத மத நூலான தல்மூட்டில் இது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது). அக்காலத்தில் யூத மற்றும் சமாரிய சமுதாயங்களில் விவாகரத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்த போதிலும், தேவனுடைய பிரமாணங்கள் விவாகரத்தை முழுமையாகத் தடை செய்துள்ளன. யூதர்கள் உபாகமம் 24:1-4ஐ ஆதாரமாகக் கொண்டு, விவாகரத்து அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி வந்தனர். ஆனால் இயேசுகிறிஸ்துவோ, இது மக்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் மோசேயினால் கொடுக்கப்பட்ட அனுமதி என்பதையும், ஆரம்பத்தில் இவ்வாறு இருக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியதோடு, தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் (மத்.19:3-8) என்று அறிவித்தார். மேலும், ஒருவன் தன் மனைவியை (அல்லது ஒருத்தி தன் கணவனை) விவாகரத்து செய்து இன்னுமொருவருடன் வாழ்வதை இயேசுகிறிஸ்து விபசாரம் என்றே குறிப்பிட்டுள்ளார் (மாற்.10:11-12). இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது *திருமறையும் திருமணமும்* என்னும் நூலைப் பார்க்கவும்.

[24] J.G.Mitchell, *Let's Revel in John's Gospel*, pp. 66-67.

எட்டாம் அத்தியாயம்



நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்....

(யோவான் 4:22)

இயேசுகிறிஸ்து சமாரியப் பெண்ணோடு உரையாடிக் கொண்டிருந்த போது, அவள் யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையில் நீண்ட காலமாக இருந்து வந்த சர்ச்சைக்குரிய விடயமான வழிபாட்டு இடத்தைப் பற்றிக் கேட்டாள்.[1] பழைய ஏற்பாட்டுக்

---

[1] இயேசுகிறிஸ்துவோடு உரையாடிக் கொண்டிருந்த சமாரியப் பெண் தன் பாவ வாழ்வைப்பற்றித் தொடர்ந்து பேச விரும்பாதவளாக, உரையாடலை வேறு பக்கம் திருப்புவதற்காகவே எவ்விடத்தில் தேவனை ஆராதிக்க வேண்டும் என்று கேட்டதாகவே பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்ற போதிலும் (L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 267; M.C.Tenney, *John: The Expositor's Bible Commentary Vol.9*, p. 55; A.W.Pink, *Exposition of the Gospel of John Vol.1*, p. 201; A.T.Robertson, *Word Pictures in the New Testament Volume V*, p. 65; W.W.Wiersbe, *Be Alive: John 1-12*, p. 49), அவளுடைய மனதில் இத்தகைய நோக்கம் இருந்தது என்று கூற முடியாது. சமாரியப் பெண் உரையாடலை மாற்றுவதற்காக அல்ல, இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளினால் தன் பாவத்தைப் பற்றி உணர்வடைந்தவளாக, தன் பாவத்திற்கான பலியை எங்கு செலுத்துவது

காலத்தில் சாலொமோனுடைய ஆட்சியின் பின்னர், கி.மு.930ல் இஸ்ரவேல் நாடானது, வடராட்சியம் என்றும் தென்ராட்சியம் என்றும் இரண்டாகப் பிரிவடைந்தது. அதன் பின்னர், வட பகுதியிலிருந்த இஸ்ரவேலர் எருசலேமிற்குச் செல்லாமல் சமாரியாவில் தேவனை வழிபட்டு வந்தனர்.[2] ஆனால் தென் பகுதியிலிருந்த

என்பதை அறிந்து கொள்வதற்காகவே வழிபாட்டு இடம் பற்றி கேட்டாள். ஏனென்றால், “அக்காலத்தில் தங்கள் பாவங்களை உணர்ந்து அவற்றுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் தேவனுக்குப் பலி செலுத்தினர். இதனால், தன் பாவத்திற்கான பலியை எவ்விடத்தில் செலுத்துவது என்பதை அறிந்து கொள்வதற்காகவே சமாரியப் பெண் இயேசுகிறிஸ்துவிடம் வழிபாட்டு இடம் பற்றி கேட்டாள்” (R.C.H.Lenski, *The Interpretation of St. John's Gospel*, p. 318). சமாரியப் பெண் உண்மையிலேயே “உரையாடலை வேறு பக்கம் திருப்புவதற்காக இவ்வாறு கேட்டிருந்தால், இயேசுகிறிஸ்து நிச்சயமாக அவளுடைய கேள்விக்கு நேரடியாக பதிலளித்திருக்க மாட்டார்” ஆனால், அவளுடைய கேள்விக்குப் பதிலாக இயேசுகிறிஸ்து தேவனை ஆராதிப்பதைப் பற்றிய முக்கிய விடயங்களை விளக்கியுள்ளார் (W.Barclay, *John 1-7: The Daily Study Bible*, p. 158; J.C.Ryle, *Expository Thoughts on John Volume 1*, p. 221). சில வேத ஆராய்ச்சியாளர்கள், சமாரியப் பெண் இயேசுகிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசியாகக் கருதியமையால், வழிபாட்டு இடம் பற்றி யூதர் சமாரியர் மத்தியில் இருந்த சர்ச்சைக்கு அவர் எவ்வாறு பதிலளிக்கப் போகின்றார் என்பதை அறிந்து கொள்வதற்காகவே எங்கு வழிபடலாம் என்று கேட்டதாகக் கருதுகின்றனர் (D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, pp. 221-222). ஆனால், சமாரியப் பெண் இறையியல் தர்க்கங்களில் ஆர்வமுடையவளாக அல்ல, மாறாக, தன் பாவவாழ்வுக்கு எவ்விடத்தில் பரிகாரம் செய்யலாம் என்பதை அறிந்து கொள்ளும் மனநிலையிலேயே அச்சமயம் இருந்தமையால் இக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. உண்மையில், தன் வாழ்வைப் பற்றிய விடயங்க ளை அறிவித்த இயேசுகிறிஸ்துவினால் தேவனை வழிபடக் கூடிய சரியான இடத்தையும் சொல்லமுடியும் என்னும் எண்ணத்துடனேயே அப்பெண் இவ்வாறு கேட்டாள்.

[2] பிரிவடைந்த வட ராட்சியத்தின் முதல் அரசனான யெரோபெயாம், மக்கள் தேவனை வழிபட தென் ராட்சியத்திலுள்ள எருசலேம் தேவாலயத்திற்குச் செல்வதைத் தடுப்பதற்காக, தன் ராட்சியத்திலேயே வழிபாட்டிடங்களை உருவாக்கி, விக்கிரக வழிபாட்டையும் நாட்டில் அறிமுகப்படுத்தினான் (1ராஜா.12:25-33). கி.மு.880ல் வடராட்சியமான இஸ்ரவேலின் அரசனான ‘உம்ரி’ என்பவன் ‘சமாரியா’ என்னும் பெயரில் ஒரு நகரத்தைக் கட்டி, அதை ராட்சியத்தின் தலைநகராக்கினான் (1ராஜா.16:23-24). அதன் பின்னர் வடராட்சியத்தினர் ‘சமாரியர்’ என்றே அழைக்கப்பட்டனர். உம்ரியின் ஆட்சியின் பின், அதாவது கி.மு.877 முதல் 814 வரை 60

யூதர்கள், எருசலேமிலேயே தேவனை வழிபட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். இதனால், சமாரியப் பெண் எருசலேமிலா அல்லது சமாரியாவிலா, எவ்விடத்தில் தேவனை வழிபடுவது சரியானது என்று கேட்டாள் (யோவா.4:19-20). இதற்குப் பதில ளித்த இயேசுகிறிஸ்து, "எவ்விடத்திலும் தேவனை வழிபடும் காலம் வந்திருக்கிறது" என்று கூறியதோடு (யோவா.4:21)[3], "நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள். நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுது கொள்ளுகிறோம். ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" என்றார் (யோவா.4:22). இயேசுகிறிஸ்துவின் இக்கூற்றில் "அறியாததைத் தொழுதுகொள் ளுவது" "அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுவது" என்னும்

வருடங்கள் வட ராட்சியத்திற்கும் தென் ராட்சியத்திற்கும் இடையில் சமாதானம் நிலவிய போதிலும் அதன் பின்னர் மறுபடியுமாக இரு ராட்சியத்திற்கும் இடையில் தொடர்ச்சியான பகைமையே நிலவியது (2ராஜா.11:1-17:41).

[3] தேவன் எங்குமிருப்பவர் என்பதனால், அவரை மக்கள் எவ்விடத்திலும் வழிபடலாம். எனினும் பழைய ஏற்பாட்டு வழிபாட்டு முறையானது எருசலே மை மையமாகக் கொண்டிருந்தது. ஆனால், இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பின்னர் மக்கள் எவ்விடத்திலும் தேவனை வழிபடக்கூடியதாக உள்ளது. இயேசுகிறிஸ்துவின் கூற்றில் "எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளும் காலம் வருகிறது" என்னும் வாக்கியத்தில் காலம் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பதம், யோவானுடைய சுவிசேஷத்தின் ஏயை பகுதிகளில் "வேளை" என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேலும், "இப்பதமானது வேறெதனுடனும் தொடர்பற்ற நிலையில் உப யோகிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தையே குறிக்கின்றது" (D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, pp. 221-223). "என் வேளை இன்னும் வரவில் லை" என்று பலதடவைகள் தெரிவித்த இயேசுகிறிஸ்து, சிலுவையில் மரிப்பதற்கு முன்பு "என் வேளை வந்துவிட்டது" என்றே கூறினார் (யோவா. 7:6, 7:8, 7:30, 12:23, 8:20, 12:23, 12:27, 13:1, 16:32, 17:2, மத்.26:18, 26:45, மாற்.14:41). எனவே, இயேசுகிறிஸ்து, "எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளும் காலம் வருகிறது என்று கூறும்போது, அக்காலம், அவரது சிலுவை மரணத்துடனேயே வருகிறது என்னும் அர்த்தத்தைக் கொண்டுள்ளது. இயேசுகிறிஸ்து சமாரியப் பெண்ணுக்கு இதைப் பற்றி விளக்கமாகவும் நேரடியாகவும் கூறாத போதிலும், அவர் சிலுவையில் மரித்தபோது தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டா கக் கிழிந்து (மத்.27:51), இனிமேல் தேவனை உலகில் எவ்விடத்திலும் வழிபடலாம் என்னும் சத்தியத்தை வெளிப்படுத்தியது.

சொற்பிரயோகங்களின் அர்த்தம் யாதென்பது இன்று அநேக கிறிஸ்தவர்களின் கேள்வியாக உள்ளது.

இயேசுகிறிஸ்து குறிப்பிட்டதுபோல, அக்கால சமாரியர்களின் வழிபாடு அறியாமையின் வழிபாடாகவே இருந்தது. கி.மு.722ல் அசீரியர்கள் சமாரியாவைக் கைப்பற்றியபோது, அவர்கள் அங்கிருந்த இஸ்ரவேல் மக்களைச் சிறைப்படுத்தி வேறுபிரதேசங்களுக்குக் கொண்டு போனதோடு, வேறு பிரதேசத்து மக்களை சமாரியாவில் குடியேற்றினர் (2ராஜா.17:23-24, 29-31). இவ்வாறு வந்து குடியேறிய வேறு ஜாதியினரும், எஞ்சியிருந்த இஸ்ரவேலரும் கலப்புத் திருமணமும் செய்து கொண்டனர். அத்தோடு, புதிதாக வந்து குடியேறியவர்கள், தங்களின் தெய்வங்களையும் சமாரியாவுக்கு கொண்டு வந்தனர். இதனால் அங்கு தேவவழிபாடும் அந்நிய தெய்வ வழிபாடுகளும் கலந்த வழிபாட்டுமுறை உருவானது (2ராஜா.17:25, 28, 32-33, 41). நாளடைவில் அவர்கள் இஸ்ரவேலின் தேவனை மட்டுமே வழிபட்டு வந்தபோதிலும், அவர்கள் வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களை மட்டுமே வேதவாக்கியங்களாக ஏற்றுக்கொண்டிருந்தனர். இதனால், பிற்காலத்தில் கொடுக்கப்பட்ட தேவவெளிப்படுத்தல்களை சமாரியர்கள் அறியாதவர்களாகவே இருந்தனர். தேவன் எருசலேமை மக்களுடைய வழிபாட்டிடமாக ஏற்படுத்திக் கொடுத்திருந்ததை அறியாதவர்களாக கெரிசீம் மலைக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து வந்தனர்.[4] மேலும் யூதர்களுக்கும் சமாரியர்க

[4] கெரிசீம் மலைக்கு முக்கியத்துவம் கொடுத்த சமாரியர்கள், ஆதியாகமம் 12:7, 33:20 போன்ற வசனங்களில் முற்பிதாக்கள் கெரிசீம் மலைக்கருகிலேயே பலிபீடம் கட்டியதைச் சுட்டிக்காட்டுவதோடு, இம்மலையிலேயே ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கைப் பலியிட்டான் என்றும், இவ்விடத்திலேயே அவன் மெல்கிசதேக்கைச் சந்தித்தான் என்றும் கருதினார்கள். சமாரியர்களின் வேதாகமத்தில், யாத்திராகமம் 20:17, உபாகமம் 5:21ல் பத்துக் கற்பனைகள் கெரிசீம் மலையுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன (J. Macdonald, *The Theology of the Samaritan*, pp. 327-333). ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்ற முற்பிதாக்கள் கெரிசீம் மலைப் பகுதிகளில் தேவனை வழிபட்டது உண்மை என்றாலும், அவர்கள் அக்காலத்தில் அப்பிரதேசங்களில் நாடோடிகளாகவே வாழ்ந்து வந்தனர். மோசேயின் காலத்திற்குப் பின்பே அவர்களுக்கு வாக்குத்தத்த பூமி சொந்தமாகிய

ளுக்கும் இடையில் பகைமை நிலவியதால்,[5] மக்கள் வழிபாட் டுக்காக எருசலேமுக்குப் போவதைத் தவிர்ப்பதற்காக சமாரியர் கள் கெரிசீம் மலையில் தங்களுக்கென்று ஒரு ஆலயத்தையும் கட்டினார்கள். உண்மையில், சமாரியர்கள் வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களைத் தவிர வேறு எந்த ஒரு புத்தகத்தையும் வேதவாக்கியமாக ஏற்றுக்கொள்ளாதிருந்தமையே அவர்களின் வழிபாடு குறைபாடுள்ளதாயிருந்தமைக்கான காரணமாகும்.[6] இத

தோடு, அதன் பின்பே எருசலேமிலேயே தேவனை வழிபடவேண்டும் என்னும் அறிவுறுத்தலும் கொடுக்கப்பட்டது. சமாரியர்கள் மோசேக்குப் பின்னர் கொடுக்கப்பட்ட தேவ வெளிப்படுத்தல்களை ஏற்றுக் கொள்ளாத மையால், அவர்கள் கெரிசீம் மலையிலேயே தேவனை வழிபடவேண்டும் என்று கூறிவந்தனர். எனினும், இவர்கள் கூறுவது போல ஆபிரகாம் கெரிசீம் மலையில் தன் மகனைப் பலியிடச் செல்லவில்லை. அவ்விடம் எருசலேமிலுள்ள "மோரியா" எனும் மலையிலேயே உள்ளது. மேலும் தேவன் தெரிந்து கொள்ளும் இடத்திலேயே அவருக்குப் பலியிட வேண் டும் என்னும் கட்டளை (உபா.12:1-14), ஆசீர்வாதங்களும் சாபங்களும் சொல்லப்படும் இடம் பற்றிய அறிவுறுத்தலைத் தொடர்ந்து வருவதனால் (உபா.11:29), ஆசீர்வாதங்கள் சொல்லப்படும் கெரிசீம் மலையே தேவனை ஆராதிப்பதற்காக அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட இடம் என்றும் சமாரியர்கள் கருதினார்கள். இதனால், உபாகமம் 27:4-5ல், வாக்குத்தத்தப் பூமிக்குள் பிரவேசித்து முதலாவதாகக் கர்த்தருக்குப் பலிபீடம் கட்டவேண் டிய இடமான "ஏபால்" என்பதை சமாரியர்கள் தங்களுடைய வேதத்தில் "கெரிசீம்" என்று மாற்றியுள்ளனர் (J.Bowman, "Samaritan Studies" pp. 298-327).

[5] தென் ராட்சிய யூதர்கள் கி.மு.586ல் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போய் மறுபடியுமாக 70 வருடங்களின் பின்னர் தங்கள் சொந்த நாட்டுக் குத் திரும்பி வந்த யூதர்கள், எருசலேமில் உடைந்து போயிருந்த தங் களுடைய ஆலயத்தை மறுபடியும் கட்ட ஆரம்பித்த போது, சமாரியர்கள் அவர்களுக்கு உதவி செய்ய முன்வந்தும், யூதர்கள் அவர்களுடைய உதவியை ஏற்றுக் கொள்ளவில்லை. இரு ஜாதியினருக்கும் இடையே பகைமை ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாயிருந்தது (எஸ்.4:2-3). எருசலேமில் தேவனை வழிபட மறுத்த சமாரியர்கள் கி.மு.400ல் கெரிசீம் மலையில் தங்களுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டினார்கள். ஆனால் கி.மு. 128ல் யூதர்கள் இவ்வாலயத்திற்குத் தீ வைத்தபோது இரு ஜாதியினருக்குமிடையிலான பகை மேலும் அதிகரித்தது. அதன் பின்னர் காலத்திற்குக் காலம் இரு ஜாதியினருக்குமிடையே பல தடவைகள் வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன (J.Bowman, "Samaritan Studies" in *The Bulletin of the John Rylands Library*. pp. 298-327).

[6] L.Morris, *Expository Reflections on the Gospel of John*. p. 140.

னால், "தேவனைப் பற்றிய அவர்களுடைய அறிவும் அவர்களின் வழிபாடும் குறைபாடுள்ளதாக இருந்தது."[7] உண்மையில், "அவர்கள் தாங்கள் யாரை வழிபடுகிறோம் என்பதை அறியாதவர்களாக இருந்தனர்."[8] இதனால்தான் சமாரியர்கள் தாங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறார்கள் என்று இயேசுகிறிஸ்து கூறினார்.

சமாரியர்களின் வழிபாட்டைப் போல யூதர்களின் வழிபாடு இருக்கவில்லை. அவர்கள் தேவன் யார் என்பதை அறிந்திருந்தார்கள். அவர்களிடம் தேவனுடைய வெளிப்படுத்தல்கள் அனைத்தும் இருந்தன. இதனால் "நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுது கொள்கிறோம்" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். மேலும், மேசியா தங்கள் இனத்திலிருந்தே வருவார் என்றும் சமாரியர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். சமாரியரின் இத்தகைய தப்பபிப்பிராயத்தைச் சுட்டிக்காட்டுவதற்காக, "இரட்சிப்பு யூதர்கள் வழியாக வருகிறது" என்று இயேசுகிறிஸ்து கூறினார். இதன் மூலம், உலக இரட்சகர் யூதர்களின் மூலமாகவே வருவார் என்பதையும், அந்த இரட்சகரைப் பற்றிய விடயங்கள் யூதர்களின் மூலமாகவே உலக மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும் இயேசுகிறிஸ்து அறியத்தந்துள்ளார்.[9] "சமாரியர்கள் எதிர்பார்த்ததுபோல இரட்சகர் சமாரியனாக இருக்கமாட்டார்,"[10] அவர் யூதராகவே இருப்பார். மேசியாவை உலகத்திற்கு அனுப்புவதற்காகத் தேவன் யூத கோத்திரத்தையே தெரிவு செய்திருந்தமையால், அவர்

---

[7] L.Morris, *John: The New International Commentary on the New Testament (Revised)*, p. 238.

[8] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 223. "அரைகுறை வேத அறிவைக் கொண்ட சமாரியர்களின் வழிபாடு தவறானதாகவே இருந்தது. (D.A.Carson, ed., *Worship: Adoration and Action*, p. 63). உண்மையில், வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய வெளிப்படுத்தலை முழுமையாக அறியாத நிலையில், எவராலும் தேவனை வழிபட முடியாது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

[9] இதைப் பற்றிய மேலதிக விபரங்கள் இந்நூலில் யோவான் 5:39ற்கான விளக்கத்தில் உள்ளன.

[10] R.C.H.Lenski, *The Interpretation of St. John's Gospel*, p. 321.

மூலமாக உலக மக்களுக்குக் கிடைக்கும் இரட்சிப்பு யூதர்கள் வழியாகவே வருவதாக இயேசுகிறிஸ்து சமாரியப் பெண்ணிற்குச் சுட்டிக்காட்டினார்.[11]

உண்மையில், வழிபாடானது மனிதர்கள் தாங்கள் நினைக்கின்ற படி தேவனை ஆராதிப்பது அல்ல. அது தேவ அறிவுறுத்தல்களின்படி செய்யப்படவேண்டியதொன்று. இதனால்தான், “தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளவேண்டும்” என்றும் இயேசுகிறிஸ்து சமாரியப் பெண்ணிடம் கூறினார் (யோவா.4:23). இயேசுகிறிஸ்துவின் கூற்றில், ‘ஆவியும் உண்மையும்’ எவற்றைக் குறிக்கின்றன என்பது பற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. சிலர் ஆவியை ‘மனிதனுடைய ஆவியாகக்’ கருதுகையில் ஏனையவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பற்றியே இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.[12] ஆவியை மானிட ஆவியாகக் கருதுபவர்கள், வழிபாடு வெறும் வெளிப்புற சடங்காச்சார ரீதியான செயல்களைக் கொண்டிராமல், அது மனிதன் தன் ஆவியினால் செய்கின்ற ஆராதனயைாக இருக்க வேண்டும் என்பதையே சமாரியப் பெண்ணுக்கு இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டியுள்ளதாக விளக்குகின்றனர்.[13] இவர்களுடைய கருத்தின்படி, “நம் சரீரம் மட்டுமல்ல நம் ஆவியும் வழிபாட்டில் ஈடுபடவேண்டும்.”[14] இது “முழு இருதயத்தோடும் தேவனை வழிபடுவதாகும்.”[15]

---

[11] பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் ஆபிரகாமைத் தெரிவு செய்து, “பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்” (ஆதி. 12:3) என்று வாக்களித்தார். இவ்வாக்குத்தத்தம், ஆபிரகாமின் வம்சத்தில் வரும் இயேசுகிறிஸ்துவின் மூலமாக நடைபெறும் என்பதை கலாத்தியர் நிருபம் அறியத்தருகின்றது.

[12] ஆவி என்பது ‘புதிய ஆவிக்குரிய பிறப்பு’ என்றும் சிலர் கருதுகின்றனர் (D.J.Ellis, *John: New International Bible Commentary*, p. 1241). தேவன் தம்மை மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ள புதிய நிலையில் அவரை வழிபடுவதே ஆவியினால் வழிபடுதல் என்பது வேறு சிலரது விளக்கமாய் உள்ளது (E.A.Blum, *John: The Bible Knowledge Commentary*, p. 286).

[13] R.C.Ryle, *Expository Thoughts on John Volume 1*, pp. 224-225.

[14] L.Morris, *Expository Reflections on the Gospel of John*, p. 144.

[15] W.Hendriksen, *New Testament Commentary: John*, p. 167.

நம் சரீரம் மட்டுமல்ல, நம் ஆவியும் சேர்ந்து செய்வதே உண்மையான வழிபாடு என்பது உண்மையென்றாலும், இத்தகைய வழிபாடு பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு செய்யப்படும் ஆராதனையாகும்.[16] பரிசுத்த ஆவியானவர் நாம் ஜெபிப்பதற்கு உதவிசெய்கிறவராக இருக்கிறது போலவே (ரோம 8:26),[17] நாம் தேவனை வழிபடுவதற்கும் உதவி செய்கிறவராக இருக்கின்றார். நாம் ஆவியினாலே ஜெபிப்பதுபோல (எபே.6:18), ஆவியினாலே தேவனை ஆராதிக்கவும் வேண்டும். உண்மையான வழிபாடானது, "மானிட ஆவியை பரிசுத்த ஆவியானவர் அசைப்பதினால் செய்யப்படுவதாகும்."[18] அதாவது, பரிசுத்த ஆவியானவரின் உந்துதலினால் அல்லது ஏவுதலினால் மானிடஆவி தேவனை ஆராதிப்பதே உண்மையான வழிபாடாகும்.

மனிதர்களாகிய நாம் ஆவியோடு மட்டுமல்ல, உண்மையோடும் தேவனை வழிபடவேண்டும் என்பதையும் இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வசனத்தில் 'உண்மை' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள "அலீத்தெய்யா" என்னும் கிரேக்க பதமே யோவானுடைய சுவிசேஷத்தில் 'சத்தியம்' என்று பலதடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து, "தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்திற்கு ஏற்றபடி அவரைத் தொழுதுகொள்ளுதலே உண்மையான ஆராதனை"[19] என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. இச்சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவே சத்தியமாக இருப்பதனால் (யோவா.14:6), உண்மையோடு தொழுது

---

[16] இவ்வசனத்தில் ஆவியை மானிட ஆவியாகக் கருதுபவர்கள், வழிபாடு பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு செய்யப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டாலும், இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவரைப் பற்றி குறிப்பிடவில்லை என்றே கூறுகின்றனர் (L.Morris, *John: New International Commentary on the New Testament*, p. 270).

[17] ரோமர் 8:26ல், "ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[18] R.C.H.Lenski, *The Interpretation of St John's Gospel*, p. 322.

[19] W.Hendriksen, *New Testament Commentary: John*, p. 167.

கொள்ளுதல் என்பது சத்தியமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் தொழுது கொள்ளுதல் ஆகும்.[20] அதாவது "இயேசுகிறிஸ்துவில் மக்களிற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தின்படி தேவனை ஆராதிப்பதாகும்."[21] உண்மையில், இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே மனிதர்களால் தேவனைத் தொழுது கொள்ள முடியும். ஏனென்றால், "இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியே தேவனிடம் மனிதன் செல்லுவதற்கான மார்க்கத்தைத் திறந்துள்ளது."[22] வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இச்சத்தியத்தின்படி தேவனை வழிபடுவதே உண்மையோடு அவரை ஆராதிப்பதாகும். உண்மையில், "இயேசுகிறிஸ்துவே சத்தியம் என்பதையும், அவர் மட்டுமே தேவனிடம் செல்வதற்கான வழி என்பதையும் அறிந்து கொள்ளும் ஒருவனாலேயே தேவனை உண்மையாக வழிபடமுடியும்."[23] மெய்யான வழிபாடு வெளிப்பிரகாரமான செயல்களை அல்ல உள்ளான நிலையின் வெளிப்பாடாக, பரிசுத்த ஆவியானவர் நமது ஆவியை ஏவுவதனால் இயேசுகிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனை வழிபடுவதாகும்.

---

[20] பரிசுத்த ஆவியானவர், சத்திய ஆவியாக யோவானுடைய சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதனால், சில வேத ஆராய்ச்சியாளர்கள் ஆவியானவரையே சத்தியத்துடன் தொடர்புபடுத்தியுள்ளனர். இவர்களுடைய கருத்தின்படி 'ஆவி,' 'உண்மை' என்னும் இரு பதங்களும் பரிசுத்த ஆவியானவரையே குறிக்கின்றன. எனவே, ஒருவன் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றதன் விளைவாக அவன் செய்யும் ஆராதனையே ஆவியோடும் உண்மையோடும் செய்யும் ஆவிக்குரிய தொழுகையாகும் (J.R.Michaels, *John: New International Biblical Commentary*, pp. 72,77). இவர்கள் சுட்டிக்காட்டுவது போல மூலமொழியில், 'ஆவி,' "உண்மை" எனும் இரு பதங்களுக்கும் தனியொரு வேற்றுமையுருபே உபயோகிக்கப் பட்டுள்ளது உண் மையாயினும், இதனை அடிப்படையாகக் கொண்டு இரண்டும் ஒன்றையே குறிக்கின்றது என்று கூறுவது தவறாகும். தனியொரு வேற்றுமையுருபுக்கான காரணம், ஆவி, உண்மை என்னும் இவ்விரண்டும் தனியொரு வழிபாட்டின் அம்சங்களாக இருப்பதை அறியத்தருவதற்கேயாகும்.

[21] D.J.Ellis, *John: New International Bible Commentary*, p. 1241.

[22] L.Morris, *Expository Reflections on the Gospel of John*, p. 144.

[23] E.A.Blum, *John: The Bible Knowledge Commentary*, p. 286.

ஒன்பதாம் அத்தியாயம்



நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால்...

(யோவான் 4:48)

இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில், ஆச்சரியத்தையும் அதேசமயம் அதிர்ச்சியையும் ஏற்படுத்தும் வார்த்தைகள், மரணத் தருவாயில் இருக்கும் தன் மகனைக் குணமாக்க வரும்படி மன்றாடிய ராஜாவின் மனிதனுக்கு[1] அவர் கூறிய வார்த்தைகளாகும். அவசரத் தேவையோடு வந்த மனிதனைப் பார்த்து, "நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்க மாட்டீர்கள்" என்று இயேசுகிறிஸ்து சற்று கடினமாகவே கூறியுள்ளார். "என்னிடத்தில் வருகிறவனை நான் ஒருபோதும் புறம்பே தள்ளுவதில்லை" (யோவா.6:37) என்று கூறிய இயேசுகிறிஸ்து,

---

[1] இந்த மனிதன் "கப்பர்நகூம்" என்னும் பட்டணத்திலிருந்து "கானா" எனும் ஊருக்கு இயேசுகிறிஸ்துவிடம் உதவி கேட்டு வந்திருந்தான். இவன் ஏரோதுவின் அரண்மனையைச் சேர்ந்த ஒரு அரச பணியாளன் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். கலிலேயாக் கடலின் வடபகுதிக் கரையில் இருந்த ஒரு பட்டணமே கப்பர்நகூம் (மத்.4:13). இயேசுகிறிஸ்து இப்பட்டணத்தில் பல அற்புதங்களைச் செய்துள்ளார்.

தம்மிடம் உதவி கேட்டு வந்த ஒருவனிடம் இவ்வாறு கூறியுள்ளமையால் அவர், தாம் சொன்னதற்கு முற்றிலும் முரணான விதத்தில் செயற்பட்டுள்ளார் என்னும் எண்ணத்தையும் ஏற்படுத்துவதாயுள்ளது. இதனால் சில வேதஆராய்ச்சியாளர்கள், இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் தனிப்பட்ட ரீதியாக ராஜாவின் மனிதனுக்குச் சொல்லப்பட்டதல்ல என்றும், அவர் பொதுவாக கலிலேய மக்களுக்கே இவ்வாறு கூறியுள்ளார் என்றும் கருதுகின்றனர்.[2] இவர்கள் தங்களின் கருத்திற்கு ஆதாரமாக, இயேசுகிறிஸ்துவின் கூற்றிலுள்ள "நீங்கள்" என்னும் பதம் மூலமொழியில் பன்மையில் இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். "கலிலேயர்கள் அற்புதங்களை எதிர்பார்த்து இயேசுகிறிஸ்துவிடம் வந்தமையே அவர் இவ்வாறு கூறியதற்கான காரணம்"[3] என்பதே இவர்களின் தர்க்கமாகும்.

இயேசுகிறிஸ்து, தமது ஊழியப்பணியை மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதைக் கருத்திற் கொண்டவராக, கலிலேய மக்கள் அனைவரைப் பற்றியும் பொதுவாக இவ்வாறு கூறியிருந்தாலும், அவர் தம்மிடம் வந்த ராஜாவின் மனிதனைப் பார்த்தே இவ்வாறு கூறியுள்ளதாகவே யோவான் 4:48ல் குறிப்பிடப் பட்டுள்ளது. "மக்கள் அற்புதத்தை எதிர்பார்த்து அல்ல, மாறாக தம்மை விசுவாசித்து தம்மைப் பின்பற்ற வேண்டும் என்னும் எண்ணமுடையவராக இயேசுகிறிஸ்து இருந்தார்."[4] அவர் எருசலேமில் அற்புதங்களைச் செய்தபோது மக்கள் எவ்விதமான நோக்கத்தோடு தம்மிடம் வந்தனர் என்பதையும் அவர் அறிந்திருந்தார் (யோவா.2:23-25). எருசலேமில், "அற்புதங்களைப் பார்த்து அவரிடம் வந்தவர்களுடைய விசுவாசம் ஆழமற்றதாகவே இருந்தது. இதனால் இயேசுகிறிஸ்துவின் கடினவார்த்தைகள், ராஜாவின் மனிதனுடைய விசுவாசத்தைப் பரீட்சித்துப் பார்க்கும் நோக்கத்துடன் சொல்லப்பட்டுள்ளன."[5]

---

[2] L.Morris, *Expository Reflections on the Gospel of John*. p. 157.
[3] G.M.Burge, *John: The NIV Application Commentary*, p. 152.
[4] L.Morris, *Expository Reflections on the Gospel of John*. p. 157.
[5] F.F.Bruce, *The Gospel of John*. p. 118.

உண்மையில், ராஜாவின் மனிதனுக்கு ஆரம்பத்தில் விசுவாசம் குறைவாகவே இருந்தது. இயேசுகிறிஸ்து ஏற்கனவே செய்திருந்த அற்புதங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு, தன் மகனை அவரால் குணமாக்க முடியும் என்னும் நம்பிக்கையோடு அவன் இயேசு கிறிஸ்துவிடம் வந்திருந்த போதிலும், அவர் தன் மகன் இருக்கும் இடத்திற்கு வந்தால் மட்டுமே அவரால் அவனைக் குணப்படுத்த முடியும் என்னும் எண்ணமுடையவனாகவே இருந்துள்ளான். இதனால்தான் "அவனைக் குணமாக்கும்படிக்கு வரவேண்டு மென்று அவரை வேண்டிக்கொண்டான்" என்று யோவான் 4:47ல் குறிப்பிடப்பட்டுள்ளது. "தொலைவில் இருந்தே அவரால் தன் மகனைக் குணப்படுத்த முடியும் என்னும் விசுவாசம் ஆரம்பத்தில் அவனுக்கு இருக்கவில்லை."[6] அவன் அற்புதம் நடைபெறுவதைத் தன் கண்களால் பார்க்க விரும்பினான். இதனால்தான் "நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசு வாசிக்க மாட்டீர்கள்" என்று இயேசுகிறிஸ்து அவனைக் கடிந்து கொண்டார்.

உண்மையில், "தாம் செய்யும் அற்புதங்களைப் பார்த்து ஆச்சரி யப்படுபவர்களாக அல்ல மாறாக, அற்புதங்களைக் கண்டதனால் விசுவாசத்தோடு தங்கள் வாழ்வைத் தம்மிடம் அர்ப்பணிப்பவர்க ளாக மக்கள் இருக்க வேண்டும் என்றே இயேசுகிறிஸ்து விரும்பு கின்றார்."[7] அவரது எதிர்பார்ப்பின்படி, அவருடைய கடின வார்த் தைகள் ராஜாவின் மனிதனுடைய விசுவாசத்தை அதிகரித்தது. இதனால்தான், இயேசுகிறிஸ்துவைத் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போவதற்காக வந்தவன், "உன் மகன் பிழைத்திருக்கி றான்" என்னும் அவரது வார்த்தைகளை நம்பித் தன் வீட்டுக்குப் போனான் (யோவா.4:50). கடைசியில், இயேசுகிறிஸ்து செய்த அற்புதத்தை ராஜாவின் மனிதன் தன் கண்களினால் காணாத போதிலும், அவனும் அவனது குடும்ப அங்கத்தவர்கள் அனைவ ரும் இயேசுகிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்தனர் (யோவா. 4:52-53).

---

[6] R.C.H.Lenski, *The Interpretation of St. John's Gospel*. p. 349.
[7] M.C.Tenney, *John: The Expositor's Bible Commentary*, p. 60.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் ராஜாவின் மனிதனுடைய விசுவாசத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகச் சொல்லப்பட்டவை என்பது உண்மை என்றாலும், அவை அக்கால மக்களின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டும் விவரணமாகவும் உள்ளன. அக்காலத்தில் யூதர்கள் ரோமர்களின் ஆளுகையின் கீழ் இருந்தமையால்,[8] தங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, சுயாதீன ராட்சியமொன்றைக் கொடுப்பதற்காக தேவனால் அபிஷேகம் பண்ணி அனுப்பப்படும் மேசியாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.[9] இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்த காலம் யூதர்களைப் பொறுத்தவரை மேசியா வரும் காலமாகவே இருந்தது. எச்சந்தர்ப்பத்திலும் மேசியா வந்துவிடலாம் என்னும் எதிர்பார்ப்புடன் மக்கள் அக்காலத்தில் இருந்தனர்.[10] மேலும், தேவனால் அனுப்பப்படும் மேசியா அற்புத அடையாளங்களுடன் வெளிப்படுவார் என்றும், தங்களுடைய முற்பிதாக்களை மோசே எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்துக் கொண்டு வந்தது போலவே, வரவிருக்கும் மேசியா அற்புதச் செயல்கள் மூலம் தங்களை ரோம அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பார் என்றும்

---

[8] ரோமர்கள் கி.மு.63ல் பலஸ்தீனாவைக் கைப்பற்றி அதைத் தங்களின் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தனர். இயேசுகிறிஸ்து பிறந்த காலத்தில் ஏரோதுவும், அதன் பின்னர் அவனுடைய பிள்ளைகளும் ரோமர்களுக்காகவே பலஸ்தீனாவை ஆண்டனர் (M.C.Tenney, *New Testament Times*, pp. 45-66; E.Ferguson, *Backgrounds of Early Christianity*, pp. 19-38).

[9] பழைய ஏற்பாட்டில் வரவிருக்கும் மேசிய யுகமும் யூதர்களுக்கு வளமானதும் ஆசீர்வாதமிக்கதுமான காலமாக முன்னறிவிக்கப்பட்டிருந்தது (எசே.40-48, தானி.12, யோவே.2:28-3:21). இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில், மேசியா தாவீதின் வம்சத்தில் வரும் ராஜாவாக, இஸ்ரவேலரின் எதிரிகளை அழித்து தங்களுக்கு ஒரு உலக ராட்சியத்தை ஏற்படுத்திக் கொடுப்பார் என்னும் எதிர்பார்ப்புடனேயே யூதர்கள் இருந்தனர் (D.Guthrie, *New Testament Theology*, p. 237).

[10] இதனால்தான், கிழக்கில் தோன்றிய நட்சத்திரத்தைப் பற்றி ஆராய்ந்த ஏரோதுவின் அரசியல் ஆலோசகர்கள், யூதருக்கு ராஜா பிறந்திருக்கிறார் என்று உடினடியாகக் கூறக்கூடியவர்களாயிருந்தனர் (மத்.2:3-5). அதுமட்டுமல்ல, யோவான் ஸ்நானகனின் ஊழியத்தைப் பார்த்தவர்கள், அவன் மேசியாவாயிருப்பானோ என்று எண்ணத் தொடங்கினார்கள் (லூக்.3:15). இதனால் அவர், தான் மேசியா அல்ல என்று அறிக்கையிட வேண்டியதாயிருந்தது (யோவா.1:20). இயேசுகிறிஸ்துவின் ஆரம்ப சீடர்கள் அவர் மேசியா என்று நினைத்தே அவரைப் பின்பற்றிச் சென்றனர் (யோவா.1:41).

நம்பினார்கள்.[11] இதனால், இயேசுகிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் அவரிடம் அற்புதங்களையும் அடையாளங்களையும் எதிர்பார்த்தனர். யோவான் 2ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து ஆலயத்தைச் சுத்திகரித்தபோது, யூதர்கள் அவருடைய செயலைக் கடிந்து கொள்ளவில்லை. மாறாக, மேசியா சடுதியாக ஆலயத்திற்கு வருவார் என்று பழைய ஏற்பாட்டில் அறிவிக்கப்பட்டிருந்தமையால்,[12] அதுவரை காலமும் எவரும் செய்யாத செயலை இயேசுகிறிஸ்து ஆலயத்தில் செய்தபோது, அவர் மேசியாவாய் இருக்குமோ என்னும் எண்ணத்தில், "யூதர்கள் அவரை நோக்கி, நீர் இவைகளைச் செய்கிறீரே இதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர் என்று கேட்டார்கள்" (யோவா.2:18). அக்காலத்தைய யூதர்களைப் பற்றி எழுதும் போது, அப்போஸ்தலனாகிய பவுலும், "யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள்" (1கொரி.1:23) என்று குறிப்பிட்டுள்ளார். யூதர்களின் இத்தகைய மனநிலையைக் கருத்திற் கொண்டவராகவும் இயேசுகிறிஸ்து "நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்க மாட்டீர்கள்" என்று தெரிவித்துள்ளார்.

---

[11] D.Guthrie, *New Testament Theology*, p. 238. யூதர்கள் "மேசியாவை அரசியல் ரீதியான இரட்சகராகவே எதிர்பார்த்தனர்" (S.Mowinckel, *He That Cometh*, p. 7). இதனால்தான், இயேசுகிறிஸ்து ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்த பின்பு, மக்கள் அவரைத் தங்களுடைய ராஜாவாக்க முற்பட்டனர். (யோவா. 6:15). இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர், சீடர்கள் அவரிடம் "ஆண்டவரே இக்காலத்திலா ராட்சியத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்" (அப்.1:6) என்று கேட்டதற்கும் இதுவே காரணமாகும்.

[12] யூதர்கள் மல்கியா 3:1-4ஐ அடிப்படையாகக் கொண்டு மேசியா சடுதியாக ஆலயத்திற்கு வந்து அதைச் சுத்திகரிப்பார் என்று எதிர்பார்த்தனர் (W.Barclay, *John 1-7: The Daily Study Bible*, p. 108).

பத்தாம் அத்தியாயம்



சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?....

(யோவான் 5:6)

இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களிலேயே பலராலும் இன்று அறிவீனமானதொன்றாகக் கருதப்படுவது, அவர் 38 வருடங்களாக வியாதியோடிருந்த ஒரு மனிதனைப் பார்த்து, "சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?" என்று கேட்டதாகும். வியாதியோடிருப்பவன் குணமடைய விரும்பாமல் வேறெதை விரும்புவான் என்று கேட்கும் வேத விமர்சகர்கள், 38 வருடங்களாக வியாதியோடு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவனிடம் இவ்வாறு கேட்பது அர்த்தமற்றது என்று கூறுகின்றனர். உண்மையில் இயேசுகிறிஸ்துவின் கேள்வி நம்மையும் சற்று குழப்பத்தில் ஆழ்த்துவதை மறுக்க முடியாதுள்ளது. பண்டிகைக் காலமொன்றில்[1] எருசலேமுக்குச் சென்ற இயேசுகிறிஸ்து, "பெதஸ்தா"

---

[1] யோவான் குறிப்பிடும் பல சம்பவங்கள் யூதர்களுடைய பண்டிகைக் காலத்தில் நடந்தவைகளாக இருப்பதை நாம் அவதானிக்கலாம் (யோவா. 2:13, 6:4, 7:2, 10:22, 11:55). "இயேசுகிறிஸ்து எருசலேமில் இருப்பதற்கான

என்னும் குளத்திற்குச் சென்றார்.[2] அக்காலத்தில் இக்குளத்தோடு இருந்த ஐந்து மண்டபங்களும் வியாதியஸ்தரின் வீடாயிருந்தது. இக்குளத்தின் நீரானது காலத்திற்குக் காலம் தேவதூதரால் கலக்கப்படும் என்றும், அச்சமயம் குளத்தில் இறங்குபவன் எப்படிப்பட்ட வியாதியஸ்தனாக இருந்தாலும் அவன் உடனடி யாகக் குணமடைவான் என்றும் ஒரு நம்பிக்கை யூதர்கள் மத்தியில் இருந்தது.[3] இதனால் பலதரப்பட்ட வியாதியஸ்தரும்

காரணத்தை அறியத்தருவதற்காகவே யோவான் இதைக் குறிப்பிட்டிருக்க லாம்" (E.A.Blum, *John: The Bible Knowledge Commentary New Testament*, p. 288). எனினும், இவ்விடத்தில் மட்டுமே எப்பண்டிகை என்று குறிப்பிடாமல் பண்டிகை என்று யோவான் எழுதியுள்ளார் (யோவா. 5:1). இதனால், இது எப்பண்டிகை என்பது பற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன (J.Bowman, "The Identity and Date of the Unnamed Feast of John 5:1" in *Near Eastern Studies*. pp. 43-56).

[2] "பெதஸ்தா" (Bethesda) என்னும் எபிரேயப் பெயரின் (யோவா.5:2) அர்த்தம் "பொழிந்தருளும் வீடு" என்பதாகும். இப்பெயர் கிரேக்கத்தில் "இரக்கத்தின் வீடு" என்னும் அர்த்தமுடையது. சில வேதப் பிரதிகளில் இப்பெயர் "பெத்ஸாத்தா" (Bethzatha) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயரின் அர்த்தம் "ஒலிவ வீடு" என்பதாகும். இயேசுகிறிஸ்து பேசிய அரமிக் மொழியில் இப்பெயர் "பெதஸ்தாத்தா" (Bethesdatha) என்று உச்சரிக்கப்படுவதனால், வேதத்தைப் பிரதிபண்ணியவர்களில் ஒருவர் இந்த உச்சரிப்பை அடிப்படையாகக் கொண்டு "பெத்ஸாத்தா" என்று குறிப்பிட்டதால், சில வேதப் பிரதிகளில் குளத்தின் பெயர் இவ்வாறு உள்ளது (J.R.Michaels, *John: New International Biblical Commentary*, p. 88). கி.பி.333ல், எருசலேமுக்கு விஜயம் செய்த ஒரு பக்தர், ஐந்து மண்டபங்கள் உள்ள இக்குளத்தைக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இது பழைய எருசலேம் நகரத்தின் வட கிழக்குப் பகுதியில் ஆட்டு வாசலினருகே (யோவா.5:2, நெகே.3:1) இருந்தது. இவ்விடத்தில் கி.பி. 1856ல் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சிகளும், குளத்திற்கு ஐந்து மண்டபங்கள் அக்காலத்தில் இருந்துள்ளதை உறுதிப்படுத்துகின் றன. மேலும் அக்காலத்தில் இரண்டு குளங்கள் இவ்விடத்தில் இருந்துள் ளன. இதனால்தான் அரமிக் மொழியில் இக்குளம் "பெதஸ்தாத்தா" என்னும் பன்மைப் பெயரால் அழைக்கப்பட்டுள்ளது (J.Finegan, *Archaeology of the New Testament*, pp. 142-147; E.J.Vardaman, "The Pool of Bethesda" in *The Bible Translator*. pp. 27-29).

[3] வேதாகமத்தின் ஆரம்பகால பிரதிகளில் 3ம் வசனத்தின் இறுதிப்பகுதி யும் 4ம் வசனமும் இல்லை. அதாவது குளம் கலக்கப்படுவது பற்றிய விடயமும், தண்ணீர் கலக்கப்படும் போது முதலில் குளத்தில் இறங்கும்

அக்குளத்து மண்டபங்களில் குடியிருந்தனர். இயேசுகிறிஸ்து இக்குளத்தினருகில் இருந்த ஒரு வியாதியஸ்தனிடமே “சொஸ்த

வியாதியஸ்தன் குணமடைவான் என்னும் விபரமும் இல்லை. ஜேம்ஸ் அரசனின் ஆங்கில மொழிபெயர்ப்பில் இவ்வசனங்கள் இருப்பதனால் நம் தமிழ் வேதாகமத்திலும் இவ்வசனங்கள் உள்ளன. உண்மையில், “கி.பி.400 வரை இப்பகுதி புதிய ஏற்பாட்டில் இருக்கவில்லை என்பதை இன்றிருக்கும் ஆரம்பகால வேதப் பிரதிகள் அறியத்தருகின்றன” (M.C. Tenney, *John: The Expositor's Bible Commentary Volume 9*, p. 62; E.A.Blum, *John: The Bible Knowledge Commentary New Testament*, p. 288). மேலும், “இவ்வசனங்களின் மொழிநடை யோவானுடையது அல்ல என்பதை சுவிசேஷத்தின் ஏனைய பகுதிகள் சுட்டிக்காட்டுகின்றன” (B.M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament*, p. 209). இதனால், தூதர்கள் மூலமாகத் தேவனே காலத்திற்குக் காலம் குளத்தின் நீரைக் கலக்கினார் என்னும் சிலரது விளக்கம் (J.Calvin, *John 1-10: New Testament Commentaries*, p. 118) ஏற்றுக்கொள்ளக்கூடிய தொன்றல்ல. “வேதாகமம் குணமாக்கும் குளத்தைப் பற்றி எதுவும் போதிக்கவில்லை. உண்மையிலேயே இது தேவனுடைய செயலானால், இது, அவர் வியாதியஸ்தருக்கு வைத்திருந்த குரூரமான ஒரு போட்டியா கவே இருந்திருக்கும்” (E.A.Blum, *John: The Bible Knowledge Commentary New Testament*, p. 289). உண்மையில், பிற்காலத்தில் இக்குளக்கரை யில் வியாதியஸ்தர்கள் இருப்பதற்கான காரணத்தை விளக்குவதற்கா கவே, யூதர்கள் மத்தியில் அக்காலத்தில் இருந்த நம்பிக்கையின்படி இவ்விடயம் வேதாகமத்தில் சேர்க்கப்பட்டுள்ளது (Z.Hodges, “Problem Passages in the Gospel of John Part 5: The Angel at Bethesda-John 5:4” in *Bibliotheca Sacra*. pp. 25-39). உண்மையில், குளத்தின் அடியில் இயற்கையாக ஏற்படும் செயலையே அக்கால மக்கள் தேவதூதனால் செய்யப்படுவதாகக் கருதியுள்ளார்கள் (G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 232). இக்குளத்து நீரில் இரும்புச்சத்து கொண்ட கனியுப்புகள் இருந்ததாகவும், தண்ணீர் சிவப்பு நிறமாக இருந்ததாகவும், இதனால், இக்குளத்தின் நீர் மருந்தாகவும் உபயோகிக் கப்பட்டது என்றும் அக்கால மக்கள் கூறியுள்ளனர் (D.A.Carson, *John: The Pillar New Testament Commentaries*, p. 242). கிணற்றுக்குத் தண் ணீர் வரும் ஊற்றுக்களில் அடிக்கடி ஏற்படும் பிரவாகம் கிணற்றின் தண்ணீரைக் கலக்கி, அதன் கனியுப்புகளைத் தண்ணீரோடு சேர்த்தமை யால் கலங்கிய தண்ணீர் வியாதிகளைக் குணப்படுத்தக் கூடிய சக்தியு டன் இருந்துள்ளதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் (W. Barclay, *John 1-7: The Daily Study Bible*, p. 178). ஆனால், அக்காலத் தில் தண்ணீர் கலக்கப்படுவது தேவதூதரின் செயலாகக் கருதப்பட்டு, பிற்காலத்தில் இத்தகைய நம்பிக்கையுடைய ஒருவரால் வேதத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. கி.பி.135ம் ஆண்டிற்குப் பின்னர் இக்குளம் ரோம தெய்வத்தின் புனித ஸ்தலமாக்கப்பட்டதோடு, இவ்விடத்தில் வியாதிக

மாக வேண்டுமென்று விரும்புகிறாயா" என்று கேட்டார் (யோவா. 6:1-6).[4]

38 வருடங்களாக வியாதிப்பட்டவனாய் இருந்தவனைப் பார்த்து இயேசுகிறிஸ்து கேட்ட கேள்வி, நமக்கு அர்த்தமற்றதாகத் தென்பட்டாலும், இது அறிவீனமான ஒரு கேள்வியல்ல. ஏனென் றால், "அக்காலப் பிச்சைக்காரர்கள், குணமடைந்து வேலை செய்து வாழ்வதைப் பொதுவாக விரும்புவதில்லை. பிச்சையெடுப்

ளைக் குணப்படுத்தும் சடங்காசார வழிபாடுகளும் நடைபெற்றதாகப் புதை பொருள் ஆராய்ச்சிகள் அறியத்தருகின்றன (R.M.Mackowski, *Jerusalem: City of Jesus*, pp. 79-83).

[4] சில வேத ஆராய்ச்சியாளர்கள் இச்சம்பவத்தை மறைபொருள் அர்த்தம் கொண்ட ஒரு உவமைக் கதையாக விளக்கியுள்ளனர். இவர்களுடைய கருத்தின்படி, வியாதியஸ்தன் இஸ்ரவேல் மக்களைக் குறிக்கின்றான். பெதஸ்தா குளத்தில் இருந்த 5 மண்டபங்களும் மோசேயின் நியாயப்பிர மாணமாகக் கருதப்பட்ட வேதாகமத்தின் முதல் 5 புத்தகங்களையும் குறிக்கின்றன. மோசேயின் நியாயப்பிரமாணத்தில் மக்களுக்கு இரட்சிப்பு கிடைப்பதில்லை. அது மனிதன் பாவி என்பதை அவனுக்குச் சுட்டிக் காட்டினாலும், பாவத்திலிருந்து மனிதனை விடுவிக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் பெதஸ்தா குளத்தினருகில் இருந்த மண்டபங்கள் (அதாவது நியாயப்பிரமாணம்) வியாதியஸ்தரின் இருப்பிடமாக இருந்ததே தவிர, அவர்களைக் குணமாக்கவில்லை. அவன் வியாதியோடிருந்த 38 வருடங்களும் இஸ்ரவேல் மக்கள் கீழ்ப்படியாமை காரணமாக வனாந்த ரத்தில் அலைந்து திரிந்த காலப் பகுதியாகும். தண்ணீர் கலக்கப்படுதல் ஞானஸ்நானம் என்று இச்சம்பவத்திற்கு அர்த்தம் கற்பிக்கப்பட்டுள்ளது (Cited in W.Barclay, *John Volume One: The Daily Study Bible*, p. 180). சிலர் ஐந்து மண்டபங்கள் அல்ல, குளமே நியாயப்பிரமாணத்தைக் குறிப்பதாகக் கருதுகின்றனர் (C.H.Dood, *The Interpretation of the Fourth Gospel*, p. 319). ஆனால், யோவான் இத்தகைய அர்த்தங்களுடன் இச் சம்பவத்தை எழுதவில்லை. 38 வருட வியாதியஸ்தன் இஸ்ரவேல் என்றால், இயேசுகிறிஸ்து இஸ்ரவேலுக்கு மட்டுமே இரட்சிப்பை அருள்பவ ராக இருக்கின்றார் என்று கூறவேண்டும். ஏனென்றால், குளத்து மண்டபங்க ளில் பல வியாதியஸ்தர்கள் இருந்த போதிலும், அவர் 38 வருடங்களாக வியாதியோடிருந்தவனை மட்டுமே குணப்படுத்தினார். மேலும், குளத்தை நியாயப்பிரமாணம் என்று கூறி விட்டு, குளம் கலக்கப்படுவதை ஞானஸ் நானம் என்று கூறுவது அர்த்தமற்றதும் முன்னுக்குப் பின் முரணானதுமான விளக்கமாகவே உள்ளது. இயேசுகிறிஸ்துவினால் குணமாக்கப்படவ னுக்கு குளத்திற்குள் இறங்கவேண்டிய அவசியமே இருக்கவில்லை என்பதையும் நாம் அவதானிக்க வேண்டும்.

பதில் அவர்களுக்குத் தேவையான அளவு பணம் கிடைத்தமை யால், அதைவிட்டு தொழில் செய்து புதிய வாழ்க்கையைத் தொடங்குவதில் அவர்கள் நாட்டமற்றவர்களாகவே இருந்தனர்."[5] இயேசுகிறிஸ்து சந்தித்த மனிதன் 38 வருடங்களாக பிச்சையெடு த்தே வாழ்ந்துள்ளமையால், இனிமேல் வேலை செய்ய முடியாத வனாக, அல்லது வேலை செய்வதை விரும்பாதவனாக, இல்லை யென்றால் எந்த ஒரு வேலையையுமே செய்யத் தெரியாதவனாக இருந்திருக்கலாம். மேலும் "அவன் 38 வருடங்களாக வியாதியஸ் தனாகவே இருந்துள்ளமையால் இனிமேல் தனக்கு சுகம் கிடைக் கும் என்னும் நம்பிக்கையை இழந்து விட்டவனாகவும் இருந்திருக் கலாம்."[6] இதனாலேயே இயேசுகிறிஸ்து அவனுடைய விருப்பத் தைக் கேட்டுள்ளார்.

[5] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 269.
[6] W.Barclay, *John Volume 1: The Daily Study Bible*, p. 179.

பதினொன்றாம் அத்தியாயம்

காண்கிறதெதுவோ அதையேயன்றி வேறொன்றையும் தாமாய் செய்யமாட்டார்....

(யோவான் 5:19)

இயேசுகிறிஸ்துவின் சில கூற்றுக்கள் அவரது தேவத் தன்மையை முரண்படுத்தும் விதத்தில் இருப்பதை நாம் அவதானிக்கலாம். வேதப்புரட்டர்கள் இத்தகைய கூற்றுக்களை ஆதாரமாகக் கொண்டு, இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்தை மறுதலித்து வருகின்றனர். யோவான் எழுதிய சுவிசேஷத்தில் காணப்படும் இத்தகைய கூற்றுக்களில் ஒன்று 5ம் அதிகாரத்தில் உள்ளது.[1] 'இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனுக்குச் சமமாக்குகிறார்' என்னும் யூதர்களின் குற்றச்சாட்டிற்கு அவர் பதிலளிக்கும் போது,[2] "பிதா

[1] ஏனைய சுவிசேஷங்களில் காணப்படும் இயேசுகிறிஸ்துவின் இத்தகைய கூற்றுக்களின் விளக்கத்திற்கு எனது "யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்" மற்றும் "இயேசுகிறிஸ்து இறைவனா?" என்னும் புத்தகங்களைப் பார்க்கவும்.

[2] 38 வருடங்களாக வியாதியோடிருந்தவனைக் குணப்படுத்திய இயேசுகிறிஸ்து, அதை யூதர்கள் வேலை எதுவும் செய்யாத ஓய்வுநாளில்

வானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ அதையேயன்றி, வேறெதையும் தாமாய்ச் செய்யமாட்டார்" என்று 5ம் அதிகாரம் 19ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளார். இயேசுகிறிஸ்துவின் தேவத்து வத்தை மறுதலிக்கும் வேதப்புரட்டர்கள், அவரது கூற்றில், "தாமாய்ச் செய்ய மாட்டார்" என்னும் சொற்பிரயோகத்திற்கு மட்டும் அழுத்தம் கொடுத்து, இயேசுகிறிஸ்துவினால் சுயமாக ஒன்றும் செய்ய முடியாது என்று தர்க்கித்து வருகின்றனர். எனினும், இவர்கள் வாதிடுகின்ற விதமாக, 'இயேசுகிறிஸ்துவி னால் சுயமாக ஒன்றும் செய்ய முடியாது' என்பது இவ்வசனத்தின் அர்த்தம் அல்ல. அதேபோல, "இயேசுகிறிஸ்து பிதாவில் சார்ந்தி ருக்கும், அல்லது தங்கியிருக்கும் நிலையையே இவ்வசனம் அறியத்தருகின்றது"[3] என்னும் சில வேத ஆராய்ச்சியாளர்களின் விளக்கமும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

இயேசுகிறிஸ்து யோவான் 5:19ல் சொல்லும் விடயத்தை விளங் கிக்கொள்வதற்கு, இவ்வசனத்தை முழுமையாகப் பார்க்க வேண் டியது அவசியம்.[4] வேதப்புரட்டர்கள், இவ்வசனத்தின் இறுதிப்

செய்ததமையால், அவர்கள் அவரைக் கொலைசெய்ய முற்பட்டார்கள். இதை அறிந்த இயேசுகிறிஸ்து, "என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்து வருகிறார். நானும் கிரியை செய்து வருகிறேன்" என்று கூறினார். இதன் மூலம், ஓய்வுநாளில் செயல்படுவதற்கு, தேவனுக்குத் தடைகள் எதுவும் இல்லாதிருப்பது போலவே, தமக்கும் எவ்விதத் தடையும் இல் லை என்பதை இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டியுள்ளார். இதுவும், அவர் தேவனைத் தம்முடைய சொந்தப் பிதாவாகக் குறிப்பிட்டதும், யூதர்க ளுக்கு அவர் தம்மைத் தேவனுக்குச் சமமானவராக்குவதாகத் தென் பட்டது. இதனால், நியாயப்பிரமாணத்தில் தேவனை நிந்திப்பதற்குக் கொடுக்கப்படும் தண்டனையான மரணதண்டனையை இயேசுகிறிஸ்து வுக்குக் கொடுக்க யூதர்கள் வகைதேடினார்கள் (யோவா.16-18). இதை அறிந்த இயேசுகிறிஸ்து, தமது தேவத்துவத்திற்கான ஆதாரங்களைச் சுட்டிக்காட்டுவதற்காகச் சொல்லும் விடயங்களின் ஆரம்ப வசனமே இதுவாகும்.

[3] G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 235; M.C.Tenney, *John: The Expositor's Bible Commentary Volume 9*, p. 64.

[4] வேதப்புரட்டு உபதேசங்கள் கிறிஸ்தவ சபைக்குள் புகுவதற்கு முக்கிய காரணம், வேத வசனங்களின் அர்த்தத்தை அறிந்து கொள்வதற்கு அவ்வசனங்களை முழுமையாக நோக்காமல், அவற்றின் ஒரு பகுதிக்கு மட்டும் அழுத்தம் கொடுத்து வியாக்கியானம் செய்வதேயாகும்.

பகுதியை கருத்திற்கொள்வதில்லை. இவ்வசனத்தின் இறுதிப் பகுதி, "அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமார னும் அந்தப்படியே செய்கிறார்" என்று உள்ளது. அதாவது, பிதா செய்பவற்றைக் குமாரனும் அதேவிதமாகச் செய்கின்றார் என்பதே இதன் அர்த்தமாகும். உண்மையில், பிதா செய்பவைக ளைத் தாமும் செய்வதாக இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் அறியத்தருகின்றார். இது, இருவரும் ஒரே தன்மையும் வல்லமை யும் உடையவர்கள் என்பதை அறியத்தருகின்றது. இதனால்தான் இருவராலும் ஒரே காரியத்தைச் செய்யக்கூடியதாக உள்ளது.[5]

இயேசுகிறிஸ்துவினுடைய கூற்றில், "பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ" என்னும் வாக்கியம் பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையிலுள்ள அந்நியோன்ய உறவைச் சுட்டிக் காட்டுகிறது. "இது இருவருக்கும் இடையில் எப்பொழுதும் இருக்கும் உறவாகும்."[6] உண்மையில் பிதா செய்கிறவைகளை குமாரனைத் தவிர வேறு எவராலும் பார்க்க முடியாது.[7] இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே பிதாவைப் பார்க்க முடியும் என்பதனால் இவர்கள் இருவருக்கும் இடையிலான உறவு மிகவும் நெருக்கமா னதும் அந்நியோன்ய சம்பந்தமானதுமாக உள்ளது. எனினும் பிதா செய்கிறவைகளைப் பார்த்து செய்யும் முறையைப் பற்றி இயேசுகிறிஸ்து இங்கு குறிப்பிடவில்லை[8] என்பதை நாம் கருத் திற்கொள்ள வேண்டியது அவசியம்.[9] இது இருவருக்கும் இடை

---

[5] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 313.

[6] *Ibid*. p. 312.

[7] பிதாவை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை என்பதை வேதாகமம் அறியத்தருகின்றது (யோவா.1:18). அவர் "மனுஷரில் ஒருவரும் கண்டிராத வரும் காணக்கூடாதவருமாய் இருக்கின்றார்" (1தீமோ.6:16).

[8] Schonfiled என்பாரின் ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பும் இயேசுகிறி ஸ்து இவ்வசனத்தில் சொல்வதைச் சரியானவிதத்தில் வெளிப்படுத்தவில் லை. "What he does the son copies" என்னும் மொழிபெயர்ப்பு மூலமொழி யின் அர்த்தத்தைச் சரியானவிதத்தில் ஆங்கிலத்தில் அறியத்தரவில்லை.

[9] சில வேத ஆராய்ச்சியாளர்கள், இவ்வசனத்தில் ஒரு உவமை மறைந் திருக்கிறதாகக் கூறுகின்றனர். அதாவது, அக்காலத்தில் தகப்பனுடைய தொழிலை மகன் கற்றுக்கொள்ளும் முறை பற்றி இவ்வசனத்தில்

யேயுள்ள அந்நியோன்ய சம்பந்தமான உறவையே சுட்டிக் காட்டுகிறது. உண்மையில், பிதாவினால் செய்பவற்றைத் தம்மாலும் செய்ய முடியும் என்பதையே இயேசுகிறிஸ்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.[10]

பிதா செய்கிறவைகளைத் தாமும் செய்வதாக இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் குறிப்பிட்டாலும், "குமாரன் தாமாய் எதையும் செய்யமாட்டார்" என்னும் வாக்கியத்தின் மூலம், தாம் 'தனித்து தன்னிச்சையாகச் செயற்படுவதில்லை' என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அதாவது, "அவர் பிதாவின் சித்தத்தை மீறி, அதற்கெதிராகத் தனித்து செயற்படமாட்டார்" என்பதே இயேசு கிறிஸ்துவினுடைய கூற்றின் அர்த்தமாகும்."[11] இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் பிதாவின் சித்தத்தின்படியே செயற்பட்டுவந்தார் (யோவா.6:38, 5:30). இதனாலேயே குமாரன் தாமாய் எதையும் செய்யமாட்டார் என்று அவர் கூறினார். "இயேசு கிறிஸ்து செய்பவைகள், அவரும் பிதாவும் ஒன்றாகச் சேர்ந்து செய்பவைகள் ஆகும்."[12] எனவே இங்கு ஒருவரைவிட மற்றவர் தாழ்ந்தவர் என்ற எண்ணத்திற்கு எவ்வித இடமுமில்லை. எனவே, இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தத்திற்கு முரணாக எதுவும் செய் யாமல் இருப்பதனால், அவர் பிதாவை விடத் தாழ்வானவர் என்றோ, இல்லையென்றால், வல்லமை குறைந்தவர் என்றோ எண்ணுவது தவறாகும்.

மறைமுகமாகச் சொல்லப்பட்டுள்ளதாக இவர்கள் கருதுகின்றனர் (C.H.Dood, "A Hidden Parable in the Fourth Gospel" in *More New Testament Studies*. pp. 30-40). தகப்பன் செய்கிறவற்றைப் பார்த்தும் தகப்பன் சொல்கிறவற்றைக் கேட்டுமே அக்காலத்தில் பிள்ளைகள் தகப்பனின் தொழிலைக் கற்றுக் கொண்டனர். ஆனால், இயேசுகிறிஸ்து இப்படிப்பட்ட நிலையில் இருந்தார் என்று கூறுவது அவரது தேவத்துவத்தை மட்டுப்படுத்தும் விளக்கமாகவே உள்ளது.

[10] W.Barclay, *John 1-7: The Daily Study Bible*, p. 188.

[11] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 251.

[12] E.A.Blum, *John: The Bible Knowledge Commentary*, p. 290.

பன்னிரண்டாம் அத்தியாயம்



மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்....

(யோவான் 5:25)

இயேசுகிறிஸ்துவின் சில கூற்றுக்களில் காணப்படும் ஒரு சிறப்பம் சம், அவை இரு அம்சங்களைக் கொண்டிருப்பதாகும். அதாவது அவர் ஒரு விடயத்தை அல்லது வார்த்தையை ஒரே நேரத்தில் இரு அர்த்தங்களுடன் உபயோகித்திருப்பதாகும். உண்மையில் இத்தகைய கூற்றுக்களை வார்த்தைகளின் இருவித அர்த்தங்க ளையும் அறியாத நிலையில் வியாக்கியானம் செய்தால் இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தைச் சரியான விதத்தில் புரிந்து கொள்ள முடியாமல் போய்விடும். எனவே, இயேசுகிறிஸ்துவின் இத்தகைய கூற்றுக்களை விளங்கிக் கொள்வதற்கு முதலில் அவர் ஒன்றுக்கும் மேற்பட்ட அர்த்தங்களுடன் வார்த்தைகளை உபயோகித்துள்ளாரா என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

யோவான் 5:25ல், “மரித்தோர்” என்னும் வார்த்தையை இயேசு கிறிஸ்து ஒரே நேரத்தில் இருவித அர்த்தங்களுடன் உபயோகித்

துள்ளார். இவ்வசனத்தில், மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார்.[1] உண்மையில் இக்கூற்று ஒன்றுக்கும் மேற்பட்ட அர்த்தங்களைக் கொண்டது என்பதை மறுப்பதற்கில்லை. வேதாகமத்தைப் பொறுத்தவரை மரணம் இரண்டு அம்சங்களைக் கொண்டிருப்பதனால், மரணத்தைப் பற்றிய இயேசுகிறிஸ்துவின் இக்கூற்றும் இரண்டு அர்த்தங்களைக் கொண்டுள்ளது.

வேதாகம மொழிவழக்கில் மரணம் என்பது பிரிவையே குறிக்கின்றது. விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும் நாளில் மரணம் சம்பவிக்கும் என்று தேவன் உலகின் முதல் மனிதரான ஆதாமுக்கும்

---

[1] இயேசுகிறிஸ்து தம்மை எப்போதும் மனுஷகுமாரன் என்றே குறிப்பிட்டார். (மனுஷகுமாரன் என்னும் பெயரைப் பற்றிய விளக்கத்திற்கு முதலாம் அத்தியாயத்தில் 11ம் அடிக்குறிப்பைப் பார்க்கவும்). இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் தம்மைத் தேவகுமாரன் என்று குறிப்பிட்டுள்ளார். யோவானுடைய சுவிசேஷத்தில் 3 தடவைகள் மட்டுமே இயேசுகிறிஸ்து இவ்வாறு தம்மை அறிமுகப்படுத்தியுள்ளார் (யோவா.10:36, 11:4) தேவகுமாரன் என்னும் சொற்பிரயோகம், அவர் தேவனுக்குப் பிறந்தவர் என்னும் அர்த்தத்தில் வேதாகமத்தில் உபயோகிக்கப்படவில்லை. வேதாகம காலத்தில் ஒருவருக்குப் பிறக்காதவர்களையும் அவருடைய குமாரராகக் குறிப்பிடும் வழக்கம் இருந்தது (1சாமு.3:16, 26:17, நீதி.7:1, மத்.1:1, 1ராஜா.20:35, நெகே.12:28). அத்தோடு, இப்பதத்தை அக்கால மக்கள் உருவக விவரணமாகவும் உபயோகித்தனர் (சங்.89:22, மாற்.3:17, அப். 4:36). மேலும், கிரேக்க மொழியில் குமாரன் என்பதைக் குறிக்க பொதுவாக இரண்டு வார்த்தைகள் உள்ளன. இவற்றில் ஒன்று சரீரப்பிரகாரமான மகனைக் குறிக்கும். மற்றது சரீரப்பிரகாரமான பிள்ளைகளை மட்டுமல்ல மற்றவர்களையும் குமாரனாக அழைக்க உபயோகிக்கப்படும் பதமாகும். புதிய ஏற்பாட்டில், இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று குறிப்பிடப்படும் இடங்களில் சரீரப்பிரகாரமான மகனை மட்டும் குறிக்கும் பதம் அல்ல, உருவகமாகவும் உபயோகிக்கப்படும் பதமே உள்ளது. எனவே, இயேசுகிறிஸ்து தேவனுக்குப் பிறந்தவர் என்ற அர்த்தத்தில் அல்ல, மாறாக, அவர் தேவத் தன்மையுடையவர் என்பதை அறியத்தருவதற்காகவே தேவகுமாரன் என்று அழைக்கப்பட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது. இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது *யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்* என்னும் நூலில் 95 முதல் 100 வரையிலான பக்கங்களைப் பார்க்கவும்.

ஏவாளுக்கும் அறிவுறுத்தல் கொடுத்திருந்தார் (ஆதி.2:17). “அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்” என்னும் தேவ அறிவுறுத்தல், “அவர்கள் கனியைப் புசித்த உடன் அவர்களுக்கு மரணம் நிச்சயம் சம்பவிக்கும் என்னும் அர்த்தத்திலேயே மூலமொழியில் உள்ளது.”[2] ஆனால், ஆதாமும் ஏவாளும் தேவ கட்டளையை மீறி, விலக்கப்பட்ட கனியைப் புசித்த பின்பும் நீண்ட காலம் வாழ்ந்துள்ளதை ஆதியாகமப் புத்தகம் அறியத்தருகின்றது (ஆதி.5:1-5). இதனால், தேவ அறிவுறுத்தல் அர்த்தமற்றதும் பொய்யானதுமாக இருப்பதாக நாம் கருதலாகாது. ஏனென்றால், ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட கனியைப் புசித்தபோது, அவர்கள் ஆவிக்குரியபிரகாரமாக மரித்தனர். உண்மையில், தேவனைவிட்டுப் பிரிவதே இந்த ஆவிக்குரிய மரணமாகும். இதனால்தான், அதுவரை காலமும் தேவனோடு அந்நியோன்ய சம்பந்தமான உறவுகொண்டிருந்த ஆதாமும் ஏவாளும், தேவ கட்டளையை மீறி பாவம் செய்த பின்னர், அவரை நேருக்கு நேர் சந்திக்க முடியாதவர்களாகத் தங்களை அவரது சமுகத்திற்கு மறைத்துக்கொண்டனர் (ஆதி.3:1-11). மேலும், அவர்கள் அதுவரை காலமும் தேவனை சந்தித்து வந்த ஏதேன் தோட்டத்திலிருந்தும் துரத்தப்பட்டனர் (ஆதி.3:23-24). உண்மையில், “தேவனுடன் ஐக்கியமாக இருப்பதற்காகவே, ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் வைக்கப்பட்டனர்.”[3] எனவே, அங்கிருந்து அவர்கள் துரத்தப்பட்டமையால் அவர்களுக்கும் தேவனுக்கும் இடையிலான ஐக்கியம் இல்லாமற்போனது.

உலக மாந்தர் அனைவரும், ஆதாமின் சந்ததியினராக இருக்கின்றமையால்,[4] நாம் அனைவரும் பிறவியியே ஆவிக்குரிய மரணத்

---

[2] G.D.Wenham, *Genesis 1-15: Word Biblical Commentary Vol. 1*, p. 68.
[3] J.H.Sailhamer, *Genesis: Expositor's Bible Commentary Vol. 2*, p. 45.
[4] உலகிலுள்ள மனிதர்கள் அனைவரும் ஆதாமின் சந்ததியினர் என்பதை வேதாகமம் அறியத்தருகின்றது. அப்போஸ்தலர் 17:26ல் “மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப் பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் வசனத்தில் “ஒரே இரத்தத்தி

திற்கு உட்பட்டவர்களாய் இருக்கின்றோம். இதனால்தான் நாம் அக்கிரமத்திலும் பாவத்திலும் மரித்தவர்களாக இருப்பதாக வேதாகமம் கூறுகின்றது (எபே.2:1,5). இத்தகைய ஆவிக்குரிய மரணத்தில் இருப்பவர்களை உயிர்ப்பிப்பவராக இயேசுகிறிஸ்து இருக்கின்றார். (எபே.2:7-8).[5] தேவனைவிட்டுப் பிரிந்து போயிருக்கும் மக்களை இயேசுகிறிஸ்து அவரோடு ஒப்புரவாக்குவதன் மூலம் அவர் இதை செய்கின்றார் (2கொரி.5:18-20).[6] "வேதாகம மொழிவழக்கில் ஒப்புரவாக்குதல் என்பது மறுபடியும் நட்புறவிற்குள் கொண்டுவருதல் அல்லது சண்டைக்குப் பின்னர் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்துதல்"[7] என்னும் அர்த்தமுடையது. எனவே, பாவம் காரணமாகத் தேவனைவிட்டுப் பிரிந்து போயிருக்கும் மனிதனை மறுபடியுமாக அவரோடு ஐக்கியப்படுத்தும் செயலே ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்ப்பித்தலாக உள்ளது. இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவைப் பலியின் மூலம், தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் பிரிவை ஏற்படுத்

னாலே" என்பது மூலமொழியில் "ஒரே மனிதனாலே" என்றே உள்ளது. உலக மக்கள் அனைவரும் ஆதாம் என்னும் ஒரு மனிதனின் மூலம் வந்தவர்கள் என்பதே வேதாகமம் அறியத்தரும் சத்தியமாகும்.

[5] எபேசியர் 2:1,4-8ல் "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்... தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[6] 2கொரிந்தியர் 5:18-20ல், "இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது. அவர், இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி," என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[7] L.Morris, *The Atonement: Its Meaning and Its Significance*, p. 132.

திய பாவத்தை[8] நீக்கி, அவர்களைத் தேவனோடு ஒப்புரவாக்கி யுள்ளார்.[9]

[8] மனிதர்கள் அனைவரும் பிறவியிலேயே பாவிகளாக இருப்பதனால், அவர்கள் தேவனோடு ஐக்கியம் அற்றவர்களாகவே இருக்கின்றனர். உண்மையில், ஆதாமின் பாவம் காரணமாக அவனுடைய சந்ததியா ரான மனுமக்கள் அனைவரும் பாவிகளாகவும், ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்களாகவுமே இருக்கின்றனர். அப்போஸ்தலனாகிய பவுல் இதைப் பற்றி எழுதும் போது "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது" (ரோ.5:12) என்றும், "ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய் மரணம் ஆண்டுகொண்டிருக் கிறது" (ரோ.5:17) என்றும், "ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானது" (ரோ.5:18) என்றும் குறிப் பிட்டுள்ளார். முதல் மனிதனின் பாவத்திற்காக அவனுடைய சந்ததியினர் அனைவரும் பாவிகளாக இருப்பது நியாயமற்றது என்று நாம் தர்க்கிக்க லாம். ஆனால் வேதமோ, மனுமக்கள் அனைவரும் ஆதாமின் வம்சத்தின ராக இருப்பதனால் (அப்.17:26) அவர்கள் பாவியாகிய ஆதாமின் சுபாவத் துடனேயே பிறக்கின்றார்கள் என்னும் உண்மையை அறியத்தருகின்றது. சங்கீதக்காரன் தன்னுடைய பிறப்பைப் பற்றிக் கூறும் போது, "இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று 51ம் சங்கீதத்தில் குறிப்பிட்டுள்ளான் (சங்.51:5). உண்மையில், தான் கருத்தரிக்கப்பட்ட செயல்முறை பாவமானது என்று சங்கீதக்காரன் இவ்வசனத்தில் கூறவில்லை. மாறாக, "நான் பாவியான பெற்றோருக்குப் பிறந்தவன். இதனால் நான் பாவியாக இருக்கின்றேன்" (G.A.F.Knight, *Psalms Volune I: The Daily Study Bible*, p. 243) என்ப தையே அவன் இவ்வாறு அறிக்கையிட்டுள்ளான். உலக மாந்தர் அனை வரும் பாவியாகிய ஆதாமின் வம்சத்தினராக இருப்பதனால், அவர்கள் அனைவரும் பாவிகளாகவே பிறந்துள்ளனர். அவர்கள் "அக்கிரமத்திலும் பாவத்திலும் மரித்தவர்களாய் இருக்கின்றார்கள்" என்பதையும், அவர்க ளைத் தேவன் உயிர்ப்பித்து அவர்களுக்கு புதிய ஆவிக்குரிய வாழ்வைக் கொடுக்கிறவராக இருப்பதையும் வேதாகமம் அறியத்தருகின்றது (எபே. 2:1,5,7-8).

[9] எபேசியர் 2:12-18ல் இச்சத்தியம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "அக்காலத்திலே (அதாவது, தேவனோடு ஒப்புரவாக்கப்படுவதற்கு முன்) கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நி யரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களு மாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினா லே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதானக் காரணராகி, இருதிறத்தாரையும் (யூதரையும் புறஜாதியாரையும்) ஒன்றா க்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்

"மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்" என்று கூறிய இயேசுகிறிஸ்து, "அது இப்பொழுதே வந்திருக்கிறது" என்றும் குறிப்பிட்டுள்ளமையால், அவர் தேவனை விட்டுப் பிரிவடைந்த நிலையில் ஆவிக்குரிய மரணத்தில் இருப்ப வர்களைப் பற்றியே இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது.[10] இதனால்தான் இதற்கும் முன்னுள்ள வசனத் தில், என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசு வாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டி ருக்கிறான்" (யோவா.5:24) என்று இயேசுகிறிஸ்து அறிவித்துள் ளார். உண்மையில், சுவிசேஷத்தின் மூலம் இயேசுகிறிஸ்து மக்களைத் தேவனிடம் வரும்படி அழைக்கின்றார் (எபே.2:17).[11] இதையே மரித்தோர் (ஆவிக்குரிய மரணத்தில் இருப்பவர்கள்)

டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே, இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார். அல்லாமலும், அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக் கும், சமீபமாயிருந்த அவர்களுக்கும் சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார். அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக் கிறோம்."

[10] "இப்பொழுதே வந்திருக்கிறது" என்னும் சொற்பிரயோகம் இதையே அறியத்தருகின்றது (L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 318). இயேசுகிறிஸ்து உலகமுடிவில் மரித்த மக்கள் சரீரப் பிரகாரமாக உயிர்த்தெழுவதைப் பற்றியே இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளதாகச் சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்ற போதி லும், (G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 240), "இப்பொழுதே வந்திருக்கிறது" என்னும் சொற்பிரயோகம் இவ்விளக் கத்தை முரண்படுத்துகின்றது.

[11] இயேசுகிறிஸ்து இவ்வுலகில் இருந்தபோது மட்டுமல்ல, அதன்பின்னர், அவர் தமது ஊழியக்காரர் மூலமாக, சுவிசேஷத்தை ஆவிக்குரிய பிரகாரமாக மரித்த நிலையிலுள்ள மக்களுக்கு அறிவித்து வருகின்றார் (T.K.Abbott, *A Critical and Exegetical Commentary on the Epistles to the Ephesians and Colossians*, p. 66). உண்மையில், "சுவிசேஷம் பிரசங் கிக்கப்படும் போது, இயேசுகிறிஸ்து தமது ஆவியானவர் மூலமாக நம் மோடு பேசுகின்றார்" (J.Calvin, *John 1-10: Calvin's New Testament Commentaries*, p. 131).

தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்பதைப் பற்றிய விவரண மாக யோவான் 5:25ல் இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார்.

தேவகுமாரனுடைய சத்தத்தைக் "கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்" என்று இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளமையால், சுவிசேஷச் செய்தியைக் கேட்பவர்கள் அனைவருமே இரட்சிக்கப் படுவார்கள் என்று கருதுவது தவறாகும். ஏனென்றால், இவ்வச னத்தில் "கேட்கிறவர்கள்" என்னும் பதம் மூலமொழியில், "கவ னித்துக் கேட்கிறவர்கள் அல்லது, கேட்டதை ஏற்றுக்கொள்பவர் கள் என்னும் அர்த்தமுடையது."[12] உண்மையில், இயேசுகிறிஸ் துவின் வார்த்தையைக் கேட்டு விசுவாசிப்பவர்களைப் பற்றியே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.[13] உலக மக்களுக்காக இயேசுகிறி ஸ்து சிலுவையில் செலுத்திய பலியை[14] விசுவாசத்தின் மூலம் தங்களுடைய சொந்தப் பாவத்திற்கான பலியாக்கிக் கொள்பவர் களே ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டு தேவ னோடு ஜீவனுள்ள ஒரு உறவுக்குள் இணைக்கப்படுவார்கள்.[15]

---

[12] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 318.

[13] R.C.H.Lenski, *The Interpretation of St.John's Gospel*, p. 391.

[14] இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலி மனிதனுடைய பாவங்களுக்கான பலி என்பதை எபேசியர் 1:7, கொலோசெயர் 1:14, எபிரேயர் 9:12 என் னும் வசனங்கள் அறியத்தருகின்றன. மேலும், "இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்" (1யோ வா.1:7) என்று கூறும் வேதாகமம் "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத் தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார்" (1யோவா.1:9) என்பதை அறியத்தருகின்றது.

[15] சுவிசேஷச் செய்தியின் மூலம் ஆவிக்குரிய மரணத்தில் இருக்கும் மக்கள் இயேசுகிறிஸ்துவினுடைய சத்தத்தைக் கேட்டாலும், அவர்கள் அனைவருமே, உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று நாம் கருதலாகாது. உண்மையில், தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்டு, விசுவாசத்தோடு ஏற்றுக் கொள்பவர்கள் மட்டுமே அவர் அருளும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். எனவே தேவசெய்தியைக் கேட்பது மட்டும் போதாது. இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால்தான் யோவான் 3:18ல், அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால்

மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்பது, ஆவிக்குரிய மரணத்தில் இருப்பவர்கள் சுவிசேஷத்தைக் கேட்பதைப் பற்றி மட்டும் குறிப்பிடும் வார்த்தைகள் அல்ல. தற்காலத்தில் ஆவிக்குரிய மரணத்திலிருப்பவர்கள் இயேசுகிறிஸ்துவினுடைய சத்தத்தைக் கேட்பது போலவே, இவ்வதிகாரத்தின் 28ம் வசனத்தில் இயேசுகிறிஸ்து அறியத்தருவதுபோல, "பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்.'' இது இயேசுகிறிஸ்து மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வரும்போது நடைபெறும் சம்பவமாகும்.[16] இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது மரித்தோர் உயிர்த்தெழுவார்கள் என்னும் சத்தியத்தை வேதாகமம் அறியத்தருகின்றது. "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கிவருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்'' (1தெச.4:16).[17] "அவர்கள் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்'' என்று 1கொரிந்தியர் 15:52 அறியத்தருகின்றது. உண்மையில், இயேசுகிறிஸ்துவினுடைய சத்தத்தை அவரைப் பற்றிய சுவிசேஷத்தின் மூலம் கேட்டு, அவரை விசுவாசிப்பவர்கள், தற்காலத்தில் ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்படுவது மட்டுமல்ல, அவர்கள் சரீரப்பிரகாரமாக மரித்தாலும், இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது நித்தியகாலமாக அவரோடு வாழ்வதற்குச் சரீரப்பிரகாரமான மரணத்திலிருந்தும் உயிர்த்

அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று'' என்றும் யோவான் 3:36ல், "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ, ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன் மேல் நிலைநிற்கும்'' என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[16] இயேசுகிறிஸ்து மறுபடியுமாக இவ்வுலகத்திற்கு வருவார் என்பது வேதாகமத்தின் முக்கியமான போதனையாக உள்ளது (அப்.1:11).

[17] இயேசுகிறிஸ்துவின் மறுவருகையின் போது நடைபெறும் மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றி தானியேல் 12:1-2லும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. பவுல் 1கொரிந்தியர் 15ம் அதிகாரத்தில் இது பற்றி விபரமாக எழுதியுள்ளார். மரணத்தின் பின்பான வாழ்வு பற்றிய வேதாகமப் போதனைகளை அறிந்து கொள்வதற்கு எனது *மரணத்தின் மறுபக்கம்* என்னும் நூலைப் பார்க்கவும்.

தெழுவார்கள்.[18] இதனால்தான், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்றும் (யோவா.11:25), "ஒருவன் என் வார்த்தைக ளைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை" என்றும் (யோவா.8:51) இயேசுகிறிஸ்து தெரிவித் துள்ளார்.[19]

---

[18] உலக முடிவில் இயேசுகிறிஸ்துவை அறியாதவர்களும் விசுவாசியா தவர்களும் உயிர்ப்பிக்கப்படுவது உண்மை என்றாலும், இவர்கள் உயிர்ப் பிக்கப்பட்டு நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்றே வெளிப்படுத்தல் 20:11-15 அறியத்தருகின்றது.

[19] உண்மையில், "உலக முடிவில் சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுபவர்க ளுக்கு கிடைக்கும் ஜீவன், தற்காலத்தில் ஆவிக்குரிய மரணத்திலிருப்பவர் களின் வாழ்வில் வெளிப்பட்டுள்ளது" (D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 256).

பதின்மூன்றாம் அத்தியாயம்

நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி... தீமை செய்தவர்கள் ஆக்கினை அடையும்படி...

(யோவான் 5:29)

இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில் கிறிஸ்தவ மார்க்கத்தின் அடிப்படை உபதேசத்தையே முரண்படுத்துகிற விதமாகத் தென் படுகிற ஒரு வாக்கியம், யோவான் 5:29ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனத்தில் மரித்தோர் உயிர்த்தெழும் போது, அவர்களில் "நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர் களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" என்று இயேசு கிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். தேவனுடைய கிருபையை அடிப்படை யாகக் கொண்டே மக்கள் இரட்சிக்கப்படுவதாக வேதாகமம் போதிப்பதனால்,[1] இயேசுகிறிஸ்துவின் இக்கூற்று, வேதாகமத்தின்

---

[1] எபேசியர் 2:8-9ல் இவ்விடயம் நேரடியாகவும் தெளிவாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது: "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர் கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல."

அடிப்படை சத்தியத்தையே முரண்படுத்தும் விதத்தில், கிரியை யினால் இரட்சிப்பைப் பற்றி கூறுவதாக வேதவிமர்சகர்கள் கருதுகின்றனர்.[2] மரணத்தின் பின்னர் ஜீவனை அல்லது ஆக்கி னையை அடைவது அவரவர் செய்த நன்மையையும் தீமையை யும் அடிப்படையாகக் கொண்டதாகவே இவ்வசனத்தில் இயேசு கிறிஸ்து குறிப்பிட்டுள்ளதாகத் தென்படுவதனால், இது உண்மை யிலேயே புரிந்து கொள்வதற்கு கடினமானதொரு கூற்றாகவே உள்ளது.[3]

மனிதன் செய்யும் நன்மை அல்லது தீமையே அவனது இறுதி நிலையை நிர்ணயிக்கும் என்றே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் கூறுகிறார் என்றால், இது யோவான் சுவிசேஷத்திலேயே பல தடவைகள் தெளிவாகவும் நேரடியாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வேதாகமத்தின் அடிப்படை சத்தியத்தை முரண்படுத்தும் கூற்றாக வே இருக்கும். ஏனென்றால், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவ னுக்கு நித்திய ஜீவனும், விசுவாசியாதவனுக்கு நித்திய ஆக்கி

---

[2] வேதாகமம் ஒன்றுக்கொன்று முரணான உபதேசங்களைக் கொண்டிருக் கிறது என்று கூறுபவர்கள் சுட்டிக்காட்டும் வசனங்களில் இதுவும் ஒன்றா கும். ஆனால், வேத வசனங்களை முழு வேதாகமத்தையும் அடிப்படையா கக் கொண்டு வியாக்கியானம் செய்தால் எந்த ஒரு வசனத்திலும் எவ் வித முரண்பாடும் இல்லை என்பதை அறிந்திடலாம்.

[3] இரட்சிப்பின் பின்னர் கிறிஸ்தவர்கள் செய்யும் செயல்களுக்குத் தேவன் பரலோகத்தில் வெகுமதியளிப்பதைப் பற்றி இவ்வசனம் கூறவில்லை என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம். கிறிஸ்தவர்கள் தங்கள் கிரியைகளுக்குத் தேவனிடம் கணக்கு கொடுக்க வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது (ரோ.14:10, 14:12, 2கொரி.5:10). எனினும், இது நித்திய ஜீவனைப் பெறுவதையோ, ஆக்கினையை அடைவதையோ நோக்காகக் கொண்ட நியாயத்தீர்ப்பு அல்ல. இயேசுகிறிஸ்துவை விசுவா சித்து ஏற்றுக்கொண்டவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை என்பதை வேதாகமம் தெளிவாக அறியத்தருகிறது (ரோ.8:1). கிறிஸ்தவர்கள் தேவனுக்கு கொடுக்கவேண்டிய கணக்கு அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையையும் சேவையையும் பற்றியது. அச்சமயம், சிலர் பரிசுகள் எதுவும் பெறாதவர்களாக, தங்களுடைய கிறிஸ்தவ வாழ்வுக்குப் பலன் எதையும் பெறாமல் நஷ்டப்படுகையில் மற்றவர்கள் தங்கள் வாழ்வுக்கும் சேவைக்குமான வெகுமதியைப் பெறுவார்கள். தேவனுடைய இந்த நியாயத்தீர்ப்புக்கும் மானிட இரட்சிப்புக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை 1கொரிந்தியர் 3:12-15 அறியத்தருகின்றது.

னையும் கிடைக்கும் என்பதே யோவானுடைய சுவிசேஷத்தின் அடிப்படைச் செய்தியாக உள்ளது.[4] இரட்சிப்பு தேவனுடைய கிருபையை அடிப்படையாகக் கொண்டது. அது மானிட கிரியைகளினால் பெற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்னும் வேதாகம சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் வேதஆராய்ச்சியாளர்களில் சிலர், இயேசுகிறிஸ்துவின் கூற்றிலுள்ள சிக்கலைத் தீர்ப்பதற்காக, "இரட்சிப்பு தேவனுடைய கிருபையினால் கிடைப்பது. ஆனால், ஆக்கினைத்தீர்ப்போ மானிட கிரியையை அடிப்படையாகக் கொண்டது"[5] என்று கூறுகின்றனர். ஆனால், இவ்வசனத்தில், ஆக்கினைத் தீர்ப்பு மட்டுமல்ல நித்திய ஜீவனும் மானிட கிரியையின் பலனாகவே குறிப்பிடப்பட்டிருப்பதனால் அதாவது "நன்மை செய்தவர்கள்" என்னும் சொற்பிரயோகத்தை இயேசுகிறிஸ்து உபயோகித்திருப்பதனால் இவ்விளக்கம் திருப்திகரமானதாக இல்லை.[6]

இவ்வசனத்தின் சிக்கலை, அதாவது, ஏனைய வேத வசனங்களின் போதனையை முரண்படுத்தும் விடயத்தை விளக்குவதற்காகச் சில வேத ஆராய்ச்சியாளர்கள், இயேசுகிறிஸ்து இவ்வசனத்

---

[4] யோவான் தன்னுடைய சுவிசேஷப் புத்தகம் எழுதப்படுவதன் நோக்கத்தைப் பற்றி குறிப்பிடும் போது, "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன" என்று சுட்டிக்காட்டியுள்ளார் (யோவா.20:31). இதிலிருந்து, நித்திய ஜீவன் மனிதனுடைய நற்கிரியைகளுக்கான பலனாக அல்ல, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் கிடைக்கும் ஆசீர்வாதமாகவே இருப்பது தெளிவாகின்றது. இவ்விடயம் யோவான் 3:15-18, 3:36 போன்ற வசனங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[5] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 322.

[6] இயேசுகிறிஸ்துவை விசுவாசியாதவர்களே இவ்வசனத்தில் நன்மை செய்பவர்களாகவும், தீமை செய்பவர்களாகவும் இரு குழுவினராகப் பிரிக்கப்பட்டிருப்பதாகச் சில வேதஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (C.K.Barrett, *John: An Introduction with Commentary and Notes on the Greek Text*, p. 263). ஆனால் யோவானுடைய சுவிசேஷத்தில் 'விசுவாசிப்பவர்கள்' 'விசுவாசியாதவர்கள்' என்னும் இரு குழுவினரைப் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது. விசுவாசியாதவர்களை யோவான் இருகுழுவின

தில் ஒருவன் எப்படி இரட்சிக்கப்படுகின்றான் என்பதைப் பற்றி கூறாமல், இரட்சிக்கப்பட்டவன் எப்படிப்பட்டவனாக இருப்பான் என்பதையே அறியத்தந்துள்ளார் என்று கருதுகின்றனர்.[7] இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமே மனிதர் இரட்சிக்கப்படுகின் றனர் என்பது உண்மை என்றாலும், ஒருவனுடைய விசுவாசத்தை அவனுடைய நற்கிரியைகளே வெளிப்படையாகக் காண்பிக்கும் என்பதே இவர்களின் தர்க்கமாகும்.[8] தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டவன், நன்மைசெய்கிறவனாக இருப்பான் என்பது உண்மை என்றாலும்,[9] இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் இரட்சிக் கப்பட்டவன் எப்படி இருப்பான் என்பதைப் பற்றி குறிப்பிடவில்லை என்பதை நாம் மறக்கலாகாது. எனவே, இயேசுகிறிஸ்துவின் கூற்றை இரட்சிக்கப்பட்டவன் எப்படி இருப்பான் என்னும் கருத்தின் அடிப்படையில் விளக்கமுடியாது.

உண்மையில், இயேசுகிறிஸ்துவினுடைய இக்கூற்றை சரியான விதத்தில் விளங்கிக் கொள்வதற்கு 'கிரியை' என்னும் வார்த்தை யோவானுடைய சுவிசேஷத்தில் என்ன அர்த்தத்தோடு உபயோ கிக்கப்பட்டுள்ளது என்பதை முதலில் நாம் அறிந்து கொள்ள வேண்டும். யோவானுடைய சுவிசேஷத்தில், தேவன் விரும்புகிற நற்கிரியையாக, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதே உள்ளது என்பதை எவராலும் மறுக்க முடியாது.[10] யோவான் 6ம் அதிகாரத் தில், "அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்

ராகப் பிரிக்கவில்லை. மேலும், இயேசுகிறிஸ்துவை விசுவாசியாதவர்களில் ஒருகுழுவினர் தங்களுடைய நற்கிரியைகள் காரணமாக ஜீவனுக்குள் உயிர்த் தெழுவார்கள் என்னும் தவறான உபதேசத்திற்கும் இது ஆதாரமாய் அமைந்துவிடும்.

[7] J.Calvin, *John 1-10: Calvin's New Testament Commentaries*, p. 133.

[8] G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 241.

[9] தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டவன் நன்மை செய்பவனாக இருப்பான் என்பதை எபேசியர் 2:10 அறியத்தருகின்றது. இவ்வசனத்தில், "ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக் குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைக ளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண் ணியிருக்கிறார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[10] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 258.

வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பி யுங்கள்'' என்று இயேசுகிறிஸ்து அறிவுறுத்தியபோது, "தேவனுக் கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும்'' என்று மக்கள் கேட்டார்கள். இயேசுகிறிஸ்து இதற்குப் பதிலளிக்கும் போது, "அவர் (தேவன்) அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியை'' என்று குறிப்பிட்டார் (யோவா.6:27-29). இதிலிருந்து, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப் பதே தேவனுக்கு ஏற்ற நற்கிரியை என்பது தெளிவாகின்றது. எனவே, இயேசுகிறிஸ்துவினுடைய கூற்றில் அவரை விசுவாசித் தவர்களே நன்மை செய்தவர்கள் என்றும், அவரை விசுவாசியாத வர்களே தீமை செய்தவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர்[11] என்பதை மறுப்பதற்கில்லை.[12] எனவே, வேதாகமத்தின் போதனை யை முரண்படுத்தும் விதத்தில், இவ்வசனத்தில், "கிரியையினால் இரட்சிப்பு'' என்னும் உபதேசத்தை இயேசுகிறிஸ்து போதிக்க வில்லை.

---

[11] J.R.Michaels, *John: New International Biblical Commentary*, p. 93; H.H.Hobbs, *John: Bible Study Commentary*, p. 31.

[12] யோவான் 3ம் அதிகாரத்தில், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவன் 'சத்தியத்தின்படி செய்கிறவன்' அவன் 'ஒளியாகிய இயேசுகிறிஸ்துவினி டத்தில் வருகிறான்' என்றும் (யோவா.3:21), தீமை செய்கிறவன் 'ஒளியைப் பகைப்பவனாகவும்' 'ஒளியினிடத்திற்கு வராதவனாகவும்' சித்தரிக்கப் பட்டுள்ளான் (யோவா.3:20).

பதினான்காம் அத்தியாயம்



என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது....

(யோவான் 5:31)

இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில் அனைவரையுமே அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் வாக்கியம், அவர் 'தமது சாட்சி மெய்யாயிராது' என்று கூறியமையாகும். இயேசுகிறிஸ்துவே சத்தியமாக இருப்பதனால், அவர் தமது சாட்சி மெய்யாயிராது என்று கூறியது உண்மையிலேயே நம்மால் புரிந்து கொள்ள முடியாத கடினமான ஒரு கூற்றாகவே உள்ளது. "என்னைக் குறித்து நானே சாட்சி கொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது" என்று யோவான் 5:31ல் இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். இதனால், அவரது சாட்சி பொய்யானதா என்னும் அதிர்ச்சிமிகு கேள்வியே நம்முள் எழுகிறது. உண்மையில், இயேசுகிறிஸ்துவின் கூற்றை அக்கால யூதக் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு புரிந்து கொண்டால், அவரது கூற்றை நாம் தவறாக விளங்கிக்கொள்ள மாட்டோம்.

யூதர்களுடைய கலாசாரத்தில் ஒருவனுடைய சுய சாட்சியை எவரும் உண்மையானதாக ஏற்றுக்கொள்ளுவதில்லை. "அதை ஒரு சாட்சியாகவே அவர்கள் கருத மாட்டார்கள்."[1] இதனால்தான், இயேசுகிறிஸ்து தம்மைப் பற்றிய விடயங்களைக் கூறிய போது பரிசேயர்கள், "உன்னைக் குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய். உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல என்றார்கள்" (யோவா. 8:13). எனினும், இயேசுகிறிஸ்துவின் கூற்றானது அவருடைய சாட்சி பொய்யானது என்னும் அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. "என் சாட்சி மெய்யாயிராது" என்னும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள், "அவருடைய சுய சாட்சி யூத சமுதாயத்தில் மெய்யானதாயிராது என்னும் அர்த்தமுடையது."[2] மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, ஒருவனுடைய கூற்றை உண்மை என்று ஏற்றுக் கொள்வதற்கு இன்னுமொருவனுடைய சாட்சியும் அவசியமானதாயிருந்தது (உபா.19:15). யூதர்கள், ஒருவனுடைய சுயசாட்சியை மெய்யானது என்று ஏற்றுக்கொள்ளாதமையினால், தம்மைப் பற்றித் தாம் கொடுக்கும் சுயசாட்சி யூதர்களுக்கு மெய்யானதாய் இராது என்பதையே இவ்வசனத்தின் மூலம் இயேசுகிறிஸ்து அறியத்தருகிறார். தம்மைப் பற்றி தாம் கொடுக்கும் சாட்சி உண்மையானது என்பதை யோவான் 8:14ல் இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டினாலும், 5ம் அதிகாரத்தில் தாம் கொடுக்கும் மெய்யான சாட்சி, யூத சமுதாயத்தில் மெய்யானதாயிராது என்பதையே அறியத்தருகின்றார்.

யூத சமுதாயத்தில் உண்மைக்கு இரு சாட்சிகள் தேவைப்பட்டமையினாலேயே, இயேசுகிறிஸ்து ஊழியத்திற்குத் தம் சீடர்களை யூத பட்டணங்களுக்கு அனுப்பும் போது அவர்களைத் தனியாக அனுப்பாமல் இரண்டு பேராக அனுப்பினார் (லூக்.10:1). சுவிசேஷம் மெய்யான நற்செய்தியாக இருந்தாலும், அதை ஒருவன் மட்டும் சொல்லும்போது யூதர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே, இரண்டு பேரை அனுப்ப வேண்டியது அவசியமாயிருந்

[1] F.F.Bruce, *The Gospel of John*. p. 134.
[2] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 287.

தது. இயேசுகிறிஸ்துவும் யூதர்களோடு பேசும் போது தம்மைப் பற்றி பிதாவும் சாட்சிகொடுக்கிறார் என்று அடுத்த வசனத்தில் குறிப்பிட்டுள்ளார் (யோவா.5:31).[3] இயேசுகிறிஸ்துவினுடைய சுய சாட்சி மெய்யானதாக இருந்த போதிலும், யூத சமுதாயத்தில் அது மெய்யானதாகக் கருதப்படவில்லை. இதனால், தம்மைப் பற்றி பிதாவும் சாட்சி கொடுப்பதை இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டு கின்றார். யோவான் 8:17-18ல் இதை அவர் பின்வருமாறு குறிப் பிட்டள்ளார்: "இரண்டு பேருடைய சாட்சி உண்மையென்று உங்கள் நியாயப்பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே. நான் என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன். என்னை அனுப்பின பிதாவும் என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவராயி ருக்கிறார்." பிதா வானத்திலிருந்து பேசியதன் மூலமாக மட்டு மல்ல (யோவா. 12:28, மாற்.1:11) இயேசுகிறிஸ்துவின் ஒவ்வொரு செயலிலும் அவர் யார் என்பதைப் பற்றி சாட்சி கொடுப்பவராக இருந்தார்.

[3] இயேசுகிறிஸ்து பிதாவின் சாட்சியைப் பற்றியல்ல, யோவான் ஸ்நான கனுடைய சாட்சியைப் பற்றியே யோவான் 5:32ல் குறிப்பிட்டுள்ளதாகச் சிலர் கருதுகின்ற போதிலும் (J.Marsh, *The Gospel of St.John*, p. 268), 33 முதல் 37 வரையிலான வசனங்கள், அவர் யோவானுடைய சாட்சி யைப் பற்றியல்ல, பிதாவினுடைய சாட்சியைப் பற்றியே குறிப்பிட்டுள்ளார் என்பதை அறியத்தருகின்றன.

பதினைந்தாம் அத்தியாயம்

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டு....

(யோவான் 5:39)

இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில் தவறாகப் புரிந்து கொள்ளப் பட்டுள்ள வாக்கியங்கள் மட்டுமல்ல, தவறாக வியாக்கியானம் செய்யப்பட்டு வரும் வசனங்களும் உள்ளன. இதனால் இத்த கைய வசனங்களின் சரியான அர்த்தத்தை அறிய முடியாத நிலைக்குச் சாதாரண கிறிஸ்தவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இன்று தவறாக விளக்கப்பட்டு வரும் இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில் ஒன்று, யோவான் 5:39ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனத்தில், "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்" என்று கூறிய இயேசுகிறிஸ்து, "என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைக ளும் அவைகளே" என்று தெரிவித்துள்ளார். இன்று இவ்வசனத் தை ஆதாரமாகக் கொண்டு, உலக மத நூல்கள் அனைத்திலும் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய தெய்வீக வெளிப்படுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளதாகப் பலர் தர்க்கித்து வருகின்றனர். இவ் வசனத்தில் இயேசுகிறிஸ்து, "வேதவாக்கியம்" என்று ஒருமை

யில் குறிப்பிடாது, “வேதவாக்கியங்கள்” என்று பன்மையில் குறிப்பிட்டுள்ளமையால், அவர் யூதர்களுடைய வேதவாக்கியமான பழைய ஏற்பாட்டை மட்டுமல்ல, ஏனைய மதநூல்களையும் பற்றி இவ்வசனத்தில் சுட்டிக் காட்டியுள்ளார் என்பதே இவர்களின் தர்க்கமாகும்.[1] இன்று இந்து மத நூல்களில் இயேசுகிறிஸ்துவைப் பற்றி எழுதப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரமாகச் சுட்டிக் காட்டப்படும் வசனங்களில் ஒன்றாக இது உள்ளது.[2] எனினும் வேதவாக்கியங்கள் என்னும் பதமானது யூதர்களுடைய வேத நூலான நம்முடைய பழைய ஏற்பாட்டைக் குறிக்கின்றதே தவிர, அது வேறு மத நூல்கள் எதையும் குறிப்பிடவில்லை என்பதை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

யோவான் ஐந்தாம் அதிகாரத்தில் 17ம் வசனத்திலிருந்து, இயேசு கிறிஸ்து தம்மை எதிர்த்த யூதர்களிடமே பேசுவதை நாம் அவதானிக்கலாம். இயேசுகிறிஸ்து யூதர்களைப் பார்த்தே “வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்” என்று கூறினார். உண் மையில் யூதர்களுடைய வேதம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட் டிருந்தமையினாலேயே இயேசுகிறிஸ்து “வேதவாக்கியங்கள்” என்று அவற்றைப் பன்மையில் குறிப்பிட்டுள்ளமைக்கான காரண மாகும். யூதர்களின் வேதமான நமது பழைய ஏற்பாடு, “தோரா” (நியாயப்பிரமாணம்), “நபிம்” (தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள்), “கெத்துபிம்” (எழுத்தாக்கங்கள்) என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. லூக்கா 24:44ல் இயேசுகிறிஸ்து பழைய ஏற்பாட்டை இவ்வாறு மூன்று பகுதிகளாகக் குறிப்பிட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம். பழைய ஏற்பாட்டில் தம்மைப் பற்றி எழுதப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், “மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல் லாம்” என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வசனத்தில் “எழுத்தாக்கங் கள்” என்பதே தமிழில் “சங்கீதங்கள்” என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. ஆங்கில வேதத்தில் writings என்று குறிப்பிடப்பட்

[1] தமிழ்ப் பிரசங்க ஒலிநாடா ஒன்றில் கேட்டது.
[2] E.Sargunam, *Religious Toleration and Social Harmony*, p. 49.

டிருப்பதை நாம் அவதானிக்கலாம். யூத மத நூல்களிலும்,[3] யூத வரலாற்றுக் குறிப்புகளிலும்[4] அக்காலத்தில் யூதர்களின் வேதம் இவ்வாறு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.[5] இதனால், யூதர்கள் தமது வேதத்தைப் பன்மையில் வேதவாக்கியங்கள் என்றே குறிப்பிட்டனர்.[6] இதை அறியாமல், வேதவாக்கியங்கள் என்னும் பன்மைச் சொல் உலக மதநூல்கள் அனைத்தையும் குறிக்கின்றது என்பது எவ்வித அர்த்தமுமற்ற ஒரு விளக்கமாகவே உள்ளது.

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்" என்னும் இயேசு கிறிஸ்துவின் கூற்றில், "பாருங்கள்" என்னும் பதம் மூலமொழியில் "பார்க்கிறீர்கள்"[7] என்றே உள்ளது. அதாவது யூதர்கள் அக்காலத்தில் செய்து கொண்டிருந்த செயலையே இயேசுகிறிஸ்து இங்கு சுட்டிக்காட்டுகிறார். அதாவது யூதர்கள் தங்களுடைய வேதத்தை ஆராய்ந்து படிப்பதில் அதிக கவனம் செலுத்தி வந்தனர்.[8]

---

[3] உதாரணத்திற்குப் "பாபிலோனிய தல்மூட்" என்று அழைக்கப்படும் யூத மதநூலில் இது பற்றி உள்ளது (F.F.Bruce, *The Canon of Scripture*, pp. 29-30).

[4] யூத வரலாற்றாசிரியர் ஜோசீப்பஸ் என்பாரின் குறிப்பு இதை உறுதிப் படுத்துகிறது.

[5] பிரபல யூதத் தத்துவ ஞானியான பைலோவும் இதேவிதமாகவே யூத வேதத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

[6] சிலர் லூக்கா 24:44லும் இயேசுகிறிஸ்து இந்து மத நூல்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளதாகத் தர்க்கித்து வருகின்றனர். இவர்கள் இந்து மதநூல்களையும் சுவிசேஷப் புத்தகம் என்று குறிப்பிடுவதோடு, உலகத்தின் பாவத்திற்காகத் தம்மையே பலியாக்கும் தெய்வத்தைப் பற்றி அவை கூறுவதாகவும் விளக்குகின்றனர் (S.Chellappa, *Is Christianity Necessary?* p.142). "இவ்வசனம், எபிரேய வேதத்தை மட்டுமல்ல இயேசு கிறிஸ்துவைப் பற்றி எழுதப்பட்டுள்ள ஏனைய உலக மதநூல்கள் அனைத்தையுமே குறிக்கின்றன" என்பதே இவர்களுடைய தர்க்கமாகும் (K.Abraham, *Prajapathi: The Cosmic Christ*. p. 32).

[7] "பாருங்கள்" என்றும் இப்பதத்தை மொழிபெயர்க்கலாம் என்பது உண்மை என்றாலும், "பார்க்கிறீர்கள்" என்பதே இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்குப் பொருத்தமான மொழிபெயர்ப்பாகும். அண்மைக்கால ஆங்கில வேதாகமங்களில் "பார்க்கிறீர்கள்" என்றே இவ்வசனம் குறிப்பிடப்பட்டுள்ளது.

[8] கி.மு.586ல் யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போன பின்னர், தாங்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை மீறி நடந்தமையினாலேயே

இயேசுகிறிஸ்து யூதர்களுடைய இச்செயலை மட்டுமல்ல, அவர்களின் நம்பிக்கையைப் பற்றியும் இவ்வசனத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால், “அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார் (யோவா.5:39). உண்மையில், வேதவாக்கியங்களைப் படிப்பதனால் நித்திய ஜீவன் கிடைக்கும் என்பது அக்கால யூதர்களின் நம்பிக்கையாக இருந்தது. பிரபல யூதமதப் போதகரான ‘ஹிலெல்’ என்பவர், “நியாயப்பிரமாணத்தை அதிகமாகப் படித்தால் அதிகமான ஜீவன் கிடைக்கும்” என்றும், “நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை ஒருவன் பெற்றுக் கொள்ளும் போது வரவிருக்கின்ற உலகத்திற்கான ஜீவனைப் பெற்றுக் கொள்கின்றான்” என்றும் போதித்து வந்தார்.[9] அதேபோல ‘அக்கிபா’ என்னும் யூதமதப் போதகரும், “வேதவாக்கியமே உனது ஜீவன். நீ அதைப் பெற்றுக்கொள்ள பிரயாசப்படும்போது அது உன்னுடைய ஜீவனாகிறது” என்று அறிவுறுத்தியுள்ளார்.[10] இதனால், யூதர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து படிப்பதற்கு அதிக முக்கியத்து வம் கொடுத்தனர். மேலும், “ஆராய்ந்து பார்க்கிறீர்கள் என்பதற்கு இயேசுகிறிஸ்து உபயோகித்துள்ள பதம், யூதர்கள் தங்களுடைய வேதவாக்கியங்களைப் படிப்பதைக் குறிக்க பொதுவாக உபயோகிக்கும் வார்த்தையாகும்.”[11] எனவே, இயேசுகிறிஸ்து அக்காலத்தில் யூதர்கள் மத்தியில் இருந்த ஒரு பழக்கத்தையே இங்கு சுட்டிக்காட்டியுள்ளார் என்பது தெளிவாகின்றது. எனினும் அக்கால யூதர்கள் தாங்கள் வேதவாக்கியங்களாகக் கருதிய புத்தகங்களை மட்டுமே நித்திய ஜீவனைப் பெறுவதற்காக ஆராய்ந்து படித்தனர். அவர்கள் வேறு மத நூல்களை அதற்காக ஆராயவில்லை. யூதர்கள் பழைய புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தங்கள் இனத்தவர்களினால்

தங்களுக்கு சிறையிருப்பு தண்டனையாக வந்தது என்பதை உணர்ந்தவர்களாக அவர்கள் வேதவாக்கியத்தை ஆராய்ந்து படிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

[9] Cited in D.A.Carson, *John: Pillar New Testament Commentary*, p. 263.

[10] Cited in G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Volume 36*, pp. 78-79.

[11] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 263.

எழுதப்பட்ட புத்தகங்களைக் கூட வேதவாக்கியங்களாக ஏற்றுக் கொள்ளவில்லை.[12] எனவே, அவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவதற்காகப் பிற மத நூல்களை எல்லாம் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள் என்று கூறுவது எவ்வித அர்த்தமும் ஆதாரமும் அற்ற ஒரு விளக்கமாகவே உள்ளது.

இயேசுகிறிஸ்துவைப் பற்றிய தெய்வீக வெளிப்படுத்தல்கள் பழைய ஏற்பாட்டில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன என்பதற்கு வேதத்தில் அநேக ஆதாரங்கள் உள்ளன. ரோமர் 1:4ல் இயேசு கிறிஸ்துவைக் குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாகப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம் பண்ணியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனத்தில் "பரிசுத்த வேதாகமங்கள்" பழைய ஏற்பாட்டையும்,[13] "தேவனுடைய தீர்க்கதரிசிகள்" பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களை எழுதிய தேவ மனிதர்களையுமே குறிக்கின்றது. "இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷம் பழைய ஏற்பாட்டிலிருந்து வருவதாகவே பவுல் இவ்வசனத்தில் குறிப்பிட்

---

[12] தமிழில் "தள்ளுபடியாகமங்கள்" என்று அழைக்கப்படும் இப்புத்தகங்களைப் பற்றிய மேலதிக விபரங்களுக்கு எனது *புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு* என்னும் நூலைப் பார்க்கவும். பக்.

[13] ரோமர் 1:4ல் "பரிசுத்த வேதாகமங்கள்" என்று பன்மையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள "க்ர.'.பே" (*graphe*) என்னும் கிரேக்கப்பதம் சொல்லர்த்தமாக "எழுதப்பட்டவை" என்று அர்த்தந்தரும். ஆங்கிலத்தில் scripture என்று ஒருமையில் அல்லது scriptures என்று பன்மையில் இப்பதம் மொழிபெயர்க்கப்பட்டுள்ள போதிலும், பவுலினுடைய நிருபங்களில் 14 தடவைகள் இடம்பெறும் இப்பதம் தமிழில் பல்வேறுவிதமான முறைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (ரோ.1:4, 4:3, 9:17, 10:11, 11:2, 15:4, 16:25, கலா.3:8, 3:22, 4:30, 1கொரி.15:3, 15:4, 1தீமோ.5:18, 2தீமோ.3:16) எனினும், "க்ர.'.பே" என்னும் கிரேக்கப் பதத்தின் அர்த்தம் "எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தை" என்பதாகும். இப்பதம் பொதுவாக ஒருமையிலேயே கிரேக்க வேதத்தில் உபயோகிக்கப்பட்டிருப்பதனால், தமிழில் பன்மையில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதை ஆதாரமாகக் கொண்டு, இது பழைய ஏற்பாட்டை மட்டுமல்ல, வேறு மத நூல்களையும் குறிக்கின்றது என்று கருதுவது தவறாகும். ஏனென்றால் யூதர்கள் பழைய ஏற்பாட்டில் உள்ள புத்தகங்களை மட்டுமே எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக் கொண்டிருந்தனர்.

டுள்ளார். ஏனென்றால் அக்கால யூதர்கள் எவ்வாறு தங்களின் வேதத்தைக் குறிப்பிட்டுள்ளார்களோ அதேவிதமாகவே பவுல் பழைய ஏற்பாட்டை இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார்."[14] பழைய ஏற்பாட்டைத் தவிர பவுல் வேறு மதநூல்கள் எதையும் இவ்வசனத்தில் குறிப்பிடாதமையினால், இயேசுகிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல்கள் வேறு மத நூல்களில் இல்லை என்பது தெளிவாகின்றது. உலக மக்களுக்கான தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் யூதர்களுக்கு சிறப்பான இடம் கொடுக்கப்பட்டுள்ளதை வேதத்தில் நாம் அவதானிக்கலாம். உலக இரட்சகர் உலகத்திற்கு வருவதற்கான ஊடகமாக அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதனால், இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய தெய்வீக வெளிப்படுத்தல்களும் அவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. "இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" (யோவா.4:22) என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்றும் இதை உறுதிப்படுத்துகிறது. "அவர்கள் ஊடாக இரட்சகர் வந்தது மட்டுமல்ல, அதைப் பற்றிய தெய்வீக வெளிப்படுத்தல்களும் அவர்கள் மூலமாகவே வந்துள்ளன."[15]

தேவனுடைய வெளிப்படுத்தல்கள் யூதர்களிடம் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன என்பதை ரோமர் 3:1-2 நேரடியாகவும் தெளிவாகவும் குறிப்பிட்டுள்ளது. "தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மை" என்பதைப் பவுல் இவ்வசனங்களில் அறியத்தருகின்றார். "இவ்வசனத்தில் முழுப் பழைய ஏற்பாடுமே தேவனுடைய வாக்கியங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது."[16] இவை, "மானிட இரட்சிப்பைப் பற்றிய தேவனுடைய வார்த்தையாகும்."[17] உபாகமம் 4:8லும் சங்கீதம் 147:19-20லும் இத்தகைய தேவனுடைய வார்த்தைகள் உலகில் வேறு எந்த ஒரு ஜாதிக்கும் கொடுக்கப்படவில்லை என்னும் உண்மை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உண்மையில், "யூதர்களே

---

[14] J.Fitzmyer, *Romans: Anchor Bible Commentary*, p. 233.
[15] D.A.Carson, *John: Pillar New Testament Commentary*, pp. 223-224.
[16] J.R.W.Stott, *Romans: The Bible Speaks Today*, p. 96.
[17] J.Fitzmyer, *Romans: Anchor Bible Commentary*, p. 326.

தேவ வெளிப்படுத்தலைப் பெற்று அதைப் பாதுகாப்பாக வைத்திருந்தவர்கள்."[18] உபாகமத்திலும் சங்கீதத்திலும் உள்ள வசனங்களைப் பார்க்கும்போது, "யூத ஜனங்களுக்கும் தேவனுக்கும் இடையே இருந்தது போன்ற உறவு அக்காலத்தில் வேறு எந்த ஒரு மதத்தினருக்கும் இருக்கவில்லை என்பது தெளிவாகின்றது."[19] இதனால் ரோமர் 9:4ல், "புத்திரசுவிகாரமும், மகிமையும், உடன்படிக்கைகளும், நியாயப்பிரமாணமும், தேவாராதனைகளும், வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே" என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உண்மையில், ஏசாயா 2:3, மீகா 4:2 போன்ற வசனங்கள் அறியத்தருவது போல, "சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." இதிலிருந்து "தேவனுடைய வெளிப்படுத்தல்கள் யூதர்களிடமே ஒப்புவிக்கப்பட்டன என்றும், இரட்சிப்பின் செய்தி அங்கிருந்தே ஏனைய பிரதேசங்களுக்குச் சென்றுள்ளது என்பதும் தெளிவாகின்றது."[20] எனவே, வேறு இடங்களில் உருவான மதநூல்களில் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல்கள் இருப்பதாகத் தர்க்கிப்பது வேதத்தை முரண்படுத்தும் கருத்தாகவே உள்ளது.[21]

---

[18] J.R.W.Stott, *Romans: The Bible Speaks Today*, p. 96.

[19] J.A.Thompson, *Deuteronomy: Tyndale Old Testament Commentaries*, p. 103.

[20] J.N.Oswalt, *The Book of Isaiah Chapters 1-39*. pp. 117-118.

[21] யோவான் 5:39ஐப் போலவே சிலர் எபிரேயர் 1:1ஐயும் ஆதாரம் காட்டி, இயேசுகிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல்கள் உலக மத நூல்கள் அனைத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன என்று தர்க்கித்து வருகின்றனர். எனினும், இவர்கள் எபிரேயர் நிருபம் யாருக்கு எழுதப்பட்டது என்பதைக் கருத்திற் கொள்ளாமல், பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவன் பிற மத பக்தர்களுடனும் பேசியுள்ளார் என்று கூறுகின்றனர் (R.Panikkar, *The Unknown Christ of Hinduism*. p. 137). எபிரேயர் 1:1ல், தேவன் பல்வேறு விதமான முறைகளில் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நம்முடைய பிதாக்களோடு பேசியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நிருப ஆசிரியர், "நம்முடைய பிதாக்கள்" என்று யாரைக் குறிப்பிடுகிறார் என்பதை முதலில் நாம் அறிந்து கொள்ள வேண்டும். இந்நிருபம் எபிரேயர்களான யூதக் கிறிஸ்தவர்களுக்கே எழுதப்பட்டுள்ளது. எனவே அவர்களைப் பொறுத்தவரை நம்முடைய பிதாக்கள் பழைய ஏற்பாட்டு பக்தர்களாவர். அதாவது, தேவன் பழைய ஏற்பாட்டு பக்தர்களோடு பேசியுள்ளதைப் பற்றி இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்... என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிடும்போது, அவர் பழைய ஏற்பாட்டில் தம்மைப் பற்றி எழுதியுள்ளவற்றைக் கருத்திற் கொண்டவராகவே பேசினார். இதனால் சீடர்களுக்கு இதைப்பற்றி விளக்கும் போது, பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் தம்மைப் பற்றி எழுதப்பட்டுள்ளவற்றையே லூக்கா 24:26-27,44ல் அவர் விபரித்துக் காட்டினார். பழைய ஏற்பாட்டையே எப்பொழுதும் உபயோகித்து வந்த இயேசுகிறிஸ்து, "பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளவற்றைத் தவிர வேறு எந்த ஒரு நூலுக்கும் அவர் அங்கீகாரம் கொடுக்கவில்லை."[22] வேறு எந்த ஒரு நூலையும் அவர் தெய்வீக அதிகாரம் கொண்ட வார்த்தையாகக் கருதவில்லை. "அவர் பழைய ஏற்பாட்டையே தம்முடைய பிரசங்கங்களில் வேதவாக்கியமாக அறிமுகப்படுத்தினார்."[23] இயேசுகிறிஸ்து வேறு மத நூல்களைப் பற்றி குறிப்பிடாதமையினால், அவற்றில் அவரைப் பற்றி எழுதப் பட்டுள்ளது என்று தர்க்கிப்பதில் எவ்வித அர்த்தமுமில்லை. "உண்மையிலேயே வேறு மத நூல்களில் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல்கள் இருந்திருந்தால், சகலமுமறிந்த தெய்வமான அவர் அது பற்றி நிச்சயம் குறிப்பிட்டிருப்பார்."[24] அதேபோல ரோம ராட்சியமெங்கும் இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிவித்த அவருடைய சீடர்கள் யூதர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் போது, பழைய ஏற்பாட்டை உபயோகித்த விதமாக புறஜாதி மக்களுக்கு அவர்களுடைய மத நூல்களை உபயோகித்து இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிவிக்கவில்லை.[25] இயேசு

அது உலக மதங்கள் அனைத்திலும் தேவ வெளிப்படுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளதாக இவ்வசனம் கூறவில்லை.

[22] B.H.Edwards, *Nothing but the Truth*. pp. 58-59.

[23] P.Ch. Marcel, "Our Lord's Use of Scripture" in *Revelation and the Bible* p. 121.

[24] K.Daniel, "Is Christ in Hindu Vedas" in *The Defender of Faith*. p. 30.

[25] அப்போஸ்தலர் 13:32-33, 17:1-3, 18:28. சிலர் அப்போஸ்தலர் 17:28ஐ ஆதாரம் காட்டினாலும், அவ்வசனத்தில் பவுல் எல்லா மனிதரும் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட கிரேக்க புலவர்களின் பாடல் வரிகளைக் குறிப்பிட்டாலும், இயேசுகிறிஸ்துவையும் அவரது சிலுவைப் பலியையும்பற்றி குறிப்பிட அவர் பழைய ஏற்பாட்டையும்

கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்த பின்னர் எழுதப்பட்ட பிற மத நூல்களில் அவரைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள போதிலும்[26] அதற்கு முன்னர் வெளிவந்த நூல்களில் பழைய ஏற்பாட்டைத் தவிர வேறு எந்த ஒரு மத நூலிலும் அவரைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.[27]

தேவன் தனக்கு நேரடியாக வெளிப்படுத்திய விடயங்களையும் உபயோகித்துள்ளாரே தவிர, அவர் வேறு மதநூல்களை உபயோகிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவைப் பற்றி அவர் குறிப்பிடும்போது, "தீர்க்கதரிசிகளும் மோசேயும் முன்னமே சொல்லியிருந்தபடியே கிறிஸ்து பாடுபட வேண்டியதென் றும், மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராகி, சுயஜனங்களுக் கும் அந்நிய ஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்துகிறவரென்றும் சொல்லுகிறேனேயன்றி, வேறொன்றையும் நான் சொல்லுகிறதில்லை" என்றே அறியத்தந்துள்ளார் (அப்.26:22). தனது சுவிசேஷம் பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களின்படியானது என்பதைப் பவுல் 1கொரிந்தியர் 15:1-4லும் குறிப்பிட்டுள்ளார்.

[26] உதாரணத்திற்கு இஸ்லாமிய மதநூலில் அவரைப் பற்றி எழுதப் பட்டுள்ளது.

[27] இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு "சத்திய வசனம்" சஞ்சிகையில் வெளிவந்த எனது "இந்து மதநூல்களில் இயேசுகிறிஸ்து இருக்கிறாரா?" என்னும் கட்டுரையையும் (ஜுலை-ஒகஸ்ட் 1999 பக்.9-20), *Dharma Deepika* எனும் ஆங்கில இதழில் வெளிவந்த எனது "Prajapati's Sacrifice and the Crucifixion of Jesus Christ" எனும் கட்டுரையையும் (July-December 2000 pp. 5-20) பார்க்கவும்.

பதினாறாம் அத்தியாயம்

மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது... இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது....

(யோவான் 6:55)

இயேசுகிறிஸ்து ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்த பின்னர், அவர் தம்மை ஜீவ அப்பமாக வெளிப்படுத்தினார் (யோவா.6:1-35).[1] மக்கள் சரீர உணவான அப்பத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த போது அவர் ஆவிக்குரிய அப்பத்தைப் பற்றி விளக்கிக் கூறியதோடு, “என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது. என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது” என்று யோவான் 6:55ல் குறிப்பிட்டுள்ளார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டவர்கள் இது “கடினமான உபதேசம்” என்று கூறியதோடு (யோவா.6:60), “இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள்” (யோவா.6:52). அன்று யூதர்கள்

---

[1] “ஜீவ அப்பம் நானே” என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்கான விளக்கத்திற்கு எனது *இயேசுகிறிஸ்து யார்?* என்னும் நூலைப் பார்க்கவும்.

மத்தியில் உருவான இத்தகைய வாக்குவாதம் இன்றைய கிறிஸ்தவ உலகிலும் உள்ளது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள், அதாவது, "தமது மாம்சம் மெய்யான போஜனம் என்றும் தமது இரத்தம் மெய்யான பானம்" என்றும் அவர் கூறும்போது, அவர் என்ன அர்த்தத்தோடு இவ்வாறு சொன்னார் என்பதைப் புரிந்து கொள்வதற்குச் சிரமமாயிருப்பதனால், இது பற்றி வித்தியாசமான கருத்துக்கள் இன்றைய கிறிஸ்தவ உலகில் உருவாகியுள்ளன.

இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் யோவான் ஆறாம் அதிகாரத்திலுள்ள இயேசுகிறிஸ்துவின் பிரசங்கத்தைத் "திருவிருந்து" பற்றிய அருளுரையாகவே கருதுகின்றனர்.[2] இதன்படி இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தைப் புசிப்பதும் இரத்தத்தைப் பானம் பண்ணுவதும் திருவிருந்தைப் பற்றிய அறிவுறுத்தல்களாக விளக்கப்படுகின்றன. இதனால், "யோவான் 6ம் அதிகாரத்தில் 51 முதல் 58 வரையிலான வசனங்கள் திருவிருந்தின் வார்த்தைகளாகவே உள்ளன"[3] என்றும் கூறப்படுகின்றது. இயேசுகிறிஸ்துவின் கடைசி இராப்போஜனத்தைப் பற்றி யோவான் குறிப்பிடாதமையால்,[4] அதைப் பற்றிய இயேசுகிறிஸ்துவின் அருளுரையை ஆறாம் அதிகாரத்தில் யோவான் எழுதியுள்ளார் என்று அநேகர் கருதுகின்றனர். இன்று பிரபலமாயிருக்கும் இவ்விளக்கம், சபைச் சரித்திரத்தின் ஆரம்பகாலத்தில் முக்கியத்துவம் பெறாத ஒரு விளக்கமாக இருந்துள்ளதோடு[5] ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கருத்தாகவும் உள்ளது. ஏனென்றால், "இயேசுகிறிஸ்துவின்

---

[2] O.Cullmann, *Early Christian Worship*, p. 93.

[3] W.Barclay, *Jesus: As They Saw Him*, p. 261.

[4] "திருவிருந்து எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதைப் புறஜாதியார் அறிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக யோவான் இதைப் பற்றிக் குறிப்பிடவில்லை" (J.Jeremias, *The Eucharistic Words of Jesus*, p. 73) என்பது சிலரது கருத்தாயுள்ளது. எனினும், முதல் மூன்று சுவிசேஷப் புத்தகங்களிலும் இது பற்றி குறிப்பிட்டுள்ளமையால், கடைசி இராப்போஜனத்தின்போது நடந்த, அதே சமயம் ஏனைய சுவிசேஷங்களில் குறிப்பிடப்படாத விடயங்களை யோவான் 13ம் அதிகாரத்தில் எழுதியுள்ளார் என்பதே ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கமாக உள்ளது.

[5] M.F.Wiles, *The Spiritual Gospel: The Interpretation of the Fourth Gospel in the Early Church*. p. 52. ஆதிச்சபைப் பிதாக்கள் யோவான்

மாம்சத்தைப் புசித்தல்," "இரத்தத்தைப் பானம் பண்ணுதல்" என்னும் சொற்பிரயோகங்கள், திருவிருந்தை நினைவூட்டுகிற வார்த்தைகளாக உள்ள போதிலும் அதாவது, திருவிருந்தின் போது உபயோகிக்கப்படுகிறவைகளாக உள்ள போதிலும், யோவான் ஆறாம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து திருவிருந்தைப் பற்றியே விளக்கியுள்ளார் என்று கூறுவதற்கில்லை. "இயேசுகிறிஸ்துவின் உபதேசம் திருவிருந்தைப் பற்றியது என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இவ்வதிகாரத்தில் இல்லை."[6]

இயேசுகிறிஸ்து திருவிருந்தைப் பற்றியே யோவான் ஆறாம் அதிகாரத்தில் விளக்குகின்றார் என்று கூறுபவர்களில் சிலர், ஒருவன் இரட்சிப்படைவதற்குத் திருவிருந்து அவசியமானது என்றும் தர்க்கிக்கின்றனர்.[7] ஏனென்றால் 53ம் வசனத்தில், "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும் அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து இரத்தத்தைப் பானம் பண்ணுவதன் மூலம் ஒருவனுக்கு ஜீவன் கிடைப்பதனால், திருவிருந்து இத்தகைய ஜீவனைக் கொடுக்கின்றது என்னும் முடிவுக்கு இவர்கள் வந்துள்ளனர். இதனால், "திருவிருந்தின் போது, ஜீவனளிக்கும் கிறிஸ்துவின் ஆவி பெறப்படுவதனால், இரட்சிப்பிற்கு திருவிருந்து அவசியமானது"[8] என்று கூறும் வேத

ஆறாம் அதிகாரத்தைத் திருவிருந்து போதனையாகவே ஏற்றுக் கொண்டிருந்தனர் என்னும் கருத்து இன்று பொதுவாக கிறிஸ்தவர்கள் மத்தியில் உள்ள போதிலும், ஒரு சில சபைப் பிதாக்கள் மட்டுமே இத்தகைய கருத்துடையவர்களாக இருந்தார்கள் என்னும் உண்மையை அநேகர் அறியாதிருக்கின்றனர். இயேசுகிறிஸ்துவே ஜீவ அப்பம் என்பதை ஏற்றுக் கொண்டிருந்த சபைப் பிதாக்கள், ஜீவ அப்பமாகிய அவர் மாம்சமாகி இவ்வுலகத்திற்கு வந்து நமக்காக மரித்தார் என்றே விசுவாசித்தார்கள் (D.Waterland, *A Review of the Doctrine of the Eucharist*. p. 123).

[6] J.Marsh, *The Gospel of St. John*, p. 281.

[7] A.Richardson, *An Introduction to the Theology of the New Testament*, p.377.

ஆராய்ச்சியாளர்கள், “இவ்வுலக வாழ்வுக்கும் இனி வரவிருக்கும் உலகத்திற்கான வாழ்வுக்கும் அவசியமான ஜீவன் திருவிருந்தின் “அப்பம்” “பானம்” என்பவற்றின் மூலம் ஒருவனுக்குள் செல்கி றது”[9] என்றும் விளக்குகின்றனர். எனினும் திருவிருந்தின் மூலம் இரட்சிப்பு கிடைக்கும் என்பதற்கு வேதத்தில் எவ்வித ஆதாரமும் இல்லாதமையால் இக்கருத்து ஏற்றுக்கொள்ள முடியாததொன்றா கவே உள்ளது.

யோவான் 6ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் இயேசுகிறிஸ்து எருசலேமில் திருவிருந்து முறையை ஏற்படுத்திய போது ஆற்றிய பிரசங்கம் அல்ல. அவர் திருவிருந்தை உருவாக் குவதற்கும் ஒரு வருடத்திற்கும் முன்பே இவ்வாறு கூறியுள்ளார்.[10] உண்மையில், கலிலேயாவில் தமது அற்புதத்தைக் கண்டமை யால் அடுத்த நாளும் தங்களுக்கு உணவு கிடைக்கும் என்னும் எண்ணத்தோடு வந்தவர்களுக்கு (யோவா.6:26) இயேசுகிறிஸ்து கூறியவைகளே யோவான் ஆறாம் அதிகாரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன. இவர்கள் திருவிருந்து பற்றிய ஆழமான ஆவிக்குரிய விடயத்தைப் புரிந்து கொள்ளும் அல்லது ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இருந்தவர்கள் அல்ல. இயேசுகிறிஸ்துவின் வார்த் தைகள் கப்பர்நகூமிலுள்ள ஜெபாலயத்தில் வைத்துக் கூறப்பட்ட வை என்று 59ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை, இது எருசலேமில் திருவிருந்தை உருவாக்கியபோது அது பற்றி கொடுக்கப்பட்ட விளக்கம் அல்ல என்பதை அறியத்தருகின்றது. “இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டவர்களில் அநேகர் அவரது உபதேசம் கடினமானது என்று கூறி அவரை விட்டுச் சென்று விட்டனர் (யோவா.6:60).[11] எனவே இத்தகைய மக்க

---

[8] *Ibid*. p. 327.
[9] W.Barclay, *Jesus: As They Saw Him*, p. 261.
[10] யோவான் ஆறாம் அதிகாரச் சம்பவம் பஸ்கா பண்டிகையின் காலத்தி லேயே நடைபெற்றுள்ள போதிலும், அவ்வருட பஸ்காவின் போதல்ல, அதற்கு அடுத்த வருடத்திலேயே திருவிருந்து உருவாக்கப்பட்டது.
[11] இவர்கள் மோசேயின் காலத்தில் 40 வருடங்களாக இஸ்ரவேல் மக்களுக்கு வானத்திலிருந்து மன்னா கொடுக்கப்பட்டதையே பெரிதாக

ளுக்கு இயேசுகிறிஸ்து திருவிருந்தைப் பற்றிய உபதேசத்தை விளக் கினார் என்று கூறுவது அர்த்தமற்றது."[12]

யோவான் ஆறாம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து திருவிருந்தைப் பற்றியே விளக்கியுள்ளார் என்று கருதினால், திருவிருந்தின் மூலம் நித்தியஜீவன் கிடைக்கும் என்னும் தவறான ஒரு உபதேசமே உருவாகும். ஏனென்றால் இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் கிடைக்கும் என்றே 53ம் 54ம் வசனங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. உண்மையில் திருவிருந்து ஒரு மனிதனில் இத்தகைய விளைவை ஏற்படுத்துவதில்லை. ஏனென்றால், ஏற்கனவே ஜீவனைப் பெற்றவர்களே "தமக்கும் கிறிஸ்துவுக்கும் இடையிலான ஐக்கியத்திற்கு அடையாளமாக திருவிருந்தில் பங்கேற்கின்றனர்."[13] மேலும், ஜீவனானது இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமாகக் கிடைப்பது என்பதை இவ்வதிகாரத்தில் இயேசுகிறிஸ்து பலதடவைகள் சுட்டிக்காட்டியுள்ளார் (யோவா.6:35,40,47). இதிலிருந்து, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதும், அவரது மாம்

எண்ணிக் கொண்டிருந்தனர் (யோவா.6:31). உண்மையில், இவர்களுடைய பார்வையில் மோசே இயேசுகிறிஸ்துவைவிட பெரியவராக இருந்தார். ஏனென்றால் மோசே 40 வருடங்களாக மக்களுக்கு மூன்று வேளையும் உணவு கொடுத்துள்ளார். ஆனால், இயேசுகிறிஸ்துவோ ஒரு நேரச் சாப்பாட்டை மட்டுமே கொடுத்திருந்தார். எனவே, அவர்களுக்கு இயேசுகிறிஸ்து செய்த அற்புதம், அதாவது ஐந்து அப்பங்களையும் இரு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தது பெரிய காரியமாகத் தென்படவில்லை. இத்தகைய மனநிலையில் இருந்தவர்கள் ஒரு வருடத்திற்குப் பின்னர் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் திருவிருந்தைப் பற்றி புரிந்து கொள்வார்கள் என்னும் எதிர்பார்ப்பில் இயேசுகிறிஸ்து அவர்களுக்கு அதைப் பற்றி விளக்கினார் என்று கூறுவதில் எவ்வித அர்த்தமுமில்லை. உண்மையில், "மேசியாவாக வருபவர் மோசேயைப் போல வானத்திலிருந்து மன்னாவை மறுபடியும் கொண்டுவருவார் என்று அக்கால மக்கள் எதிர்பார்த்தனர். இதுவே அவர் மேசியா என்பதற்கான அடையாளமாக இருக்கும் என்பது அவர்களுடைய நம்பிக்கையாக இருந்தது" (G.H.C.Macgregor, *The Gospel of John*, pp. 142-143).

[12] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 312.

[13] P.Enns, *The Moody Hand Book of Theology*, p. 362.

சத்தைப் புசித்து இரத்தத்தைப் பானம் பண்ணுவதும் மனிதனில் ஒரே விளைவையே ஏற்படுத்துகிறது என்பதை அறிந்து கொள் கின்றோம். உண்மையில், இயேசுகிறிஸ்து திருவிருந்தைப் பற்றி யல்ல, ஆவிக்குரிய நிஜங்களைப் பற்றியே யோவான் ஆறாம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். அவரது வார்த்தைகள் "அக்கால யூதக் கலாசாரத்தின் சொற்பிரயோகங்களாகவே உள்ளன."[14] அதாவது, "புசித்தல் குடித்தல் என்னும் சொற்பிரயோகம் 'ஒருவ னுக்குள் எடுத்தல்' என்னும் அர்த்தத்துடன் அக்காலத்தில் உபயோகிக்கப்பட்ட ஒரு மொழிவழக்காகும்."[15] உபதேசங்களை அல்லது போதனைகளை ஒருவன் தனக்குள் எடுப்பதற்கும் யூதர்கள் இவ்வித சொற்பிரயோகத்தையே அக்காலத்தில் உப யோகித்துள்ளனர்.[16] இத்தகைய அர்த்தத்தில் வேதத்திலும் தேவனுடைய வார்த்தையைப் புசிக்கும்படியான அறிவுறுத்தல்கள் இருப்பதை நாம் அவதானிக்கலாம் (எரே.15:16, எசே.3:1-3, வெளி.10:9-10)..

இயேசுகிறிஸ்துவும் இத்தகைய அர்த்தத்துடனேயே தம் மாம்சத் தையும் இரத்தத்தையும் உட்கொள்வதைப் பற்றி குறிப்பிட்டுள் ளார். எனவே, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரை நமக் குள் எடுப்பதே இங்கு அவரது மாம்சத்தைப் புசிப்பதும் இரத்தத் தைப் பானம் பண்ணுவதுமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு இயேசுகிறிஸ்துவை நம் உள்ளான வாழ்விற்குள் கொண்டு வருவதே நமக்கு ஆவிக்குரிய ஜீவனைக் கொடுக்கும் செயலா யுள்ளது. இதைத்தான் இயேசுகிறிஸ்து, "என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு" என்று யோவான் 6:54ல் குறிப்பிட்டுள்ளார். யோவான் சுவிசேஷத்தின் ஏனைய பகுதிகளில் இயேசுகிறிஸ்

---

[14] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 312.

[15] H.Odeberg, *The Fourth Gospel*, p. 239.

[16] தேவனுடைய நியாயப்பிரமாணத்தை அப்பமாகவும், அதன் வார்த்தை களை ஒருவன் தனக்குள் எடுப்பதை புசித்தலாகவும் யூத மதப் போதகர் கள் குறிப்பிட்டுள்ளனர் (L.Morris, *Jesus is the Christ: Studies in the Theology of John*. p. 30).

துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயமே இங்கு இயேசுகிறிஸ்துவின் "மாம்சத்தைப் புசிப்பதாகவும் இரத்தத்தைப் பானம் பண்ணுவதாகவும்" உள்ளது. மேலும் இவ்வதிகாரத்தில் "புசித்தல்" "குடித்தல்" என்னும் பதங்கள் மூலமொழியில் 'ஒருதரம் மட்டும் செய்யும்' செயலைக் குறிக்கும் விதத்திலேயே உள்ளது.[17] அதாவது "இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தையும் இரத்தத்தையும் ஒருதரம் உட்கொள்வதனால் கிடைக்கும் விளைவே 53ம் 54ம் வசனங்களில் விளக்கப்பட்டுள்ளது."[18] எனவே, இதைப் பலதடவைகள் நாம் பங்கேற்கும் திருவிருந்தாகக் கருதமுடியாது. மேலும், புதிய ஏற்பாட்டில் "இயேசுகிறிஸ்துவின் மாம்சம்" என்னும் சொற்பிரயோகம் திருவிருந்தைக் குறிக்கும் பதம் அல்ல. "இயேசுகிறிஸ்துவின் சரீரம்" என்னும் சொற்பிரயோகமே திருவிருந்தில் உபயோகிக்கப்பட்டுள்ளதும்[19] "மாம்சம்" என்னும் பதத்தை உபயோகித்துள்ள யோவான் ஆறாம் அதிகாரம் திருவிருந்தைப் பற்றியதல்ல என்பதற்கான ஆதாரமாயுள்ளது.[20]

யோவான் ஆறாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஜீவ அப்பம் பற்றிய அருளுரை இயேசுகிறிஸ்து உலக மக்களுக்காகத் தம்மையே பலியாகக் கொடுப்பதைப் பற்றியும், அவரை விசுவாசித்து அவரை நமக்குள் எடுத்துக்கொள்வதனால் நமக்குக் கிடைக்கும் ஆவிக்குரிய வாழ்வைப் பற்றியுமே விளக்குகிறது. ஜீவ அப்பமாகத் தம்மை உருவகிக்கும் இயேசுகிறிஸ்து 51ம் வசனத்தில், "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின்

---

[17] அதாவது மூலமொழியில் aorists tenseல் உள்ளது.

[18] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 335.

[19] ஆதிச்சபையில் இயேசுகிறிஸ்துவின் "மாம்சம்" என்னும் சொற்பிரயோகம், அவர் மனிதராக வந்ததைக் குறிக்கவே பொதுவாக உபயோகிக்கப்பட்டுள்ளது. அவர்கள் திருவிருந்தில் இயேசுகிறிஸ்துவின் "சரீரம்" என்னும் வார்த்தையையே உபயோகித்துள்ளனர் (L.Morris, *Expository Reflections on the Gospel of John*. p. 238).

[20] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 333.

ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே'' என்று குறிப்பிட்டுள்ளார். இது அவரது மரணத்தையே குறிக்கின்றது. ஏனென்றால் அவர் சிலுவையிலேயே உலக மக்களின் ஜீவனுக்காகத் தம்மையே பலியாகக் கொடுத்தார். இதனைத் தொடர்ந்துவரும் வசனங்களில் தம் மாம்சத்தைப் புசித்து இரத்தத்தைப் பானம் பண்ணுவதன் மூலம் நித்திய ஜீவன் கிடைப்பது பற்றியும் இயேசுகிறிஸ்து விளக்கியுள்ளார். இதில் உபயோகிக்கப்பட்டுள்ள சொற்பிரயோகங்கள் திருவிருந்தைப் பற்றியது போல இருந்தாலும், இயேசு கிறிஸ்து திருவிருந்தைப் பற்றி அல்ல, ஆவிக்குரிய நிஜங்களைப் பற்றியே இங்கு விளக்கியுள்ளார். அவரைப் புசிப்பதன் மூலம், அதாவது, அவரை நமக்குள் எடுப்பதன் மூலம் நமக்கு ஆவிக்குரிய வாழ்வு கிடைக்கின்றது என்பதையே அவர் அறியத்தருகின்றார்.

பதினேழாம் அத்தியாயம்

பன்னிருவராகிய...

உங்களுக்குள்ளும்

ஒருவன் பிசாசாயிருக்கிறான்....

(யோவான் 6:70)

இயேசுகிறிஸ்துவின் உபதேசங்களில் கடிந்து கொள்ளும் வார்த்தைகளும் இருப்பதை நாம் அவதானிக்கலாம். மனந்திரும்பாமல் பாவத்தில் வாழும் மக்களை அவர் கடுமையாக விமர்சித்துள்ளதோடு, அவர்களை வன்மையாகக் கண்டித்தும் உள்ளார்.[1] எனினும், அவர் தம்மைக் காட்டிக்கொடுத்த யூதாசை[2] அவ்விதமாகக் கடிந்து கொள்ளாத போதிலும் அவனைப் பற்றி அவர் கூறிய ஒரு சில விடயங்கள், இன்று வரை கிறிஸ்தவர்களுக்குப் புரிந்த கொள்ள மிகவும் சிரமமாக இருக்கும் கூற்றுக்களாகவே உள்ளன. இயேசுகிறிஸ்து தமது ஊழியக் காலத்தில் யூதாசைப்

---

[1] உதாரணத்திற்கு மத்தேயு 25ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து அக்காலத்தைய பரிசேயர்களைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

[2] யூதாஸ் என்னும் பெயர் அக்காலத்தில் பிரபலமானதொன்றாக இருந்தது. இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட கால சரித்திரத்திலும் யூதர்களில் பலருக்கு இப்பெயர் இருந்தது (1மக்காபியர் 2:4, 11:70, 16:2-10, 2மக்காபி

“பிசாசு” என்று குறிப்பிட்டுள்ளார். அவர் தமது பன்னிரு சீடர்களுடனும் பேசும் போது, “பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து கொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்” என்று யோவான் 6:70ல் குறிப்பிட்டுள்ளார். இயேசுகிறிஸ்து யூதாசைக் குறித்தே இவ்விதமாகச் சொன்னார் என்பது அடுத்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.[3] இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள், அவர் அப்போஸ்தலராகத் தெரிவுசெய்தவர்களில் ஒருவன் பிசாசாயிருந்தான் என்பதையே அறியத்தருகின்றன.

இயேசுகிறிஸ்து யூதாசை மட்டுமல்ல, ஒரு தடவை பேதுருவையும் பிசாசு என்று கடிந்து கொண்டதை மாற்கு 8:33ல் நாம் அவதானிக்கலாம். அவர் தமக்கு நேரிடவிருக்கும் பாடுகளையும் மரணத்தையும் பற்றி விளக்கியபோது, பேதுரு அதற்கு எதிராகப் பேசியமையினாலேயே அவர் அவனைப் பிசாசு என்று கடிந்து

யர் 1:10). ஆனால் யூதாஸ் இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்த பின்னர் எவரும் இப்பெயரைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கவில்லை. யூதாசிற்கு “ஸ்காரியோத்” என்னும் பெயரும் இருந்தது (லூக். 22:3). “ஸ்காரியோத்” என்பது இவன் யூதேயாவிலுள்ள “கீரியோத்” என்னும் பட்டணத்தைச் (யோசு.15:25) சேர்ந்தவன் என்பதை அறியத்தருவதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (L.Morris, *Luke: Tyndale New Testament Commentaries*, p. 138). மோவாபிலும் “கீரியோத்” என்னும் பெயரில் ஒரு பட்டணம் இருந்த போதிலும் (எரே. 48:24), யூதாஸ் மோவாபியன் என்று கூறமுடியாது. யூதாஸ் என்னும் பெயர் அவன் யூதேயாவைச் சேர்ந்தவன் என்பதையே அறியத்தருகின்றது. சில வேதஆராய்ச்சியாளர்கள் seqarya என்னும் அரமிக் மொழிப் பதத்திலிருந்தே “ஸ்காரியோத்” என்னும் பெயர் உருவாகியிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். இது உண்மை என்றால், இவன் “பொய்யன்” ‘போலியானவன்’ என்னும் அர்த்தத்தில் இப்பெயர் இவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது (J.Nolland, *Luke 1-9:20: Word Biblical Commentary Volume 35A*, p. 271). எனினும் யூதாஸ், “கீரியோத்” என்னுமிடத்தைச் சேர்ந்தவனாக இருந்ததினாலேயே இப்பெயர் அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதே பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர்களின் முடிவாக உள்ளது (A.C.Myers, ed., *The Eerdmans Bible Commentary*, p. 607).

[3] “சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து பன்னிருவரில் ஒருவனாயிருந்தும், தம்மைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனாயிருந்தபடியினால் அவனைக் குறித்து இப்படிச் சொன்னார்” என்று யோவான் 6:71ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொண்டார். ஏனென்றால் “சிலுவையைத் தவிர்க்கும்படியான பேதுருவின் வார்த்தைகள் அவருக்கு சாத்தானின் ஒரு சோதனை யாகவே இருந்தமையால், அவர் அவனை இவ்விதமாகக் கடிந்து கொண்டார்.”[4] உண்மையில், “தேவதிட்டத்தை முரண்படுத்தும் விதத்தில் மனிதர்கள் சிந்திக்கும்பொழுது அவர்கள் இயேசுகிறிஸ் துவின் சீடர்களாக அல்ல, பிசாசின் சீடர்களாகவே இருக்கின்ற னர்.”[5] யூதாஸ் பிசாசின் சீடனாகச் செயல்பட்டான். அதாவது, “அவனூடாகப் பிசாசு செயல்படுகிறவனாக இருந்தான்.”[6] அவன் “திருடனாயிருந்தான்” என்று யோவான் 12:6ல் குறிப்பிடப்பட்டுள் ளது. இதனால்தான், இயேசுகிறிஸ்துவைக் காட்டிக் கொடுப்பதற் குப் பிசாசு யூதாசைத் தூண்டுவதற்கும், அவனை அச்செயலைச் செய்ய வைப்பதற்காக அவனுக்குள் புகுவதற்கும் முன்பே (யோவா.13:2, 13:27), இயேசுகிறிஸ்து அவனைப் பிசாசு என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையில், தம்மைக் காட்டிக் கொடுப்பவன் யார் என்பதை இயேசுகிறிஸ்து ஆரம்பத்திலேயே அறிந்திருந்தார் (யோவா.6:64). இதனால், அவன் தன்னைக் காட்டிக் கொடுப்பதற் கும் ஒரு வருடத்திற்கும் முன்பே அவனைப் பிசாசு என்று குறிப்பிட்டுள்ளார். “யூதாஸ் பிசாசின் தன்மைகளைக் கொண்டிருந் தமையால் இயேசுகிறிஸ்து அவனை இவ்விதமாக அழைத்துள் ளார்.”[7]

பன்னிருவரில் ஒருவனாகிய யூதாசில் பிசாசின் தன்மைகள் இருந்தமையால், இயேசுகிறிஸ்து அவனைப் பிசாசு என்று குறிப் பிட்டுள்ளது உண்மை என்றாலும், பிசாசாயிருக்கும் ஒருவனை அவர் ஏன் தம்முடைய சீடர்களில் ஒருவனாகத் தெரிவு செய்ய வேண்டும் என்பது இன்று அநேகமாக சகல கிறிஸ்தவர்களினதும் உள்ளத்தில் இருக்கும் பெரியதோர் கேள்வியாகும். சீடர்களைத்

---

[4] W.L.Lane, *The Gospel of Mark*, p. 304. பிசாசு தம்மைச் சோதித்தபோது அவனை இயேசுகிறிஸ்து எப்படி கடிந்துகொண்டாரோ, அதேவிதமாக பேதுருவையும் கடிந்துகொண்டார் (மத்.4:10).
[5] J.R.Edwards, *Mark: The Pillar New Testament Commentary*, p. 255.
[6] E.A.Blum, *John:Bible Knowledge Commentary New Testament*, p. 298.
[7] R.C.H.Lenski, *The Interpretation of St. John's Gospel*, p. 525.

தெரிவு செய்வதற்கு முன்னர் இரவு முழுவதும் ஜெபம் பண்ணி தேவ வழிநடத்துதலைப் பெற்றவராக இயேசுகிறிஸ்து அவர்களைத் தெரிவு செய்தமையால் (லூக்.6:12-16), பிசாசாயிருக்கும் ஒருவனை அவர் எவ்வாறு தெரிவு செய்திருக்கமுடியும் என்பதும் பலரது கேள்வியாயுள்ளது. யூதாசை இயேசுகிறிஸ்து சீடனாகத் தெரிவு செய்ததைப் பற்றி கேட்கப்படும் கேள்விகள் அனைத்திற்கும் வேதாகமம் கொடுக்கும் ஒரே பதில், "வேதவாக்கியம் நிறைவேறுவதற்காக அவன் ஒரு அப்போஸ்தலனாகத் தெரிவு செய்யப்பட்டான்" என்பதாகும். பேதுரு இதைப் பற்றி விளக்கும் போது, "இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாசைக் குறித்துப் பரிசுத்த ஆவி தாவீதின் வாக்கினால் முன்சொன்ன வேத வாக்கியம்[8] நிறைவேறவேண்டியதாயிருந்தது. அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்கு பெற்றவனாயிருந்தான்" என்று அப்போஸ்தலர் 1:16-17ல் குறிப்பிட்டுள்ளார். இதேவிதமாக, யூதாஸ் தம்மைக் காட்டிக் கொடுக்கப் போவதைத் தமது சீடர்களுக்கு இயேசுகிறிஸ்து அறிவிக்கும் போதும், "ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என் மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" என்று யோவான் 13:18ல் தெரிவித்துள்ளார். இதிலிருந்து பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்ட வேதவாக்கியம் நிறைவேறுவதற்காகவே இயேசுகிறிஸ்து யூதாசை ஒரு அப்போஸ்தலனாகத் தெரிவு செய்துள்ளார் என்பது தெளிவாகின்றது. "பிசாசாயிருந்த யூதாசைத் தெரிவு செய்தமை, இயேசுகிறிஸ்துவின் தெரிவு தவறானது என்பதற்கான ஆதாரம் அல்ல. மாறாக, வேதவாக்கியம் நிறைவேறுவதற்காகவே அவர் யூதாசைத் தம் சீடனாக வைத்திருந்தார்."[9]

"யூதாசைப் பற்றிக் கூறும் போது, 'நான் தெரிந்து கொண்டவர்களை அறிவேன்' என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளதிலிருந்து

[8] இச்சொற்பிரயோகம், அதாவது "பரிசுத்த ஆவி தாவீதின் வாக்கினால் முன்சொன்ன வேதவாக்கியம்" என்னும் வசனம், பழைய ஏற்பாடு பரிசுத்த ஆவியானவரால் ஏவி எழுதப்பட்டது என்பதற்கான ஆதாரங்களில் ஒன்றாகவும் உள்ளது.

[9] E.A.Blum, *John:Bible Knowledge Commentary New Testament*, p. 320.

(யோவா.13:18), அவனைத் தெரிவு செய்ததினால் அவர் ஏமாற்றம் அடைந்துவிடவில்லை என்பதும் தெளிவாகின்றது."[10] எனினும், இயேசுகிறிஸ்துவைக் காட்டிக் கொடுப்பதற்காகவே யூதாஸ் படைக்கப்பட்டான் என்று நாம் கருதலாகாது. யூதாஸ் எப்படிப்பட் டவன் என்பதை இயேசுகிறிஸ்து ஆரம்பத்திலேயே அறிந்திருந் தார். அதுமட்டுமல்ல, மனிதர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சந் தர்ப்ப சூழ்நிலையிலும் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்ப தைத் தேவன் ஆரம்பத்திலிருந்தே அறிந்திருப்பவர்.[11] இதனால், யூதாஸ் இயேசுகிறிஸ்துவைக் காட்டிக் கொடுப்பான் என்பதை முன்பே அறிந்திருந்த தேவன் அதைப்பற்றி பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களில் முன்னறிவித்திருந்தார். பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களில் எழுதியிருக்கிறபடியே இவ்வுலகில் பணியாற்றிய இயேசுகிறிஸ்து[12] அவற்றின் நிறைவேறுதலைக் கருத்திற் கொண்டவராக யூதாசைத் தம் சீடனாகத் தெரிவு செய்துள்ளார்.

---

[10] L.Morris, *Expository Reflections on the Gospel of John*, p. 475.

[11] தேவன் சகலவற்றையும் அறிந்தவர் என்பதை வேதம் அறியத்தருகிறது. "அவர் எவ்விடத்திலும், எக்காலத்திலும் உள்ள எல்லாவற்றையும், நடப்பவைகளையும், நடக்கவிருப்பவைகளையும், நடக்கக்கூடியவைகளை யும், சகல மாந்தரது வாழ்விலும் உள்ள சகல அம்சங்களையும் அறி வார்" (A.W. Pink, *The Attributes of God*, p. 17). அதேபோல அவரது அறிவு பூரணமானது. அவரது அறிவு குறைவற்றதும் தவறற்றதாகவும் உள்ளது. தேவன் சகலவற்றையும் அறிந்திருப்பதனால், அவர் அறியாமல் எங்கும் எதுவும் நடப்பதில்லை. அதேபோல நடக்கும் எதுவும் அவரை ஆச்சரியப்படுத்திவிடுவதுமில்லை. ஏனெனில் நடக்கும் காரியங்களை அவை நடப்பதற்கும் முன்பே அவர் அறிந்துள்ளார். "ஆதிமுதல் அனைத் தும் அவருக்குத் தெரியும். உடனடியாகவும், ஒரே சமயத்திலும், முழுமை யாகவும் உண்மையாகவும் அவர் அனைத்தையும் அறிவார்" (H.C. Thiessen, *Lectures in Systematic Theology*, p. 81).

[12] "எழுதியிருக்கிறபடியே மனுஷகுமாரன் போகிறார்" என்று தெரிவித்த இயேசுகிறிஸ்து (மாற்.14:21, லூக்.22:22) பழைய ஏற்பாட்டு வேதவாக் கியத்தில் எழுதப்பட்ட விதமாகவே இவ்வுலகில் பணியாற்றியதோடு, அதற்கெதிராக அவர் ஒருபோதும் செயற்படவில்லை. மாறாக, "அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்க வேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும்" என்றார் (மத்.26:53-54). "இயேசு கிறிஸ்துவின் மேசியப்பணி எத்தகையது என்பது பழையஏற்பாட்டில் எழுதப்பட்டிருந்தது. அவர் அதற்குக் கீழ்ப்படிந்து செயல்படுவதில் உறுதி யாயிருந்தார்" (J. R.W.Stott, *The Authority of the Bible*, p. 13).

பதினெட்டாம் அத்தியாயம்

ஆபிரகாம் என்னுடைய நாளைக்... கண்டு களிகூர்ந்தான்....

(யோவான் 8:56)

இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களை வாசிக்கும் போது, அவர் மனிதராக இவ்வுலகத்திற்கு வருவதற்கும் முன்பே இருந்துள்ளார் என்பதை அறிந்திடலாம்.[1] இதனால், "ஆபிரகாம்[2] உண்டாகிற தற்கு முன்னமே நான் இருக்கிறேன்" (யோவா.8:52) என்று அவர் குறிப்பிடும் போது, அவரது வார்த்தைகளை நம்மால்

---

[1] இயேசுகிறிஸ்து நித்தியமானவர், அதாவது, அவருக்கு ஆரம்பமும் முடிவும் இல்லை. அவர் இவ்வுலகத்திற்கு வருவதற்கும் முன்பே இருந் துள்ளார் என்பதை வெளிப்படுத்தல் 1:8, 3:14, எபிரேயர் 1:8-12, கொலோ செயர் 1:15-17, யோவான் 1:1, 1:15, யோவான் 17:5, 17:24, மீகா 5:2, ஏசாயா 9:6 போன்ற வசனங்கள் அறியத்தருகின்றன. மேலதிக விளக்கத் திற்கு எனது *யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்* என்னும் நூலைப் பார்க்கவும்.

[2] இஸ்ரவேல் மக்களுடைய முற்பிதாவான ஆபிரகாமினுடைய வாழ்க்கை வரலாறு ஆதியாகமம் 12 முதல் 25 வரையிலான அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.[3] ஆனால், "ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண வாஞ்சையாயிருந்தான். கண்டு களிகூர்ந்தான்" (யோவா.8:56) என்னும் வார்த்தைகள், நம்மால் புரிந்து கொள்ள முடியாத விவரணமாகவே உள்ளன. ஏனென்றால், ஆபிரகாம் எப்படி இயேசுகிறிஸ்துவின் நாளைப் பற்றி அறிந்து கொண்டான்? எப்படி அவரது நாளைக் கண்டு களிகூர்ந்தான்? என்னும் கேள்விகளே நம் உள்ளத்தில் எழுகின் றன. இயேசுகிறிஸ்துவின் கூற்றில், "என்னுடைய நாள்" என்பது "அவர் மனிதராக இவ்வுலகத்திற்கு வந்த காலத்தைப் பற்றிய குறிப்பாகும்."[4] எனவே, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த ஆபிரகாம் எப்படி இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்ததைக் கண்டு களிகூர்ந்தான் என்பது, தற்காலத்தில் அதிக சர்ச்சைக் குரிய விடயமாக உள்ளது.

ஆபிரகாம் எப்படி இயேசுகிறிஸ்துவைக் கண்டான் என்பதற்கு யூதர்களும் கிறிஸ்தவர்களும் பலதரப்பட்ட விளக்கங்களைக் கொடுத்துள்ளனர். தங்கள் இனத்தின் தகப்பனான ஆபிரகாமிற்கு எதிர்காலத்தைப் பார்க்கக்கூடிய ஆற்றல் இருந்தது என்று நம்பிய யூதர்கள், ஆதியாகமம் 15ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தரிசனத்தை அடிப்படையாகக் கொண்டு, அத்தரிசனத்தில், தன் வம்சத்தினரின் எதிர்காலத்தையும் மேசியாவையும் ஆபிரகாம்

---

[3] "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" என்னும் கூற்றில் "நான் இருக்கிறேன்" என்னும் சொற்பிரயோகம், பழைய ஏற்பாட்டில் மோசேக்கு வெளிப்படுத்தப்பட்ட தெய்வப் பெயராகும். மோசே தேவனிடம் அவருடைய பெயரைக் கேட்டபோது, "இருக்கிறவராகவே இருக்கிறேன்" என்று கூறினார். இப்பெயர் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்ததோ, அதேவிதமாக புதிய ஏற்பாட்டில் இப்பெயரை இயேசுகிறிஸ்து தமக்கு உபயோகித்துள் ளார். இப்பெயரின் அர்த்தம், "எப்போதும் இருப்பவர்" என்பதாகும். எனவே, இப்பெயரைத் தமக்கு உபயோகிப்பதன் மூலம், தாம் எப்போதும் இருக்கும் தெய்வம் என்பதை இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தியுள்ளார்.
[4] L.Morris, *John: The New International Commentary on the New Testament (Revised)*, p. 417. பழைய ஏற்பாட்டில், வரவிருக்கும் மேசியா வின் காலம், "கர்த்தருடைய நாள்" என்றே அறிவிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்து அதைத் தம்முடைய நாளாக இங்கு குறிப்பிட்டுள்ளார்.

கண்டதாகக் கூறுகின்றனர்.[5] யூதர்களில் சிலர், ஆதியாகமம் 24:1ல் உள்ள "ஆபிரகாம் வயது சென்று முதிர்ந்தவனானான்" என்னும் வாக்கியத்தை, "ஆபிரகாம் எதிர்காலத்திற்குள் சென் றான்" என்று மொழிபெயர்த்து, ஆபிரகாம் எதிர்கால விடயங்க ளைக் கண்டதாக விளக்குகின்றனர். மேலும், ஈசாக்கினுடைய பிறப்பில் ஆபிரகாம் வரவிருக்கும் மேசியாவின் பிறப்பைக் கண்டு மகிழ்வடைந்ததாகவும் சில யூதர்கள் கருதினார்கள்.[6] யூதர்கள் மத்தியில் இருந்த இத்தகைய கருத்துக்கள் மிகைப்படுத்தப்பட்ட வர்ணனைகளாகவே உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. ஏனெனில், இவர்கள் பழைய ஏற்பாட்டுச் சம்பவங்களை வியாக்கி யானம் செய்து, ஆபிரகாமின் எதிர்கால அறிவைப் பற்றி அறியத் தரும் விடயங்களுக்குப் பழைய ஏற்பாட்டில் எவ்வித ஆதாரங்க ளும் இல்லை. ஆனால், "பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி.12:3) என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்தபோது, தனது வம்சத்தில் மேசியா[7] பிறப்பார் என்பதை அறிந்தவராக ஆபிரகாம் மகிழ்வடைந்தார் என்னும் கருத்து யூதர்கள் மத்தியில் இருந்த பொதுவான

---

[5] யூதமதப் போதகர்களில் ஒருவரான "ஜோஹன்னான் பென் ஸக்காய்" என்பவர், இத்தரிசனத்தின் போது இவ்வுலகத்தில் நடைபெறவிருக்கும் காரியங்கள் ஆபிரகாமிற்குக் காண்பிக்கப்பட்டதாகத் தெரிவித்தார். ஆனால், இனிவரவிருக்கும் உலகத்தின் விடயங்கள் ஆபிரகாமிற்கு வெளிப்படுத்தப்படவில்லை என்றே இவர் கருதினார். ஆனால் இன்னு மொரு யூதமதப் போதகரான "அக்கிபா" என்பவர், இவ்வுலகக் காரியங் கள் மட்டுமல்ல இனிவரவிருக்கும் உலக விடயங்களும் ஆபிரகாமிற்குக் காண்பிக்கப்பட்டதாக நம்பினார்.

[6] Cited in G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Volume 36*, pp. 138-139.

[7] யூதர்கள் இயேசுகிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக் கொள்ளாத போதி லும், வரவிருக்கும் மேசியாவை ஆபிரகாம் கண்டார் என்னும் நம்பிக்கை யூதர்கள் மத்தியில் இருந்தது. இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட நூல்களில் ஒன்றான 4எஸ்றா 2:14ல் உலகத்தின் முடிவுகால விடயங்கள் ஆபிரகாமிற்கு வெளிப்படுத்தப்பட்டதாகக் குறிப் பிடப்பட்டுள்ளது. இதனால், எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் சம்பவங் கள் அனைத்தும் ஆபிரகாமிற்கு வெளிப்படுத்தப்பட்டன என்று யூதமதப் போதகர்கள் கருதினார்கள். (Cited in G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Volume 36*, pp. 138-139).

ஒரு விளக்கமாகும்.[8] உண்மையில், இவ்விளக்கமே ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

கிறிஸ்தவ வேத ஆராய்ச்சியாளர்கள், ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கைப் பலியிட சென்ற சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இயேசுகிறிஸ்துவின் கூற்றை விளக்குகின்றனர். பலி மிருகத்தைப் பற்றிய ஈசாக்கின் கேள்விக்குப் பதிலளித்த ஆபிர காம், "தேவன் தமக்குத் தகன பலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார்" என்று கூறியபோது (ஆதி.22:8), அவன் வரவிருக்கும் மேசியாவைக் கண்டு களிகூர்ந்தான் என்பது இவர்க ளின் விளக்கமாக உள்ளது.[9] ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட முற்பட்டபோது, அவன் வரவிருக்கும் மேசியாவின் மரணம், உயிர்த்தெழுதல் போன்ற விடயங்களை அறிந்து கொண்டான் என்று இவர்கள் கருதுகின்றனர்.[10] "ஆபிரகாம் தன் மகனைப் பலியிட முற்பட்டபோது, தேவன் அவனைத் தடுத்து, ஈசாக்கிற்குப் பதிலாக ஒரு ஆட்டைப் பலியிடும்படி அறிவுறுத்தியதிலிருந்து, இதைப்போலத் தேவன் தன் வம்சத்தில் வரும் மேசியாவின் மூலம் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்பதை அறிந்து கொண்டான்"[11] என்பது கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கும் பொதுவான விளக்கமாகும்.[12]

---

[8] W.Barclay, *John Volume 1: The Daily Study Bible*, p.

[9] F.F.Bruce, *The Gospel of John*, p. 335.

[10] M.C.Tenney, *John: The Expositor's Bible Commentary, Volume* pp. 98-99. இதனால், ஆபிரகாம் தன் மகனைப் பலியிட முற்பட்ட சம்பவத்தில் வரவிருக்கும் மேசியாவின் மரணம் உயிர்த்தெழுதல் என்பவற்றைக் கண்டுள்ளான்" (A.W.Pink, *Exposition of the Gospel of John*, p. 56) என்றும், இது "ஆபிரகாமிற்கு மேசியாவின் பலியைப் படம் பிடித்துக் காட்டிய சம்பவம்" என்றும் வேத ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர் (M.C.Tenney, *John: Expositor's Bible Commentary, Volume* pp. 98-99).

[11] W.C.Kaiser, *The Messiah in the Old Testament*, p. 50.

[12] கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் சில சபைப் பிதாக்கள் ஈசாக்கிற்குப் பதிலாகப் பலியிடப்பட்ட ஆட்டை இயேசுகிறிஸ்துவாக வியாக்கியானம் செய்தனர் (R.M.Grant, *Second Century Christianity*, p. 72). தற்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் கூற்றை கிறிஸ்தவர்கள் வியாக்கியானம் செய்யும் முறைக்கு ஆதிச் சபைப் பிதாக்களின் இத்தகைய வியாக்கியானங்களின் செல்வாகும் ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிடச் சென்றபோது, தன் மகன் மரணமடைந்தாலும் தேவன் அவனை உயிரோடு எழுப்பித் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று அவன் விசுவாசித்ததாக வேதாகமம் கூறினாலும் (எபி.11:19), அவன் மேசியாவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பற்றி அச்சம்பவத்தின் மூலம் அறிந்து கொண்டான் என்பதற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை. மேலும், தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே அவனது மகனைப் பலியிடும்படி சொன்னாரே தவிர, அவனுக்கு மேசியாவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பற்றி வெளிப்படுத்துவதற்காக இக்காரியத்தைச் செய்யும்படி கூறவில்லை (ஆதி.22:1-2, 22:12).[13] இதனால், ஆபிரகாமைப் பற்றிய யூதர்களுடைய விளக்கங்களைப் போலவே கிறிஸ்தவர்களின் வியாக்கியானங்களும் வெறும் ஊகங்களாக மட்டுமே உள்ளன.[14] யூதர்களும் கிறிஸ்தவர்களும் சுட்டிக்காட்டு

---

[13] ஆபிரகாம் தன் மகனைப் பலியிடச் சென்ற செயலைப் பற்றி தேவன் கூறும் போது, "நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" (ஆதி.22:12) என்று குறிப்பிட்டுள்ளதும் இதை உறுதிப்படுத்துகிறது. இதனால், அதற்கு முன்னர் ஆபிரகாமின் விசுவாசம் எப்படிப்பட்டது என்பது தேவனுக்குத் தெரியாது என்று நாம் கருதலாகாது. தேவன் சகலமும் அறிந்த சர்வஞானமுடையவராக இருப்பதனால் (சங்.139:2-4, எரே.17:10, அப்.1:24, எபி.4:13), ஆபிரகாம் தனது கட்டளைக்கு எவ்வாறு கீழ்ப்படிவான் என்பதையும் அவர் ஆரம்பத்திலேயே அறிந்திருந்தார். ஆனால் ஆபிரகாமைப் பரீட்சித்துப் பார்த்து அவர் அறிந்து கொண்டது, "ஒன்றைச் செய்து காண்பிப்பதன் மூலமாக அறிந்து கொள்ளும் முறையாகும். அதாவது, ஆசிரியர் ஒருவர், 'இரண்டும் இரண்டும் எத்தனை என்று பார்ப்போம்' என்று தன் மாணவர்களிடம் கூறும் போது, அவர் இந்தக் கணக்கை அறியாதவராகவே இவ்வாறு கூறுகிறார் என்று நாம் கருதலாகாது. அவர் அக்கணக்கிற்கு விடை என்ன என்பதை அறிந்திருந்தாலும், அதைச் செய்து காட்டுவதன் மூலம், மாணவர்களிடம், 'இரண்டும் இரண்டும் நான்கு என்று இக்கணக்கின் மூலம் அறிந்துள்ளோம்' என்று கூறுகின்ற விதமாகவே, தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை அறிந்துள்ளதாக ஆதியாகமம் 22:12ல் குறிப்பிடப்பட்டுள்ளது" (N.Geisler & T.Howe, *When Critics Ask: A Handbook on Bible Difficulties*, p. 52).

[14] ஆதியாகமம் 17:17ல் சித்தரிக்கப்பட்டுள்ள சம்பவத்தில் உள்ள ஆபிரகாமின் 'நகைப்பை' அதாவது ஈசாக்கு பிறப்பான் என்று கூறப்பட்டபோது ஏற்பட்ட ஏளனச் சிரிப்பை ஆபிரகாமின் களிகூருதலாகக் கருதுகிற கிறிஸ்தவர்களும் நம் மத்தியில் உள்ளனர். முதலாம் நூற்றாண்டைச்

கிற பழைய ஏற்பாட்டுச் சம்பவங்களைக் கருத்திற் கொண்டுதான் இயேசுகிறிஸ்து ஆபிரகாமைப் பற்றி கூறினார் என்னும் தர்க்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. உண்மையில், "ஆபிரகாமினுடைய வாழ்வைப் பொதுவாகக் கருத்திற் கொண்டவராகவே இயேசு கிறிஸ்து இவ்வாறு கூறியிருக்கவேண்டும்."[15] ஏனென்றால், இயேசு கிறிஸ்து குறிப்பிட்டுள்ள விதமான ஒரு சம்பவம் பழைய ஏற்பாட்டில் இல்லை. எனினும், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள், ஆபிரகாம் மேசியாவைப் பற்றி அறிந்திருந்தான் என்பதை அறியத் தருகின்றன.

உண்மையில், யூதர்கள் எண்ணியது போல, "பூமியின் வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி.12:3) என்னும் தேவ வாக்குத்தத்தம், சகல ஜனங்களையும் ஆசீர்வதிக்கும் மேசியா தனது வம்சத்தில் வருவார் என்னும் நம்பிக்கையை நிச்சயம் ஆபிரகாமிற்கு ஏற்படுத்தியிருக்கும். இந்த நம்பிக்கையில் அவன் மேசியாவின் நாளை, அதாவது இயேசுகிறிஸ்து முழு உலகத்தினரையும் ஆசீர்வதிப்பதற்காக வரும் காலத்தையும் விசுவாசத்தில் கண்டு மகிழ்வடைந்துள்ளான் என்பதையே இயேசு கிறிஸ்து இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் ஆபிரகாம் விசுவாசத்தினாலேயே

சேர்ந்த யூதத் தத்துவ ஞானி "பைலோ" என்பாரும் ஆபிரகாமின் நகைப்பைக் களிகூருதலாகவே விளக்கியுள்ளார். (Cited in D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 357). ஈசாக்கின் பிறப்பு ஆபிரகாமிற்கு சந்தோஷத்தை ஏற்படுத்தியது என்பதை மறுக்க முடியாது என்றாலும், ஆதியாகமம் 17:17ல் ஆபிரகாமினுடைய நகைப்பைக் களிகூருதலாகக் கருதமுடியாது. அதேபோல, இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தபோது, பரதீசிலிருந்த ஆபிரகாம், அவரைக் கண்டு களிகூர்ந்தான் என்னும் சிலரது விளக்கத்திற்கும் (B.Lindars, *John: New Century Bible Commentary*, p. 335) போதுமான ஆதாரங்கள் இல்லை. இயேசுகிறிஸ்துவினுடைய கூற்றில் மூலமொழியின் இலக்கண அமைப்பு முறை, நிகழ் காலத்துச் சம்பவத்தை அல்ல, கடந்த காலத்தில் நடைபெற்ற விடயத்தையே அறியத்தருவதனால், இவ்விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. (D.A.Carson, *John: Pillar New Testament Commentary*, p. 357).

[15] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 472.

கண்டுள்ளதாக எபிரேயர் 11ம் அதிகாரம் அறியத்தருவதனால் (எபி.11:8-19), முழு உலகையும் ஆசீர்வதிக்கும் மேசியாவையும் அவன் விசுவாசத்திலேயே கண்டிருக்க வேண்டும்.[16] ஆபிரகாமை யும் அவன் மனைவி சாராளையும் பற்றி எபிரேயர் 11ம் அதிகாரம் கூறும் போது, "இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வைகளை அடையாமல் தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு, பூமியின் மேல் தங்களை அந்நிய ரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள்" (எபி.11:13) என்று குறிப்பிட்டுள்ளது. தேவன் வாக்களித்தவைகளில் சிலவற்றை ஆபிரகாம் தன் ஆயுட்காலத்தி லேயே பெற்றுக் கொண்டாலும் (உதாரணத்திற்கு மகன் பிறப்ப தைப் பற்றிய வாக்குத்தத்தம்), பெரும்பாலானவற்றை அவன் விசுவாசத்தினாலேயே கண்டான். உதாரணத்திற்கு வாக்குத்தத்த பூமி தனது சந்ததிக்கு கிடைக்கும் என்பதை அவன் விசுவாசத்தி னாலேயே ஏற்றுக்கொண்டான். ஏனென்றால், ஆபிரகாம் உயி ரோடிருக்கும் காலத்தில் வாக்குத்தத்த பூமி அந்நியர்களின் உடைமையாகவே இருந்தது (ஆதி.12:6). அப்படியிருந்தும் அவன் அங்கு தேவனுக்குப் பலிபீடங்களைக் கட்டியதோடு (ஆதி.12:8), தன் மனைவி மரித்தபோது அவளை அடக்கம் பண்ணுவதற்கு ஒரு இடத்தை அப்பிரதேசத்தில் வாங்கியதும் (ஆதி.23), எதிர்கா லத்தில் தன் சந்ததியினருக்குத் தேவன் வாக்களித்த தேசம் கிடைக்கும் என்னும் விசுவாசத்தில் ஆபிரகாம் செய்த செயல்க

[16] "ஆபிரகாமுக்குண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகப் புறஜாதியாருக்கு வருவதாகக்" கூறும் புதிய ஏற்பாடு (கலா.3:14), "தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு, உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாக முன்னறிவித்தது" என்றும் (கலா. 3:8), "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன. சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லா மல், சந்ததி என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். அந்தச் சந்ததி கிறிஸ்துவே" என்றும் (கலா.3:16) இவ்வுண்மையை விளக்குகின் றது. எனவே, பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப் படும் என்பது, "ஆபிரகாமின் வம்சத்தில் வரும் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் முழு உலகமும் ஆசீர்வதிக்கப்படுவதையே குறிக் கின்றது" (J.P.Burke, *Studies in Genesis*. p.89).

ளாகவே உள்ளன.[17] இதேவிதமாக, ஆபிரகாம், தன் சந்ததியின் மூலம் பூமியிலுள்ள சகல வம்சத்தினரும் ஆசீர்வதிக்கப்படுவார் கள் என்பதையும் விசுவாசத்தில் கண்டு களிகூர்ந்துள்ளான்.[18]

[17] வாக்குத்தத்த பூமியில் ஆபிரகாம் பலிபீடங்கள் கட்டிய செயல், “அவனுடைய விசுவாசத்திற்கான வெளிப்படையான அடையாளமாக உள்ளது' (J.J.Davis, *Paradise to Prison: Studies in Genesis*. p. 173). உண்மையில், “தேவனுடைய வாக்குத்தத்தத்தை முழுமையாக நம்பிய ஆபிரகாம், கானான் தேசம் தன் சந்ததிக்கு உரியது என்பதைக் குறிக்கும் விதத்தில் அத்தேசமெங்கும் அலைந்து திரிந்தான். அவன் அங்கு கட்டிய பலிபீடங்கள், அத்தேசத்தைக் கர்த்தருக்காகப் பரிசுத்தப் படுத்தி, தன் சந்ததியினர் அங்கு தேவனை வழிபடுவதற்காக அவன் செய்த செயலாகவே உள்ளது” (U.Cassuto, *A Commentary on the Book of Genesis*. p. 301). “உண்மையில், கானான் தேசம் தேவனுடையது என்பதை உரிமை கோரும் விதத்தில் ஆபிரகாம் அங்கு தேவனுக்காகப் பலிபீடங்களைக் கட்டியுள்ளான்” (J.M.Boice, *Genesis: Volume II: A New Beginning*. p. 469).

[18] “மேசியாவைப் பற்றிய விடயங்கள் எந்த அளவுக்கு ஆபிரகாமிற்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியாது. ஆனால், (இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள்) ஆபிரகாம், மேசியாவின் மூலம் உலகத்திற்கு வரவிருக்கும் இரட்சிப்பைப் பற்றி அறிந்திருந்தான் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன” (E.A.Blum, *John: The Bible Knowledge Commentary New Testament*, p. 306).

பத்தொன்பதாம் அத்தியாயம்

அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல....

(யோவான் 9:3)

இயேசுகிறிஸ்துவின் போதனைகளில் கிறிஸ்தவர்களினால் புரிந்து கொள்வதற்கு கடினமாயிருக்கும் விடயங்களில் ஒன்று, அவர் பிறவிக் குருடனொருவனைப் பற்றி கூறியவைகளாகும். பிறவிக் குருடன் ஒருவனைக் காண்பித்து "இவன் இப்படிப் பிறக்கக் காரணம் யார் செய்த பாவம்" என்று சீடர்கள் கேட்ட போது, இயேசுகிறிஸ்து, "இதற்கு எவர் செய்த பாவமும் காரணம் அல்ல" என்று கூறியது கிறிஸ்தவர்களுக்கு ஏற்றுக்கொளள கடினமான வார்த்தைகளாகவே உள்ளன. யோவான் 9:2-3ல், "அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" என்று இயேசு கிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள், மானிடக் குறைபாட்டிற்கும் பாவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்னும் அர்த்தத்துடன் உள்ளமையால், பெரும்பாலான

கிறிஸ்தவர்களுக்கு இக்கூற்று புரிந்து கொள்ளுவதற்கு கடின மானதாக உள்ளது. உண்மையில், சகல துயரங்களுக்கும் பாவமே காரணம் என்னும் பொதுவான கிறிஸ்தவ நம்பிக்கைக்கு முரணாக இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் இருப்பதே இதற் கான காரணமாக உள்ளது.

பிறவிக் குருடனைக் கண்ட போது சீடர்கள் இயேசுகிறிஸ்துவிடம் கேட்ட கேள்வி, அக்கால யூத மக்களுடைய நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பிறவிக்குருடனுடைய குறை பாட்டுக்குப் பாவம்தான் காரணம் என்பதில் சீடர்களுக்கு எவ்வித சந்தேகமும் இராததமையால், அவர்கள், "பாவமா இதற்குக் காரணம்?" என்று கேட்காமல், "யார் செய்த பாவம்?" என்று கேட்டனர். "இவன் குருடனாய் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவ மோ"? என்பதே அவர்களின் கேள்வியாயிருந்தது. சீடர்களின் கேள்வியில் நமக்குச் சற்றுக் குழப்பத்தை ஏற்படுத்தும் விடயம், இவன் செய்த பாவம் எவ்வாறு இவனது குறைபாட்டிற்குக் காரணமாயிருக்கும் என்பதாகும். ஏனென்றால், இவன் பிறவியி லேயே குருடனாக இருப்பதனால், பாவம் செய்வதற்கு இவனுக்கு சந்தர்ப்பமே இருக்கவில்லை என்று நாம் எண்ணலாம். ஆனால், அக்கால யூதர்கள், மானிட ஆத்துமாக்கள் சரீரத்திற்குள் வருவ தற்கும் முன்பே உலகில் வாழ்ந்து கொண்டிருப்பதாக நம்பினார் கள்.[1] எனவே, பிறவிக் குருடனுக்குள் இருக்கும் ஆத்துமா

[1] இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட யூத நூல்களில் ஒன்றான *The Wisdom of Solomon* 8:19-20ல் "நல்ல ஆத்துமா எனக்குக் கிடைத்தது" என்றும், "நல்லவனாக மாசடையாத சரீரத்திற்குள் வந்தேன்" என்றும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். சரீரத்திற்குள் வருவதற் கும் முன்பே நான் நல்லவனாயிருந்தேன் என்று இவர் கூறுவது போல, துன்மார்க்கர், தங்கள் ஆத்துமா சரீரத்திற்குள் வருவதற்கும் முன்னர் தீயதாக இருந்ததாக நம்பினார்கள். உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கும் முன்பே ஆத்துமாக்கள் ஏதேன் தோட்டத்தில் அல்லது ஏழாவது வானத் தில் இருந்ததாகவும் அவை மானிட சரீரங்களுக்குள் செல்வதை எதிர் பார்த்துக் காத்திருப்பதாகவும் அக்கால யூதர்கள் நம்பினார்கள். கிரேக்கர் கள் மத்தியிலும் இத்தகைய நம்பிக்கை இருந்தது. அவர்கள், ஆத்துமாக் கள் பரிசுத்தமானவை என்றும், அவை சரீரத்திற்குள் புகுந்த பின்பே

அவன் பிறப்பதற்கும் முன்பே பாவம் செய்திருக்கலாம் என்பதே சீடர்களின் எண்ணமாக இருந்தது.

ஒருவன் தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதும் பாவம் செய்வான் என்னும் நம்பிக்கையும் அக்கால யூதர்கள் மத்தியில் இருந்தது. யூதமதப் போதகர்கள் ஆதியாகமம் 25:22ஐ ஆதாரமாகக் கொண்டு, அதாவது, “ரெபேக்காளின் வயிற்றில் ஏசாவும் யாக்கோபும் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டார்கள்” என்னும் கூற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு போதித்தனர்.[2] இருவரும் ஒருவரையொருவர் கொல்ல முயற்சித்தார்கள் என்பதே இவ்வசனத்திற்கு யூத மதப் போதகர்கள் கொடுத்துள்ள விளக்கமாகும்.[3] சங்கீதம் 58:3ஐ ஆதாரமாகக் கொண்டு, ஏசா தாயின் வயிற்றிலேயே துன்மார்க்கனாய் இருந்ததாக அவர்கள் கருதினார்கள்.[4] பிறவிக் குருடனுடைய குறைபாட்டிற்கு அவன் செய்த

மாசடைகின்றன என்றும் நம்பினார்கள். ஆனால் யூதர்கள் ஆரம்பத்திலேயே நல்ல ஆத்துமாக்களும் தீய ஆத்துமாக்களும் இருந்துள்ளதாகக் கருதினர். ஆனால் இத்தகைய யூத கிரேக்க நம்பிக்கைகளுக்கு வேதத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை

[2] *Genesis Rabbah*. 63:6 Cited in D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 362.

[3] G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Vol..36*, p. 155.

[4] சங்கீதம் 58:3ல், “துன்மார்க்கர் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் பேதலிக்கிறார்கள். தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் பொய் சொல்லி வழிதப்பிப் போகிறார்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது மக்கள் பிறப்பதற்கும் முன்னர் பாவம் செய்கின்றார்கள் என்பதைப் பற்றியல்ல, மக்கள் பிறவியிலிருந்தே பாவிகளாயிருக்கின்றார்கள் என்பதை அறியத்தரும் வசனமாகும். 58ம் சங்கீதம் துன்மார்க்கரைப் பற்றிய விவரணமாக இருப்பதனால் இங்கு துன்மார்க்கர் பிறவியிலிருந்தே பாவிகளாயிருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 51ம் சங்கீதத்தில் தாவீது தானும் பிறவியிலிருந்தே பாவி என்று குறிப்பிட்டுள்ளான். மனிதர்கள் அனைவரும் பிறவியிலேயே பாவிகள் என்பதே வேதம் போதிக்கும் சத்தியமாகும். இதனால், மனிதர்கள் அனைவரும் அக்கிரமத்திலும் பாவத்திலும் மரித்தவர்களாயிருக்கிறார்கள் என்று வேதாகமம் கூறுகிறது (எபே.2:1). எனினும், பிள்ளைகள் தாயின் வயிற்றில் இருக்கும் போது பாவம் செய்கிறார்கள் என்பது வேதாகமப் போதனை அல்ல (ரோ.9:11). பெற்றோரின் பாவ சுபாவத்தைப் பிள்ளைகள் சுவீகரிக்கின்றார்கள் என்றே வேதாகமம் கூறுகிறது.

பாவமா காரணம் என்று சீடர்கள் கேட்டதற்கு இத்தகைய நம்பிக்கையும் ஒரு காரணமாக உள்ளது.

யூதர்கள் மத்தியில் இருந்த இன்னுமொரு நம்பிக்கை, ஒருவனுடைய பெற்றோர் செய்த பாவமும் அவனைப் பாதிக்கும் என்பதாகும். பெற்றோருடைய பாவத்தைப் பிள்ளைகளிடத்தில் தேவன் விசாரிப்பதாகப் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (யாத். 20:5, 34:7, எண்.14:18, சங்.109:14, ஏசா.65:6-7) 'மனைவியைத் தவிர வேறு பெண்களைப் பார்க்கக் கூடாது' என்று போதித்த யூத மதப் போதகர்கள், இன்னுமொரு பெண்ணின் பாதங்களை ஒருவன் பார்த்தால் அவனுக்குப் பிறக்கும் பிள்ளை துன்மார்க்கனாக இருப்பான் என்று கூறினார்கள். ஒருவன் தன் சொந்த மனைவி விலக்காய் இருக்கும் போது அவளது பாதங்களைப் பார்த்தாலும் இதே விளைவு ஏற்படும் என்றும் அவர்கள் போதித்தனர்.[5] மேலும், ஏசாவும் யாக்கோபும் தாயின் வயிற்றில் மோதிக் கொண்டதை ஆதாரமாகக் கொண்டு, ரெபேக்காள் ஜெபாலயத்தைக் கடந்து செல்லும் போது யாக்கோபு வெளியே வருவதற்கு முயற்சித்ததாகவும், அவள் விக்கிரக கோவில்கள் இருக்கும் பாதையில் நடந்து செல்லும் போது ஏசா யாக்கோபை மேற்கொண்டு வெளியே வருவதற்கு முற்பட்டான் என்றும் கூறினார்கள்.[6] இவ்விதமாகப் பெற்றோரின் சகல செயல்களும் பிள்ளைகளைப் பாதிப்பதாக யூதர்கள் நம்பினார்கள். எனவே, பிறவிக் குருடனைக் கண்டபோது, இவன் இப்படிப் பிறக்க இவனது பெற்றோர் செய்த பாவமா காரணம் என்றும் சீடர்கள் கேட்டனர்.

சீடர்களின் கேள்விக்கான இயேசுகிறிஸ்துவின் பதில் அவர்களின் எண்ணங்களுக்கும் சிந்தனைகளுக்கும் முற்றிலும் எதிரானதாகவே இருந்தது. "அது இவன் செய்த பாவமுமல்ல இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல" என்று இயேசுகிறிஸ்து

---

[5] Cited in L.Morris, *Expository Reflections on the Gospel of John*, p. 347.

[6] Cited in G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Voume.36*, p. 155.

கூறினார். எனினும், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை மானிட பாவத்திற்கும் துயரங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்னும் போதனையாகக் கருத முடியாது. ஏனென்றால், அவர் வேறு சந்தர்ப்பங்களில் பாவம் மானிட வியாதிக்குக் காரணம் என்பதைத் தெளிவாகத் தெரிவித்துள்ளார். யோவான் எழுதிய சுவிசேஷத்திலேயே, 38 வருடங்களாக வியாதிப்பட்டிருந்த ஒரு மனிதனைக் குணமாக்கிய இயேசுகிறிஸ்து, "இதோ நீ சொஸ்தமானாய். அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவம் செய்யாதே" என்று 5:14ல் குறிப்பிட்டுள்ளதிலிருந்து, அம்மனிதனுடைய வியாதிக்கு அவனது பாவமே காரணம் என்பதை அவர் சுட்டிக்காட்டுவது தெளிவாகின்றது. ஆனால், பிறவிக் குருடனைப் பொறுத்தவரை அவன் குருடனாகப் பிறந்ததற்கு எவர் செய்த பாவமும் நேரடிக் காரணமாக இருக்கவில்லை.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளவேண்டிய முக்கியமான விடயம் யாதெனில், பிறவிக் குருடனுடைய குறைபாட்டுக்கு "எந்த ஒரு தனிப்பட்ட பாவமும் காரணம் அல்ல என்பதாகும்."[7] அதாவது, அவர் "இங்கு பொதுவான உபதேசத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் தனிப்பட்ட ஒருவனுடைய நிலைமையைப் பற்றியே கூறுகின்றார்."[8] மானிட துயரங்கள் அனைத்திற்கும் பாவமே மூலகாரணம் என்பதே வேதாகமம் அறியத்தரும் சத்தியம் என்பது உண்மை என்றாலும்,[9] நமக்கு நேரிடுகின்ற துயரங்கள் அனைத்துமே நம் தனிப்பட்ட பாவத்தின் விளைவு என்று கூறுவது தவறாகும். ஏனென்றால், நாம் பாவம் செய்யாத போதும் துயரங்கள் வரும். உதாரணத்திற்கு யோபு என்னும் மனிதனுக்கு நேரிட்ட துயரங்களுக்கு அவனுடைய பாவங்கள் காரணமாயிருக்கவில்லை. தேவனுடைய சித்தத்தின் படி வாழும் போதும் நமக்குத் துயரங்கள் வரும் என்பதை பிலிப்பியர் 1:30, 1பேதுரு 1:6-7 போன்ற வசனங்கள் அறியத்தரு

---

[7] E.A.Blum, *John:Bible Knowledge Commentary New Testament*, p. 307.
[8] G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Vol. 36*, p. 155.
[9] முதல் மனிதனான ஆதாமின் பாவமே மானிட வாழ்வில் துயரங்களைக் கொண்டுவந்துள்ளதை ஆதியாகமம் 3ம் அதிகாரம் அறியத்தருகின்றது.

கின்றன.[9] எனவே மானிட துயரங்களுக்கான கரணங்களைக் குறிப்பிடும் போது பொதுவான விளக்கங்கள் கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

பிறவிக்குருடனைப் பற்றி குறிப்பிட்ட இயேசுகிறிஸ்து, “தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்” என்றும் தெரிவித்துள்ளார் (யேவா.9:3). இவ்வார்த்தைகள், தேவனுடைய கிரியைகள் வெளிப்படுவதற்காகவே இவன் குருடனாகப் படைக்கப்பட்டுள்ளான் என்னும் அர்த்தத்தைத் தருவதாக நாம் எண்ணலாம். ஆனால், மூலமொழியில், இவ்வாக்கியத்தின் இலக்கண அமைப்பு முறையின்படி, “இவன் இப்படிப் பிறந்ததன் நிமித்தமாகத் தேவனுடைய கிரியைகள் வெளிப்படுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது” என்னும் அர்த்தத்தைத் தரும் விதத்திலேயே இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் உள்ளன. அதாவது, இவன் குருடனாகப் பிறந்தமையால், இயேசுகிறிஸ்து ஒரு அற்புதத்தைச் செய்து தேவனுடைய கிரியையை அவனுடைய வாழ்வில் நடப்பிக்கப் போகின்றார். எனவே, நாம் இயேசுகிறிஸ்துவின் சீடர்களைப்போல, ஒவ்வொரு துயரத்திற்கும் பின்னால் இருக்கும் காரணத்தைக் கண்டறியும் பணியில் மூழ்கிவிடாமல், அவற்றில் தேவனுடைய கிரியைகள் வெளிப்படுவதை எதிர்பார்க்க வேண்டும். மானிட பாவமே சகல துயரங்களுக்கும் மூலகாரணம் என்பதை நன்கறிந்திருந்த இயேசுகிறிஸ்து, தனிப்பட்ட ரீதியாக ஒவ்வொரு துயரத்திற்கும் காரணமாக, குறிப்பிட்ட எந்தப் பாவம் உள்ளது என்பதை ஆராய்ந்து கொண்டிராமல், மானிட வாழ்விலிருந்து துயரங்களை அகற்றுவதிலேயே அதிக அக்கறை கொண்டிருந்தார்.

---

[10] பிலிப்பியர் 1:29ல், “கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது” என்றும், 1பேதுரு 1:6ல், “என்றாலும் துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சகாலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இருபதாம் அத்தியாயம்

ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது....

(யோவான் 9:4)

இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில் புரிந்து கொள்வதற்கு கடின மாயிருக்கும் இன்னுமொரு வசனம் யோவான் 9:4ல் குறிப்பிடப்பட் டுள்ளது. இவ்வசனத்தில், "பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்" என்று தெரிவித்த இயேசுகிறிஸ்து, "ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது" என்றும் முன்னறிவித்துள்ளார் (யோவா. 9:4). இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் "பகற்காலம்" "இராக்காலம்" என்னும் வார்த்தைகளை என்ன அர்த்தத்தோடு உபயோகித்துள் ளார் என்பது பற்றி கிறிஸ்தவர்கள் மத்தியில் கருத்துமுரண்பாடு கள் உள்ளன. எனினும், இவ்விரு வார்த்தைகளையும் இயேசு கிறிஸ்து சொல்லர்த்தமாக உபயோகித்துள்ளார் என்னும் விளக் கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஏனென்றால், யோவானு டைய சுவிசேஷத்தில் இவ்விரு சொற்பிரயோகங்களும் பெரும்பா லான சந்தர்ப்பங்களில் உருவக விவரணங்களாக, "மக்களின்

ஆவிக்குரிய நிலையை அறியத்தரும் சொற்பிரயோகங்களாகவே உள்ளன."[1] எனினும், சில சந்தர்ப்பங்களில் ஒரே நேரத்தில் இருவித அர்த்தங்களுடனும் இவ்வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டுள்ளதையும் நாம் அவதானிக்கலாம்.[2]

"பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்"[3] என்று இயேசுகிறிஸ்து கூறும் போது, இவ்வுலகத்தில் பணிபுரிவதற்காகத் தமக்கு நியமிக்கப்பட்டுள்ள காலத்தையே குறிப்பிட்டுள்ளார். "இயேசு

---

[1] G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 170. அக்காலத்தைய இலக்கியங்களைப் போலவே, யோவானுடைய சுவிசேஷத்திலும், ஒளி நன்மையையும், ஆவிக்குரிய மெய்வாழ்வையும், இருள் தீமையையும் பாவத்தையும், சாத்தானின் ஆளுகையையும் உருவகிக்கும் விதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன.

[2] உதாரணத்திற்கு யோவான் 3ம் அதிகாரத்தில் 'நிக்கொதேமு' இயேசுகிறிஸ்துவிடம் "இராக்காலத்தில் வந்தான்" என்று குறிப்பிடப்பட்டிருப்பது, அவன் "இரவு நேரத்தில் வந்ததையே" (F.F.Bruce, *The Gospel of John*, p. 81) அறியத்தந்தாலும் (யோவா.7:50) அவன் ஆவிக்குரிய அந்தகாரத்திலிருந்து (ஒளியாகிய இயேசுகிறிஸ்துவிடம்) வந்தான் என்னும் அர்த்தத்தையும் உள்ளடக்கியுள்ளது. அக்காலத்தைய யூதமதப் போதகர்கள் இரவு நேரத்திலேயே நியாயப்பிரமாணத்தை ஆராய்ந்து படித்து வந்தமையால், யூதமதப் போதகனான நிக்கொதேமுவும், இயேசுகிறிஸ்துவின் போதனைகளை "எவ்வித இடையூறும் இன்றி கற்பதற்காக இரவு நேரத்தில் அவரிடம் வந்தான் (G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Volume 36*, p. 47) என்பதும், அவன் மற்ற யூதர்களுக்குப் பயந்ததினால், எவருக்கும் தெரியாமல் இயேசுகிறிஸ்துவைச் சந்திப்பதற்காக இரவு நேரத்தைத் தெரிவு செய்தான் (W.Hendriksen, *New Testament Commentary: John*, p. 132) என்பதும் உண்மை என்றாலும், "அவன் ஆவிக்குரிய அந்தகாரத்திலிருந்தும் இயேசுகிறிஸ்துவிடம் வந்துள்ளான்" (E.Hoskyns, *The Fourth Gospel*, p. 211) என்பதை மறுப்பதற்கில்லை. "நிக்கொதேமு இரவுநேரத்தில் இயேசுகிறிஸ்துவிடம் வந்தாலும், அவனது ஆவிக்குரிய வாழ்வின் இருள் அவன் நினைத்ததைவிட அதிகமாக இருந்தது" (E.W.Hengstenberg, *Commentary on the Gospel of John Volume 1*, pp. 157-158; R.H.Lightfoot, *St.John's Gospel: A Commentary*, p. 116).

[3] இயேசுகிறிஸ்து இவ்வுலகில் பணிபுரியும் போது, தம்மை அனுப்பிய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே செயற்பட்டு வந்தார் (யோவா.6:38). இதனால்தான் இவ்வசனத்திலும் நான் "என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்து இவ்வுலகில் பணியாற்றிய காலம் அவருக்குப் பகற்கால மாய் இருந்தது."[4] இவ்வசனத்தில் "நான்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள பதம் மூலமொழியில் "நாம்" என்றே உள்ளது.[5] என வே, இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களையும் சேர்த்து "நாங் கள் என்னை அனுப்பிய தேவனுடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்" என்று அவர்களிடம் தெரிவித்துள்ளார்.[6] பிறவிக் குருடனைக் கண்ட சீடர்கள், அவன் குருடனாகப் பிறப்பதற்கு யார் காரணம் என்று கேட்டபோதே இயேசுகிறிஸ்து இவ்வாறு கூறியமையால் (யோவா.9:1-4), அவர்கள் தங்கள் ஆராய்ச்சியை விட்டுவிட்டு, தேவன் தங்களுக்கு கொடுத்துள்ள காலம் முடிவ டைவதற்குள் அவர் தந்த பணியைச் செய்ய வேண்டும் என்பதை யே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தேவனால் கொடுக்கப்பட்ட பணியை செய்யவேண்டியதன் அவசி யத்தைச் சீடர்களுக்குச் சுட்டிக்காட்டுவதற்காக "ஒருவனும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது" என்று இயேசு கிறிஸ்து கூறினார். இதற்கு அடுத்த வசனத்தில் இயேசுகிறிஸ்து தாம் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாக இருப்பதா கத் தெரிவித்துள்ளமையால் (யோவா.9:5), "இயேசுகிறிஸ்து இவ்வுலகில் இருக்கும் காலமே பகற்காலம் என்றும், அவர் பரலோகத்திற்குச் சென்ற பின்னர் வருவது இராக்காலம்"[7] என்றும் சிலர் கருதுகின்றனர். இயேசுகிறிஸ்து இவ்வுலகில் இருக்கும்

---

[4] J.C.Ryle, *Expository Thoughts on John Volume 2*, p. 160.

[5] இதனால், புதிய இலகு தமிழ் மொழிபெயர்ப்பில், இவ்வசனம், "பகல் வேளையாய் இருக்கும் போதே என்னை அனுப்பினவருடைய வேலையை நாம் செய்ய வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திருவிவிலியத்திலும் "நாம்" என்றே மொழிபெயர்த்துள்ளனர். மேலும், "மோனஹன்" மற்றும் "ராஜரீகம்" என்போரது தமிழ் வேதாகம மொழிபெயர்ப்புகளிலும் இதனை நாம் அவதானிக்கலாம்.

[6] R.C.H.Lenski, *The Interpretation of St.John's Gospel*, p. 677.

[7] J.C.Ryle, *Expository Thoughts on John Volume 2*, p. 160. இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திலிருந்து சென்றபின்னர் உள்ள காலமே இராக்காலம் என் னும் கருத்திற்கு ஆதாரமாக இவர்கள், ரோமர் 13:12ஐ சுட்டிக்காட்டுவது வழமை. இவ்வசனத்தில், "இரவு சென்று போயிற்று பகல் சமீபமாயிற்று" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வசனத்தில் இரவு என்பது இயேசு

காலமே பகற்காலம் என்பது உண்மை என்றாலும்,[8] வரவிருக்கும் இராக்காலத்தில் ஒருவராலும் கிரியை செய்ய முடியாது என்று இயேசுகிறிஸ்து கூறுவதனால், அவர் பரமேறிச்சென்ற பின்னர், அவரது சீடர்களினால் தேவனுடைய கிரியைகளைச் செய்ய முடியாதிருந்தது என்றும் நாம் கூறவேண்டும். ஆனால், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் அறியத்தருவது போல, இயேசு கிறிஸ்துவின் சீடர்கள், அவர் குறிப்பிட்ட விதமாக, அவரையும் விட பெரிய கிரியைகளைச் செய்துள்ளமையால் (யோவா.14:12), ஒருவரும் கிரியை செய்ய முடியாத இராக்காலம், இயேசுகிறிஸ்து பரலோகத்திற்குச் சென்ற பின்னர் உள்ள காலம் என்று கூற முடியாது.

உண்மையில், ஒருவரும் கிரியை செய்ய முடியாத இராக்காலமாக, இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணமே உள்ளது.[9] எனவே, அதற்கும் முன்னர், தேவன் தமக்குக் கொடுத்த பணியைச் செய்ய வேண்டும் என்பதையே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் தம் சீடர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளார். இராக்காலம் முடிவடைய மறுபடியும் பகற்காலம் வருவது போலவே, இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பின்னர் மறுபடியுமாகச் சீடர்கள் பரிசுத்த ஆவியானவருடைய உதவியுடன் உலகில் பணிபுரியக் கூடியதாக இருந்தாலும், தமது சிலுவை மரணத்திற்கு முன்னர் தாம் செய்ய வேண்டிய பணியைச் செய்து முடிக்க வேண்டும் என்பதையே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் தம் சீடர்களுக்கு அறிவித்துள்ளார்.[10] மேலும், அடுத்த வசனத்தில் “நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்” (யோவா.9:5) என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளமையால், அவர் இவ்வுலகத்திலிருந்து சென்ற பின்னர் உலகத்திற்கு ஒளி இல்லாமல்

கிறிஸ்து இவ்வுலகத்தில் சரீரப்பிரகாரமாக இல்லாத காலம் என்றும், வரவிருக்கும் பகல், அவரது மறுவருகை என்றும் இவர்கள் கூறுகின்றனர் (*Ibid*. p. 161).

[8] D.A.Carson, *John: Pillar New Testament Commentary*, pp. 362-363.

[9] G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p. 314.

[10] D.A.Carson, *John: Pillar New Testament Commentary*, pp. 362-363.

போய்விட்டது என்று நாம் கருதலாகாது. அதன்பின்னர் இயேசு கிறிஸ்துவின் சீடர்களும், தற்காலத்தில் கிறிஸ்தவர்களும் அவருடைய ஒளியை பிரதிபலிப்பவர்களாக இவ்வுலகத்தில் இருக்கின்றார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

[11] E.A.Blum, *John: The Bible Knowledge Commentary New Testament*, p. 307.

இருபத்தோராம் அத்தியாயம்

இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு....

(யோவான் 10:16)

யோவான் 10ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து தம்மை மேய்ப்பனாக உவமித்து உபதேசிக்கும் போது,[1] "இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு, அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும். அவைகள் என் சத்தத்திற்கு செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" என்று தெரிவித்தார். இயேசுகிறிஸ்துவின் இக்கூற்றில், "இந்தத் தொழுவத்தில்லாத ஆடுகள்" யார் என்பது பற்றி கிறிஸ்தவர்கள் மத்தியில் கருத்துமுரண்பாடுகள் உள்ளன. அக்காலத்தில் பலஸ்தீனாவிற்கு வெளியே ரோம சாம்ராட்சியம் எங்கும் சிதறிப்போயிருந்த யூதர்களையே இயேசுகிறிஸ்து

[1] யோவான் 10ம் அதிகாரத்தில், முதல் ஐந்து வசனங்களிலும் இந்த உருவக விவரணமும், அதனைத் தொடர்ந்து வரும் வசனங்களில் (28ம் வசனம் வரை), இதன் விளக்கமும் இயேசுகிறிஸ்துவினால் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாகச் சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[2] வேறுசிலர், முதலாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சிதறிப்போயிருந்த கிறிஸ்தவர்களே இயேசுகிறிஸ்து குறிப்பிடும் தொழுவத்தில் இல்லாத ஆடுகள் என்று கூறுகின்றனர்.[3] சில வேதப்புரட்டுக் குழுக்கள் தங்களையே இயேசுகிறிஸ்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாகக் கருதுகின்றனர்.[4] எனினும் இவ் விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளாக இல்லை.

இயேசுகிறிஸ்துவின் இக்கூற்றைச் சரியான விதத்தில் புரிந்து கொள்வதற்கு, யோவான் 10ம் அதிகாரத்தில் அவர் யூதர்களிடமே பேசுகிறார் என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம். 8ம் வசனத்தில் "எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள்" என்று தன் காலத்திலும், அதற்கு முன்பும் இருந்த "யூதமதத் தலைவர்களைக் குறிப்பிட்டுள்ளார்."[5] இதற்கும் முந்திய அதிகாரத்தில் (9ம் அதிகாரத்தில்) பரிசேயர்கள் மக்களை ஆவிக்குரிய பிரகாரம் வழிநடத்த முடியாத குருடர்களாக இருப்பதாக இயேசுகிறிஸ்து குற்றஞ் சாட்டியுள்ளமையால், இவ்வதிகாரத்தில், யூதமதத் தலைவர்களான பரிசேயர்களையே அவர் கள்ளர்களாகவும் கொள்ளைக் காரர்களாகவும் குறிப்பிட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது.[6]

---

[2] J.A.T.Robinson, *Twelve More New Testament Studies*, pp. 114-115.
[3] J.L.Martyn, *The Gospel of John in Christian History*, p. 15.
[4] உதாரணத்திற்கு "மோர்மன்ஸ்" என்று அழைக்கப்படும் வேதப் புரட்டுக் குழுவினர், ஐக்கிய அமெரிக்காவில் குடியிருந்த தங்களின் மூதாதையரான இஸ்ரவேலின் வடராட்சியத்தைச் சேர்ந்தவர்களையே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில், "இந்த தொழுவத்தில் இல்லாத ஆடுகளாகக்" குறிப்பிட்டள்ளார் என்று கருதுகின்றனர் (J.F.Smith, *Doctrines of Salvation*. 3:214). மோர்மன் குழுவினர், தாங்கள் மூதாதையர் இஸ்ரவேலர்கள் என்றும், அவர்கள் பூர்வகாலத்தில் அமெரிக்காவிற்குச் சென்றனர் என்றும் கூறுகின்றனர். இயேசுகிறிஸ்து புறஜாதியாரையே இந்தத் தொழுவத்தில் இல்லாத ஆடுகளாகக் குறிப்பிட்டுள்ளமையால், மோர்மன் குழுவினரின் மூதாதையராக இவர்களைக் கருதமுடியாது
[5] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 506.
[6] E.A.Blum, *John:Bible Knowledge Commentary New Testament*, p. 309.

யூதமதத்தலைவர்களே கள்ளரும் கொள்ளைக்காரருமாக இருப்பதனால், ஆடுகளாக இவ்வதிகாரத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளவர்கள் யூதர்கள் என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். எனவே, இந்தத் தொழுவத்தில் உள்ள ஆடுகள் யூதர்களாக இருக்கின்றமையால், "இந்தத் தொழுவத்தில் இல்லாத ஆடுகளாகப்" புறஜாதியாரே குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை.[7] இயேசுகிறிஸ்து புறஜாதியாரான அவர்களையும், தான் கொண்டு வரவேண்டும் என்று கூறுவது, அவர்களையும் இரட்சித்து, யூதர் புறஜாதியார் இருவரும் இணைந்துள்ள ஒரு தொழுவமாகத் தம்முடைய மந்தையைக் கூட்டிச் சேர்ப்பதைப் பற்றிய முன்னறிவிப்பாகவே உள்ளது. "இயேசுகிறிஸ்து யூதர்களுக்கு மட்டுமல்ல, புறஜாதியாருக்கும் மேய்ப்பராக இருக்கின்றார் என்னும் சத்தியத்தை இதிலிருந்து நாம் அறிந்து கொள்கின்றோம்."[8] இயேசுகிறிஸ்துவின் ஊழியப்பணி பலஸ்தீனாவிற்குள் வாழ்ந்த இஸ்ரவேல் மக்கள் மத்தியிலேயே நடைபெற்றமையால்,[9] புறஜாதியார் மத்தி

---

[7] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 388.

[8] J.Calvin, *John 1-10: Calvin's New Testament Commentaries*, p. 266.

[9] இயேசுகிறிஸ்துவின் பூலோக ஊழியம் இஸ்ரவேல் மக்களுக்கு மட்டுமானதாக இருந்தமையினாலேயே அவர், "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றப்படியல்ல" என்றார் (மத்.15:24). இதனால்தான், அக்காலத்தில் அவர் தம் சீடர்களை ஊழியத்திற்கு அனுப்பும் போது, "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" என்று அறிவுறுத்தினார் (மத்.10:5-6). இதிலிருந்து இயேசுகிறிஸ்து புறஜாதியாருக்காக இவ்வுலகத்திற்கு வரவில்லை என்று நாம் கருதலாகாது. அவருடைய பூலோக ஊழியகாலம், சுவிசேஷம் இஸ்ரவேல் மக்களுக்குப் பிரசங்கிக்கப் படவேண்டிய காலமாயிருந்தது. அதன் பின்னர், சுவிசேஷம் புறஜாதியாரிடம் செல்வதற்கான வழியை இயேசுகிறிஸ்து ஏற்படுத்தி, ஆரம்பத்தில் தம் சீடர்களுக்கு விதித்திருந்த தடையை அகற்றி, முழு உலகத்திற்கும் சென்று சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கட்டளையிட்டார் (மத்.28:18-20). "ஆரம்பத்தில் இஸ்ரவேலருக்கு மட்டுமானதாக இருந்த வரையறை தற்காலிகமானது என்பதை மத்தேயுவின் சுவிசேஷம் தெளிவாகக் காண்பிக்கின்றது. புறஜாதியார் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதையும், அவர்களுக்கும் சுவிசேஷம் செல்லவேண்டும் என்பதையும் அறியத்தரும் குறிப்புகள் மத்தேயுவின் சுவிசேஷத்தில் உள்ளன" (மத்.2:1-12, 3:9, 8:10-11, 15:21-28, 21:43, 22:1-10, 24:14, 28:19 (S.Brown, "The Matthean

யிலும் தமது மந்தையின் ஆடுகள் இருப்பதை அவர் இவ்வசனத்தில் அறியத்தந்துள்ளார்.[10] எனவே, பலஸ்தீனாவிற்கு வெளியே சிதறிப்போயிருந்த யூதர்களையோ, கிறிஸ்தவர்களையோ அல்லது வேதப்புரட்டுக் குழுக்களையோ இயேசுகிறிஸ்து குறிப்பிடும் தொழுவத்தில் இல்லாத ஆடுகளாகக் கருதமுடியாது.

Community and the Gentile Mission" in *Novum Testamentum*. pp. 193-221; S.Brown, "The Two-fold Representation of the Mission in Matthew's Gospel" in *Studia Theologica*. pp. 21-32).

[10] அப்போஸ்தலர் 18:10ல், கொரிந்து பட்டணத்தில் "எனக்கு அநேக ஜனங்கள் உண்டு" என்று இயேசுகிறிஸ்து பவுலிடம் கூறுவது, புறஜாதியார் மத்தியில் இருக்கும் தம்முடைய ஆடுகளைப் பற்றிய குறிப்பாகவே உள்ளது (L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 512).

இருபத்திரண்டாம் அத்தியாயம்

நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்....

(யோவான் 10:30)

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளில், அவர் தம்மைப் பற்றி வெளிப்படுத்திய விடயங்களும் உள்ளன. எனினும், இவற்றில் சில கூற்றுக்கள், அநேகரால் புரிந்து கொள்ள முடியாத கடின மான வசனங்களாகவே உள்ளன. இதனால், இவை தவறான முறையில் வியாக்கியானம் செய்யப்பட்டும் வந்துள்ளது. இத்த கைய ஒரு கூற்று, யோவான் 10ம் அதிகாரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்வதிகாரத்தின் 30ம் வசனத்தில் இயேசுகிறிஸ்து, “நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்” என்று தெரிவித்துள்ளார். இவ்வசனத்தை ஆதாரமாகக் கொண்டு சில கிறிஸ்தவர்கள், பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் வெவ் வேறானவர்கள் அல்ல என்றும், ஒரு தெய்வமே இரு பெயர்களி னால் குறிப்பிடப்பட்டுள்ளார் என்றும் கருதுகின்றனர்.[1] எனினும்,

---

[1] கிறிஸ்தவ இறையியலில், தேவன் பன்மை நிலையில், அதாவது ஒரு தேவன் மூவராக இருக்கின்றார் என்னும் திரித்துவ உபதேசம் மானிட அறிவினால் கிரகிக்க முடியாத தெய்வீக இரகசியமாயுள்ளது.

பிதாவும் குமாரனும் வெவ்வேறானவர்கள் என்பதற்குப் புதிய ஏற்பாட்டில் இருவரும் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ள பல பகுதிகள் உள்ளன. உதாரணத்திற்கு இயேசுகிறிஸ்துவின் ஞான ஸ்நானத்தின் போது, அவர் பூமியில் இருக்கும் போது பிதா வானத்திலிருந்து பேசினார். மேலும், பூமியிலிருக்கும் இயேசு கிறிஸ்து பிதாவோடு ஜெபத்தில் தொடர்பு கொண்டார் (யோவா. 17:1) இதைப் போன்ற பல வேதப்பகுதிகள் புதிய ஏற்பாட்டில் உள்ளபோதிலும், இயேசுகிறிஸ்து "நானும் பிதாவும் ஒன்றாயி ருக்கிறோம்" என்று கூறியது அநேகருக்கு குழப்பத்தை ஏற்ப டுத்தியுள்ளது.

இயேசுகிறிஸ்துவின் கூற்றை நாம் சரியான விதத்தில் விளங்கிக் கொள்வதற்கு, இவ்வாக்கியம் மூலமொழியில் எவ்வாறு உள்ளது என்பதை அறிந்திருக்க வேண்டியது அவசியம். ஏனென்றால், இக்கூற்றானது மூலமொழியில் உள்ள விதமாகத் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. மூலமொழியில் "ஒன்றாயிருக்கி றோம்" என்னும் வார்த்தையானது ஒன்றன்பால் பதமாக உள் ளது.[2] உண்மையில், இப்பதம் ஆண்பால் பதமாயிருந்தாலேயே 'ஒன்றாயிருக்கிறோம்' அல்லது 'ஒருவராயிருக்கிறோம்' என்று மொழிபெயர்க்கலாம். ஆனால், "இயேசுகிறிஸ்துவும் பிதாவும் ஒரு நபர் அல்ல."[3] அவர்கள் இருவர். இதனால், இயேசுகிறிஸ்து ஆண்பால் பதத்தை உபயோகிக்காமல், ஒன்றன்பால் பதத்தில் பேசியுள்ளார். எனவே, "ஒரு நபர் என்பதல்ல, ஒரு பொருள் என்பதே இதன் அர்த்தமாகும்."[4] சில கிறிஸ்தவர்கள், ஒன்றன்பால்

கிறிஸ்தவர்கள் மூன்று தெய்வங்களை வழிபடாமல் ஒரு தெய்வத்தையே வழிபடுகின்ற போதிலும், அந்த ஒரு தெய்வம் மூவராயிருக்கின்றார் என்பது மானிட மொழிகளில் விளக்கப்பட முடியாத, ஆனால் நிஜமான தாற்பரிய மாயுள்ளது. இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது *யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்* என்னும் நூலின் மூன்றாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[2] அதாவது *heis* என்னும் ஆண்பால் பதம் அல்ல. மாறாக *hen* என் னும் ஒன்றன்பால் பதமே உபயோகிக்கப்பட்டுள்ளது.

[3] D.A.Carson, *John:The Pillar New Testament Commentary*, p. 394.

[4] L.Morris, *Expository Reflections on the Gospel of John*. p. 391.

பதம் உபயோகிக்கப்பட்டுள்ளதைக் கருத்திற் கொண்டாலும், அவர்கள் இயேசுகிறிஸ்துவின் கூற்றை, அவரும் பிதாவும் ஒரே நபரல்ல. ஆனால், ஒரே சித்தமுடையவர்கள் என்று விளக்கு கின்றனர். "பிதாவும் குமாரனும் சிந்தையிலும், நோக்கத்திலும் செயலிலும் ஒன்றாயிருக்கிறார்கள்"[5] என்பதே இவர்கள் இயேசு கிறிஸ்துவின் கூற்றுக்கு கொடுக்கும் விளக்கமாகும். இதற்கும் முன்னுள்ள வசனங்களைக் கருத்திற் கொள்ளும்போது இயேசு கிறிஸ்துவின் கூற்றுக்கு இத்தகைய அர்த்தம் உள்ளதென்பதும், அவர் இவ்வுலகில் வாழும் போது பிதாவின் சித்தத்தின்படியே செயற்பட்டு வந்தார் என்பதும் உண்மை என்றாலும், இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் இதைவிட மேலான தெய்வீக இரகசியத்தை வெளிப்படுத்துகின்றன.

"நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்னும் கூற்றினூடாக இயேசுகிறிஸ்து என்ன கூறினார் என்பதை அவருடைய வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் சரியாகப் புரிந்து கொண்டனர். இதனால், உடனடியாக அவர் மீது எறியும்படி அவர்கள் கல்லுகளை எடுத்துக் கொண்டனர் (யோவா.10:31). உண்மையில், நானும் பிதாவும் ஒரே சிந்தையுடையவர்களாய் இருக்கிறோம் என்று சொன்னதற்கு யூதர்கள் அவரைக் கல்லெறிந்து கொல்ல முற்பட்டார்கள் என்று கூறுவது அர்த்தமற்றது. ஏனென்றால், "தேவனுடைய சித்தத்தின்படி செயல்படுவது கல்லெறிந்து கொல்லப்படக் கூடிய அளவுக்குப் பயங்கரமான தேவதூஷணம் அல்ல. தேவ சித்தத்தை அடைவதே யூத மார்க்கத்தின் முக்கிய இலக்காயிருந்தது."[6] யூதர்கள் இயேசுகிறிஸ்துவைக் கல்லெறிந்து கொல்ல முற்பட்ட சந்தர்ப்பங்களை அவதானித்துப் பார்க்கும் போது, அவர் தம்மைத் தேவன் என்று கூறுவதை அவர்கள் புரிந்து கொண்டனர் என்பதை அறிந்திடலாம். "நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன் மேல் கல்லெறிகிறதில்லை. நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி, இவ்விதமாகத் தேவதூஷணஞ் சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகி

[5] F.F.Bruce, *The Gospel of John.* p. 233.
[6] A.Fernando, *The Supremacy of Christ*, pp. 49-50.

றோம்'' என்றே யூதர்கள் குறிப்பிட்டுள்ளனர் (யோவா.10:33). இதிலிருந்து "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்'' என்னும் கூற்றின் மூலம், இயேசுகிறிஸ்து தாம் தேவன் என்று கூறுகின்றார் என்பதை யூதர்கள் அறிந்து கொண்டனர் என்பது தெளிவாகின்றது. இது அவர்களுக்குத் தேவதூஷணமாயிருந்தது. இதனால் தான், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்ட விதமாக, தேவதூஷணம் சொன்ன இயேசுகிறிஸ்துவிற்கு மரண தண்டனை கொடுப்பதற்காக (லேவி.24:16) அவர் மீது எறிவதற்குக் கல்லுகளை எடுத்துக் கொண்டனர்.

இயேசுகிறிஸ்துவின் கூற்றில், "ஒன்றாயிருக்கிறோம்'' என்னும் சொற்பிரயோகம் மூலமொழியில் ஒன்றன்பால் பதமாக இருப்பதனால், இதை "ஒரே பொருளையுடையவர்களாய் இருக்கிறோம்'' என்றே மொழிபெயர்க்க வேண்டும். எனவே, "இயேசுகிறிஸ்துவும் தேவனும் ஒரே தெய்வீகச்சாரம் அல்லது தன்மை உடையவர்கள்''[7] எனபதே இவ்வசனத்தின் அர்த்தமாகும். அதாவது பிதாவாகிய தேவன் தெய்வீகத் தன்மை அல்லது சாரமுடையவராயிருப்பது போலவே இயேசுகிறிஸ்துவும் தெய்வீகத் தன்மையுடையவராய் இருக்கிறார் என்பதையே அவர் அறியத்தருகிறார். "இயேசுகிறிஸ்துவும் தேவனும் இரு நபர்களாக உள்ள போதிலும் ஒரே தன்மையுடையவர்களாக இருக்கின்றனர்''[8] அதாவது, பிதாவைப் போலவே இயேசுகிறிஸ்துவும் தெய்வீகத் தன்மைகளுடைய தேவனாய் இருக்கிறார்.[9]

[7] J.McDowell & B.Larson, *Jesus: A Biblical Defence of His Deity*, p. 94.
[8] W.Hendriksen, *New Testament Commentary: John*. p. 126.
[9] இயேசுகிறிஸ்து தெய்வம் என்பதற்கான வேதாகம ஆதாரங்களை அறிந்து கொள்ளுவதற்கு எனது *இயேசுகிறிஸ்து இறைவனா?* எனும் நூலைப் பார்க்கவும்.

இருபத்துமூன்றாம் அத்தியாயம்

நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்....

(யோவான் 13:14)

தேவனுடைய சில கட்டளைகள், வேதாகமக் காலத்தின் கலாசாரத்தோடு இணைந்துள்ள அறிவுறுத்தல்களாக இருப்பதை நாம் அவதானிக்கலாம். இதற்குக் காரணம், தேவன் மனிதருக்குக் கட்டளைகள் கொடுத்தபோது, அவரது வார்த்தைகளை முதற் தடவை செவிமடுத்தவர்கள் அவற்றை எவ்விதமாகக் கைக் கொள்வார்களோ அவ்விதமாக அவற்றை அறிவித்துள்ளதாகும். உதாரணத்திற்கு, புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் வாழ்த்தும்படி கொடுக்கப்பட்ட கட்டளை, முதலாம் நூற்றாண்டு கிரேக்க ரோமக் கலாசாரத்தில் வாழ்த்துதல் கொடுக் கப்படும் முறைமையை அடிப்படையாகக் கொண்டு, "ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்" (ரோ.16:16, 1கொரி. 16:20, 2கொரி.13:12, 1தெச.5:26, 1பேது.5:14) என்று குறிப்பிடப பட்டுள்ளது.[1] "முத்தமிட்டு வாழ்த்துவது அக்காலத்தில் இருந்த

---

[1] பேதுருவினுடைய நிருபத்தில் "அன்பின் முத்தத்தோடு" வாழ்த்தும்படி இக்கட்டளை உள்ளது. (1பேது.5:14)

சாதாரண வாழ்த்து முறையாகும்."[2] இதனால், ஒருவரையொருவர் வாழ்த்துவதற்கு இத்தகைய முறையைக் கையாளும்படி வேதாகமம் அறிவுறுத்தியுள்ளது.[3] இவ்வேதாகம அறிவுறுத்தல், அக்கால கலாசார முறையின்படியான கட்டளையாக இருப்பதனால், இதை நமது பிரதேசத்தில் பிரயோகிக்கும் போது, நமது கலாச்சாரத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய வாழ்த்து முறையின்படி கைக்கொள்ள வேண்டிய கட்டளையாக உள்ளது. இதனால், இன்று நாம் ஒருவரையொருவர் வாழ்த்தும்போது, நமது கலாசாரத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள முறையின்படி (கைகுலுக்குதல் மூலம், அல்லது கரம்கூப்புதல் முலம்) நமது வாழ்த்துதலைத் தெரிவிகின்றோம். எனவே, கலாசாரத்தோடு சம்பந்தப்பட்ட கட்டளைகளில், அக்கட்டளையை வேதாகமத்தில் சொல்லப்பட்ட விதமாகக்

---

[2] L.Morris, *1&2 Thessalonians: The New International Commentary on the New Testament*, p. 185. "அக்காலத்தில் தாழ்ந்தவர் உயர்ந்தவரை வாழ்த்தும் போது, இருவருக்கும் இடையிலான உறவை அடிப்படையாகக் கொண்டு, கையில் அல்லது மார்பில் அல்லது முழங்காலில் அல்லது பாதத்தில் முத்தமிடும் பழக்கம் இருந்தது. நண்பர்கள் மத்தியில் கன்னத்தில் முத்தமிடும் முறையே இருந்தது. உதட்டில் முத்தமிடும் பழக்கம் பேர்சியர்களிடமிருந்து யூதர்களிடம் வந்ததாகக் கருதப்படுகின்றது. இது கணவன் மனைவிக்கிடையிலான பழக்கமாக இருந்தது" (C.H.Toy, *A Critical and Exegetical Commentary on the Book of Proverbs*, p. 453). மேலும், வீட்டிற்கு வரும் உறவினரையும் விருந்தினரையும் முத்தமிட்டு வரவேற்கும் பழக்கமும் அக்காலத்தில் இருந்தது (ஆதி.29:13, 45:15, லூக்.7:45).

[3] விசுவாசிகள் சபையாக ஒன்றுகூடிவரும் போது, ஒருவரையொருவர் முத்தமிட்டு வாழ்த்தி வரவேற்கும் பழக்கத்தோடு, ஆதிசபையில் திருவிருந்தில் ஜெபங்கள் முடிவடைந்தவுடன் ஒருவரையொருவர் முத்தமிடும் முறையும் இருந்தது (L.Morris, *1&2 Thessalonians: The New International Commentary on the New Testament*, p. 186). ஆனால் பிற்காலத்தில் இத்தகைய பழக்கம் சபையில் சில பிரச்சனைகளை உருவாக்கியமையால், சபைத்தலைவர்கள் இப்பழக்கத்தைக் கைவிடும்படி அறிவுறுத்தினார்கள். ஆரம்பகாலத்தில் சபை வழிபாட்டில் ஆண்கள் ஆண்களையும் பெண்கள் பெண்களையும் முத்தமிட்டு வாழ்த்தும் முறையே பழக்கத்தில் இருந்தது. ஆனால், பிற்காலத்தில் ஆண் பெண் வேறுபாடின்றி இப்பழக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டமையால், பிரச்சனைகள் ஏற்படத் தொடங்கின (R.H.Creswell, ed., *The Liturgy of the Eighth Book of the Apostolic Constitutions*, p. 51; J.G.Davies, ed., *A Dictionary of Liturgy and Worship*, pp. 187-188).

கைக்கொள்ளாமல், அக்கட்டளையை நமது பிரதேசக் கலாசாரத்தில் எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியுமோ அவ்வாறு கைக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது.[4]

யோவான் எழுதிய சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இயேசு கிறிஸ்துவினுடைய கட்டளைகளில், அக்கால கலாசாரத்தோடு சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல் 13:14ல் குறிப்பிடப்பட்டுள்ளது. சீடர்களோடு ஒன்றாக இருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த இயேசு கிறிஸ்து அவர்களுடைய கால்களைக் கழுவி, "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" (யோவா.13:14) என்று அறிவித்துள்ளார். இக்கட்டளை இயேசுகிறிஸ்து தம் சீடர்களோடு பங்கேற்ற கடைசி இராப்போஜனத்தின் போது கொடுக்கப்பட்டுள்ளமையால்,[5] அன்றைய தினம் அவரால் ஏற்படுத்தப்பட்ட திருவிருந்து முறையைப் போலவே, கால்களைக் கழுவுதலும், சபை பின்பற்ற வேண்டிய ஒரு காரி

[4] வேதாகமக் கால கலாசாரத்தோடு சம்பந்தப்பட்ட கட்டளைகளை நாம் இவ்வாறு வியாக்கியானம் செய்தே நம் வாழ்வுக்கு அவற்றைப் பிரயோகிக்க வேண்டும்.

[5] இச்சம்பவம் இயேசுகிறிஸ்து தமது சீடர்களோடு பங்கேற்ற கடைசி இராப்போஜனமாகவே பொதுவாகக் கருதப்படுகின்றது. ஆனால், அப்போஜனத்தின்போது இயேசுகிறிஸ்து திருவிருந்து நடைமுறையை ஏற்படுத்தியதை முதல் மூன்று சுவிசேஷங்களும் அறியத்தருகின்றன (மத்.26:17-30, மாற்.14:12-26, லூக்.22:7-30). ஆனால், யோவான், திருவிருந்தைப் பற்றி எதுவும் இவ்வதிகாரத்தில் குறிப்பிடாதமையால், இது கடைசி இராப்போஜன சம்பவம் அல்ல என்று சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். முதல் மூன்று சுவிசேஷங்களிலும், கடைசி இராப்போஜனம் "பஸ்கா போஜனம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது (மத்.26:17, 26:19-20, மாற்.14:12, 14:16-17, லூக்.22:7, 22:13-14). ஆனால், யோவான் இதை "பஸ்கா போஜனம்" என்று கூறாமல், "போஜனம்" என்று மட்டும் குறிப்பிட்டுள்ளதும் (யோவா.13:2) இதற்கான ஆதாரமாய் உள்ளதாகக் கருதப்படுகின்றது. (J.R.Michaels, *John: New International Biblical Commentary*, pp. 237, 245). ஆனால், யோவான் திருவிருந்தைப் பற்றி குறிப்பிடாததற்குக் காரணம், ஏற்கனவே எழுதப்பட்டிருந்த முதல் மூன்று சுவிசேஷங்களிலும் இதைப் பற்றி விபரமாகக் குறிப்பிடப்பட்டிருந்தமையால், இதைப் பற்றி எழுதாமல், அவற்றில் எழுதப்படாத இச்சம்பவத்தை அவர் விபரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

யமாக இருப்பதாகச் சில கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். இதற்கு அடுத்த வசனத்தில், "நான் உங்களுக்குச் செய்தது போல, நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவா.13:15) என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளது இதை உறுதிப்படுத்துவதாகவும் கருதப்படுகின்றது. இதனால், சில சபைகளில் கால்களைக் கழுவும் செயலும் ஒரு சடங்காசாரமாக உள்ளது.[6]

சில வேத ஆராய்ச்சியாளர்கள் 10ம் வசனத்திலுள்ள இயேசு கிறிஸ்துவின் கூற்றில் "முழுகினவன்" என்னும் பதத்தை ஞானஸ் நானத்திற்கான அடையாளமாகவும்,[7] கால்களைக் கழுவுவதை திருவிருந்திற்கான அடையாளமாகவும் கருதுகின்றனர். ஞானஸ் நானம் என்னும் முழுக்கின் மூலம் பாவங்கள் சுத்திகரிக்கப்பட்டு இயேசுகிறிஸ்துவினுடையவனாகும் ஒருவன், அதன்பின்னர் செய் யும் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்படுவதற்காக திருவிருந்தில் பங்கேற்கின்றான். இதுவே கால்கள் கழுவப்படுதலாக உள்ளது என்பதே இவர்களுடைய கருத்தாகும்.[8] ஆனால், பெரும்பாலான வேதஆராய்ச்சியாளர்கள், கால்களைக் கழுவுவதையே ஞானஸ் நானம் என்று கூறுகின்றனர்.[9] இச்சம்பவம் சீடர்களின் ஞானஸ்நான மாய் இராவிட்டால், அவர்கள் ஞானஸ்நானம் பெறாதவர்களாகவே இருப்பார்கள் என்பது இவர்களின் தர்க்கமாக உள்ளது.[10] எனி னும் கால்களைக் கழுவி ஞானஸ்நானம் கொடுக்கும் முறை

[6] E.Hoskyns, *The Fourth Gospel*, pp. 443-446.

[7] 10ம் வசனத்தில இயேசுகிறிஸ்து பேதுருவிடம், "முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்" என்றார்.

[8] O.Cullmann, *Early Christian Worship*, pp. 108-109.

[9] B.Westcott, *John:Greek Text with Introduction & Notes Vol. 2*, p. 150

[10] C.H.Dodd, *The Interpretation of the Fourth Gospel*, p. 401; C.K.Barrett, *The Gospel According to St.John*, p. 436; R.E.Brown: *John: The Anchor Bible Commentary*, pp. 566-568; J.N.Sanders, *The Fourth Gospel and the Early Church*, p. 306. சீடர்களை அப்போஸ்தலப் பணிக்கு அபிஷேகிக்கும் செயலாக இயேசுகிறிஸ்து அவர்களுடைய கால்களைக் கழுவியதாகவும் சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர் (Cited in G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Vol 36*, p. 235).

அக்காலத்தில் இருந்ததற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. மேலும், சீடர்களின் ஞானஸ்நானம் பற்றி வேதாகமத்தில் குறிப் பிடப்படாததினால், அவர்கள் ஞானஸ்நானம் பெறவில்லை என்று கருதுவதும் தவறாகும். எனினும், இயேசுகிறிஸ்து சீடர்களின் கால்களைக் கழுவிய செயலை அவர்களுடைய ஞானஸ்நானமா கக் கருத முடியாது.

ஞானஸ்நானமும் திருவிருந்தும் கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை அனுபவங்களுக்கான வெளிப்படையான விவரணங்களாக இருப் பதனால், இவற்றை பாவமன்னிப்பை அருளும் செயல்களாகவும், இதைச் சுட்டிக்காட்டும் அடையாளச் செயலாகவே இயேசு கிறிஸ்து சீடர்களின் பாதங்களைக் கழுவிய செயல் உள்ளதாக வும் கூறுவது அர்த்தமற்றது. இயேசுகிறிஸ்துவின் செயலை ஞானஸ்நானத்திற்கான அடையாளமாக விளக்குபவர்கள், "தண் ணீர்" என்னும் வார்த்தை இடம்பெறும் சகல வசனங்களையும் ஞானஸ்நானத்தைப் பற்றிய குறிப்பாகக் கருதுவதனால்,[11] இவ்வி ளக்கம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. மேலும், இயேசு கிறிஸ்துவின் உபதேசமே சீடர்களைச் சுத்திகரித்துள்ளதாக யோவான் 15:3ல் அவர் குறிப்பிட்டுள்ளமையால், ஞானஸ்நானம் இத்தகைய செயலைச் செய்வதாகக் கூறுவது வேதாகம சத்தி யத்திற்கு முரணான விளக்கமாகவே இருக்கும். இயேசுகிறிஸ்து யூதாசின் கால்களையும் கழுவினார். ஆனால் அவன் சுத்திகரிக் கப்படவில்லை.[12] எனவே, சீடர்களின் கால்களைக் கழுவும் இயேசுகிறிஸ்துவின் செயல் மானிட பாவங்களைக் கழுவும்

---

[11] இவர்கள் யோவான் 4:14, 7:37-38 போன்ற வசனங்களிலும் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிப்பதாகக் கருதுகின்றனர். (O.Cullmann, *Early Christian Worship*, pp. 82). ஆனால், இவ்வசனங்களில் "தண்ணீர்" ஞானஸ்நானத்தைக் குறிக்கவில்லை. இதைப் போலவே யோவான் 13 லும் தண்ணீர் ஞானஸ்நானத்திற்கான விவரணம் அல்ல.

[12] எந்த ஒரு சடங்காசாரச் செயலுக்கும் ஆவிக்குரிய சுத்திகரிப்பைத் தரக்கூடிய வல்லமை இல்லை என்பதை இச்சம்பவம் அறியத்தருகின்றது. இயேசுகிறிஸ்துவினால் கழுவப்பட்ட யூதாஸ் சுத்திகரிக்கப்படாதவனாக இருப்பதனால், சடங்காசாரங்களை எவர் செய்தாலும், அவர் எவ்வளவு பெரிய ஊழியராக இருந்தாலும் அச்சடங்காசாரங்களினால் மனிதனில்

ஞானஸ்நானமாக இருப்பதாகக் கூறமுடியாது. மேலும், ஞானஸ் நானத்திற்குப் பாவங்களைக் கழுவும் சக்தி இருப்பதாகக் கூறுவ தும் தவறாகும். இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலிக்கு மட்டுமே மானிட பாவங்களை மன்னிப்பதற்கும் அவற்றைக் கழுவிச் சுத்திகரிப்பதற்கும் வல்லமை இருக்கின்றது (1யோவா.1:7).[13] இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவனுடைய வாழ்வில் தேவன் தமது ஆவியானவர் மூலம் செய்யும் செயல்களுக்கான வெளிப் படையான அடையாளமாகவே கிறிஸ்தவ ஞானஸ்நானம் இருப்ப தனால், ஞானஸ்நானத்தை பாவமன்னிப்பினதும் ஆவிக்குரிய சுத்திகரிப்பினதும் செயலாகக் கருதமுடியாது.[14] அதேபோல, கால்களைக் கழுவியதைத் திருவிருந்திற்கான அடையாளமாகக் கருதுவதும் எவ்வித அர்த்தமும் ஆதாரமும் அற்ற ஒரு விளக்க மாகவே உள்ளது.

இயேசுகிறிஸ்து சீடர்களின் கால்களைக் கழுவியதை ஞானஸ் நானத்திற்கான அடையாளமாக ஏற்றுக்கொள்ளாத வேத ஆராய்ச் சியாளர்களில் சிலர், இதை இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலிக்கான அடையாளமாகக் கருதுகின்றனர். இயேசுகிறிஸ்துவிற் கும் பேதுருவிற்கும் இடையிலான உரையாடல் இதையே அறி யத்தருவதாக இவர்கள் கூறுகின்றனர்.[15] இயேசுகிறிஸ்து சீடர்க ளின் கால்களைக் கழுவத் தொடங்கியபோது, பேதுரு "ஆண்ட வரே நீர் என் கால்களைக் கழுவலாமா" என்று கேட்டதோடு, "நீர் என் கால்களைக் கழுவப்படாது" என்று கூறியபோது, நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப்

எவ்வித ஆவிக்குரிய மாற்றத்தினையும் கொண்டுவர முடியாது என்பதை இச்சம்பவம் நமக்கு அறியத்தருகின் றது (D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 466).

[13] 1யோவான் 1:7ல், "இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது"

[14] மேலதிக விளக்கத்திற்கு இந்நூலின் 3ம் அத்தியாயத்தில் "ஜலத்தினா லும் ஆவியினாலும் பிறத்தல்" என்னும் வசனத்திற்கான விளக்கத்தைப் பார்க்கவும்.

[15] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 613.

பங்கில்லை'' என்று இயேசுகிறிஸ்து கூறினார் (யோவா.13:6-8). இதனால் பேதுரு, “ஆண்டவரே என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும் என் தலையையும்கூடக் கழுவ வேண்டும்'' என்று கேட்க, இயேசுகிறிஸ்து, “முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும். மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்'' என்று தெரிவித்தார் (யோவா.13:9-10). இயேசுகிறிஸ்துவின் இரத்தமே மனிதரைப் பாவங்களிலிருந்து கழுவிச் சுத்திகரிப்பதனால், “முழுகினவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்'' என்னும் விவரணம், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியின் மூலம் சுத்திகரிக்கப்படுவதற்கே பொருத்தமானதாக இருப்பதாக இவர்கள் கூறுகின்றனர்.[16] அதேபோல, “நான் உன்னை கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை'' என்று இயேசுகிறிஸ்து பேதுருவிடம் கூறுவதும் (யோவா.13:8), “ஒருவனுடைய பாவத்தை இயேசுகிறிஸ்து அவனிலிருந்து அகற்றி, அவனைக் கழுவிச் சுத்திகரிக்காவிட்டால், இயேசுகிறிஸ்துவோடு அவனுக்குப் பங்கில்லை''[17] என்னும் அர்த்தத்தோடு இவர்களினால் விளக்கப்படுகின்றது. இதனால், இயேசுகிறிஸ்து சீடர்களின் கால்களைக் கழுவிய செயல் அவருடைய சிலுவைப் பலிக்கான அடையாளமாக இருப்பதாகக் கருதப்படுகின்றது.[18] எனினும், முழுகுதலும், பாதங்களைக் கழுவுதலும் தனிப்பட்ட இரண்டு செயல்களாகவே இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டிருப்பதனால் இவ்விளக்கம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை.[19] அதாவது, இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளில்

---

[16] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 613. இயேசுகிறிஸ்து போஜனத்தின் நடுவில் சீடர்களின் கால்களைக் கழுவியமையால், இதை அக்காலத்தில் வழமையாக நடைபெறும் செயலாக, அதாவது, வீட்டிற்கு விருந்தினர்கள் வரும் போது, அவர்கள் வீட்டுக்குள் வருவதற்கு முன் அவர்களது கால்களைக் கழுவி வரவேற்கும் செயலாகக் கருதமுடியாது என்பது இவர்களது தர்க்கமாக உள்ளது (*Ibid*. p. 612).

[17] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 464.

[18] G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Vol. 36*, p. 233.

[19] இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலிக்கான அடையாளமாக அவருடைய செயலைக் கருதுபவர்கள், முழுகுதலும் கால்களைக் கழுவுதலும்

“முழுகுதல்” அவரது இரத்தத்தின் மூலமாக சுத்திகரிக்கப்படுவதாகக் கூறும் இவர்கள், கால்களைக் கழுவுவதையும் சிலுவைப் பலிக்கான அடையாளம் என்று கூறுவது அர்த்தமற்ற விளக்கமாகவே உள்ளது.[20] மேலும் சீடர்கள் ஏற்கனவே சுத்தமாக இருப்பதாகவும், கால்களை மட்டும் கழுவினால் போதும் என்று இயேசுகிறிஸ்து கூறுவதனால் (யோவா.13:10), அவருடைய கூற்று கால்களைக் கழுவும் செயலைப் பற்றிய விவரணமாக இருக்கின்றதே தவிர, இதில் சிலுவைப் பலியைப் பற்றிய அர்த்தம் இல்லை என்பது தெளிவாகின்றது. சீடர்களின் கால்களைக் கழுவிய இயேசுகிறிஸ்து, அவர்களையும் தம்மைப் போல மற்றவர்களுடைய கால்களைக் கழுவும்படி அறிவுறுத்துவதனால் (யோவா.13:15), இதை எவ்விதத்திலும் சிலுவைப் பலிக்கான அடையாளமாகக் கருதமுடியாது. இது சிலுவைப்பலி என்றால், சீடர்களையும் அவ்வாறு பலியாகும்படி இயேசுகிறிஸ்து சொல்வதாகவே 15ம் வசனத்தை நாம் வியாக்கியானம் செய்ய வேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் செயல், அதாவது அவர் சீடர்களின் கால்களைக் கழுவியது, அக்காலத்தில் அடிமைகள் செய்யும் சாதாரணமான ஒரு செயலாக இருந்தது. மேலும், இச்சம்பவம் கடைசி இராப்போஜனத்தின் போது நடைபெற்றமையால், அச்சந்தர்ப்பத்தில் நடைபெற்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டே இயேசுகிறிஸ்துவின் செயலை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். கடைசி இராப்போஜனத்தின் போது சீடர்கள், தங்களில் எவன் பெரியவன் என்று தர்க்கம் பண்ணிக்கொண்டிருந்தார்கள் (லூக்.

ஒன்றையே குறிப்பதாகக் கூறுகின்றனர் (*Ibid*. p. 234). ஆனால் இது ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கம் அல்ல.

[20] “நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்று, கால்களைக் கழுவும் செயலை மட்டும் குறிப்பதாக இல்லை. அது பாவங்களைக் கழுவுவதையும் உள்ளடக்கியுள்ளது” (L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 617) என்று இவர்கள் கூறினாலும், இயேசுகிறிஸ்து சீடர்களின் கால்களைக் கழுவிய செயல், வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளது என்று கூறுவதற்கில்லை.

22:24). இதனால், உண்மையிலேயே "யார் பெரியவன்?" என்பதை அவர்களுக்கு காண்பிப்பதற்காக இயேசுகிறிஸ்து சீடர்களின் கால்களைக் கழுவினார். லூக்காவின் சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து அச்சமயம் சீடர்களுக்கு கூறிய விடயங்கள் எழுதப்பட் டிருக்கையில் (லூக்.22:25-27), யோவான், இயேசுகிறிஸ்துவினு டைய செயலைக் குறிப்பிட்டுள்ளார். லூக்காவின் சுவிசேஷத்தில் "உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன். பந்தியிருக்கிற வனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியி ருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்" (லூக்.22:26-27) என்னும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் உள்ளன. ஆனால் யோவான் இதற்குப் பதிலாக, இயேசுகிறிஸ்து அச்சமயம் செய்த செயலை (அதாவது, அவர் சீடர்களின் கால்களைக் கழுவிய தைக்) குறிப்பிட்டுள்ளார். எனவே, இயேசுகிறிஸ்துவினுடைய இச்செயல், தங்களில் யார் பெரியவன் என்னும் சீடர்களின் தர்க்கத்திற்கான பதிலாகவே உள்ளது. "பெரியவன் சிறியவ னைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்" (லூக்.22:26) என்று கூறிய இயேசுகிறிஸ்து அதைச் சீடர்களின் பாதங்களைக் கழுவும் செயலின் மூலம் செய்து காட்டியுள்ளார்.

இயேசுகிறிஸ்து "வஸ்திரங்களைக் கழற்றி வைத்து,[21] ஒரு சீலையை எடுத்து, அரையிலே (இடுப்பிலே) கட்டியபடி" சீடர்க ளின் கால்களைக் கழுவியதாக யோவான் குறிப்பிட்டுள்ளார்

[21] வேதாகமத்தில், வஸ்திரங்களைக் கழற்றுவதைப் பற்றிய குறிப்புகள் "மேல் வஸ்திரத்தைக்" கழற்றும் செயல்முறையையே குறிக்கின்றன. அதேபோல, "சீலை" என்று இவ்வசனத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பதம் இக்காலத்தில் உள்ள சேலை அல்ல. புதிய இலகுதமிழ் மொழி பெயர்ப்பில் இவ்வசனம், "தமது மேலுடையைக் கழற்றி வைத்து விட்டு, இடுப்பிலே ஒரு துவாயைக் கட்டிக்கொண்டார்" என்று குறிப்பிடப்பட் டுள்ளது. திருவிவிலியத்திலும் இவ்விதமாகவே இவ்வசனம் மொழிபெயர்க் கப்பட்டுள்ளது. ஆனால், "துவாய்" என்பதற்குப் பதிலாக "ஒரு 'துண்டை' எடுத்து இடுப்பிலே கட்டிக்கொண்டார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(யோவா.13:4). யூதர்களுடைய கலாச்சாரத்தில் இடுப்பில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டிருப்பது இழிவான நிலையைக் குறிக்கும் அடையாளமாகும்.[22] மேலும், விருந்தினர்களை வீட்டுக்குள் வரவேற்கும் போது, அவர்களுடைய கால்களைக் கழுவுவது அக்கால மக்களுடைய பழக்கமாக இருந்தது (1சாமு.25:41, லூக்.7:40-50). விருந்தினர்கள் தங்கள் வீட்டிலேயே குளித்துவிட்டு வருவதனால் கால்களைக் மட்டும் கழுவுவது போதுமானதாய் இருந்தது. இதனால்தான் "முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும்" (யோவா.13:10) என்று இயேசுகிறிஸ்து கூறினார்.[23] எனவே, இதை ஞானஸ்நானமாகக் கருதுவது அர்த்தமற்றது. மேலும், அக்காலத்தைய மண் பாதைகள் கால்களை அழுக்காக்குவதனால், வீட்டுக்குள் செல்வதற்கு முன்னர் அவற்றைக் கழுவவேண்டியதாய் இருந்தது. எனினும், இது புறஜாதி அடிமைகளினதும் பெண்களினதும் பணியாகவே இருந்தது.[24] யூத ஆண்கள் ஒருபோதும் இவ்வேலையைச் செய்ய மாட்டார்கள். எனவே இயேசுகிறிஸ்து தம் சீடர்களின் கால்களைக் கழுவியது, அவர் தம்மை ஒரு அடிமையின் நிலைக்குத் தாழ்த்தி அவர்களுக்குப் பணி புரிந்துள்ளதையே சுட்டிக்காட்டுகிறது.[25]

சீடர்களின் கால்களை கழுவிய இயேசுகிறிஸ்து "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" என்று குறிப்பிட்டதோடு, "நான் உங்களுக்குச் செய்தது

---

[22] G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Vol. 36*, p. 233.

[23] "முழுகுதல்" என்பது "குளித்தல்" என்று திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் வாழும் சில பிரதேசங்களில் "முழுகுதல்" என்னும் பதம் "தலையில் குளித்தல்" என்னும் அர்த்தத்துடன் உபயோகிக்கப்படுகின்றது. ஆனால், அப்பிரதேசங்களில் "குளித்தல்" என்பது "உடம்பைக் கழுவுதல்" என்னும் அர்த்தத்தை மட்டுமே கொண்டுள்ளது. ஆனால் இயேசுகிறிஸ்து உபயோகித்துள்ள வார்த்தை "தலையில் குளித்தல்" என்னும் அர்த்தமுடையது.

[24] அக்கால யூதர்கள் பெண்களைத் தாழ்வானவர்களாகவே கருதினார்கள்.

[25] பிலிப்பியர் 2:6-8ன் விவரணமாக இயேசுகிறிஸ்துவின் செயல் இருப்பதாகக் கருதப்படுகின்றது.

போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" என்றும் அறிவுறுத்தியுள்ளார் (யோவா.13:14-15). 15ம் வசனத்தில் இயேசுகிறிஸ்து தமது செயலை "மாதிரியாக" அதாவது, "உதாரணமாகக் காண்பிக்கப்பட்ட" செயலாகக் குறிப்பிட்டுள்ளமையால், இது ஒரு உதாரணச் செயல் என்பதையும், நாம் அப்படியே பின்பற்ற வேண்டிய செயல் அல்ல என்பதையும் அறிந்து கொள்ளுகின்றோம். ஆனால், இயேசுகிறிஸ்து திருவிருந்தைப் பற்றி கூறும் போது, அதை மாதிரியாகக் காண்பிக்காமல், "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டுள்ளார் (1கொரி.11:24-25). இதனால்தான், கிறிஸ்தவ சபை திருவிருந்தை இன்றுவரை கைக்கொண்டு வந்துள்ளது. ஆனால், சீடர்களின் கால்களைக் கழுவும் செயல், தாழ்மையின் சேவைக்கான ஒரு உதாரணமாக உள்ளது. இயேசுகிறிஸ்து தம்மை ஒரு அடிமையின் நிலைக்குத் தாழ்த்தி, சீடர்களின் கால்களைக் கழுவியது போலவே, கிறிஸ்தவர்களாகிய நாமும் ஒருவருக்கொருவர் சேவை செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். யூதர்களுடைய கலாசாரத்தில் தாழ்மையின் சேவையை வெளிப்படுத்தக் கூடிய செயலாகக் கால்களைக் கழுவுதல் இருந்தது. ஆனால், நமது கலாசாரத்தில் மற்றவர்களுக்கு தாழ்மையின் சேவையை எவ்வாறு செய்ய முடியும் என்பதை ஆராய்ந்து பார்த்து அதை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டியது நமது கடமையாக உள்ளது.[26]

[26] ஆங்கிலக் கலாச்சாரத்தில் மற்றவருடைய சப்பாத்தைச் சுத்தமாக்கும் செயல் தாழ்மையின் சேவைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது (F.F.Bruce, *The Gospel of John*, pp. 285).

இருபத்துநான்காம் அத்தியாயம்

ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்....

(யோவான் 14:2)

இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில், இன்று பொதுவாகக் கிறிஸ் தவர்களினால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கும் கடின மான வசனங்களில் ஒன்று, அவர், தம் சீடர்களை விட்டுப்பிரிந்து செல்வதைப் பற்றி கூறியதோடு சம்பந்தப்பட்டுள்ளது. யோவான் 14:2ல் குறிப்பிடப்பட்டிருக்கும் இவ்வசனத்தில், “என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந் தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்” என்று அவர் தெரிவித்துள்ளார் (யோவா.14:2). இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் பரலோகத்தையே “பிதாவின் வீடு” என்று குறிப்பிட்டுள்ளார் என்பதில் கிறிஸ்தவர்களுக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.[1]

---

[1] யோவான் 2:6ல் இயேசுகிறிஸ்து எருசலேம் தேவாலயத்தையே பிதாவின் வீடு என்று குறிப்பிட்டுள்ள போதிலும், இங்கு பரலோகத்தையே இவ்வாறு வர்ணித்துள்ளார்.

வாசஸ்தலங்களைக் குறிக்கும் "மொநாய்" (*monai*) என்னும் கிரேக்கப் பதம், யோவான் சுவிசேஷத்தில் அடிக்கடி இடம் பெறும் "நிலைத்திருத்தல்" என்று அர்த்தந்தரும் "மெநோ" (*meno*) என்னும் கிரேக்கப் பதத்துடன் தொடர்புற்றுள்ளது.[2] இதிலிருந்து, இயேசுகிறிஸ்து தம்மோடு மக்கள் நிரந்தரமாக வாசஞ் செய்யும் நிலையைப் பற்றியே இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது.

பரலோகத்தில் "அநேக வாசஸ்தலங்கள் உண்டு" என்றும் இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார். இது "ஒரு பெரிய மாளிகையில் பல குடும்பங்கள் வாழக்கூடிய விதத்தில் இருப்பிடங்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டும் விவரணமாகும்."[3] எனினும் மூல மொழியில் இயேசுகிறிஸ்து உபயோகித்த வார்த்தை இத்தகைய அர்த்தம் தரும் பதம் அல்ல. ஏனென்றால், "அநேக வாசஸ்தலங்கள்" என்னும் சொற்பிரயோகம் புதிய ஏற்பாட்டின் லத்தீன் மொழிபெயர்ப்பிலிருந்தே வந்துள்ளது.[4] மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "மொனே" (*mone*) என்னும் கிரேக்கப் பதம், "நிரந்தரமான இருப்பிடத்தையே குறிக்கின்றது."[5] இதனோடு "அநேக" என்னும் பதம் சேர்க்கப்பட்டுள்ளமையால், "பரலோகத்தில் போதியளவு இடம் இருக்கின்றது"[6] என்பதையே இவ்வாக்கியம் அறியத்தருகின்றது. இது, "ஒவ்வொருவருக்கும் தனித்தனி

---

[2] G.M.Burge, *John: The NIV Application Commentary*, p. 391.
[3] G.R.Beasley-Murray, *Word Biblical Commentary: John*. p. 249.
[4] கி.பி.382 முதல் 405 வரையிலான காலப்பகுதியில் ஜெரோம் என்பார் வேதாகமத்தை லத்தீன் மொழியில் மொழிபெயர்க்கும்போது, கிரேக்கத்தில் உபயோகிக்கப்பட்டிருந்த பதத்தின் அர்த்தத்தைத் தரும் லத்தீன் மொழிப் பதத்தை உபயோகிக்காமல் "மொனே" (*mone*) என்னும் கிரேக்கப் பதத்தை *mansiones* என்று லத்தீனில் குறிப்பிட்டமையால், சில ஆங்கில மொழிபெயர்ப்புகளும் (KJV மற்றும் AV மொழிபெயர்ப்புகள்) லத்தீன் மொழிப்பதத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பதத்தை "மான்ஷன்" (mansions) என்று குறிப்பிட்டுள்ளன. நம் தமிழ் வேதாகமம் KJV ஆங்கில மொழிபெயர்ப்புக்கு ஏற்றவிதமாகவே மொழிபெயர்க்கப்பட்டுள்ளமையால் "அநேக வாசஸ்தலங்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது..
[5] R.C.H.Lenski, *The Interpretation of St.John's Gospel*. p. 970.
[6] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 489.

யான அறைகள் அல்லது வீடுகள் இருக்கின்றது என்னும் அர்த்தமுடைய பதம் அல்ல."[7] உலகத்தில் இரட்சிக்கப்படுகின்ற அனைவரும் இருக்கக் கூடிய அளவுக்குப் பரலோகத்தில் போதியளவு இடம் இருக்கின்றது என்பதையே இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். ஏனென்றால், "பரலோகத்திற்கு எவ்வளவு திரளான மக்கள் சென்றாலும் எவருக்கும் இடமில்லாமற் போகாத அளவுக்கு அதிக இடம் உண்டு என்பதை அறியத்தரும் விவரணமாக இது உள்ளது."[8]

உண்மையில், விசுவாசிகள் அனைவரும் நிரந்தரமாக இருப்பதற்குப் போதியளவு இடம் பரலோகத்தில் இருக்கிறது என்பதை அறியத்தந்த இயேசுகிறிஸ்து, "உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப் போகிறேன்" என்று கூறியதே இன்றைய கிறிஸ்தவ உலகில் அதிக சர்ச்சைக்குரிய விடயமாயுள்ளது. ஏனென்றால் இயேசுகிறிஸ்து பரலோகத்திற்குப் போய் இரண்டாயிரம் வருடங்களாகி விட்டன. எனவே, ஒன்றுமில்லாததிலிருந்து நாம் வாழும் பிரபஞ்சத்தை ஒரே நாளில் சிருஷ்டித்த[9] இயேசுகிறிஸ்துவினால்[10] இன்னும் நமக்காக ஒரு ஸ்தலத்தை பரலோகத்தில் ஆயத்தம்பண்ண முடியாதிருக்கிறதா? என்பது அநேகரது கேள்வியாக உள்ளது. இயேசுகிறிஸ்துவின் கூற்றிலுள்ள ஆரம்ப வாக்கியம், "அதாவது பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு" என்னும் வசனம், ஏற்கனவே பரலோகத்தில் வாசஸ்தலங்கள், அதாவது நிரந்தர இருப்பிடம் இருப்பதையே சுட்டிக்காட்

[7] J.R.Michaels, *John: New International Biblical Commentary*, p. 267.
[8] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 489.
[9] ஆதியாகமம் 1:1ன்படி ஆரம்பத்தில் தேவன் மட்டுமே இருந்தார் வேறெதுவும் இருக்கவில்லை. ஒன்றுமே இல்லாதிருந்தும் பிரபஞ்சமனைத்தையும் தேவன் சிருஷ்டித்துள்ளார். மேலும், ஆதியாகமம் 1:1ன் சிருஷ்டிப்பு ஆரம்ப சிருஷ்டிப்பாகும். அதன் பின் ஆறு நாட்களாக பிரபஞ்சத்தை ஒழுங்குபடுத்தவும் நிரப்பவும் அதிலிருப்பவைகளைச் சிருஷ்டித்துள்ளார்.
[10] உலக சிருஷ்டிப்பு திரித்துவ தேவனின் செயலாகும். எனவே, பிதா மட்டுமல்ல குமாரனும், பரிசுத்த ஆவியானவரும் சிருஷ்டிப்பில் ஈடுபட்டுள்ளனர். இயேசுகிறிஸ்து சிருஷ்டிகர் என்பது யோவான் 1:3, 1கொரிந்தியர் 8:6, கொலோசெயர் 1:15-16, எபிரேயர் 1:2 போன்ற வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டுகிறது. "அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லி யிருப்பேன்" என்னும் அவரது கூற்று இதை உறுதிப்படுத்துகின் றது. எனவே, "இல்லாத ஒன்றை உருவாக்குவதற்காக இயேசு கிறிஸ்து போகவில்லை. இருக்கின்ற வாசஸ்தலத்தையே ஆயத் தம் பண்ண அவர் போகின்றார்"[11] என்பது இதிலிருந்து தெளிவா கின்றது. இதனால் 3ம் வசனத்தில் இயேசுகிறிஸ்து குறிப்பிட் டுள்ள வருகை, அதாவது, "நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" என்னும் கூற்று எதைக் குறிக்கின்றது என்பது பற்றியும் வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.[12]

யோவான் 14ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து தாம் போவதை யும், மறுபடியும் வருவதையும் பற்றி கூறும்போது, வித்தியாசமான விடயங்களை வித்தியாசமான அர்த்தத்தில் குறிப்பிட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம். உதாரணத்திற்கு, இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் தம்முடைய சீடர்களிடம் திரும்பி வருவதைப் பற்றியும், பரமேறிச் சென்றதன் பின்னர் பரிசுத்த ஆவியானவர் மூலமாக அவர்களிடம் வருவது பற்றியும், உலக முடிவில் மறுபடியும் திரும்பி வருவதைப் பற்றியும் இவ்வதிகாரத் தில் அறிவித்துள்ளார் (யோவா.14:2-3, 14:18-20, 14:22-23 ஒப்பி

[11] R.C.H.Lenski, *The Interpretation of St.John's Gospel*. p. 971.
[12] சில வேத ஆராய்ச்சியாளர்கள் பிதாவின் வீட்டைத் தேவனுடைய சபையாகக் கருதுவதோடு அவர் சீடர்களை விட்டுச் செல்வதை பரமேறுத லாகவும், அடுத்த வசனத்தில் இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ள மறுவருகை யை, ஆவியானவராக அவர் சபைக்கு வந்ததையும் குறிப்பிடுவதாக விளக்குகின்றனர். (R.H.Gundry, "In My Father's House Are Many Monai" p. 69-71 Quoted in G.R.Beasley-Murray, *Word Biblical Commentary: John*. p. 249). எனினும் சபையானது வேதத்தில் தேவனுடைய ஆலயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, அதைப் பிதாவின் வீடாக எவரும் உவமிக்கவில்லை. மேலும், பரிசுத்த ஆவியானவரை இயேசுகிறிஸ்து "வேறொரு தேற்றரவாளன்" (யோவா.14:16) என்று குறிப்பிட்டுள்ளமையால், இயேசுகிறிஸ்துவே ஆவியானவராக வந்தார் என்று கூறுவது அர்த்தமற்ற ஒரு விளக்கமாகவே உள்ளது. மேலும், பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி சாட்சி கொடுப்பவராகவும் (யோவா.16:26) இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துபவராகவும் (யோவா.16:14) இருப்பதனாலும் இவ்விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

டுக). இதனால் சில வேத ஆராய்ச்சியாளர்கள், இயேசுகிறிஸ்து யோவான் 14:2-3லும் ஒன்றுக்கும் மேற்பட்ட வருகைகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளதாகக் கருதுகின்றனர்.[13]

உண்மையில், யோவான் 14ம் அதிகாரத்தில், தாம் மறுபடியும் வருவதைப் பற்றி இயேசுகிறிஸ்து பல தடவைகள் தெரிவித்துள்ள போதிலும் (யோவா.14:18-19,28), அவர் எல்லா இடங்களிலும் தமது இரண்டாவது வருகையைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளார் என்று கூறுவதற்கில்லை. மேலும், "அவர் தமது வருகையை ஒன்றுக்கும் மேற்பட்ட அர்த்தங்களுடனும் குறிப்பிட்டுள்ளார்"[14] என்பதையும் மறுப்பதற்கில்லை. உண்மையில், "யோவான் 14:2-3ல் இயேசுகிறிஸ்துவின் வருகையானது ஒன்றுக்கும் மேற்பட்ட வருகைகளைக் குறிக்கின்றது."[15] "நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்" (யோவா.14:3) என்னும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள், "அவரது இரண்டாவது வருகையையே குறிக்கின்றது"[16] என்பது உண்மை என்றாலும், அவர் தமது உயிர்த்தெழுதலின் பின்னர் சீடர்களிடம் வருவதையும் உள்ளடக்கியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. யோவான் 14:18-19லும் இவ்விரு அர்த்தங்களும் இருப்பதை நாம் அவதானிக்கலாம். இயேசுகிறிஸ்து தமது சீடர்களைத் திக்கற்றவர்களாக விட்டுச் செல்லாமல் கொஞ்சகாலத்தில் வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் சீடர்களிடம் வந்தது மட்டுமல்ல, உலக முடிவில் மறுபடியுமாக வருகிறவராகவும் இருக்கின்றார்.

யோவான் 14:3ல் குறிப்பிடப்பட்டுள்ள இயேசுகிறிஸ்துவின் வருகையை அவரது இரண்டாவது வருகையாக மட்டும் கருதி

---

[13] B.F.Westcott, *John: The Greek Text with Introduction & Notes Volume. 2*, p. 168; C.K.Barrett, *John: An Introduction with Commentary and Notes on the Greek Text*, p. 457.

[14] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, *(Revised)*. p. 568.

[15] R.H.Strachan, *The Fourth Gospel: Its Significance and Environment*,

[16] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 488.

னால், அவர் இரண்டாயிரம் ஆண்டுகளாக இன்னும் நமக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கின்றார் என்றே கருதவேண்டும். ஆனால் இது இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் அவரது தன்மையையும் மட்டுப்படுத்தும் ஒரு விளக்கமாகவே உள்ளது. மேலும், இயேசுகிறிஸ்து புதிதாக ஒரு ஸ்தலத்தை உருவாக்கச் செல்லாமல் ஏற்கனவே இருப்ப தையே ஆயத்தம் பண்ணச் செல்வதனால், அவர் சீடர்களை விட்டுச் செல்வதை பரமேறுதலாகவும், அவரது வருகையை இரண்டாவது வருகையாகவும் கருதமுடியாதுள்ளது. உண்மை யில், "பரலோகத்திற்குச் சென்றுள்ள இயேசுகிறிஸ்து நமக்காக அங்கு ஒரு இடத்தை இரண்டாயிரம் ஆண்டுகளாக ஆயத்தப் படுத்திக் கொண்டிருக்கிறார்"[17] என்னும் பாரம்பரிய கிறிஸ்தவ விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

இயேசுகிறிஸ்து பரலோகத்தில் விசுவாசிகள் அனைவருக்கும் போதியளவு இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்த பின்பே, ஒரு இடத்தை ஆயத்தப்படுத்துவதற்காகத் தாம் செல்வதாகக் கூறினார். இயேசுகிறிஸ்துவின் கூற்று, அவர் சிலுவையில் மரிப்ப தற்கு முன்னர், அதாவது சிலுவைக்குச் செல்வதற்கு முன்னர் அவர் தமது சீடர்களுக்கு ஆற்றிய பிரியாவிடை உரையிலேயே இருப்பதை[18] நாம் மறக்கலாகாது. மேலும், யோவானின் சுவிசே ஷத்தில் "இயேசுகிறிஸ்து சிலுவைக்குச் செல்லுதல், உயிர்த்தெ ழுதல், மகிமையடைதல், பரமேறுதல் அனைத்தும் ஒரே செயலா கவே உள்ளது."[19] அதாவது, அவை அனைத்தும் அவரது இவ்வுலகப் பணிகளின் இறுதி அம்சங்களாக உள்ளன. அதேச மயம், "இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணமே பாவிகள் பரலோ கத்திற்குச் செல்வதற்கான பாதையை உருவாக்கியுள்ளது."[20]

---

[17] R.C.H.Lenski, *The Interpretation of St.John's Gospel*. p. 973.
[18] யோவான் சுவிஷேசத்தில் 13 முதல் 16 வரையிலான அதிகாரங்களில் உள்ள இயேசுவின் வார்த்தைகள், அவர் சிலுவைக்குச் செல்வதற்கு முன்னர் சீடர்களுக்கு ஆற்றிய பிரியாவிடை உரையாகும்.
[19] D.A.Carson, *Jesus and His Friends*, p. 23.
[20] L.Morris, *Expository Reflections on the Gospel of John*. p. 492.

அதாவது "இயேசுகிறிஸ்து தமது சிலுவை மரணத்தின் மூலமே பரலோக வாசஸ்தலத்தைத் தன் சீடர்களுக்கு உரியதாக்கியுள்ளார்."[21] "இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்திராவிட்டால் மனிதருக்கு பரலோகத்தில் இடம் கிடைத்திருக்காது."[22] எனவே "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்" என்னும் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் அவர் பரலோகத்திற்குப் போவதைப் பற்றிய அறிவிப்பு அல்ல. மாறாக இது அவர்களைத் தனியே விட்டுவிட்டு "சிலுவைக்குப் போவதைப் பற்றிய அறிவிப்பாகும்."[23] எனவே, இயேசுகிறிஸ்துவின் கூற்றானது, "நான் என் பிதாவின் வீட்டிற்குப் போனதன் பின், உங்களுக்காக ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணுவேன் என்னும் அர்த்தத்தில் அல்ல. மாறாக, நான் என் பிதாவின் வீட்டிற்குப் போகும் பயணமே அதாவது, (சிலுவையினூடாகச் செல்லும்) இந்த மீட்பின் பயணமே உங்களுக்காக ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணும் செயலாகும் என்னும் அர்த்தத்திலேயே சொல்லப்பட்டுள்ளது."[24] இயேசுகிறிஸ்து தமது சிலுவை மரணத்தின் மூலமே மக்களுக்கு பரலோகத்தில் ஒரு இடத்தை ஆயத்தப்படுத்திக் கொடுத்துள்ளமையால்,[25] அவர் "தமது மரணம், உயிர்த்தெழுதல் என்பவற்றுக்கு ஊடாகப் பிதாவிடம் செல்வதையே சீடர்களுக்கு பரலோகத்தில் இடத்தை ஆயத்தப்படுத்திக் கொடுப்பதற்காகச் செல்லும் செயலாகக் குறிப்பிட்டுள்ளார்"[26] என்பதை மறுப்பதற்கில்லை.

---

[21] G.R.Beasley-Murray, *Word Biblical Commentary: John*. p. 249.
[22] W.Hendriksen, *New Testament Commentary: John*. p. 265.
[23] L.Morris, *Expository Reflections on the Gospel of John*. p. 492.
[24] D.A.Carson, *Jesus and His Friends*. p. 23.
[25] எபேசியருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் இச்சத்தியம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் (யூதர்-புறஜாதியார்) ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்… அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் (இயேசுகிறிஸ்து) மூலமாய்ப் பெற்றிருக்கின்றோம்'' (எபே.2:16,18). எபிரேயர் 9ம் அதிகாரத்திலும் அது பற்றி விளக்கப்பட்டுள்ளது.
[26] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 488.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்....

(யோவான் 14:28)

இயேசுகிறிஸ்துவின் போதனைகளில் சில வாக்கியங்கள் முழுமையாக விளங்கிக் கொள்வதற்குச் சிரமமானவைகளாக இருப்பதனால், பலர் அவரைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். யோவான் எழுதிய சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இத்தகைய கூற்றுக்களில் ஒன்று, அவரது தன்மையையும் தேவத்துவத்தையும், சர்வவல்லமையையும் அநேகர் சந்தேகிப்பதற்கும் மறுதலிப்பதற்கும் காரணமாயுள்ளது. ஏனென்றால் அவர் பிதாவாகிய தேவனைப் பற்றிக் குறிப்பிடும்போது, யோவான் 14:28ல் "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என்று தெரிவித்துள்ளார். இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்தை மறுதலிக்கும் அனைவரும் தங்களின் உபதேசத்திற்கு ஆதாரமாக உபயோகிக்கும் வசனங்களில் இதுவும் ஒன்றாகும்.[1] இயேசுகிறிஸ்துவே தம்

[1] கி.பி.4ம் நூற்றாண்டில் ஏரியஸ் என்பவரினால் உருவாக்கப்பட்ட தவறான போதகத்திற்கு, அதாவது பிதாவாகிய தேவனைவிட இயேசுகிறிஸ்து

பிதா தம்மிலும் பெரியவர் என்று கூறியுள்ளமையால், அவர் பிதாவைவிடத் தாழ்வானவர் என்றும், பிதாவுக்குச் சமமான வல்லமையும் தெய்வீகமும் அற்றவர் என்றும் போதிப்பதற்கு வேதப்புரட்டர்கள் இவ்வசனத்தை உபயோகித்து வருகின்றனர்.[2]

இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களை சரியான விதத்தில் விளங்கிக் கொள்வதற்கு, அவை எச்சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டவை என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். இன்று பலவிதமான உபதேசக் குழப்பங்கள் கிறிஸ்தவத்திற்குள் புகுந் துள்ளதற்குப் பிரதான காரணம், கிறிஸ்தவர்கள் வேத வசனங்க ளை வியாக்கியானம் செய்யும் போது, அவை சொல்லப்பட்ட சந்தர்ப்பத்தைக் கருத்திற் கொள்ளாமல் அவற்றை வியாக்கியா னம் செய்வதேயாகும். உண்மையில், இயேசுகிறிஸ்து மனிதராக இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலேயே "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என்று கூறினார். பிதாவாகிய தேவனுக்குச் சமமான நிலையில் பிதாவைப் போல தேவமகிமையுடன் இருந்த

தாழ்வானவர் என்னும் உபதேசத்திற்கு அவர் உபயோகித்த வசனங்களில் இதுவும் ஒன்றாகும் (L.Berkhof, *The History of Christian Doctrines*, pp. 84-85). ஏரியனிசம் (Arianism) என்று அழைக்கப்படும் இவ்வுபதேசம் கி.பி.318ல் நைசீயா என்னுமிடத்தில் கூடிய கிறிஸ்தவத் திருச்சபையின் ஆலோசனைச் சங்கக் கூட்டத்தில் பிழையான வேதப்புரட்டு என்று கணிப்பிடப்பட்டுத் தடை செய்யப்பட்ட போதிலும், அதன் பின்பும் இத் தவறான உபதேசத்தின் செல்வாக்கு கிறிஸ்தவ உலகில் இருந்துள்ளது (R.E.Olson, *The Story of Christian Theology*, pp. 141-160). இன்று யெகோவாவின் சாட்சிகள் இதேவிதமான தவறான உபதேசத்தைப் பரப்பி வருகின்றனர். இவர்கள் இவ்வசனத்தை ஆதாரமாகக் கொண்டு, "இயேசுகிறிஸ்துவின் தன்மை தேவனுடைய தன்மையைவிடத் தாழ்வா னது" (Anonymous, *Let God be True*, p. 110) என்றும், இதனால், "பிதா வைப் போல அவரால் தேவனக் இருக்க முடியாது" (Anonymous, *Reasoning from the Scriptures*, p. 410) என்றும் கூறுகின்றனர். இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு எனது *யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவ னின் பதில்கள்* என்னும் நூலைப் பார்க்கவும்.

[2] இயேசுகிறிஸ்து பிதாவுக்குச் சமமானவர், பிதாவைப் போல முழுமை யான தேவத்துவமுடையவர் என்பதற்கான வேதாகம ஆதாரங்களை அறிந்து கொள்வதற்கு எனது *இயேசு கிறிஸ்து இறைவனா?* என்னும் நூலைப் பார்க்கவும்.

இயேசுகிறிஸ்து, தமது பரலோக மகிமையை விட்டு, மனிதராகத் தாழ்வான நிலைக்கு வந்தார். இதைப் பற்றி வேதாகமம் விளக்கும் போது, பிலிப்பியர் 2:6-7ல் "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்" என்று குறிப்பிட்டுள்ளது. இவ்வசனத்தில் "கொள்ளையாடினப் பொருளாய் எண்ணாமல்" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்பிரயோகம் மூல மொழியில், "பற்றிப்பிடித்துக் கொண்டிராமல்"[3] என்னும் அர்த்தமுடையது. எனவே, இயேசுகிறிஸ்து தேவனுக்குச் சமமாயிருக்கும் நிலையைப் பற்றிப் பிடித்துக் கொண்டிராமல், அதை விட்டுத் தாழ்வான நிலைக்குப் பூமிக்கு வந்துள்ளார்.

இயேசுகிறிஸ்து பிதாவை விட தாழ்வான நிலைக்கு வந்தாலும் அவர் தமது தேவத்துவத்தைத் துறந்துவிட்டு வரவில்லை என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும். தேவனோடு சமமாக பரலோகத்தில் இருக்கும் நிலையையே அவர் விட்டு வந்துள்ளார் என்பதை நாம் மறக்கலாகாது. இயேசுகிறிஸ்து இவ்வுலகை விட்டு மறுபடியுமாகப் பிதாவிடம் செல்வதற்கு முன்பு அவரோடு பேசும்போது, "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" என்று யோவான் 17:5ல் கூறியமை, அவர் பிதாவினிடத்தில் தமக்கிருந்த மகிமையையே பரலோகத்தில்விட்டு இவ்வுலகத்திற்கு வந்துள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. பிலிப்பியர் 2:6-7ல் "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்" என்னும் வாக்கியத்தில், "ரூபம்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "மோர்பே" (*Morphe*) என்னும் கிரேக்கப்பதம், "உட்புறத் தன்மையைக் குறிக்கும் பதமாகும்"[4] எனவே, இது "இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையையும் குணவியல்பையுமே சுட்டிக்காட்டுகிறது."[5]

---

[3] K.S.Wuest, *Philippians in the Greek New Testament*, pp. 64-65.
[4] J.B.Lighfoot, *Saint Paul's Epistle to the Philippians*, pp. 110, 127-133.
[5] G.F.Hawthorne, *Philippians: Word Biblical Commentary*, p. 84.

இயேசுகிறிஸ்து இவற்றை விட்டு வந்ததாக வேதாகமம் கூற வில்லை. ஆதியிலிருந்தே தெய்வீக வார்த்தையாயிருந்த அவர் (யோவா.1.1) மாம்சமாகியபோது, தெய்வத்தன்மையை இழந்து மாம்சமாக மாறிவிடவில்லை. யோவான் 1:14ல் "வார்த்தை மாம்சமாகி" என்னும் வாக்கியத்தில், "ஆகி" என்னும் பதம் மூலமொழியில் சிறப்பான அர்த்தமுடையது. இது, "ஒன்றிலிருந்து இன்னுமொன்றாக மாறியதை அல்ல, மாறாக, முன்பு இருந்த நிலையோடு இன்னுமொரு புதிய நிலை சேர்க்கப்பட்டதையே குறிக்கின்றது."[6] அதாவது, "இயேசுகிறிஸ்து மனிதராக இவ்வுல கத்திற்கு வந்தது தெய்வீகத் தன்மைகளைத் துறப்பதை அல்ல மானிடத் தன்மைகளைச் சேர்ப்பதையே அடிப்படையாகக் கொண் டுள்ளது."[7] எனவே, அவர் இவ்வுலகத்தில் மனிதராக வாழ்ந்த காலத்திலும் தேவனாகவே இருந்தார் இதனால்தான் "தேவத்து வத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோ.2:9) என்றும், "தேவனே மாம்சத் தில் வெளிப்பட்டார்" (1தீமோ.3:16) என்றும் வேதாகமம் அறியத்த ருகின்றது.

இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் மனிதராக வாழ்ந்த காலத்தில் முழுமையான தேவனாக இருந்த போதிலும், பிதாவைவிடத் தாழ்வான நிலையிலேயே இருந்தார். ஏனென்றால் பிதா பரலோ கத்தில் மகிமை பொருந்தியவராய் இருந்தார். ஆனால், இயேசு கிறிஸ்துவோ, பூலோகத்தில் ஏழ்மை நிலையில் வாழ்ந்தார். உண்மையில், இத்தகைய நிலையைக் கருத்திற் கொண்டே இயேசுகிறிஸ்து, என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார் என்று கூறினார். அதாவது, "இயேசுகிறிஸ்து, தாம் அச்சமயம் இருந்த நிலையையும் பிதாவின் நிலையையும் ஒப்பிட்டே இவ் வாறு கூறியுள்ளார்."[8] எனினும், அவர் எப்போதும் இவ்வாறு தாழ்த்தப்பட்ட நிலையிலேயே இருந்து விடவில்லை. உலக மாந்தருடைய பாவங்களைப் பரிகரிப்பதற்காகத் தம்மைப் பலி

---

[6] W.Hendriksen, *New Testament Commentary: John*, p. 84.
[7] M.J.Erickson, *Christian Theology*, p. 735.
[8] A.W.Pink, *Exposition of the Gospel of John*, pp. 281-282.

யாக்க இவ்வுலகத்திற்கு வந்த அவர், பாவப்பலியாக சிலுவையில் மரித்த பின்னர், உயிரோடெழுந்து மறுபடியுமாகத் தாம் முன்பிருந்த அதிஉன்னத நிலைக்குச் சென்றுவிட்டார். அவர் எல்லாவற்றிற்கும் மேலான நிலைக்கு உயர்த்தப்பட்டதை பிலி.2:9-11 அறியத்தருகின்றது.[9] உண்மையில், தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்த போது அவர் கூறியவை உயர்த்தப்பட்ட நிலைக்குப் பொருந்தாது. எனவே, அவர் தாழ்வான நிலையில் இருந்தபோது கூறியவற்றை ஆதாரமாகக் கொண்டு, அவர் பிதாவை விடத் தாழ்வானவர் என்று தர்க்கிப்பது தவறாகும். உண்மையில், இயேசுகிறிஸ்துவின் இக்கூற்று, "அவருடைய தற்காலிக நிலையைப் பற்றியதேயன்றி, அவருடைய தன்மையைப் பற்றியது அல்ல"[10] என்பதை நாம் மறக்கலாகாது.

இயேசுகிறிஸ்து மனிதராக இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலும் யோவான் 10:30ல் குறிப்பிட்டுள்ளபடி, அவரும் பிதாவும் ஒரே தன்மையுடையவர்களாகவே இருந்தனர். எனவே, இயேசுகிறிஸ்து பிதாவைவிடத் தாழ்வானவர் அல்ல. யோவான் 14:28ல், தாம் பிதாவைவிடத் தாழ்வான தன்மையுடையவர் என்று இயேசு கிறிஸ்து குறிப்பிடவில்லை என்பதை, அவர் மூலமொழியில் உபயோகித்துள்ள பதம் தெளிவாகக் காண்பிக்கின்றது. கிரேக் மொழியில் "பெரியது" என்பதையும் "சிறந்தது" என்பதையும் வேறுபடுத்திக்காட்ட இரு வித்தியாசமான சொற்கள் உள்ளன.[11] இயேசுகிறிஸ்து சிறந்தது என்று அர்த்தம் தரும் பதத்தை உபயோகித் திருப்பாரேயானால், அவரைவிட பிதா உயர்வானவர்

---

[9] பிலிப்பியர் 2:9-11ல் "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார். இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[10] J.McDowell, *Jesus: A Biblical Defence of His Deity*, p. 87.

[11] கிரேக்கத்தில் "மெய்ஸ்ஸோன்" (*meizon*) "க்ரீட்டொன்" (*kreitton*) என்னும் இரு பதங்களும் முறையே "பெரியது" என்றும், "சிறந்தது" என்றும் அர்த்தம் கொண்ட பதங்களாகும்.

என்றே கருதவேண்டும். ஆனால், இயேசுகிறிஸ்து உபயோகித்த "பெரியவர்" என்னும் பதம் தேவத் தன்மையின் மேன்மையைச் சுட்டிக்காட்டும் வார்த்தை அல்ல. பிதா பரலோகத்திலும், தாம் பூலோகத்திலும் அச்சமயம் இருந்தமையினாலேயே இயேசு கிறிஸ்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்பதனால், அவர் பிதா வைவிடத் தாழ்வானவர் என்று எவ்விதத்திலும் கூறமுடியாது.

இருபத்தாறாம் அத்தியாயம்

கேட்டின்மகன் கெட்டுப் போனானேயல்லாமல் அவர்களில் ஒருவனும்...

(யோவான் 17:12)

இயேசுகிறிஸ்து யூதாசைப் பிசாசு என்று குறிப்பிட்டதைப் பற்றி 17ம் அத்தியாயத்தில் ஆராய்ந்தோம். அவனில் பிசாசின் தன்மை கள் காணப்பட்டமையினாலேயே இயேசுகிறிஸ்து அவனை இவ்வாறு அழைத்துள்ளதற்கான காரணம் என்பதையும் அவ்வத் தியாயத்தில் அறிந்து கொண்டோம். இயேசுகிறிஸ்து மறுபடியு மாக யூதாசைப் பற்றி குறிப்பிடும் போது, அவனைக் "கேட்டின் மகன்" என்று வர்ணித்துள்ளார். இயேசுகிறிஸ்துவின் இவ்விவர ணம், அவருடைய ஜெபத்தில் இடம்பெறுவதோடு,[1] அநேகரால் புரிந்து கொள்ள முடியாத கடினமான ஒரு கூற்றாகவும் உள்ளது. பிதா தமக்குத் தந்த சீடர்களைத் தாம் அதுவரையில் காத்து

[1] யோவான் 17ம் அதிகாரம் இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு முன்பாகத் தம்முடைய சீடர்களுக்காகவும் அவர்களுடைய ஊழியத்தின் மூலம் அவரை விசுவாசிக்கப் போகிறவர்களுக்காகவும் ஏறெடுத்த ஜெப மாக உள்ளது (யோவா.17:9,20).

வந்ததாகக் கூறிய இயேசுகிறிஸ்து, "வேதவாக்கியம் நிறைவேறத் தக்கதாகக் கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல் அவர்களில் ஒருவனும் கெட்டுப் போகவில்லை" என்று யோவான் 17:12ல் குறிப்பிட்டுள்ளார். "வேதவாக்கியத்தின் நிறைவேறுதல்" என்பது நாம் ஏற்கனவே இந்நூலின் 17ம் அத்தியாயத்தில் பார்த்தவிதமாக, யூதாசின் செயல் தேவனால் முன்னறியப்பட்டு வேதவாக்கியங்களில் தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட்டிருந்த விடயம் நிறைவேறியதாகும்.[2] எனினும், "கேட்டின் மகன்" என்னும் இயேசுகிறிஸ்துவின் சொற்பிரயோகம் தேவனைப் பற்றியும் அவருடைய செயல்களைப் பற்றியும் அநேகர் தவறாகப் புரிந்து கொள்வதற்குக் காரணமாக உள்ளது.

"கேட்டின் மகன்" என்னும் பெயர் 2தெசலோனிக்கேயர் 2:3ல் அந்திக்கிறிஸ்துவிற்கும் உபயோகிக்கப்பட்டுள்ளது. இதனால் சிலர் யூதாசை அந்திக்கிறிஸ்துவாகக் கருதுகின்றனர்.[3] எனினும் இவர்கள், உலகமுடிவில் வரும் "கர்த்தருடைய நாள்"[4] அதாவது

[2] இவ்விடத்தில் இயேசுகிறிஸ்து சங்கீதம் 41:9ஐ அல்லது 109:4-13ஐ மனதிற் கொண்டே இவ்வாறு கூறியதாகக் கருதப்படுகின்றது.

[3] R.H.Lightfoot, *St. John's Gospel: A Commentary*, p. 301.

[4] பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசிகளினால் முன்னறிவிக்கப்பட்ட "கர்த்தருடைய நாள்" பாவிகளுக்குத் தேவன் நியாயத்தீர்ப்பளிக்கும் நாளாகும். மேசியாவின் வருகை நியாயத்தீர்ப்பின் நாளாகவே இருக்கும் என்று தீர்க்கதரிசிகள் முன்னறிவித்திருந்த போதிலும், அவருடைய வருகையில் விசுவாசிகளை இரட்சிக்கும் அம்சமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் இவை இரண்டும், அதாவது கர்த்தருடைய 'இரட்சண்ய நாளும்' 'கோபாக்கினையின் நாளும்' ஒரே காலகட்டத்தில் வரும் என்னும் எண்ணத்தை ஏற்படுத்தும் விதமாகத் தீர்க்கதரிசனங்கள் உள்ள போதிலும், இரண்டிற்கும் இடையில் நீண்டகால இடைவெளி இருப்பதை புதிய ஏற்பாடு அறியத்தருகின்றது. இதன்படி, கர்த்தருடைய இரட்சண்ய நாள் இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையின் போது வந்தது. இதனாலேயே இயேசுகிறிஸ்துவும் தாம் உலகத்தை நியாயந்தீர்க்க வராமல் இரட்சிக்கவே வந்ததாகக் கூறினார். யோவான் 9:39ன் விளக்கத்தில் நாம் பார்த்தவிதமாக இயேசுகிறிஸ்துவை விசுவாசியாதவர்களுக்கு அவருடைய முதல் வருகையே நியாயத்தீர்ப்பின் காலமாக உள்ளபோதிலும், அவர்களுக்கான தண்டனை அளிக்கப்படும் கோபாக்கினையின் நாள், இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் போதே வரும்.

நியாயத்தீர்ப்பின் நாள் இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் போதே வந்துவிட்டது என்னும் தர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டே யூதாசை அந்திக்கிறிஸ்து என்று கூறுவதனால்,[5] இவ்விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றாக இல்லை. மேலும், கேட்டின் மகன் என்னும் விவரணம் புதிய ஏற்பாட்டில் யூதாசிற்கும் அந்திக்கிறிஸ்துவுக்கும் மட்டுமே உபயோகிக்கப் பட்டுள்ளமையால், "யூதாசே உயிர்த்தெழுந்து அந்திக்கிறிஸ்து வாக வருவான்" என்றும் சிலர் கருதுகின்றனர்.[6] எனினும், யோவான், தன்னுடைய நிருபங்களில் கள்ளப்போதகர்களையும் அந்திக்கிறிஸ்து என்றே குறிப்பிட்டுள்ளார் (1யோவா.2:18, 22, 4:3, 2யோவா.7).[7] உண்மையில் அந்திக்கிறிஸ்து என்னும் பதம் மூலமொழியில் "எதிர்க்கிறிஸ்து" என்று பொருள்படும்.[8] எனவே யூதாஸ் இயேசுகிறிஸ்துவிற்கு எதிராகச் செயற்பட்டவன் என்ற அர்த்தத்தில் அவனை அந்திக்கிறிஸ்து என்று அழைப்பதில் தவறில்லை. ஆனால், உலக முடிவில் வரவிருக்கும் அந்திக் கிறிஸ்துவே யூதாஸ் என்று கூறுவது தவறாகும்.

உண்மையில், இயேசுகிறிஸ்து யூதாசைக் "கேட்டின் மகன்" என்று குறிப்பிட்டுள்ளது கிறிஸ்தவ இறையியலில் பெரும் சர்ச்சை யை ஏற்படுத்தியுள்ளது. இதற்குக் காரணம், இயேசுகிறிஸ்துவின் விவரணம், "ஒன்றில் யூதாசின் தன்மையைக் (குணாதிசயத் தை) குறிப்பதாக இருக்கலாம், அல்லது, அவன் தேவனால்

---

[5] R.H.Lightfoot, *St.John's Gospel: A Commentary*, p. 301.

[6] Cited in M.C.Tenney, *John: The Expositor's Bible Commentary*, p. 164.

[7] புதிய ஏற்பாட்டில் யோவானின் நிருபங்களில் மட்டுமே அந்திக்கிறிஸ்து என்னும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

[8] கிரேக்கமொழியில் ஆங்கிலத்தைப் போலவே, ஒரு சொல்லுக்கு முன் னால் anti என்னும் பதத்தைச் சேர்த்தால் அது 'எதிரானது' என்று பொருள்படும். எனவே Antichrist என்பது 'எதிர்க்கிறிஸ்து' என்பதாகும். அதாவது, கிறிஸ்துவிற்கு எதிரானவன் என்பதாகும். வேதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்கள் Antichrist என்பதைத் தமிழில் மொழிபெயர்க் காமல் அதைத் தமிழில் அப்படியே 'அந்திக்கிறிஸ்து' என்று எழுதி விட்டார்கள். புதிய இலகு தமிழ் மொழிபெயர்ப்பில் "கிறிஸ்து விரோதி" என்றும், திருவிவிலியத்தில் "எதிர்க்கிறிஸ்து" என்றும் இதை மொழிபெ யர்த்துள்ளார்கள்.

நியமிக்கப்பட்டிருந்த நிலைமையைக் குறிக்கலாம்.”[9] எபிரேய மொழிவழக்கிலுள்ள இச்சொற்பிரயோகம் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் இவ்விரு அர்த்தங்களுடனும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.[10] சில கிறிஸ்தவர்கள், இதில் இரண்டாவது அர்த்தமே யூதாசின் விவரணத்திற்குப் பொருத்தமானது என்று கருதுகின்றனர்.[11] கேட்டின் மகன் என்பதில் “கேடு” என்பதைக் குறிக்கும் பதத்தின் பெயர்ச்சொல்லான “அப்பொலெயா” (*apoleia*) என்னும் சொல்லே புதிய ஏற்பாட்டில் இறுதி ஆக்கி னைத்தீர்ப்பிற்கு உபயோகிக்கப்பட்டுள்ளதையும் இவர்கள் தங்க ளது கருத்திற்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.[12] இதன்படி, யூதாஸ் கேட்டின் மகனாக இருக்கும்படி தேவனால் நியமிக்கப்பட் டுள்ளான் என்னும் முடிவுக்கே வரவேண்டியுள்ளது. இது, யூதா சின் தன்மைக்கும் செயல்களுக்கும் தேவனே காரணர் என்னும் விளக்கத்தையே தோற்றுவித்துள்ளது. அதாவது, தேவன் தமது திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே யூதாசை சிருஷ்டித்துள் ளார் என்றே எண்ண வேண்டியுள்ளது. ஆனால், யூதாசின் பாவத்திற்கு மட்டுமல்ல, தேவன் எந்த ஒரு மனிதனுடைய பாவத்துக்கும் காரணர் அல்ல.[13] மனிதர்கள் தாங்கள் செய்யும்

---

[9] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 563.

[10] பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் ஏசாயா 57:4ல் இச் சொற்பிரயோகம், மனிதனின் குணாதிசயத்தையும், ஏசாயா 34:5ல் ஒருவனுக்கு நியமிக்கப்பட்டுள்ள இறுதி நிலையையும் குறிக்கின்றது.

[11] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 563.

[12] *Ibid.* p. 563.

[13] யாக்கோபு எழுதிய நிருபத்தில் இவ்விடயம் பின்வருமாறு குறிப்பிடப்பட் டுள்ளது. இவ்வசனத்தில் “சோதனை” என்று தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ள பதம் மூலமொழியில் “பாவச் சோதனைகள்” என்று அர்த்தந் தரும் பதமாகும். இப்பதம் யாக்கோபு 1:3 மற்றும் 1:12ல் உபயோகிக்கப் படவில்லை. அவை “பரீட்சிக்கும் சோதனைகள்” ஆகும். ஆங்கிலத்தில் இது test என்றும் பாவச்சோதனை temptation என்றும் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. பாவச் சோதனையைப் பற்றி யாக்கோபு 1:13ல், “சோதிக்கப்படுகிற எவனும் தான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிற வரல்ல. ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாவங்களுக்குத் தாங்களே பொறுப்புடையவர்கள். யூதாசின் செயலும் இவ்விதமாகவே வேதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. “தேவனால் இயக்கிவிடப்பட்ட ஒரு இயந்திரம் போல யூதாஸ் செயற்பட்டான் என்று நாம் கருதலாகாது. அவன் தனது செயல்களுக்குப் பொறுப்பானவன். ஏனென்றால், அவன் தனது சுய சித்தத்தின்படியே செயற்பட்டுள்ளான்.[14]

இயேசுகிறிஸ்து யூதாசைப் பற்றி குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திற் கொள்ளும் போது, அவன் ஆரம்பத்திலேயே கேட்டின் மகனாக இருந்துள்ளது தெளிவாகின்றது. இயேசுகிறிஸ்து அவனைப் ‘பிசாசு’ என்று அழைத்ததோடு, அவன் எப்படிப்பட்டவன் என்பதை ஆரம்பத்திலேயே அறிந்திருந்தார். “நான் தெரிந்து கொண்டவர்களை அறிவேன்” (யோவா.13:18) என்னும் இயேசு கிறிஸ்துவின் கூற்றானது மூலமொழியில், “நான் தெரிந்து கொண்டவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிவேன்”[15] என்னும் அர்த்தம் தரும் விதத்திலேயே யோவான் 13:18ல் உள்ளது. எனவே, அவன் கேட்டின் மகனாகவே இருந்துள்ளான் என்பதை இயேசுகிறிஸ்து ஆரம்பத்திலிருந்தே அறிந்திருந்தார் என்பதை மறுப்பதற்கில்லை. யூதாஸ் கேட்டின் மகனாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மாறாக கேட்டின் தன்மைகள் அவனில் காணப்பட்டன. எனவே, “கேட்டின் மகன் என்னும் விவரணம் யூதாசின் தன்மையையே குறிக்கின்றது. அவன் அழிவிற்காக நியமிக்கப்பட்டவன் என்று இயேசுகிறிஸ்து கூறவில்லை.”[16] அவனுடைய செயல்களே அவனை அழிவிற்கு இட்டுச் சென்றன. உண்மையில், யூதாஸ் பணத்திற்கு ஆசைப்பட்டே இயேசுகிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்தான் (மத்.26:14-17). அவன் பண ஆசை பிடித்தவனாக இருந்துள்ளதை யோவான் 12ம் அதிகாரச் சம்பவம் அறியத்தருகிறது. அதிக விலையுள்ள தைலத்ததை மரியாள் இயேசுகிறிஸ்து

[14] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 645.
[15] W.Barclay, *John Volume 2: The Daily Study Bible*, p. 142.
[16] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, pp. 644-645.

வின் பாதங்களில் பூசிய போது, தைலத்தை இப்படி வீணாக்கா மல், அதை விற்றுத் தரித்திரருக்குக் கொடுத்திருக்கலாமே என்று யூதாஸ் கூறினான் (யோவா.12:3-5). ஆனால் அவன் தரித்திரர் மீதுள்ள கரிசனையினால் அல்ல, "அவன் பணப்பை யை வைத்திருந்தமையினாலும் திருடனாக இருந்தமையினா லுமே" இவ்வாறு கூறியதாக யோவான் 12:4-6 அறியத்தருகின் றது.

யூதாசின் செயல் தேவனால் முன்குறிக்கப்பட்டிருந்தது அல் லது நியமிக்கப்பட்டிருந்தது என்று சிலர் கருதுவதற்குக் காரணம், இயேசுகிறிஸ்து யூதாசைப் பற்றிக் கூறும் போது "வேதவாக்கி யம் நிறைவேறத்தக்கதாக கேட்டின் மகன் கெட்டுப் போனான்" என்று குறிப்பிட்டுள்ளமையாகும். எனினும், தேவன் முன்னறிவித்த விடயங்கள் எல்லாம் அவரால் நியமிக்கப்பட்டவை என்று கருது வது தவறாகும். எனினும், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலி தேவனால் ஆரம்பத்திலேயே திட்டமிடப்பட்டு நியமிக்கப்பட்டிருந் தது என்பதை மறுப்பதற்கில்லை (அப்.2:23, 4:27-28). எனினும், இதில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல அம்சங்களுக்கும் தேவனே பொறுப்பு என்றும், அவரே அவற்றின் கர்த்தா என்றும் கருதுவது தவறாகும். அவற்றில் சில, தேவனால் நியமிக்கப்பட்டவை. ஆனால், ஏனையவை மானிட செயல்களை அவர் முன்னறிந்து உள்ளடக்கியவை. அதாவது, மனிதர் ஒவ்வொரு சந்தர்ப்பத் திலும் எவ்வாறு செயல்படுவார்கள் என்பது தேவனுக்கு ஆரம்பத் திலேயே தெரியும். இவற்றில் சிலவற்றை அவர் அனுமதிக்கிறார். ஏனையவற்றைத் தடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தைப் பொறுத்தவரை, அவரது மரணம் தேவனால் நியமிக் கப்பட்டதாகும். ஆனால் அதனோடு சம்பந்தப்பட்ட மானிட செயல் கள் அதாவது, யூதாஸ் காட்டிக்கொடுத்தது உட்பட மாந்தர் அவரைக் கைது செய்து விசாரித்து சிலுவையில் அறைந்தது அனைத்தும் மனிதருடைய சுயசெயல்களாகும். இவற்றை முன்பே அறிந்திருந்த தேவன், தம்முடைய திட்டம் நிறைவேற இவற்றை அனுமதித்து உபயோகித்துள்ளார். யூதாஸ் பணத் திற்கு ஆசைப்பட்டு இயேசுகிறிஸ்துவைக் காட்டிக் கொடுப்பான்

என்பதை முன்பே அறிந்திருந்த தேவன், தமது திட்டம் நிறைவேற அதை உபயோகித்துள்ளார். "தேவன் மானிட செயல்களை முன்னறிந்து அவற்றைத் தமது நோக்கம் நிறைவேற உபயோகிக்கிறவராக இருக்கின்றார்."[17]

---

[17] W.Grudem, *Systematic Theology*, p. 327. தேவனால் உபயோகிக்கப்படும் மானிட செயல்களும் வேதத்தில் தேவனால் செய்யப்படுபவைகளாகவே குறிப்பிடப்பட்டுள்ளமையால் அநேகர் தேவன் தீமைக்குக் காரணராக இருக்கின்றார் என்று கருதுகின்றனர். உண்மையில், இவை மனிதர்களுடைய சுய செயல்கள் ஆகும். ஆனால், தேவன் இவற்றை அனுமதிக்கின்றபடியினால் தேவ செயல்களாக வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. "தேவன் நன்மையை மட்டுமல்ல தீமையையும் அனுமதிக்கிறவராகவும், அவற்றைத் தம்முடைய நோக்கம் நிறைவேற உபயோகிக்கிறவராகவும் இருக்கின்றார்" (H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, pp. 124-125). ஆனால், தேவன் அவற்றின் காரணரோ அல்லது அவற்றுக்குப் பொறுப்பானவரோ அல்ல. ஏனென்றால் மனிதனே செயற்பட்டுள்ளான். தேவன் அவை நடைபெற அனுமதி மட்டுமே கொடுத்துள்ளார். (தேவனுடைய இத்தகைய செயல்முறையைப் பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது *கிறிஸ்தவ வாழ்வில் தேவசித்தம்* என்னும் நூலின் முடிவுரைப் பகுதியைப் பார்க்கவும்). உதாரணத்திற்கு நியாயாதிபதிகள் 14:4ல், சிம்சோன் பெலிஸ்தியப் பெண்ணைத் திருமணமுடித்தது கர்த்தரின்செயல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இஸ்ரவேலர்கள் புறஜாதியாரைத் திருமணமுடிக்கத் தேவன் தடை விதித்திருந்தார் (உபா.7:1-3, யாத்.34:14-16). சிம்சோன் இத்தடையையும் மீறிச் செயற்பட்டது "கர்த்தருடைய செயல்" என்று குறிப்பிடப்பட்டிருப்பதற்குக் காரணம், சிம்சோனின் திருமணம், அவன் எப்படி பெலிஸ்தியரைத் தாக்குவதற்குத் தேவனால் உபயோகிக்கப்பட்டது என்பதை அறியத்தருவதற்கேயாகும். இங்கு சிம்சோனின் தவறைத் தேவன் தமது திட்டம் நிறைவேற, அதாவது, பெலிஸ்தியரைத் தண்டிக்க உபயோகித்துள்ளார் என்பதை அறிந்து கொள்ளுகின்றோம். ஆனால், சிம்சோனின் தவறுகளுக்கு அவனே பொறுப்பு என்பதை நாம் மறக்கலாகாது. (சிம்சோனின் சரிதை பற்றிய மேலதிக விபரங்களுக்கு எனது *விபரீதமான வீரன்* என்னும் நூலைப் பார்க்கவும்). அதேபோல, யோசேப்பின் வாழ்விலும் அவனுடைய சகோதரர் அவனுக்கு எதிராகச் செய்த தீமையான காரியங்கள் அனைத்தையும் தேவன் நன்மைக்கு ஏதுவாக மாற்றினார் என்றும், அவனுடைய குடும்பத்தினர் பஞ்சத்தில் அழியாதபடிக்குத் தேவன் யோசேப்பை முன்னதாகவே எகிப்துக்கு கொண்டு போனார் என்றும் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி.37:1-28, 45:5, 50:20). உண்மையில், இங்கு தேவன் யோசேப்பின் சகோதரர்களுடைய தீமையான செயல்கள் அனைத்தையும் தமது திட்டம் நிறைவேற, அதாவது, இஸ்ரவேல் மக்களை வரவிருக்கும் பஞ்சத்திலிருந்து காப்பாற்றுவதற்காக உபயோகித்துள்ளார். இதேவிதமா

யூதாசை இயேசுகிறிஸ்து கேட்டின் மகன் என்று குறிப்பிட்டுள்ள தற்குக் காரணம், அவன் ஆரம்பத்திலிருந்தே அப்படிப்பட்டவனாக இருந்ததே என்று ஏற்கனவே பார்த்தோம். இதனால் அவன் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை இரட்சிக்கப்படாதவனாகவே இருந்துள்ளான் என்பதும் தெளிவாகின்றது.[18] அவன் ஆம்பத்தில் இரட்சிக்கப்பட்டவனாக இருந்து, பின்னர் பின்வாங்கிப் போனான் என்று சிலர் கருதுகின்ற போதிலும்,[19] இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள், அவன் ஆரம்பத்திலிருந்தே கேட்டின் மகனாக இருந்துள்ளதையே சுட்டிக்காட்டுகின்றன.[20] "நான் தெரிந்துகொண் டவர்களை அறிவேன்" (யோவா.13:18) என்று கூறிய இயேசு கிறிஸ்து, எப்பொழுதும் யூதாசையும் மற்ற சீடர்களையும் வேறுப டுத்தியே காண்பித்துள்ளார். "பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து கொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்" என்று யோவான் 6:70ல் இயேசுகிறிஸ்து குறிப்பிடும்போது, பன்னிருவரில் ஒருவன் வித்தியாசமானவன் என்பதையே அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.[21] மேலும், யோவான் 13ம் அதிகாரத்தில், தம் சீடர்கள் அனைவரும் சுத்தமானவர்கள் என்று இயேசுகிறிஸ்து கூறியபோது, உடனடியாக 10ம் வசனத் தில், "ஆகிலும் எல்லாரும் அல்ல" என்றார் (யோவா.13:10). அடுத்த வசனத்தில் "தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர்

கவே யூதாசினதும், ரோம அதிகாரிகளினதும் செயல்களை முன்பே அறிந்திருந்த தேவன் அவற்றைத் தமது திட்டம் நிறைவேற உபயோ கித்துள்ளார்.

[18] A.W.Pink, *Eternal Security*, p. 109.

[19] S.Wakefield, *A Complete System of Christian Theology*, pp. 463-466; F.F.Bruce, *The Gospel of John*, p. 332.

[20] R.C.H.Lenski, *The Interpretation of St. John's Gospel*, p. 1140.

[21] பிசாசு அவனுக்குள் புகுவதற்கும் ஒரு வருடத்திற்கும் முன்பே இயேசு கிறிஸ்து இவ்வாறு கூறியுள்ளதாக ஏற்கனவே பார்த்தோம். மேலும் இயேசுகிறிஸ்து யூதாஸ் "பிசாசாய் ஆகுவான்" என்ற கூறாமல் "பிசாசாய் இருக்கிறான்" என்று குறிப்பிட்டுள்ளமை அவன் ஏற்கனவே இரட்சிக்கப் படாதவனாக இருந்துள்ளதையே சுட்டிக்காட்டுகிறது. யூதாஸ் இரட்சிக்கப்ப டாதவனாக இருந்தமையினாலேயே இயேசுகிறிஸ்து அவனைப் பிசாசு என்று அழைத்துள்ளார்" (M.J.Erickson. *Christian Theology*, p. 966).

[22] D.A.Carson, *Jesus and His Friends*, p. 186.

அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்து, அவர் தமது சீடர்களில் சுத்தமானவர்கள் யார் என்பதையும், சுத்திகரிக் கப்படாதவன் யார் என்பதையும் அறிந்திருந்ததோடு, இருசாராரை யும் வேறுபடுத்திக் காட்டியுள்ளதும் தெளிவாகின்றது. யோவான் 17:12ஐ முழுமையாகப் பார்க்கும் போதும் இவ்வுண்மை வெளிப் படுவதை நாம் அவதானிக்கலாம். பிதா தமக்குத் தந்த சீடர்களை அதுவரைக்கும் காத்து வந்ததைப் பற்றி அவர் குறிப்பிடும் போது, “நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டு வந் தேன்” என்று குறிப்பிட்டுள்ளது, அவரால் காக்கப்படாமல் கெட்டுப் போன யூதாஸ் பிதாவினால் அவருக்குக் கொடுக்கப்படாதவன் என்பதையே சுட்டிக்காட்டுகிறது. “யோவன் 6:39ல், பிதா தமக்குத் தந்தவர்களில் ஒருவனையும் தாம் இழந்து போவதில்லை என்று கூறிய இயேசுகிறிஸ்து, யோவான் 17:12ல், யூதாஸ் இழந்து போனவன் என்று குறிப்பிடுவதும் அவன் பிதாவினால் இயேசு கிறிஸ்துவிற்குக் கொடுக்கப்படாதவன்”[22] என்பதை உறுதிப்படுத் துகிறது. யோவன் 12ம் அதிகார சம்பவம் யூதாஸ் ஆரம்பத்திலி ருந்தே திருடனாயிருந்தான் என்பதை அறியத்தருகின்றது (யோவா.12:6). “இதுவும் அவன் இரட்சிக்கப்பட்டவன் அல்ல என்பதற்கான ஆதாரமாயுள்ளது.”[23]

“யூதாஸ் இரட்சிக்கப்படாதவனாய் இருந்த போதிலும் அவன் அப்போஸ்தலனாக இருந்தமையால், இரட்சிக்கப்பட்டவன் போலத் தோற்றமளித்துள்ளான்.”[24] மேலும், “அவனுடைய வீழ்ச்சி சடுதி யாக ஏற்பட்டதுபோல நமக்குத் தென்பட்டாலும், அதைத் தேவன் ஆரம்பத்திலேயே அறிந்திருந்தார்”[25] அத்துடன், “அவனுடைய வீழ்ச்சி பற்றி தீர்க்கதரிசிகள் முன்னறிவித்துள்ளமையால், அதற் குத் தேவனே காரணர் என்று கூறுவது தவறாகும்.”[26] யூதாசின்

---

[23] M.J.Erickson, *Christian Theology*. p. 995.
[24] J.Calvin, *The Gospel According to John 11-21 & The First Epistle of John*. p. 143.
[25] *Ibid*. p. 143.
[26] *Ibid*. p. 143.

வீழ்ச்சியை முன்பே அறிந்திருந்த தேவன், அதைத் தீர்க்கதரிசிகளின் மூலம் அறிவித்துள்ளார். எனவே, யூதாஸ் தான் விரும்பாத ஒரு காரியத்தைச் செய்யத் தூண்டப்பட்டான் என்றோ அல்லது இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்க பலவந்தப்படுத்தப்பட்டான் என்றோ கருதுவது தவறாகும். உண்மையில், அவன் தான் விரும்பியதையே செய்தான். "அவன் கேடு செய்யும் தன்மையுடையவனாக இருந்தமையால் கேடான செயல்களைச் செய்துள்ளான்."[28] இதனால் இயேசுகிறிஸ்துவும் அவனைக் கேட்டின் மகன் என்று வர்ணித்துள்ளார்.

[28] L.Morris, *Expository Reflections on the Gospel of John*. p. 584.

இருபத்தேழாம் அத்தியாயம்

என்னைத் தொடாதே நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை....

(யோவான் 20:17)

இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களில், கிறிஸ்தவர்களுக்கு அதிக குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள வார்த்தைகள், அவர் உயிர்த் தெழுந்த பின்னர் தம்மைத் தேடி வந்த மகதலேனா மரியாளுக் குத்[1] தம்மைத் தொடுவதற்கு தடைவிதித்த கட்டளையாகும்.

---

[1] புதிய ஏற்பாட்டில் மரியாள் என்னும் பெயரில் 7 பெண்கள் உள்ளனர். 1.இயேசுகிறிஸ்துவின் தாய் (லூக்.1:27, மத்.1:18), 2. யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாள் (மத்.27:56, மாற்15:40, 15:47, 16:1, லூக்.24:10). இவளே மத்தேயு 27:61லும், 28:1லும் "மற்ற மரியாள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளாள். 3.மார்த்தாள் லாசரு என்போரின் சகோதரி யாகிய பெத்தானியாவைச் சேர்ந்த மரியாள் (லூக்.10:39, யோவா.11:20, 11:28-31, 11:32-33, 12:3). இயேசுகிறிஸ்துவைத் தைலத்தால் அபிஷேகித் தது பற்றி மத்தேயு 26:6-13, மாற்கு 14:3-9, யோவான் 12:3 போன்ற வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் ஒரே சம்பவத்தையே குறிக்கின்றன. ஆனால், லூக்கா 7:36-50ல் குறிப்பிடப்பட்டுள்ளது வேறொரு சம்பவமாகும்). 4. இயேசுகிறிஸ்துவினுடைய தாயின் சகோதரி கிலெ யோப்பா மரியாள் (யோவா.19:25). 5. மாற்குவின் தாயாகிய மரியாள் (அப்.12:12). 6. ரோம சபையிலிருந்த ஒரு பெண் (ரோம.16:6). 7. மகத

யோவான் 20:17ல், இயேசுகிறிஸ்து மரியாளிடம், “என்னைத் தொடாதே” என்று எதற்காகக் கூறினார் என்பது அநேகருக்குப் பெரியதோர் கேள்வியாகவே உள்ளது. சில கிறிஸ்தவர்கள், இயேசுகிறிஸ்துவின் கூற்று இடம் பெறும் யோவான் 20ம் அதிகாரத்தின் இறுதிப் பகுதியில் அப்போஸ்தலனாகிய தோமாவிற்குத் தம்மைத் தொட்டுப் பார்க்கும்படி அவர் கூறியதை அடிப்படையாகக் கொண்டு (யோவா.20:27),[2] மரியாள் பெண் என்பதனால் தம்மைத் தொட வேண்டாம் என்று அவர் கூறியதாகக் கருதுகின்றனர்.[3] ஆனால் மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைப் பெண்கள் தொட்டு வணங்குவதைப் பற்றி 28:9ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மரியாள் பெண் என்பதனாலேயே அவள் தம்மைத் தொடுவதற்கு இயேசுகிறிஸ்து மறுப்புத் தெரிவித்தார் என்னும் விளக்கத்தை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.[4]

லேனா மரியாள். இவள் கலிலேயாக் கடலை அண்மித்த ‘மக்தால்’ என்னும் இடத்தைச் சேர்ந்த பெண். இயேசுகிறிஸ்து இவளிலிருந்த 7 பிசாசுகளைத் துரத்தியிருந்தார் (லூக்.8:2). இதனால், இவள் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவளாய் மாறியதோடு, அவரது ஊழியப் பணிக்கு பண உதவி செய்து வந்தாள் (மத்.27:55-56, லூக்.8:3). இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போதும், அடக்கம் பண்ணப்பட்ட போதும், அருகில் இருந்த இவள் (மத்.27:56, 27:61), அவரது உயிர்த்தெழுதலை அப்போஸ்தலருக்கு அறிவிக்கும் பெண்ணாக அனுப்பப்பட்டாள் (லூக்.24:10, யோவா.20:18). சிலர், இவளே பெத்தானியா ஊர் மரியாள் என்றும், வேறு சிலர் யோவான் 7:36-50ல் குறிப்பிடப்பட்டிருக்கும் பெண் என்றும் கூறுவது தவறாகும் (A.C.Myers, ed., *The Eerdmans Bible Dictionary*, pp. 695-697). இயேசுகிறிஸ்துவிற்கும் மரியாளுக்கும் இருந்த உறவைக் களங்கப்படுத்தி, இருவரும் திருமணமுடித்திருந்தனர் என்று சில வேதப்புரட்டர்கள் இன்று கதை பரப்பி வருகின்றனர். இதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. இதைப் பற்றிய விபரங்களுக்கு சத்தியவசனம் சஞ்சிகையில் வெளிவந்த எனது “மகதலேனா மரியாள் இயேசுகிறிஸ்துவின் மனைவியா?” என்னும் கட்டுரையைப் பார்க்கவும்.

[2] லூக்கா 24:39லும் தம்மைத் தொட்டுப் பார்க்கும்படி இயேசுகிறிஸ்து தம் சீடர்களுக்கு கூறியுள்ளார்.

[3] இவ்வசனம் குறித்து என்னிடம் கேள்வி கேட்ட பலர் தெரிவித்த கருத்து இதுவாகும்.

[4] தம்மைத் தொடவே வேண்டாம் என்னும் அர்த்தத்தில் இயேசு இவ்வாறு கூறவில்லை (J.C.Ryle, *Expository Thoughts on John Vol. 3*, p. 424).

உண்மையில் இயேசுகிறிஸ்துவின் இக்கூற்றை விளங்கிக் கொள்வதற்கு மூலமொழியில் இவ்வாக்கியத்தின் இலக்கண அமைப்பு முறையை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஏனென்றால் “தொடாதே” என்னும் வார்த்தை மூலமொழியில், “என்னைத் தொட்டுக் கொண்டிராதே” என்று அர்த்தம் தரும் விதத்தில் நிகழ்காலத் தொடரில்[5] உள்ளது. இது, “ஏற்கனவே மரியாள் இயேசுகிறிஸ்துவைத் தொட்டுக் கொண்டிருந்ததையே சுட்டிக் காட்டுகிறது”[6] எனவே, இவ்வாறு செய்வதை நிறுத்தும்படியே இயேசுகிறிஸ்து மரியாளிடம் கூறியுள்ளார். மேலும், “தொடாதே” என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பதம், மூலமொழியில், “பற்றிப் பிடித்துக் கொண்டிராதே” என்னும் அர்த்தமுடையது.[7] மத்தேயுவின் சுவிசேஷத்தில் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைத் தரிசித்த பெண்கள் அவரது பாதங்களைத் தழுவி அவரை வழிபட்டமையால் (மத்.28:9),[8] மரியாளும், “அநேகமாக இயேசுகிறிஸ்துவின் பாதங்களையே பற்றிப்பிடித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும்.”[9] உண்மையில், “அக்காலத்தைய கலாசாரத்தைக் கருத்திற் கொள்ளும்போது, மரியாள் இயேசுகிறிஸ்துவின் பாதங்களைத்தான் பிடித்திருக்க முடியும்.”[10]

மரியாளின் செயலானது, அதாவது, அவள் இயேசுகிறிஸ்துவின் பாதங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தது, அவளுடைய மனநிலையைப் பிரதிபலிக்கும் செயலாக உள்ளது. கல்லறை

---

[5] Present Imperativeல் *me mou haptou* என்று கிரேக்கத்தில் உள்ளது

[6] L.Morris, *John: New International Commentary on the NT*, p. 742.

[7] உபயோகிக்கப்பட்டுள்ள “ஹெப்டோமாய்” (*haptomai*) எனும் கிரேக்க வினைச்சொல்லானது ஆங்கிலத்தில் cling, seize, hold என்னும் அர்த்தங்களைக் கொண்டுள்ளது.

[8] மத்தேயு வேறு ஒரு கிரேக்க பதத்தையே (க்ராடெயோ *krateo*) உபயோகித்துள்ள போதிலும், இரண்டும் ஒத்த கருத்துள்ள சொற்களாகும்

[9] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 644.

[10] G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary*, p. 376. மரியாள் இயேசுகிறிஸ்துவைக் கட்டிப் பிடித்தாள் (அல்லது அரவணைத்தாள்) என்னும் சிலரது விளக்கம் (G.M.Burge, *John: The NIV Application Commentary*, p. 555; J.R.Michaels, *John: New International Biblical Commentary*, p. 339) ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

யில் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைக் காணாமல் தவித்த அவளுக்கு (யோவா.20:1-2,11-13), திடீரென்று இயேசுகிறிஸ்து தரிசனம் அளித்து பேசியபோது (யோவா.20:14-16), "அவர் மறுபடியும் எங்கும் காணாமல் போய்விடக்கூடாது என்பதற்காக அவரது பாதங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டாள்."[11] ஏனென்றால் "இயேசுகிறிஸ்துவை மறுபடியும் இழந்து விடக்கூடாது என்பதே அச்சமயம் அவளது ஒரே நோக்கமாயிருந்தது."[12] இதனால் இயேசுகிறிஸ்து அவளிடம், "என்னைப் பற்றிப் பிடித்துக் கொண்டிராதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை" (யோவா.20:17) என்றார். அதாவது, நான் இன்னும் பரலோகத்திற்குப் போகவில்லை. எனவே நான் எங்கும் போய்விடாதபடி இப்படி என்னைப் பிடித்துக் கொண்டிராதே என்றே அவர் மரியாளிடம் கூறினார்.

தம்மைப் பற்றிப்பிடித்துக் கொண்டிருக்க வேண்டாம் என்று இயேசுகிறிஸ்து மரியாளுக்கு அறிவுறுத்தியதற்கு இன்னுமொரு காரணமும் உள்ளது. இயேசுகிறிஸ்து பரலோகத்திற்குப் போவதைப் பற்றியும் இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர் இதை நிகழ்காலத்தில் குறிப்பிட்டுள்ளமையினால், அவர் உடனடியாகப் பரலோகத்திற்குப் போவதைப் பற்றியே தெரிவித்துள்ளதாகச் சிலர் கருதுகின்றனர்.[13] ஆனால், இத்தகைய நிகழ்காலச் சொற்பிரயோகம், நடைபெறப்போகும் சம்பவத்தின் நிச்சயத்தை உறுதிப்படுத்துவதற்காகவே உபயோகிக்கப்பட்டுள்ளது.[14] வெகுவிரைவில் நிச்சயமாக நடைபெறப்போவதை அறிவிக்க இத்தகைய நிகழ்கால சொற்பிரயோகம் உபயோகிக்கப்பட்டுள்ளதை யோவானுடைய சுவிசேஷத்தில் பல இடங்களில் நாம் அவதானிக்கலாம் (8:14,21, 13:33,36, 14:4,28, 16:5,10,16,17). இன்னும் நாற்பது

---

[11] D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 644.
[12] R.C.H.Lenski,, *The Interpretation of St. John's Gospel*, p. 1360.
[13] R.E.Brown, *The Gospel According to John Volume 11*, pp. 992-993, 1011-1016.
[14] A.T.Robertson, *A Grammar of the Greek New Testament in the Light of Historical Research*, p. 870.

நாட்களுக்கு மட்டுமே அவர் இவ்வுலகத்தில் இருக்கப்போகின்றார். எனவே, அவர் மரிப்பதற்கும் முன்னர் அவரோடு பழகிய விதமாக இனி மேல் அவருடைய சீடர்களினால் இருக்க முடியாது. “மரியாள் இத்தகைய புதிய சூழ்நிலைக்குப் பழக்கப்படுவதற்காகவும் தம்மைத் தொட வேண்டாம் என்று இயேசுகிறிஸ்து கூறியுள்ளார்.”[15] உண்மையில், உயிர்த்தெழுந்த “இயேசுகிறிஸ்து தம்முடைய பழைய வாழ்க்கை முறைக்குத் திரும்பி வரவில்லை என்பதை மரியாள் அறிந்து கொள்ள வேண்டியவளாய் இருந்தாள்.”[16] அவள், “இயேசுகிறிஸ்துவை இவ்வுலகத்திலேயே வைத்திருக்க விரும்பினாள்.”[17] இதனால், “இயேசுகிறிஸ்து பழைய வாழ்க்கை முறைக்கே திரும்பி வந்து விட்டார் என்னும் எண்ணத்துடன் மரியாள் செயற்பட்டதனாலேயே”[18] அவர் அவளைத் தடுத்துள்ளார்.

சில கிறிஸ்தவர்கள், இயேசுகிறிஸ்து இன்னும் பரலோகத்திலிருக்கும் ஆலயத்தின் ஆசரிப்புக் கூடாரத்திற்குத் தம்முடைய பலியைச் செலுத்தப் போகாதமையினாலேயே, தம்மைத் தொடவேண்டாம் என்று மரியாளிடம் கூறியதாகக் கருதுகின்றனர்.[19] இது பழைய ஏற்பாட்டில் பிராயச்சித்தப் பலி செலுத்தப்பட்ட பின்னர், பிரதான ஆசாரியன் பலிமிருகத்தின் இரத்தத்துடன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்று அதைத் தேவனுக்கு ஒப்புவிக்கும் செயலின் நிறைவேறுதல் என்பது இவர்களின் தர்க்கமாகும். எனினும், இத்தகைய உபதேசம் வேதத்தின் வேறு எந்த ஒரு பகுதியிலும் குறிப்பிடப்படவில்லை. மேலும், “இயேசுகிறிஸ்து சிலுவையில் பலியாகத் தம்மைக் கொடுத்த போதே தேவனுக்குத் தமது பலியின் இரத்தத்தைச் செலுத்தியமையால், அவர் உயிர்த்தெழுந்த பின்பே இச்செயலைச் செய்தார் என்று தர்க்கிப்ப

---

[15] F.F.Bruce, *The Gospel of John*, p. 390.
[16] R.C.H.Lenski,, *The Interpretation of St.John's Gospel*, p. 1361.
[17] J.Calvin, *The Gospel According to John 12-21*, p. 198.
[18] L.Morris, *John: New International Commentary on the NT*, p. 742.
[19] K.M.Monroe, “Time Element in the Atonement” in *Evangelical Quarterly*, Vol.5, 1933, p. 397-408.

தில் அர்த்தமில்லை."[20] உண்மையில், இயேசுகிறிஸ்து பரலோகத் திற்குப் போய் வருவதற்கு முன்னர், மரியாள் இயேசு கிறிஸ்து வைத் தொட முயன்றமையினாலேயே அவர் அவளைத் தடுத்தார் என்பதற்கு வேதத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களுக்குப் பின்பே பரலோகத்திற்குப் போனார்.[21] மரியாளின் மனப்பாங்கு இயேசு கிறிஸ்துவுடனான புதிய வாழ்க்கை முறையை, அதாவது அது வரை காலமும் அவரோடு தொடர்பு கொண்ட முறை முடிவ டைந்து இப்போது ஆவிக்குரிய பிரகாரம் அவருடன் வாழும் முறையை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இராதமையினா லேயே, தம்மைத் தொட வேண்டாம் என்று அவர் அவளிடம் கூறினார்.

---

[20] W.W.Wiersbe, *Be Transformed*, p. 127.

[21] உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து பரலோகத்திற்குப் போய்க் கொண்டி ருந்தமையால் தமது பிரயாணத்தைத் தடுக்கவேண்டாம் என்று கூறுவதற் காகவே தம்மைத் தொட வேண்டாம் என்று கூறியதாகச் சிலர் கருதுகின்ற போதிலும், இது ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கமாக இல்லை. இச்சம்ப வத்தின் பின்னர் இயேசுகிறிஸ்து அன்றைய தினம் ஒரு தடவையும் (யோவா.20:19-23), ஒரு கிழமையின் பின்னர் இன்னுமொரு தடவையும் (யோவா.20:24-29), அதன் பின்பு மூன்றாவது தடவையாகவும் (அதி.21) தமது சீடர்களுக்குத் தரிசனமளித்ததாக யோவானுடைய சுவிசேஷத்தி லேயே குறிப்பிடப்பட்டிருப்பதனால், அவர் அவசரமாகப் பரலோகத்திற்குப் போய்க்கொண்டிருந்தமையினாலேயே தம்மைத் தொட வேண்டாம் என்று கூறியதாக இயேசுகிறிஸ்துவின் கூற்றை விளக்குவது அர்த்தமற்றது. மேலும், அவர் உயிர்த்தெழுந்து 40 நாட்களுக்குப் பின்பே பரலோகத்திற் குச் சென்றமையால் இவ்விளக்கத்தை எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது (W.Hendriksen, *New Testament Commentary: John*, p. 455). இதேபோல, சில ஆதிச்சபைப் பிதாக்களின் விளக்கத்திற்கும் எவ்வித ஆதாரமும் இல்லை. ஒகஸ்டீன் என்னும் சபைப் பிதா, மரியாள் புறஜாதிச் சபையைக் குறிக்கின்றாள் என்றும், புறஜாதியார் இயேசு கிறிஸ்து பரமேறிச் சென்ற பின்பே அவரை விசுவாசித்தமையால், அதற்கும் முன்னர் தம்மைத் தொடவேண்டாம் என்று மரியாளுக்குக் கூறியதாக இவ்வசனத்தை விளக்கியுள்ளார். எனினும் மரியாளைப் புறஜாதி சபை என்று கூறுவது அர்த்தமற்றது (J.C.Ryle, *Expository Thoughts on John Volume 3*, p. 427).

இருபத்தெட்டாம் அத்தியாயம்

எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்....

(யோவான் 20:23)

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைத் தவறாகப் புரிந்து கொள் வதன் விளைவு, பிழையான வேதப் புரட்டு உபதேசங்களின் உருவாக்கம் என்றால் அது மிகையாகாது. வேதவசனங்களைத் தவறாகப் புரிந்து கொள்வதன் மூலமும், தவறாக வியாக்கியானம் செய்வதன் மூலமும் பல தவறான உபதேசங்கள் கிறிஸ்தவ உலகில் உருவாகியுள்ளன. அவ்வகையில், யோவான் எழுதிய சுவிசேஷத்தில் உள்ள இயேசுகிறிஸ்துவின் கடினமான கூற்றுக் களில் கடைசியாக உள்ள வசனமும் பாரியதோர் வேதப்புரட்டு உபதேசத்தை உருவாக்கியுள்ளது. யோவான் 20:23ல் இயேசு கிறிஸ்து தம் சீடர்களிடம், “எவர்களுடைய பாவங்களை மன்னிக் கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும். எவர்களு டைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்க ளுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்” என்று அறிவித்துள்ளார். இவ் வசனத்தை ஆதாரமாகக் கொண்டு, ரோமன் கத்தோலிக்க

சபையும், சில வேதப் புரட்டுக் குழுக்களும், தங்களுடைய மதத் தலைவர்களிடம் (குருவானவரிடம் அல்லது பாஸ்டரிடம்) பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி போதித்து வருகின்றன.[1]

இயேசுகிறிஸ்துவின் கூற்றிலுள்ள "மன்னித்தலும்" "மன்னியாதிருத்தலுமே" மத்தேயுவின் சுவிசேஷத்தில் "கட்டுதலாகவும்" "கட்டவிழ்க்கப்படுதலாகவும்" குறிப்பிடப்பட்டுள்ளது. மத்தேயு 18:18ல் இயேசுகிறிஸ்து தமது சீடர்களிடம், "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்ட விழ்ப்பீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று கூறினார். "இதில் 'கட்டுதல்' என்பது மன்னியாதிருப்பதையும், "கட்டவிழ்த்தல்" மன்னித்தலையும் குறிக்கும் உருவக விவரணங்களாக உள்ளன."[2] யூதமதப் போதகர்கள் மத்தியில் "கட்டுதல்" "அவிழ்த்தல்" என்னும் பதங்கள் ஒரு காரியத்தை அனுமதிப்பதற்கும் தடைசெய்வதற்கும் உபயோகிக்கப்படும் வார்த்தைகளாக இருந்தன. எனினும், ஆரம்பத்தில் இப்பதங்கள் நீதிமன்றத் தீர்ப்போடு சம்பந்தப்பட்டிருந்தன. அதாவது, ஒருவனுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டினால் அவன் கட்டப்பட்டிருக்கின்றான், அல்லது அதிலிருந்து கட்டவிழ்க்கப்பட்டுள்ளான் என்று அறிவிக்கும் தீர்ப்பாக இப்பதங்கள் உபயோகிக்

---

[1] Brown, R. "The Kerygma of the Gospel According to John: The Johannine View of Jesus in Mordern Studies" in *Interpretation*. p. 391. ரோமன் கத்தோலிக்க சபையில் பாவ அறிக்கை முக்கியமான விடயமாக உள்ளது. பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக, அவற்றை சபையினால் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட குருவானவரிடம் அறிக்கைசெய்ய வேண்டும் என்பது ரோமன் கத்தோலிக்க சபையின் உபதேசமாகும். அறிக்கையிடப்படும் பாவத்தைச் செவிமடுக்கும் குருவானவர், அதற்காகச் செய்ய வேண்டிய பரிகாரச் செயல்களையும் அறிவிப்பார். அறிக்கையிடப்படும் பாவங்களை மன்னிப்பதற்கு குருமார்களுக்கு அதிகாரம் உண்டு என்றும் ரோம சபை கூறுகிறது (L.Boettner, *Roman Catholicism*, pp. 196-197).

[2] J.R.Michaels, *John: New International Biblical Commentary*, pp. 349-350.

கப்பட்டன.[3] மத்தேயு 16:19ல் பேதுருவிற்கு கொடுக்கப்பட்ட இவ்வதிகாரம் மத்தேயு 18:18லும், யோவான் 20:23லும் சகல சீடர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. "மத்தேயுவில் இக்கட்டளை சபை ஒழுக்க நடவடிக்கை எடுப்பதோடு தொடர்புள்ள அறிவுறுத் தலாக உள்ளது. ஆனால், யோவானில், சீடர்களின் சுவிசேஷப் பணியோடு தொடர்புற்றுள்ளது"[4]

இயேசுகிறிஸ்துவினுடைய வார்த்தைகள், பாவங்களை மன்னிக் கும் அல்லது மன்னியாதிருக்கும் ஆற்றல் சீடர்களுக்கு அருளப் பட்டுள்ளது என்னும் அர்த்தமுடையவைகள் அல்ல. "மக்களு டைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளது அல்லது மன்னிக்கப் படவில்லை என்று அறிவிக்கக்கூடிய அதிகாரம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது"[5] என்பதையே இவ்வசனம் அறியத்தருகின் றது. இது சீடர்களின் சுவிசேஷப் பிரசங்கத்தோடு இணைந்துள்ள ஒரு விடயமாக இருப்பதனால், இயேசுகிறிஸ்துவின் இக்கூற்றை சுவிசேஷப் பிரசங்கத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண் டே நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். சீடர்கள் அறிவிக்கும் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷப் பிரசங்கம் மக்களின் பாவ மன்னிப்பையும் உள்ளடக்கிய செய்தியாகவே உள்ளது. இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலி மக்களுடைய பாவங்களை மன்னித்து அவர்களுக்கு மெய்வாழ்வை அளிக்கும் நற்செய்தி யாக மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. எனவே, சீடர்களின் சுவிசே ஷப் பிரசங்கத்திற்கு மக்கள் சரியான விதத்தில் ஏற்றுக்கொண்டு, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, அவற்றுக்கு இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பலியின் மூலமே மன்னிப்பு கிடைக்கும் என்று விசுவாசிக்கும்போது, அவர்களுடைய பாவங்கள் மன் னிக்கப்பட்டன என்று அறிவிக்கும் அதிகாரத்தையே இயேசு கிறிஸ்து சீடர்களுக்கு கொடுத்துள்ளார். அதேசமயம், ஒருவன் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை நிராகரித்தால், அவனுடைய

---

[3] G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Vol. 36*, p. 383.
[4] D.A.Carson, *John: The Pillar New Testament Commentaries*, p. 655.
[5] L.Morris, *John: The New International Commentary on the New Testament*, p. 847.

பாவங்கள் மன்னிக்கப்படவில்லை என்றும் அறிவிக்கக்கூடிய அதிகாரம் சீடர்களுக்கு கொடுக்கப்பட்டது.[6] "சீடர்களின் விருப் பத்திற்கும், தீர்மானத்திற்கும் ஏற்றபடி தேவன் மக்களுடைய பாவங்களை மன்னிக்கிறவராக இருக்கவில்லை. மாறாக, தேவன் மக்களுக்கு அருளும் மன்னிப்பை அறிவிப்பவர்களாகவே சீடர்கள் இருந்தனர்"[7] இதனால்தான் சீடர்கள், 'என்னால் பாவத்தை மன்னிக்கமுடியும்' என்று பிரசாரம் பண்ணிக் கொண்டிருக்கவில் லை. மாறாக, அவர்கள் இயேசுகிறிஸ்து அருளும் பாவ மன்னிப் பின் செய்தியையே அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.[8] உண்மை யில், "இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்களின் பாவங்களை அவர் மன்னிக்கிறார் என்று அறிவிக்கும் அதிகாரமே சீடர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது."[9] இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் மக்களுடைய பாவமன்னிப்பைப் பற்றியதாக இருந்த மையால், தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி அச்செய்தி யை ஏற்றுக்கொள்பவர்களை இயேசுகிறிஸ்து மன்னிக்கின்றார் என்பதை அறிந்திருந்த சீடர்கள் அதை அவர்களுக்கு அறிவிக் கக்டியவர்களாக இருந்தனர்.[10]

பாவங்களை மன்னிப்பதற்கு எந்த மனிதனுக்கும் ஆற்றல் இல்லை என்பதை வேதாகமம் அறியத்தருகின்றது. தேவனால் மட்டுமே பாவங்களை மன்னிக்க முடியும் என்பதே வேதாகமம் அறியத்தரும் சத்தியமாகும் (மாற்.2:7). இயேசுகிறிஸ்து தேவனாக

[6] H.J.Cadbury, "The Meaning of John 20:23, Matthew 16:10 and Matthew 18:18" in *Journal of Biblical Literature*, pp. 251-254. Mantey, J.R. "The Mistranslation of the Perfect Tense in John 20:23, Matthew 10:19 and Matthew 18:18" in *Journal of Biblical Literature*, pp. 243-249.
[7] M.C.Tenney, *John: The Expositor's Bible Commentary Volume 9*, p.193.
[8] "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய (இயேசுகிறிஸ்துவினுடைய) நாமத்திலே பிரசங்கிக்கப்பட வேண்டும்" (லூக்.24:47) என்று அறிவிக்கப்பட்டபடியே, சீடர்கள், "இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்களே பாவ மன்னிப்பைப் பெறுவார்கள்" (அப்.10:43) என்னும் சத்தியத்தை அறிவித்து வந்தனர்.
[9] H.M.Woods, *Our Priceless Heritage*, p. 118
[10] W.Barclay, *John Volume 2: The Daily Study Bible*, p. 274.

இருக்கின்றமையால், அவர் மக்களின் பாவங்களை மன்னிக்கிறவ ராக இருக்கின்றார் (மத்.9:6). இதனால் நம்முடைய பாவங்களை இயேசுகிறிஸ்துவிடம் அறிக்கையிடும்படியே வேதாகமம் அறிவு றுத்துகிறது (1யோவா.1:9). எனவே, குருவானவர்களுக்கும் பாஸ்ட்டர்மார்களுக்கும் மக்களின் பாவங்களை மன்னிக்கும் ஆற்றல் இருக்கின்றது என்னும் போதனை வேதப்புரட்டு உபதேசம் ஆகும். மேலும், சுவிசேஷப் பிரசங்கத்தின் மூலம் மனந்திரும்பும் மனிதனுடைய பாவங்களைத் தேவன் மன்னித் துள்ளார் என்று அறிவிக்கும் அதிகாரத்தையே இயேசுகிறிஸ்து சீடர்க ளுக்கும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஊழியர்களுக்கும் கொடுத்துள்ளமையால், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியின் மூலம் பாவ மன்னிப்பைப் பெற்று இரட்சிக்கப்பட்டவன், அதன் பின்னர் தான் செய்யும் பாவங்களுக்கு மன்னிப்பு பெறுவதற்காக ஊழியக்காரரிடம் தனது பாவத்தை அறிக்கையிட வேண்டியதில் லை. அவன் தன் பாவத்தை நேரடியாக இயேசுகிறிஸ்துவிடமே அறிக்கையிட்டு அதற்கான மன்னிப்பைப் பெற்றிடலாம். “இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம் மைச் சுத்திகரிக்கும்” (1யோவா.1:7), என்று கூறும் வேதாகமம், நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார்” (1யோவா.1:9) என்னும் சத்தியத்தை அறியத்தருகின் றது. “ஒருவன் பாவஞ் செய்வானானால், நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகி றவராக இருக்கின்றமையால் (1யோவா.2:1), நாம் அவரிடமே நம் பாவங்களை அறிக்கையிட வேண்டும். தேவனுக்கும் மனித ருக்கும் இடையில் இயேசுகிறிஸ்து மட்டுமே மத்தியஸ்தராக இருக்கின்றமையால் (1தீமோ.2:5-6), நாம் மனிதர்களிடம் நம் பாவங்களை அறிக்கையிட்டால் அவற்றுக்குத் தேவனிடமிருந்து மன்னிப்பு கிடைக்காது. எனவே, தேவன் அருளும் பாவ மன்னிப் பையும் மெய்வாழ்வையும் பெற்றுக்கொள்வதற்கு மனிதர்கள் இயேசுகிறிஸ்துவிடமே தங்களுடைய பாவங்களை அறிக்கையிட வேண்டும்.

உசாத்துணை நூல்கள்

யோவான் சுவிசேஷ விளக்கவுரை நூல்கள்

COMMENTARIES ON THE GOSPEL OF JOHN

Barclay, William. *The Gospel of John: The Daily Study Bible Volumes 1&2*. Edinburgh: St. Andrew Press, 1990.

Barrett, C.K. *The Gospel According to John: An Introduction with Commentary and Notes on The Greek Text*. London: SPCK, 1978.

Beasley-Murray, George R. *John: Word Biblical Commentary Volume 36*. Nashville: Thomas Nelson Publishers, 1999.

Bernard, J.H. *John: The International Critical Commentary Volumes 1&2*. Edinburgh: T&T Clark, 1928.

Blum, Edwin. *John: The Bible Knowledge Commentary New Testament*. Wheaton: Victor Books, 1983.

Borchert, Gerald L. John: *The New American Commentary* (2 Volumes). Nashville: Broadman & Holman Publishers, 1996/2002

Brown, Raymond E. *John: The Anchor Bible Commentary Volumes 1&2*. New York: Geoffrey Chapman, 1966/1971.

Bruce F.F. *The Gospel of John.* Grand Rapids: Eerdmans Publishing Company, 1983.

Bultmann, R. *The Gospel of John*. Oxford: Blackwell, 1971.

Burge, Gray M. John: The NIV Application Commentary, Grand Rapids: Zondervan Publishing House, 2000.
Calvin, John. *The Gospel According to St John. Volumes 1&2.* GrandRapids: Eerdmans Publishing Company, 1994/1995
Carson, D.A. *The Gospel According to John: The Pillar New Testament Commentary*. Leicester/Grand Rapids: Inter Varsity Press/ Eerdmans Publishing Company, 1991.
Dodd, C.H. *The Interpretation of the Fourth Gospel*. Cambridge: Cambridge University Press, 1953.
Dods, Marcus. *John: The Expositor's Greek New Testament*. London: Hodder & Stoughton, 1897.
Edwards, R.A. *The Gospel According to John: Its Criticism and Interpretation*. London: J.Clarke, 1954.
Ellis, David J. *John:New International Bible Commentary*.Grand Rapids: Zondervan Publishing House, 1979.
Fenton, J.C.*The Gospel According to John*, Cambridge: Clarendon Press, 1970.
Findlay, J.A.*The Fourth Gospel: An Expository Commentary*. London: Epworth Press, 1956.
Gaebelein, A. C. *The Gospel of John*. Neptune: Loizeaux, 1965
Godet, F.L. *Commentary on the Gospel of John Volumes 1&2*. Edinburgh: T.&T.Clark, 1887.
Guthrie, Donald. *John: The New Bible Commentary*. Downers Grove/Leicester: Inter Varsity Press, 1994
Haenchen, E. *A Commentary on the Gospel of John Volumes 1&2*. Philadelphia: Fortress Press, 1984.
Hendriksen, William. *New Testament Commentary: John*. Edinburgh: The Banner of Truth Trust. 1982.
Hengstenberg, E.W. *Commentary on the Gospel of John Volumes 1&2*. Edinburgh: T.&T.Clark, 1865/1871.
Hobbs, Herschel H. *John: A Study Guide*. Grand Rapids: Zondervan Publishing House, 1974.
Hoskyns, E.C. *The Fourth Gospel*. London: Faber & Faber,1947
Howard, W.F. *John: The Interpreter's Bible Volume 8*. Nashville: Abingdon Press, 1952.
Hull, W.E. *John: Broadman Bible Commentary Volume 9*. Nashville: Broadman Press, 1970.

Hunter, A.M. *John: The Cambridge Bible Commentary*. London: SCM Press, 1968.
Keener, Craig S. *The IVP Bible Background Commentary: New Testament*. Downers Grove: Inter Varsity Press, 1993.
Kelly, William. *An Exposition of the Gospel of John*. London: F.E.Race, 1923.
Kent, Homer A. *Light in the Darkness: Studies in the Gospel of John*. Grand Rapids: Baker Book House, 1974.
Kysar, R. *John: Augsburg Commentary on the New Testament*. Minneapolis: Augsburg Press, 1986.
Lenski, R.C.H. *Interpretation of St.John's Gospel*. Minneapolis: Augsburg Publishing House, 1961.
Lightfoot, J.B. *St.John's Gospel: A Commentary*. Oxford: Oxford University Press, 1956.
Lindars, Barnabas. *John: The New Century Bible Commentary*. London: Marshall, Morgan & Scott, 1972.
Macgregor, G.H.C. *The Gospel of John: Moffatt New Testament Commentary*. London: Hodder & Stoughton, 1928.
MacRae, G.W. *Invitation to John: A Commentary on the Gospel of John*. New York: Doubleday, 1978.
Marsh, J. *John: Pelican New Testament Commentaries*. Harmondsworth: Penguin Books, 1968.
Meyer, H.A.W. *Critical and Exegetical Hand-Book to the Gospel of John*. Winona Lake: Alpha Publications, 1979.
Michaels, J.Ramsey. *John: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1989.
Milne, Bruce. *The Message of John: The Bible Speaks Today*. Leicester: Inter Varsity Press, 1993.
Mitchell, John G. *Let's Revel in John's Gospel*. West Linn: Glory Press, 2000.
Morris, Leon. *John: New International Commentary on the NT*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1989.
__________. *Expository Reflections on the Gospel of John*. Grand Rapids: Baker Book House, 1991.
Newbigin, Lesslie. *The Light Has Come: An Exposition of the Fourth Gospel*. Grand Rapids: Eerdmans, 1982.

Nixon, Robin E. *St. John: Scripture Union Bible Study Books*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1968.

Odeberg, H. *The Fourth Gospel*. Amsterdam: B.R.Gruner, 1968.

Plummer, A. *John: Cambridge Greek Testament*. Cambridge: Cambridge University Press, 1882.

Reynolds, H.R. *John Volumes 1&2: The Pulpit Commentaries*. London: Funk and Wagnalls, 1906.

Richardson, A. *John: Torch Bible Commentaries*. London: SCM Press, 1959.

Ridderbos, H. *John: A Theological Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1977.

Ryle, J.C. *Expository Thoughts on John Volumes 1-3*. Edinburgh: The Banner of Truth Trust. 1987.

Sanders, J.N. *John: Black's New Testament Commentaries*. London: A.& C.Black, 1968.

Schnackenburg, R. *John Volumes 1-3: Harper's New Testament Commentaries*. London: Burns & Oates, 1968/1980/1982.

Smith, D.M. *John: Proclamation Commentaries*. Philadelphia: Fortress Press, 1976.

Strachan, R.H. *The Fourth Gospel: Its Significance and Environment*. London: SCM Press, 1941.

Tasker, R.V.G. *John: Tyndale New Testament Commentaries*. Leicester: Inter Varsity Press, 1988.

Temple,W. *Readings in John's Gospel*. London:Macmillan, 1961

Tenney, Merrill C. *John: The Gospel of Belief*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1953.

_______________. *John: The Expositor's Bible Commentary Vol.9*. Grand Rapids: Zondervan Publishing House, 1981.

Turner G. & Mantey, J. *John: The Evangelical Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, n.d.

Westcott, B.F. *The Gospel According to St. John*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1950.

Wiersbe, Warren W. *Be Alive: John 1-12*. Wheaton: Victor Books, 1987.

________________. *Be Transformed: John 13-21*. Wheaton: Victor Books, 1987.

யோவான் சுவிசேஷ ஆய்வுரைக் கட்டுரைகளும் நூல்களும்

SPECIAL STUDIES ON THE GOSPEL OF JOHN

Abbott, E.A. *Johannine Vocabulary*. London: Adam & Charles Black, 1905.

Abbott, E.A. *Johannine Grammar*. London: Adam & Charles Black, 1906.

Abrahams, I. "How did the Jews Baptize?" in *Journal of Theological Studies*, Vol.12 (1911), pp. 609-612.

Bacon, B.W. "The Sacrament of Footwashing" in *The Expository Time*. 43 (1931-1932), pp. 218-221.

__________. "In My Father's House Are Many Mansions" in *The Expository Time*. 43 (1931-1932), pp 477-478.

Barrett, C.K. *Essays on John*. London: SPCK, 1982.

Beasley-Murray, G.R.*Gospel of Life: Theology in the Fourth Gospel*. Peabody: Hendrickson Publishers, 1991.

Blight, J. "The Man Born Blind" in *Heythrop Journal*. 7 (1966), pp. 129-144.

Bowman, J. "The Identity and Date of the Unnamed Feast of John 5:1" in *Near Eastern Studies*. H.Goedicke, ed., Baltimore: Johns Hopkins Press, 1971, pp. 43-56.

_________. *The Fourth Gospel and the Jews*. Pittsburg: Pickwick, 1975.

Brown, R. "The Kerygma of the Gospel According to John: The Johannine View of Jesus in Mordern Studies" in *Interpretation*. 21 (1967).

________. *The Community of the Beloved Disciple*. New York: Paulist Press, 1979.

Bultmann R. "New Testament and Mythology" in *Kerygma and Myth*. ed., H.Bartsch. New York: Harper & Row, 1961, pp. 1-44.

Cadbury, H.J. "The Meaning of John 20:23, Matthew 16:10 and Matthew 18:18" in *Journal of Biblical Literature*. 58 (1939), pp. 251-254.

Carson, D.A. *Jesus and His Friends: His Farewell Message and Prayer in John 14to17* Leicester: Inter Varsity Press,1986.
Crehan, J. *The Theology of John*. New York: Sheed & Ward,1965
Crossan, J.D. *The Essential Jesus: Original Sayings and Earliest Images*. San Francisco: Harper, 1994.
Culpepper, R.A. *The Anatomy of the Fourth Gospel: A Study in Literary Design*. Philadelphia: Fortress Press, 1984.
______________. "The AMHN AMHN Sayings in the Gospel of John" in *Perspectives in John*, R.Sloan, ed., Lewiston: Edwin Mellen, 1993, pp. 57-101.
Dodd, C.H. *Historical Tradition in the Fourth Gospel*. Cambridge: Cambridge University Press, 1958.
Duke, P. *Irony in the Fourth Gospel*. Atlanta: John Knox, 1985.
Dunn, James D.G. "John 6: A Eucharistic Discourse?" in *New Testament Studies*. 17 (1971), pp. 328-338.
Eller, V. *The Beloved Disciple: His Name, His Story, His Thought*. Grand Rapids: Eerdmans, 1987.
Fowler, D.C. "The Meaning of 'Touch Me Not' in John 20:17" in *The Evangelical Quarterly*. 47 (1975), pp. 16-25.
Freed, E. *Old Testament Quotations in the Gospel of John*. Leiden: Brill, 1965.
Fuller, R.H. "John 20:19-23" in *Interpretation*. 32 (1978), pp. 180-184.
Giblet, J. "The Eucharist in St.John's Gospel" in *Concilium*. 4 (1969), pp. 32-42.
Grossouw, W.K."A Note on John13:1-3" in *Novum Testamentum*. 8 (1966), pp. 124-131.
Gruenler, R. *The Trinity in the Gospel of John*. Grand Rapids: Baker Book House, 1986.
Guilding, A. *The Fourth Gospel and Jewish Worship*. Oxford: Clarendon Press, 1960.
Harner, P. *The "I Am" of the Fourth Gospel*. Philadelphia: Fortress Press, 1984.
Hodges, Z. "Problem Passages in the Gospel of John Part 5: The Angel at Bethesda-John 5:4" in *Bibliotheca Sacra*. 136 (1979), pp. 25-39.

Howard, J.K. "Passover and Eucharist in the Fourth Gospel" in *Scottish Journal of Theology*. 20 (1967), pp. 329-337.
Kilmartin, E.J. "Liturgical Influence on John 6" in *Catholic Biblical Quarterly*. 22 (1960), pp. 183-191.
Knox, W.L. "John 13:1-10" in *Harvard Theological Review*. 43 (1950), 161-163.
Lee, E. *The Religious Thought of St. John*. London: SPCK, 1962.
Lindars, B. "Word and Sacrament in the Fourth Gospel" in *Scottish Journal of Theology*. 29 (1976), pp. 49-63.
MacGregor, C.H.C. "The Eucharist in the Fourth Gospel" in *New Testament Studies*. 9 (1962-1963), pp. 111-119.
Mantey, J.R. "The Mistranslation of the Perfect Tense in John 20:23, Matthew 10:19 and Matthew 18:18" in *Journal of Biblical Literature*.58 (1939), pp. 243-249.
Martyn, J.L. *History and Theology in the Fourth Gospel*, Nashville: Abingdon Press, 1979.
__________. *The Gospel of John in Christian History*. New York: Paulist Press, 1978.
McNamara, M. "To Prepare a Resting-Place for You: A Targumic Expression and John 14:2" in *Miltown Studies* 3 (1979), pp. 100-108.
Meyer, P.W. "A Note on John 10:1-18" in *Journal of Biblical Literature*. 75 (1956), pp. 232-235.
Michaels, J. "Nathaniel under the Fig Tree" in *Expository Times*, 78 (1967), pp. 182-183.
Moffatt, J. "The Lord's Supper in the Fourth Gospel" in *The Expositor*. 8th Series. 6 (1913), pp. 1-22.
Mollat, D. "The Sixth Chapter of Saint John" in *The Eucharist in the New Testament*. Tr., E.M.Stewart, Baltimore: Helicon, 1964, pp. 143-156.
Moule, C.F.D. "A Note on 'Under the Fig Tree' in John 1:48,50" in *Journal of Theological Studies*. 5 (1954), pp. 210-211.
Newman, B. & Nida, E. A *Translator's Handbook on the Gospel of John*. New York: United Bible Societies, 1980.

Nunn, H. *The Authorship of the Fourth Gospel*. Oxford: Alden & Blackwell, 1952.

Pancaro, S. *The Law in the Fourth Gospel*. Leiden: Brill, 1975.

Pollard, T.E. "The Exegesis of John 10:30 in the Early Trinitarian Controversies" in *New Testament Studies*. 3 (1956-1957), pp. 334-349.

Quasten, J. "The Parable of the Good Shepherd: John 10:1-21" in *Catholic Biblical Quarterly*. 10 (1948), pp. 1-12.

Robinson, J.A.T. *The Priority of John*. London: SCM Press, 1959.

_____________. *Twelve New Testament Studies*. Naperville: Alec R. Allenson, 1962.

Sanders, J.N. *The Fourth Gospel and the Early Church*. Cambridge: Cambridge University Press, 1943.

Salvoni, F. "Nevertheless, My Hour Has Not Yet Come" in *Restoration Quarterly*. 7 (1963), pp. 236-241.

Sidebottom, E.M. *The Christ of the Fourth Gospel*, London: SPCK, 1961.

Smith, D.M. *The Composition and Order of the Fourth Gospel*. New Heaven: Yale University Press, 1965.

_____________. *The Theology of the Gospel of John*. Cambridge: Cambridge University Press, 1983.

Thompson, M. *The Humanity of Jesus in the Fourth Gospel*. Philadelphia: Fortress Press, 1988.

Vardaman, E.J. "The Pool of Bethesda" in *The Bible Translator*. 14 (1963), pp. 27-29.

Vasanthakumar, M.S. *Living Water for Spiritual Life: An Expositional Study on John Chapter Four* [Tamil], Peradeniya: Lanka Bible College, 2002.

VonWahlde, "The Witnesses to Jesus in John 5:31-40 and Belief in the Fourth Gospel" in *Catholic Biblical Quarterly*. 43 (1981), pp. 385-404.

Wieand, D. "John 5:2 and the Pool of Bethesda" in *New Testament Studies*. 12 (1966), pp. 392-404;

Woods, Henry M. *Our Priceless Heritage*. Harrisburg: The Evangelical Press, 1941.

ஏனைய நூல்களும் கட்டுரைகளும்

OTHER RELATED BOOKS AND ARTICLES

Abraham, Koshy, *Prajapathi: The Cosmic Christ*. Delhi: ISPCK, 1997.

Barclay, William. *Jesus As They Saw Him*. London: SCM Press Ltd., 1991.

Beasley-Murray, G.R. *Baptism in the New Testament*, Carlisle: Paternoster Press, 1972.

Berkhof, Louis. *The History of Christian Doctrine*. Edinburgh: The Banner of Truth Trust, 1985.

____________. *Systematic Theology*. Edinburgh: The Banner of Truth Trust, 1988.

Blaiklock, E.M. & Harrison, R.K. ed., *The New International Dictionary of Biblical Archaeology*. Grand Rapids: Zondervan Publishing House, 1983.

Boettner, Loraine. *Roman Catholicism*, Phillipsburg: The Presbyterian and Reformed Publishing Company, 1962.

Bowman, J. "Samaritan Studies" in *The Bulletin of the John Rylands Library.* 40 (1957-1958), pp. 298-327.

Brown, S. "The Two-fold Representation of the Mission in Matthew's Gospel" in *Studia Theologica*. 31 (1977), pp. 21-32.

_______. "The Matthean Community and the Gentile Mission" in *Novum Testamentum*. 22 (1980), pp. 193-221.

Bruce, F.F. *Acts: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1992.

Burke, John P. *Studies in Genesis*. Winona Lake: BMH Books, 1978.

Carson, D.A. ed., *Worship: Adoration and Action*. Carlisle: The Paternoster Press, 1993.

Chellappa, Sadu. *Is Christianity Necessary?* Madras: Agni Publication, 1995.

Cullmann, O. *Early Christian Worship*. London: SCM, 1953.

Davies, J.G. ed., *A Dictionary of Liturgy and Worship*. London: 1972.
Davis, John J. *Paradise to Prison: Studies in Genesis*. Salem: Sheffield Publishing Company,1998.
___________. *Moses and the Gods of Egypt: Studies in Exodus*. Winona Lake: BMH Books, 1998.
Dunn, James D.G. *Baptism in the Holy Spirit*, London: SCM Press, 1970.
Edwards, Brian H. *Nothing but the Truth*. Darlington: Evangelical Press, 1993.
Edwards, James R. *Mark: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans, 2002.
Enns, Paul. *The Moody Handbook of Theology*. Chicago: Moody Press, 1989.
Erickson, Millard J. *Christian Theology*. Grand Rapids: Baker Book House, 1988.
Finegan, J. *Archaeology of the New Testament*. Princeton: Princeton University Press, 1969.
Fitzmyer, Joseph. *Romans: The Anchor Bible Commentary*. London: Geoffrey Chapman, 1993.
Ferguson, Everett. *Backgrounds of Early Christianity*. Grand Rapids: Eerdmans Publishing Company1993.
Fernando, Ajith. *The Supremacy of Christ*. Wheaton: Crossway Books, 1995.
____________. *Acts: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1998.
Freeman, James M. *Manners and Customs of the Bible*. Plainfield: Logos International, 1972.
Geisler, Norman & Howe, Thomas. *When Critics Ask: Hand-Book on Bible Difficulties*. Wheaton: Victor Books, 1992.
Gower, Ralph. *The New Manners and Customs of Bible Times*. Chicago: Moody Press, 1987.
Grant, R.M. *Second Century Christianity*. London: SPCK, 1957.
Green, Joel B. McKnight, Scot and Marshall, I. Howard. ed., *Dictionary of Jesus and the Gospels*. Leicester/Downers Grove: Inter Varsity Press, 1992.

Grudem, Wayne. *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*. Leicester: Inter Varsity Press, 1994.

Guthrie, Donald. *New Testament Theology*, Leicester: Inter Varsity Press, 1981.

Hawthorne, Gerald F. *Philippians: Word Biblical Commentary Volume 43*. Waco: Word Books, 1983.

Huey, F.B. *Numbers: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1981.

Jeremias, J. *Jerusalem in the Time of Jesus*. London: SCM, 1969.

Kaiser, Walter C. *The Messiah in the Old Testament*. Carlisle: Paternoster Press, 1995.

Kelly, J.N.D. *Early Christian Doctrines*. London: A & C Black, 1993.

Mackowski, R. *Jerusalem: City of Jesus*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1980.

Marshall, I. Howard. *Philippians: Epworth Commentaries*. London: Epworth Press, 1992.

McDowell, Josh & Larson, Bart. *Jesus: A Biblical Defence of His Deity*. Eastbourne: Crossway Books, 1991.

Miller, Elliot & Samples, Kenneth R. *The Cult of the Virgin: Catholic Mariology and the Apparitions of Mary*. Grand Rapids: Baker Book House, 1994.

Monroe, K.M. "Time Element in the Atonement" in *Evangelical Quarterly,* Vol.5, 1933, pp. 397-408

Morris, Leon, *The Atonement: Its Meaning and Its Significance*. Leicester/Downers Grove: Inter Varsity Press, 1983.

___________. *1&2 Thessalonians: The New International Commentary on New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company 1991.

____________, *The Lord from Heaven: A Study of the New Testament Teaching on the Deity and Humanity of Jesus Christ*. Leicester: Inter Varsity Press, 1995.

Mowinckel, S. *He That Cometh*, Oxford: Oxford University Press, 1959.

Myers, Allen C. *The Eerdmans Bible Dictionary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1993.

Nolland, John. *Luke: Word Biblical Commentary Volume 35*. Waco: Word Books, 1989.

Oswalt, John N. *Isaiah 1-39: The New International Commentary on the Old Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1986.

Olson, Roger E. *The Story of Christian Theology*. Leicester: Inter Varsity Press, 1990.

Panikkar, Raimundo. *The Unknown Christ of Hinduism*. London: Darton, Longman & Todd, 1964.

Pink, Arthur W. *The Attributes of God*. Grand Rapids: Baker Book House, 1984.

Robinson, J.A.T. *Twelve More New Testament Studies*. London: SCM Press, 1984.

Sargunam, Ezra. *Religious Toleration and Social Harmony*. Madras: Dayan Publishers, 1994.

Snodgrass, K. *Ephesians: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1996.

Sproul, R.C. *The Holiness of God*. Bucks: Scripture Press Foundation, 1986.

Sterrett, T. N. *How to Understand Your Bible*. Bombay: Gospel Literature Service, 1982.

Stott, John R.W. *The Message of Romans*. Leicester/Downers Grove: Inter Varsity Press, 1994.

Svendsen, Eric. *Evangelical Answers: A Critique of Current Catholic Apologists*. New York: Reformation Press, 1999.

Tenney, Merrill C. *New Testament Times*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1983.

Thiessen, Henry C. *Lectures in Systematic Theology*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1979.

Vasanthakumar, M.S. "Expounding Christ from Non-Christian Texts" in *Dharma Deepika*. 4 (July-Dec. 2000), pp. 5-20.

___________________. *A Christian Answer to the Jehovah's Witnesses* [Tamil]. Preadeniya: Lanka Bible College, 2002.

___________________. *The Magnificent Revelation to Humanity: A Theological Exposition of Psalm 19* [Tamil]. Peradeniya: Lanka Bible College, 2003.

Vaughan, Curtis. *Acts: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1974.

Webster, William. *The Church of Rome at the Bar of History*, Edinburgh: The Banner of Truth Trust, 1996.

Wight, Fred H. *Manners & Customs of Bible Lands*. Chicago: Moody Press, 1994.

Wilkinson, J. *Jerusalem as Jesus Knew It*. London: Thames & Hudson, 1978.

Wuest, Kenneth S. *Philippians in the Greek New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1978.

ஆசிரியரின் பிறநூல்கள்

1. **இன்பத்தின் இரகசியங்கள்**
   யோவான் 15:1-16ற்கான விளக்கவுரை.
2. **இயேசுகிறிஸ்து யார்?**
   யோவான் சுவிசேஷத்தில் உள்ள இயேசுகிறிஸ்துவின் ஏழு சுயவெளிப்பாட்டு கூற்றுக்களின் விளக்கவுரை.
3. **வேதாகமம் தேவனுடைய வார்த்தையா?**
   வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதற்கான ஆதாரச் சான்றுகளை அறியத்தரும் நூல்.
4. **இது ஒரு கிறிஸ்தவ குடும்பம்**
   கிறிஸ்தவ குடும்பம் பற்றி வேதாகமம் போதிக்கும் விடயங்களை விளக்கும் நூல்.
5. **மரணத்தின் மறுபக்கம்**
   மரணத்தின் பின்பான வாழ்வு பற்றி வேதாகமம் போதிக்கும் சத்தியங்களை விளக்கும் நூல்.
6. **இயேசுகிறிஸ்து இறைவனா?**
   இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்திற்கான வேதாகம ஆதாரச் சான்றுகளை அறியத்தரும் நூல்
7. **கிறிஸ்தவ வாழ்வில் தேவசித்தம்**
   கிறிஸ்தவ வாழ்வு எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும் என்பதை அறியத்தரும் நூல்.
8. **இயேசுகிறிஸ்து ஒரு சரித்திர நபரா?**
   இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்ததற்கான சரித்திர, புதைபொருள் ஆதாரச்சான்றுகளை அறியத்தரும் நூல்
9. **ஒரு விதவையின் விவாகம்**
   ரூத் புத்தகத்திற்கான விளக்கவுரை

10. **ஒரு விலைமகள் விசுவாசியாகின்றாள்**
பழைய ஏற்பாட்டிலுள்ள ராகாப் என்னும் பெண்ணின் வாழ்வுச் சரிதைக்கான விளக்கவுரை

11. **மகளையே பலியிட்ட மனிதன்.**
பழைய ஏற்பாட்டிலுள்ள யெப்தா என்னும் மனிதனின் வாழ்வுச் சரிதைக்கான விளக்கவுரை

12. **திருமறையும் திருமணமும்**
திருமணம், விவாகரத்து, மறுவிவாகம் என்பன பற்றிய வேதாகமப் போதனைகளை விளக்கும் நூல்.

13. **புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு**
வேதாகமம் உருவான சரித்திரத்தை
அறியத்தரும் நூல்

14. **விபரீதமான வீரன்**
பழைய ஏற்பாட்டிலுள்ள சிம்சோன் என்னும் மனிதனின் வாழ்வுச் சரிதைக்கான விளக்கவுரை

15. **ஓடிப்போனவன்**
யோனா தீர்க்கதரிசியின் நூலுக்கான விளக்கவுரை

16. **சில சம்பவங்களில் சில சத்தியங்கள்**
கிறிஸ்தவ பக்தர்களின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்களை அறியத்தரும் நூல்

17. **யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்**
யெகோவாவின் சாட்சிகளின் உபதேசத்திற்கு பதிலளிக்க வேண்டிய முறையை விளக்கும் நூல்.

18. **ஆத்தும தாகத்திற்கு அற்புதத் தண்ணீர்**
யோவான் 4ம் அதிகாரத்திற்கான விளக்கவுரை

19. **காத்தரின் பராமரிப்பில் களிகூர்ந்திடும் பக்தன்**
23ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை

20. **மனுக்குலத்திற்கான மகத்தான வெளிப்படுத்தல்**
19ம் சங்கீதத்திற்கான இறையியல் விளக்கவுரை

ஆசிரியரின்
நூல்கள் கிடைக்கும் இடங்கள்

இலங்கை வேதாகமக் கல்லூரி
Lanka Bible College, Christopher Road, Peradeniya
கிறிஸ்டோபர் வீதி, பேராதனை
Phone 08 389146. Email: lbcpub@sltnet.lk

வெளிப்படுத்தல் புத்தகசாலை
Revelation Bookshop, 15A, Dalada Veediya, Kandy
15ஏ, தலதா வீதி, கண்டி
Phone 08 233529

பிரஙுனா புத்தகசாலை
Pragna Publishers, 204, Galle Road, Bambalapitiya.
204, காலி வீதி, பம்பலப்பிட்டிய, கொழும்பு 4.
Phone 01 581691. Email: pragnasl @sltnet.lk

சத்தியவசனம் புத்தக நிலையம்
Back to the Bible, 120A Dharmapala Mawatha, Colombo 7
120ஏ, தர்மபால மாவத்தை, கொழும்பு 7.
Phone 01 695441/ 01 689843. Email: bttb@sltnet.lk

புதிய ஏற்பாட்டு புத்தக நிலையம்
New Testament Bookshop, 274, Sea Street, Colombo 11
274, செட்டியார் தெரு, கொழும்பு 11.
Phone: 075 333782. Email:nichola@sltnet.lk

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
Christian Literature Society, 60 Galle Road, Colombo 6
60, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 6
Phone: 01 589801

கிருபை புத்தக நிலையம்
Grace Bookshop, Postoffice Road, Trincomalie
தபாற்கந்தோர் வீதி, திருகோணமலை
Phone: 026 21428

கிறிஸ்தவ புத்தக நிலையம்
Christian Bookshop, 23/25, Tank Road, Vavuniya.
23/25, தண்ணீர்த்தொட்டி வீதி, வவுனியா

சீ.எல்.எஸ். புத்தகசாலை
CLS Bookshop, 306A, Hospital Road, Jaffna
306ஏ, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
Phone: 021 2992

விடிவைநோக்கி ஜாமக்காரன் சேனை
Watchman Army Church, 21, Convent Road, Mannar
21, மடத்து வீதி, மன்னார் Phone: 023 32545

எல்ரோஹி டிரேடிங் எண்டர்பிரைஸ், சிங்கப்பூர்.
El-Rohe Trading Enterprise,
Block 668- # 01-10 Chander Road, Singapore 210668.
Phone +65 6291 2871. Facsimile + 65 6291 2871

வெளிவரவிருக்கும்

ஆசிரியரின் புதியநூல்கள்

1. **தேவனின் பாதத்தைத் தேடிவந்த பாவை**
   புதிய ஏற்பாட்டிலுள்ள மரியாள் என்னும் பெண்ணின் வாழ்வுச் சரிதைக்கான விளக்கவுரை
2. **உன்னதப்பாட்டின் உண்மைகள்**
   உன்னதப்பாட்டுப் புத்தகத்திற்கான விளக்கவுரை
3. **ஆதியாகம ஆய்வுரைகள்**
   ஆதியாகமப் புத்தகத்தில் 1 முதல் 11 வரையிலான அதிகாரங்களிலுள்ள சர்ச்சைக்குரிய பகுதிகளுக்கான விளக்கவுரை
4. **மாம்சமாக வந்த மகத்துவமான வார்த்தை**
   யோவான் சுவிசேஷம் முதலாம் அதிகாரம் 1 முதல் 18 வரையிலான வசனங்களுக்கான விளக்கவுரை
5. **மாயையான வாழ்வும் மகிழ்ச்சியின் வழியும்**
   பிரசங்கி புத்தகத்திற்கான விளக்கவுரை
6. **எகிப்திலிருந்து சீனாய் வரை**
   யாத்திராகமம் 1 முதல் 18 வரையிலான அதிகாரங்களுக்கான விளக்கவுரை
7. **கத்தோலிக்க சமயத்தவருக்கு கிறிஸ்தவனின் பதில்கள்**
   கத்தோலிக்க சபையின் உபதேசங்களை வேதாகமப் போதனையின் அடிப்படையில் ஆராயும் நூல்
8. **உவமைகளின் உபதேசங்கள்**
   இயேசுகிறிஸ்துவின் உவமைகளுக்கான விளக்கவுரை
9. **கிருபையின் கிறிஸ்தவம்**
   கலாத்தியர் நிருபத்திற்கான விளக்கவுரை